ஸ்ரீகனகதாஸர் பற்றிய கட்டுரைகள்

(பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)

தமிழில்

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஸ்ரீகனகதாஸர் பற்றிய கட்டுரைகள்

(பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)

ஸ்ரீஹரிவாயு குருகளின் ஆசியுடன், விஸ்வாவஸு ஆஷாட பகுள பஞ்சமி, ஸ்ரீடீகாக்ருத்பாதரின் ஆராதனை நாளான 15.07.2025 செவ்வாய்க் கிழமை அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

தொடர்புக்கு:

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

இந்த புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி||

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸ்ரீகனகதாஸர் பற்றிய கட்டுரைகள்

ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர் இருவரும் 'ஹரிதாஸ இரட்டையர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். இருவரும் ஸம காலத்தவர்கள் ஸ்ரீவ்யாஸராஜரை குருவாக அடைந்து ஹரிதாஸ ஸாஹித்யத்தில் அபாரமான ஸாதனைகளை செய்தவர்கள். ஸ்ரீகனகதாஸர் ப்ராஹ்மணராக இல்லாவிடினும், அவரை அரவணைத்து ஸ்ரீவ்யாஸராஜ ஸ்வாமிகள், அவருடைய மகிமையை அங்கீகரித்து அவரை அருளியுள்ளார் என்பதை நாம் அறிகிறோம்.

ஸ்ரீகனகதாஸருடைய வாழ்க்கை வரலாறு, அவரது கீர்த்தனைகளின் சிறப்புகள், உடுப்பியில் அவருடைய இருப்பு, ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர் ஆகியோருடன் அவர் பழகிய விதங்கள் என அவருடைய வாழ்க்கை சரிதத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை ஏராளமாக உள்ளன.

இவை அனைத்தையும் பற்றி, பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள், வெவ்வேறு புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டு, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்தத் தொகுப்பு வந்திருக்கிறது. இந்தக் கட்டுரைகளைக் கொண்டு ஸ்ரீகனகதாஸரைப் பற்றிய ஒரு தெளிவான கருத்தை நாம் அறிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

இந்த கட்டுரைகளை படித்துப் பார்த்து, பிழைகளை திருத்த உதவிய திரு.J.முரளிதரன், கோவை (தொலைபேசி எண்: 95002 88035) அவர்களுக்கு என் மனமார்த்த நன்றிகள்.

குர்வந்தர்கத பாரதிரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீஜகன்னாத கேசவ ப்ரீயதாம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276
11.06.2025

ஶ்ரீகனகதாஸர் (1508-1606)

யமாம்ஷஸ்ய பராபக்த்யா
ஸுப்ரஸன்ன ஹரிம் ஸ்வயம் |
யஸ்யாசார்யோ வ்யாஸராய:
தம் வந்தே கனகாபிதம் ||

கனகதாஸர கதெய கேளலு ஸுகப்ரத
கனககிரி திம்மப்ப தானெ பந்தொலித
கனகஸிரி ஸம்பத்து காளகதி களெயலு
கனஸினலி கரெதவ கரபிடிது பொரெத
கனக்ருதி முண்டிகெ விபுதர தலெ தூகிஸலு
அனக மங்களாங்க ஹரிவிட்டல லீலெகள

இந்த புத்தகத்தில் உள்ள கட்டுரைகள்

A. ஶ்ரீவ்யாஸனகெரெ ப்ரபஞ்சஜனாசார்யார்:

1. ஹரிதாஸ ஸாகித்யம் - 7
2. ஶ்ரீகனகதாஸரின் சிறப்பு - 11
3. ஶ்ரீகனகதாஸரின் காலம் – 18
4. ஶ்ரீகனகதாஸரின் வாழ்க்கை – 25
5. ஶ்ரீகனகதாஸரின் இனம் - 32
6. ஶ்ரீகனகதாஸரின் வித்வத் – 35
7. ஶ்ரீகனகதாஸரின் முக்கிய கார்ய க்ஷேத்திரங்கள் மற்றும் அவர் தரிசித்த முக்கிய க்ஷேத்திரங்கள் – 37
8. கனகதாஸர் நிகழ்த்திய அற்புதங்கள் – 46
9. ஶ்ரீகனகதாஸர் & உடுப்பி ஶ்ரீகிருஷ்ண – 61
10. ஶ்ரீகனகதாஸரின் க்ருதிகள் - 63

B. வித்வான் ஶ்ரீபன்னஞ்செ கோவிந்தாசார்யர்

11. ஶ்ரீகனகதாஸரின் குருபக்தி - 83
12. ஶ்ரீகனகதாஸர் – தத்வவாத – 95

C. திரு. ஜெயஸிம்ம தாஸர் (திருமலேஶ ஹரிவிட்டல தாஸர்)

13. உடுப்பியுடன் தொடர்பு - 110
14. வைகுண்ட தாஸரின் நட்பு – 114

D. Dr.T.N. Nagarathna

15. கனகதாஸர் மற்றும் ஹரிதாஸ பரம்பரை – 117

E. ஶ்ரீ ஸீதாராம ஜாகீர்தார்

16. பக்தி ஸாகித்யத்தில் பின்னணியில் ஹரிபக்திஸாரம் – 129

F. ஶ்ரீ ஶ்ரீனிவாஸ உடுப

17. ஶ்ரீவ்யாஸராயர், ஶ்ரீபுரந்தரதாஸர் & ஶ்ரீகனகதாஸர் – 137

G. Prof. வஸந்த குஷ்டகி

18. கனக ஸாஹித்யத்தில் பக்தி ஸ்வரூப – 153

H. Dr.கப்பினாலெ வஸந்த பாரத்வாஜ
19. ஸ்ரீகனகதாஸரின் இரு முண்டிகெ பதங்கள் - 165

I. ஸ்ரீஹரிப்ரிய தீர்த்தரு, பெங்களூரு
20. ஸ்ரீகனகதாஸர் பற்றிய தகவல்கள் – 173

J. திருமதி. ஜெயம்மா, பெங்களூரு
21. கேஶவ நாமா – அர்த்தங்கள் – 175

K. சத்ய நாராயணன்
22. ஸ்ரீகனகதாஸரின் இரு பாடல்களுக்கு தமிழ் அர்த்தங்கள் – 182

***

1. ஹரிதாஸ ஸாகித்யம்

திரு.வ்யாஸனகெரெ ப்ரபஞ்சனாசார்யர்

ஹரிதாஸ ஸாகித்யத்தை அற்புதமாக வளர்த்தெடுத்தவர்களில் ஶ்ரீகனகதாஸரும் ஒருவர். தாஸராக, கவிகளாக, அனுபாவிகளாக ஶ்ரீகனகதாஸர் இந்த ஸாகித்யத்திற்கு செய்திருக்கும் சேவை, அளித்திருக்கும் பங்கு அபூர்வமானது.

ஸாகித்யத்தின் நடையில், சங்கீதத்தின் வழியாக தத்வ பிரசாரம் செய்தது ஹரிதாஸ ஸாகித்யத்தின் சிறப்பாகும். சங்கீதத்தினால் காதுக்கு இனிமையாகவும், ஸாஹித்யத்தினால் இதயத்தை தொடும்படியாகவும், தத்வ விஷயங்களை சொல்வதில், புத்தியை வளர்ப்பதாகவும் இருப்பதான அபூர்வமான சிறப்பு இதற்கு இருக்கிறது. வாழ்க்கையின் குறிக்கோள் ஆத்யாத்ம சிந்தனையே என்னும் ரகசியத்தை, பாமர மக்களும் அறியுமாறு செய்ததே இதன் ஸாதனையாகும். ஜகத்துடன், ஜகன்னாதனின் சிந்தனையும், வாழ்க்கையின் முக்கியமான அங்கமே என்னும் சாஸ்திர சிந்தனையை, விதம்விதமான உதாரணங்களால் மனதினை தொடுமாறு சொல்லும் இதன் வழிமுறையானது அற்புதமானது மற்றும் சிறப்பானது. லௌகிக வாழ்க்கையிலிருந்து, தெய்வத்தின் பால் மக்களை இழுப்பதிலும் இது வெற்றியை கண்டிருக்கிறது. சங்கீதத்தினால் பாமரர்களையும் இழுக்கும் இந்த ஸாகித்யம், விஷய அடர்த்தியினால் பண்டிதர்களுக்கும் பிடித்தமானதாகவே இருக்கிறது. ஆத்யாத்ம என்பது ஸமாஜத்தை நோக்கி இருப்பதே என்னும் கீதையின் செய்தியையே இது பறைசாற்றுகிறது. சமூகத்தின் அனைத்து வகையான மக்களுக்கும், பகவந்தனின் வீட்டின் கதவுகள் திறந்தேயிருக்கின்றன என்னும் ஆத்யாத்ம ரகசியத்தை சொல்வதில், இது முதன்மையான இடத்தை பெற்றிருக்கிறது. மத்வ ஸித்தாந்தத்தை பின்பற்றுவதால், அதன் மொழிபெயர்ப்பு என்றே சொல்ல வேண்டும். அதாவது, தாஸ ஸாகித்யமானது, ஸர்வமூல கிரந்தங்களின் கன்னட மொழியின் டிப்பணி ஸாகித்யமே ஆகும்.

உலகில், அதிலும் நம் பாரத பூமியில் பிறந்து வளர்ந்த பக்தி பரம்பரைகள் பல. அவற்றில் பலவற்றிற்கு ஸித்தாந்த பின்னணி இருப்பதில்லை. தம் உணர்ச்சிகளை மட்டுமே ஆதரித்து, அதன் மூலம் வெளிவந்த கிருதிகளையே அவை மக்களிடையே கொண்டு வந்தன. சில பக்தி பரம்பரைகள், ஸ்ரீராம, ஸ்ரீகிருஷ்ண ஆகிய மகாவிஷ்ணுவின் ரூபத்தினை ஆராதிக்கும் வைஷ்ணவ பரம்பரைகள் என்றால், வேறு சில, சைவ முதலான பரம்பரைகளை பின்பற்றின. அவற்றிலும் பெரும்பாலும் பல, மூல கிரந்தங்களை தொடாமல், தத்தம் கற்பனைகளையே கீர்த்தனைகளாக வெளிபடுத்தின. ஆனால், கர்னாடகத்தின் ஹரிதாஸ ஸாகித்யம், மத்வ ஸித்தாந்தத்தின் கன்னட மொழிபெயர்ப்பாக வந்த ஸாகித்யம் ஆகும்.

சைவ பக்தி பரம்பரையானது, அந்தந்த பரம்பரையின் தேவதைகளைத் தவிர மற்ற தேவதைகளைப் பற்றி, அவர்களுடைய மகிமைகளைப் பற்றி விளக்கும்படியான கிருதிகளை அளிக்கவில்லை. விஷ்ணுவின் மகிமைகளைப் பற்றி மட்டுமே விளக்கும் ஆழ்வார்களின் ப்ரபந்தங்கள்கூட இப்படியே இருக்கின்றன. ஆனால், ஹரிதாஸ ஸாகித்யமானது இவற்றிலிருந்து மிகவும் வேறுபட்டு இருக்கிறது. மகாவிஷ்ணுவின் ஸர்வோத்தமத்வத்தையே முக்கியமாக இது விளக்குவதாக இருந்தாலும், சிவ, துர்க்கை, கணபதி ஆகிய மற்ற அனைத்து தேவதைகளின், புராணங்களில் கூறப்பட்ட மகிமைகளை விளக்குவதாக இருக்கிறது. இதனால், மற்ற தேவதைகளின் ஆராதகர்களுக்கும்கூட ஹரிதாஸ ஸாகித்யம் பிடிப்பது போல் ஆகிவிட்டது. இப்படியாகவே, சமூகத்தின் அனைத்து மக்களிடமும் இந்த ஹரிதாஸ ஸாகித்யமானது சென்று சேர காரணம் ஆகிவிட்டது.

ஹரிதாஸர்களின் சூழல்கூட எல்லையற்றதாக ஆகிவிட்டது. வசனகாரர்களின் வ்யாப்தி, சைவ ஸித்தாந்தத்திற்கு உட்பட்டும், ஆழ்வார்களின் வ்யாப்தி வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு உட்பட்டும் ஒரு எல்லை கொண்டதாக ஆயிற்று. ஆனால்,

ஹரிதாஸர்கள், மொத்த பாரதத்தையே சஞ்சரித்தனர். வைஷ்ணவ க்ஷேத்திரங்களைப் போல, சைவ முதலான மற்ற தேவதா க்ஷேத்திரங்களையும்கூட தரிசனம் செய்தனர். அங்கிருந்த தேவதைகளைக் குறித்து த்வைத ஸித்தாந்தத்தின்படி, அபாரமான ஸ்தோத்திரங்களை இயற்றினர். இதனால், அந்தந்த க்ஷேத்திரங்களில் இருந்த தேவதைகளின் மகிமைகள் மக்களுக்கு சரியாக புரிந்தது. அந்தந்த க்ஷேத்திரங்களின் மஹாத்ம்யமும்கூட அனைவருக்கும் புரியத் தொடங்கியது. ஹரிதாஸ ஸாகித்யமானது, இப்படியாக மற்ற அனைத்து பக்தி ஸாகித்யங்களைவிட வேறுபட்டதாக இருக்கிறது. ஸ்தள புராணங்களின் மகிமைகளை விளக்குவதான ஸ்கந்த முதலான புராணங்களின் சிறப்புகளை ஹரிதாஸ ஸாகித்யம் விளக்குகிறது என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

க்ஷேத்திரங்களைப் போல, நதிகளே முதலான புண்ய தீர்த்தங்களின் வர்ணனை மற்ற பக்தி பரம்பரைகளில் சொல்லப்பட்டிருப்பது மிகவும் குறைவே ஆகும். ஆனால், கங்கை, யமுனை முதலான நதிகளைக் கொண்டதான, பரத கண்டத்தின் மகிமையை பிரமாணத்துடன் (தக்க ஆதாரங்களின்படி) விளக்கிய செயல் ஹரிதாஸ ஸாகித்யத்தினாலேயே நடந்திருக்கிறது. இதுவும்கூட ஹரிதாஸ ஸாகித்யத்தினை மற்ற பக்தி ஸாகித்யங்களைவிட வேறுபட்டது என்று சொல்வதற்கு ஒரு நல்ல காரணம் ஆகும்.

ஸ்ரீஹரியின் ஸ்ரீகிருஷ்ண, ஸ்ரீராம முதலான சில ரூபங்களையும் விசேஷமாக ஆராதனை செய்யும் சில பக்தி பரம்பரைகள் மத்ஸ்ய, கூர்ம, நரசிம்ம முதலான மற்ற பகவத் அவதாரங்களையும் குறித்த கிருதிகளை கொண்டிருக்கவில்லை. ஹரிதாஸ ஸாகித்யம் அப்படியல்ல. ஸ்ரீஹரியின் அனைத்து ரூபங்களையும் சமானமாக வணங்கியவாறு அவற்றின் ஒற்றுமையை (அனைத்தும் ஒன்றே என்பதை) நிறுவுகிறது. கிருஷ்ண, ஹயவதன, கேஶவ முதலான ரூபங்களின் ஆராதகரான ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர்,

ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீஹரியின் அனைத்து ரூபங்களையும் ஒன்றே என்று சொல்லி வர்ணிப்பதே இதற்கான விளக்கம் ஆகும்.

ஸ்ரீஹரியைப் போல, அவனுடைய பக்தர்களான த்ருவ, பிரகலாதன் ஆகியவர்களையும் பாடிப் புகழ்ந்திருப்பது, ஹரிதாஸ ஸாகித்யத்தின் இன்னொரு பெருமை. இதிலும்கூட, மற்ற பக்தி ஸாகித்யத்தின் பங்கு மிகவும் குறைவானதாகவே இருக்கிறது.

உலகத்தின் ஸ்ருஷ்டி ஆகியவற்றைப் பற்றி மற்ற பக்தி ஸாகித்யங்களில் அதிகமாக காணப்படுவதில்லை. ஹரிதாஸ ஸாகித்யத்தில் இவற்றைப் பற்றி அனேக புத்தகங்கள் எழுதக்கூடிய அளவிற்கு விஷயங்கள் உள்ளன என்பதை நாம் கவனிக்கலாம்.

விரத, உபவாஸங்களைக் குறித்த விஷயங்களைப் பற்றியும் மற்ற பக்தி ஸாகித்யங்களில் மிகக்குறைந்த கிருதிகளே உள்ளன. ஆனால், ஹரிதாஸ ஸாகித்யம் பற்பல விரதங்களைப் பற்றி, அதிலும் ஏகாதசி போன்றதான மகாவிரதங்களைப் பற்றி கொடுத்திருக்கும் விஷயம் அபூர்வமானது என்று சொல்ல வேண்டும்.

இவ்வாறு பல்வேறு காரணங்களால், ஹரிதாஸ ஸாகித்யம் மற்ற அனைத்து பக்தி பரம்பரையின் ஸாகித்யங்களைவிட சிறந்ததான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறது.

த்வைத ஸித்தாந்தத்தின் ப்ரவர்த்தகரான ஸ்ரீமத்வாசார்யரின் த்வாதச ஸ்தோத்திர, கிருஷ்ணாம்ருத மஹார்ணவ முதலான கிருதிகள், ஹரிதாஸ ஸாகித்யத்திற்கு மூலகாரணம் என்று சொல்லலாம். கன்னடத்தில்கூட அவர் கிருதிகளை இயற்றியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். தற்போதைக்கு, கன்னடத்தில் ஹரிதாஸ ஸாகித்யத்தில் கிடைத்திருக்கும் மிகவும் பழமையான கிருதிகள் என்றால், ஸ்ரீமத்வாசார்யரின் சாட்சாத் ஸிஷ்யர்களில் ஒருவரான ஸ்ரீநரஹரி தீர்த்தரின் கிருதிகளே ஆகும். பிறகு வந்தவர்களில் முக்கியமான

ஹரிதாஸர்கள் என்றால், அது ஸ்ரீஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீவிஜயதாஸர், ஸ்ரீப்ரஸன்ன வேங்கடதாஸர், ஸ்ரீகோபாலதாஸர் மற்றும் ஸ்ரீஜகன்னாத தாஸர் ஆகியோர் ஆவர். இவர்களில், ஸ்ரீகனகதாஸர் ஒரு சிறப்பான இடத்தை பெற்றிருக்கிறார்.

***

2. ஸ்ரீகனகதாஸரின் சிறப்பு

ஸ்ரீகனகதாஸருடைய ஸாதனை மற்றும் ஆளுமை அபாரமானது. குருபராக பிறந்த இவர், அடுத்து அரசனாகும் பாக்கியத்தையும் அடைந்தார். இள வயதிலேயே ஒரு முறை, கனவில் வந்த குறிப்பின்படி, ஏராளமான செல்வத்தைப் பெற்று, திம்மப்ப என்னும் பெயர் கொண்ட இவர் கனகப்ப ஆனார். திருப்பதியின் திம்மப்பனின் கருணையால், திம்மப்ப எனப்பட்டால், தங்கம் கிடைத்ததால் கனகப்ப ஆனார். திம்மப்ப ஸ்ரீஹரி என்றால், கனகத்தின் அபிமானி தேவதை - மகாலட்சுமி. அதாவது, ஸ்ரீலட்சுமி நாராயணர் இருவரின் அருளும் இவருக்கு கிடைத்தது. அரசன் ஆனபோது உத்தம அரசாட்சியால் மக்களின் அன்பும் இவருக்கு கிடைத்தது. அப்போது ஒரு முறை எதிரிகளுடன் நடந்த போரில், இவருக்கு விழுந்த அடியால், இவரது சிந்தனையே மாறிப்போனது. தாஸன் ஆகு என்று ஸ்ரீஹரியே ஆணையிட்டான். இதன் பின் நடந்தது அற்புத வரலாறு.

அரஸனாக, கவியாக, ஸந்தனாக, ஹரிதாஸனாகி, ஸ்ரீகனகதாஸர் அபூர்வமான ஆளுமை எனப்படுகிறார். கனகத்தின் தாஸர்களாக உலகத்து மக்கள் அனைவரும் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், கனகத்தின் தாஸ்யத்தை விட்டு, ஹரிதாஸர் ஆன பெருமை நம் கனகதாஸருடையது. ஸ்ரீபுரந்தரதாஸர், நவகோடியை விட்டு நாராயணனை பிடித்தால், ஸ்ரீகனகதாஸர், கனகத்தை விட்டு அதன் அதிபதியான ஸ்ரீஹரியின் தாஸர் ஆனார். ஸ்ரீகனகதாஸரின் கிருதிகளில் பெரும்பாலானவை, மத்வர்களின்

தினப்படி சொல்வதான பஜனைக்கான கிருதிகளாகவே இருக்கின்றன. அவர் இயற்றிய கேஶவ நாமா, மாத்வருக்கு, அதிலும் பெண்களுக்கு மந்த்ரதுல்யமாகவே இருக்கிறது. ஹரிதாஸ ஸாகித்யத்தில் பல்வேறு கேஶவ நாமாக்கள் இருந்தாலும், ஸ்ரீகனகதாஸரின் இந்த கேஶவ நாமாவிற்கே முதல் இடம். நடை, தத்வ, பக்தி முதலான அனைத்து காரணங்களுக்கும் தகுந்த உதாரணம் என்றால் அது இந்த கேஶவ நாமாவே ஆகும். இதனை படிப்பதால், அபார ஸித்தியினை அடைந்த பல்வேறு மக்களை இன்றும் நாம் காணலாம்.

ஸ்ரீகனகதாஸர் தாஸர்களில் கவிஞர். கவிஞர்களில் தாஸர். பம்பா முதலானவர்கள் மஹாகவி எனப்பட்டாலும், தாஸர் என்னும் பெருமையை அவர்கள் பெறவில்லை. ஹரிதாஸர்கள் ஸந்தர்கள் என்று சொல்லப்பட்டாலும், அவர்களை கவிஞர்கள் என்று பொதுவாக சொல்வதில்லை. ஆனால், ஸ்ரீகனகதாஸர் இந்த இரு வரிசைகளிலும் வருகிறார் என்பது விசேஷமான விஷயம். துவக்க காலத்தில் அவர் போர்க்களத்தில் நின்று போரிடும் ஒரு வீரனாக இருந்தவர், பிறகு, மோஹன தரங்கிணி போன்றதான கிருதிகளை இயற்றத்தக்க கவி ஆனார். ஆயுதங்களை தாங்கி போரிட்ட அவர், பின்னர் சாஸ்திர தத்வங்களை பாடத்தக்க ஞானிகளும் ஆனார். பம்பா முதலானவர்கள் எவ்வளவு மஹாகவிகளே ஆனாலும், தினப்படியாக மக்கள் பாடத்தக்க பாடல்களை அவர்கள் இயற்றியிருந்தாலும், அவர்களின் கிருதிகள் தாஸர்களின் பஜனைகளில் சேரவில்லை. சங்கீதகாரர்களால் அவை பாடப்படுவதும் இல்லை.

ஆனால், ஸ்ரீகனகதாஸர் அப்படியல்ல. அவர் இயற்றிய கிருதிகள் பஜனையிலும் சேர்ந்திருக்கிறது, ஸாஹித்யத்திலும் சேர்ந்திருக்கின்றன. ஸங்கீதத்திலும் சேர்ந்திருக்கின்றன. முன்னர் அபாரமான செல்வந்தராக இருந்த இவர், பிறகு ஹரிதாஸர்களில் முன்னர் நவகோடி நாராயணனாக இருந்து பின்னர் ‘தாஸர் என்றால் அவரே’ எனப்பட்டவரான ஸ்ரீபுரந்தரதாஸரை ஒப்பிடும் வாழ்க்கை கனகதாஸருடையது. ஸ்ரீபுரந்தரதாஸரைப் போலவே

ஸ்ரீகனகதாஸரும் லௌகிகத்திலிருந்து அலௌகிகத்தின் பால் முழுமையாக சென்ற ஸந்தர் என்பது கவனிக்க வேண்டிய விஷயமாகும். பம்பா, குமாரவ்யாஸ, குமாரவால்மிகி, லக்ஷ்மீஷ ஆகிய மஹாகவிகளுக்கும் கிடைக்காத மக்களின் அன்பு, ஸ்ரீகனகதாஸருக்கு கிடைத்தது என்பது அவருடைய அபாரமான அபூர்வமான ஸாதனையின் குறியீடு.

தாஸர்களில் கீர்த்தனைகளுக்கு ஸ்ரீபுரந்தரதாஸர் புகழ் பெற்றவர் என்றால், ஸ்ரீவிஜயதாஸர் ஸுளாதி தாஸர் என்றே அழைக்கப்படுகிறார். ஸ்ரீகனகதாஸரோ முண்டிகெ தாஸர் என்று பெயர் பெற்றிருக்கிறார். ஸ்ரீபுரந்தரதாஸரின் கிருதிகளை, ஸ்ரீவ்யாஸராஜர் 'புரந்தரோபனிஷத்' என்று பெயர் சூட்டியது நாம் அறிந்ததே. இது ஸ்ரீபுரந்தரதாஸரின் உடன் இருந்தவரான, ஸ்ரீவ்யாஸராஜரின் ஸிஷ்யரும் ஆன ஸந்த ஸ்ரீகனகதாஸரின் கிருதிகளுக்கும் கூட பொருத்தியவாறு அவருடைய கிருதிகளை நாம் 'கனகோபனிஷத்' என்று அழைக்கலாம். ஹரிதாஸ ஸாகித்யத்தையே இவ்வாறு, கன்னட உபநிஷத் என்று சொல்லலாம்.

ஸ்ரீகனகதாஸர் கர்னாடகத்தின் முக்கிய ஹரிதாஸர்களில் ஒருவர். ஞான யோகிகளில் ஸனக முனிகளைப் போல, கர்ம யோகிகளில் ஜனக ராஜனைப் போல, ஹரிதாஸர்களில் ஸ்ரீகனகதாஸர் எனலாம். காகிநெலெ, பாட, விஜயநகர, திருப்பதி மற்றும் உடுப்பி ஆகியவை இவருடைய கார்ய க்ஷேத்திரங்களாக இருந்தன.

ஸ்ரீகனகதாஸரின் துவக்க காலத்தில் அவரிடம் கனக, செல்வங்கள் ஏராளமாக இருந்தன. அப்போது பகவந்தனே அவர் தன் தாஸன் ஆகவேண்டும் என்று அழைத்தாலும், அவர் அதனை கவனிக்கவில்லை. பிறகு இன்னொரு முறை அழைத்ததும், அப்போதே அவருக்கு அது தெரிந்தது. கனகநாயகர் எனப்பட்ட திம்மப்ப நாயகர், தம் செல்வங்கள் அனைத்தையும் துறந்து ஸ்ரீகனகதாஸர் ஆனார். தம் வாழ்க்கையில் மறுபடி செல்வங்களுக்கு அடிமையாகாமல் வாழ்ந்து வந்தார். அதாவது,

பகவந்தனை ஆராதனை செய்து வாழ்வதே உண்மையான வாழ்க்கை என்று அதன்படியே வாழ்ந்தார். பகவந்தனை 'ஈஶ' என்று அறிந்த அவருக்கு வந்த தன்யதை கனகநாயகராக இருந்தபோது அவருக்கு என்றுமே வந்ததில்லை. 'பதுகிதெனு பதுகெனு பவ எனகெ ஹிங்கிது | பதுமனாபன பாததொலுமெ எனகாயிது' - என்கிறார்.

இவ்வாறு கனகத்தின் தாஸ்யத்தை இழந்து, பகவந்தனின் தாஸ்யத்தை அடைந்ததே ஸ்ரீகனகதாஸரின் வாழ்க்கையின் முக்கிய அர்த்தம். கனகதாஸர் முதலில் எதுவும் அறியாதவராக இருந்தார். ஹரிதாஸர் ஆனபிறகே அவர் கவிகளாகவும் ஆனார் என்று சிலர் சொல்கின்றனர். ஆனால், ஸ்ரீகனகதாஸரின் முக்கிய கிருதிகளில் ஒன்றான 'மோஹன தரங்கிணி' யிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அவர் ஹரிதாஸர் ஆவதற்கு முன்னரே மஹாகவிகளாக இருந்தார். சிறந்த பண்டிதராக இருந்தார். அவருடைய மோஹன தரங்கிணி ஒரு மிகச்சிறந்ததான மஹாகாவியம் ஆகும். அது அவர் ஹரிதாஸ தீக்ஷையை பெறும் முன்னர் இயற்றிய கிருதி ஆகும். அப்போது அவருக்கு ராமானுஜாசார்யரிடம் இருந்த பக்தி இந்த காவியத்திலிருந்து புலப்படுகிறது.

ஹரிதாஸர்களின் பரம தத்வங்களில், ஹரி ஸர்வோத்தமத்வத்தைப் போல, வாயு ஜீவோத்தமத்வமும் ஒன்று. அவர்களுக்கு ஸ்ரீமன் மத்வாசார்யரே முக்கிய குருகள். ஸ்ரீமத்வரின் பெயரையே சொல்லாத மோஹன தரங்கிணி, இவருடைய ஹரிதாஸர் ஆகும் முன்னரான கிருதி என்பது இதிலிருந்து தெரிகிறது. கனகதாஸர் ஹரிதாஸர் ஆனபிறகு, ஸ்ரீமத்வரின் பரம குருத்வத்தை முழுமையாக ஒப்புக் கொண்டதற்கு 'பரமபதவீவ குருமுக்யப்ராண' 'அந்தம்தமஸ்ஸு மத்தின்யாரிகெ' ஆகிய கிருதிகளே சாட்சியாக இருக்கின்றன. ஹரிதாஸ ஸாகித்யத்தின் இன்னொரு லட்சணங்கள் எனப்படுபவை - பகவத் பக்தி, விஷய விரக்தி ஆகியவை. ஆனால், மோஹன தரங்கிணியில் பக்தி ரஸத்தைவிட ஶ்ருங்கார ரஸமே அதிகமாக காணப்படுகிரது. இந்த

காரணத்தினாலும் அது அவருடைய துவக்க கால கிருதி என்று சொல்லலாம். இப்படியாக ஶ்ருங்கார ரஸம் மிகுந்த காவியத்தை இயற்றிய ஸ்ரீகனகதாஸர், பின்னர் வைராக்கியத்தின் பால் ஈர்க்கப்பட்டு ஞான, பக்தி, வைராக்கியத்துடன் பற்பல கீர்த்தனைகளை இயற்றினார்.

ஸ்ரீகனகதாஸரின் வாழ்க்கையை மாற்றியமைத்ததில், ஸோஸலெயின் ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸோதெயின் ஸ்ரீவாதிராஜர் ஆகியோர் முக்கிய பங்கு வகித்த மஹனீயர்கள் என்று சொல்லலாம். இதில் ஸ்ரீவாதிராஜரும், ஸ்ரீவ்யாஸராஜரின் ஸிஷ்யர் என்பதை கவனிக்க வேண்டும். ஸ்ரீவ்யாஸராஜர் தம் மிகச்சிறந்த ஆளுமையினால், த்வைத வேதாந்த இதிகாசத்தில், முனித்ரயர்கள் எனப்படுபவர்களில் ஒருவராக இருக்கிறார். தம்முடைய பாண்டித்யத்தினால், பரவாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக, ஞானத்தை விரும்புபவர்களுக்கு காமதேனுவைப் போல அருள் புரிந்து வாழ்ந்த மகான். ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தர் போன்றதான வ்யாஸ ஸாகித்ய ஆளுமைகளையும், ஸ்ரீபுரந்தரதாஸர் போன்ற தாஸ வரேண்யர்களையும் அருளிய கீர்த்தியை கொண்டவரான இவரின் கருணையைப் பெற்றவர்களில் ஸ்ரீகனகதாஸரும் ஒருவர் என்பதை நாம் பார்க்க வேண்டும். நான்காம் வர்ணத்தவர் ஒருவர் ஹரிதாஸர் ஆகி, பக்தி ஸாகித்யங்களை இயற்றி பரப்பியதில் ஸ்ரீவ்யாஸராஜருடைய பாத்திரம் மிகவும் அஸாதாரணமானது. ஸ்ரீகனகதாஸருக்கு தாஸ தீக்ஷை அளித்த குருகளாக மட்டும் இல்லாமல், ஸ்ரீகனகதாஸரின் மகிமைகளை சமூகத்திற்கு வெளிக்காட்டிய மஹனீயரும் ஆகி, ஸ்ரீவ்யாஸராஜர் வகித்த பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும்.

ஸ்ரீகனகதாஸருக்கு அருளிய இன்னொரு மஹனீயர் - ஸோதெயின் ஸ்ரீவாதிராஜர், பிராமணர் இல்லாத ஒருவரை உடுப்பிக்கு வரவழைத்து, ஸ்ரீகிருஷ்ணனின் சேவைக்கு சந்தர்ப்பம் கொடுத்ததில் ஸ்ரீவாதிராஜரின் பங்கு முக்கியமானது. உடுப்பிக்கு வந்து செல்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானது. ஆனால், அப்படி வருபவர்களில் ஸ்ரீகனகதாஸரைப் போல

உடுப்பியில் வரலாறு படைத்த ஆளுமைகள் மிகவும் குறைவு. உடுப்பியில் 'கனகன கிண்டி' என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். ஸ்ரீகனகதாஸர் உடுப்பியில் தங்கியிருந்த தகவல்கள் பல்வேறு ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. யுக்தி மல்லிகா போன்ற அமரக்ருதியை இயற்றிய ஸ்ரீவாதிராஜரின் புத்திக்கு அப்ராமணரான ஸ்ரீகனகதாஸரின் நிர்மல பகவத்பக்தியை அடையாளம் காணும் சக்தி இருந்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

இவ்வாறு இரு யதிராஜர்களின் நடுவே, தம்முடைய வாழ்க்கையை நடத்திவந்த ஸ்ரீகனகதாஸர், மக்கள் வாழ நினைக்கும் ஒரு ஆதர்ச வாழ்க்கையை வாழ்ந்தார். ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸ்ரீவாதிராஜர் இருவரும் முறையே 'ஸ்ரீகிருஷ்ண' , 'ஹயவதன' என்னும் அங்கிதத்தினால் நூற்றுக்கணக்கான கிருதிகளை இயற்றிய சிறந்த ஹரிதாஸர்களாக போற்றப்படுகின்றனர். இவர்களைப் போல, ஸ்ரீகனகதாஸரின் கிருதிகளில் விட்டல என்னும் குறிப்பு இருக்கும் 'ஆதிகேஶவ' என்னும் இஷ்டதெய்வத்தின் பெயர் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த இருவரும் ராஜர்கள் என்றால் ஸ்ரீகனகதாஸர் தாஸர். அனால் இந்த மூவரும் ஹரிதாஸர்கள்கூட ஆகிறார்கள்.

உடுப்பியின் ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீகனகதாஸருக்கு தரிசனம் அளித்தான் என்பது வரலாறு. ஸ்ரீகிருஷ்ணனை அவர் இருந்த இடத்திலிருந்தே கண்டது ஸ்ரீகனகதாஸரின் மகிமை. இது ஒரு அர்த்தத்தின் ஸ்ரீபகவத்கீதை உபதேசம் செய்த, நிஷ்காம கர்மத்தின் வடிவவே ஆகும். 'ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸித்திம் விந்ததி மானவ:' (18-45). தனக்குள் விஷய ஆசைகளை நிரப்பிக் கொண்டிருப்பவர்கள், எங்கு சென்றாலும், அங்கு பகவந்தன் தெரிய மாட்டான். மனதில் பகவந்தனின் சிந்தனை இருந்தால், நாம் இருந்த இடத்திலேயே அவனுடைய தரிசனம் சாத்தியம் என்பது இங்கு சொல்லப்பட்டிருக்கும் தத்வம்.

ஸ்ரீகனகதாஸருக்கு மனதில் காம, க்ரோத ஆகிய திரைகள் இருந்திருக்கவில்லை. எதிரில் ஒரு கல் சுவர் மட்டுமே தடையாக

இருந்தது. ஆகவே அவருக்கு ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனம் கிடைத்தது. நமக்கோ, கல் சுவர்களைவிட அதிகமாக, மனதில் காமாதிகளின் திரையே தடையாக இருக்கின்றன. அதற்கே, பகவந்தன் நமக்குத் தெரிவதில்லை. நம் கண்ணெதிரில் ஸ்ரீகிருஷ்ணன் இருந்தாலும், மனதின் எதிரில் விஷயங்களே தெரிகின்றன. அவருக்கு எதிரில் சுவர் இருந்தாலும், உள்ளே பகவந்தனுடைய சிந்தனையே நிரம்பியிருந்தது. ஆகையால், நாம் ஸ்வாமியை பார்க்காமல் இருப்பதில் எவ்வித வியப்பும் இல்லை. அவர் ஸ்வாமியை பார்த்திருப்பதில் எவ்வித ஆச்சரியம் இல்லை.

கன்னட ஸாகித்யத்தில் ஸ்ரீகனகதாஸருடைய பங்கு எப்படியோ, அப்படியே ஹரிதாஸ ஸாகித்யத்திலும். ஸ்ரீபுரந்தரதாஸரைப் போலவே இவரது பங்கும் அளப்பரியது. அதிலும், சமூக வளர்ச்சி / மேம்பாடு ஆகிய விஷயங்களை சொல்லும், நீதி போதனை செய்யும் கிருதிகளை இயற்றுவதிலும் ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீபுரந்தரதாஸரைப் போலவே அதிக பங்கினை வகித்திருக்கிறார்.

ஹரிதாஸர்களில் ஸ்ரீகனகதாஸர் தனித்து தெரிகிறார். நரஹரி தீர்த்தரில் தொடங்கி, இன்றைய தாஸர்களின் வரையிலான அனைத்து ஹரிதாஸர்களும் கூட கவிகளாக தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்கள் இல்லை. அவர்களின் கிருதிகளில், காவிய அம்சங்கள் இருப்பது உண்மையென்றாலும், காவியமே இயற்ற வேண்டும் என்னும் நோக்கத்தினை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

தாஸ ஸாகித்யத்தின் மேரு கிருதியான ஸ்ரீஹரிகதாம்ருதஸாரம் கூட, பக்தியை அடக்கிய சாஸ்திர கிருதியே தவிர, மஹாகாவியம் என்ற இலக்கணத்தில் அதனை சேர்க்க முடிவதில்லை. ஆனால், ஸ்ரீகனகதாஸர் முதலில் சிறந்த கவிகளாகவே இருந்தார். அவருடைய மோஹன தரங்கிணியே அவருடைய காவிய திறனுக்கு தக்க கண்ணாடியாக இருக்கிறது. அதனை ஒப்பிடும்படியாக வேறொரு காவிய கிருதி, ஹரிதாஸ ஸாகித்யத்திலேயே வேறொன்று இல்லை.

ஸ்ரீவாதிராஜரின், ஸ்வப்னபத, குண்டக்ரியெ, வைகுண்ட வர்ணனெ, லட்சுமி ஷோபானெ, ஆகியவற்றில் காவிய அம்சங்கள் கண்டு வந்தாலும், அவையும் சாஸ்திர கிருதிகளே ஆகின்றன. காவிய கிருதிகள் என்று சொல்ல முடிவதில்லை.

ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீபுரந்தர தாஸரைப் போல, வாக்யேய காரர் என்று பெயர் பெற்றவரல்ல. அவருடைய கிருதிகளை, சங்கீதகாரர்கள், ராக தாளங்களுடன் பாடுவதற்கு சாத்தியம் இருக்கிறது என்றாலும், ஸ்ரீகனகதாஸர், அவற்றை சங்கீதத்திற்காக இயற்றினார் என்று சொல்வதற்கில்லை. ஸ்ரீபுரந்தரதாஸரைப் போல, மாயாமாயவகௌள முதலான ராகங்களின்படி ஸ்ரீகனகதாஸர் கிருதிகளை இயற்றவில்லை. மற்ற ஹரிதாஸர்களின் கிருதிகள் எப்படி நேரடி காவ்ய கிருதிகள் இல்லையோ, அப்படியே ஸ்ரீகனகதாஸரின் கிருதிகள், நேரடி சங்கீத கிருதிகள் இல்லை. ஆனால், ஹரிதாஸ ஸாகித்யத்திற்கு ஸ்ரீகனகதாஸர் அளித்த பரிசுகளான கிருதிகள், அவற்றின் கருத்துக்களில் ஸ்ரீபுரந்தரதாஸரின் கிருதிகளுக்கு சரிசமானமாகவே இருக்கின்றன.

***

3. ஸ்ரீகனகதாஸரின் காலம்

ஸ்ரீகனகதாஸரின் காலத்தைப் பற்றி 1508-1606 (ஸ்ரீசேஷாசார்யரின் புத்தகத்தில்); 1485-1565 (பெடகேரி கிருஷ்ண ஷர்மா); 1480-1570 (டாக்டர். பி.பி. தேஸாய்) என்னும் மூன்று வித தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இவற்றில் 1508-1606 என்னும் தகவலையே அதிகம் பேர் சரியாக இருக்கிறது என்று கருதுகின்றனர். 'கர்னாடக விஶ்வகோஶ' த்தில் சொல்லியபடியும், அரசு ஆவணங்களிலும் இந்த ஆண்டுகளே பதிவாகி இருக்கின்றன. ஆனால், இது சரி என்று தோன்றுவதில்லை. ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீவ்யாஸ ஸமுத்திரத்தை நிர்மாணம் செய்யும் காலத்திலேயே, ஸ்ரீகனகதாஸர் அவரிடம்

வந்து கோண மந்திரத்தை உபதேசம் பெற்றார் என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் விஷயம். அந்த வ்யாஸ ஸமுத்திரத்தின் நிர்மாண காலம் 1526 என்றால், 1508ல் பிறந்த ஸ்ரீகனகதாஸருக்கு அப்போது வரும் 18 வயதே ஆகியிருக்கும். இன்னொரு விஷயம், ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீவ்யாஸராஜரை சந்தித்த போது, அவருக்கு திருமணம் ஆகியிருந்து, ஒரு குழந்தை இருந்து, அவர்கள் இருவரும் இறந்தும் போயிருந்தனர். மோகன தரங்கிணி போன்ற கிருதிகளை ஸ்ரீகனகதாஸர் ஏற்கனவே இயற்றியிருந்தார். எதிரிகளுடன் அவர் சில போர்களில் போர் புரிந்திருந்தார். ஆக, 18 வயதிற்குள் இவ்வளவும் நடந்திருக்க சாத்தியம் இல்லை என்பதால், இந்த 1508-1606 ஆண்டுகளை நாம் ஒப்புக் கொள்வது சரியாக இருக்காது.

ஆகவே, மேலே சொல்லப்பட்ட வ்யாஸ ஸமுத்திரத்தின் நிர்மாண காலத்தில், ஸ்ரீகனகதாஸருக்கு குறைந்த பட்சம் 35 வயது ஆகியிருக்கலாம் என்று எண்ணினால், அவர் பிறந்த ஆண்டு 1490க்கு சமீபத்தில் என்று சொல்ல வேண்டியிருக்கும். ஸ்ரீபுரந்தரதாஸரின் ஜனன காலம்கூட சுமார் 1484 என்று வித்வாம்ஸர்கள் நிர்ணயம் செய்திருக்கின்றனர். ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் ஜனன காலம் 1481 என்பது நிச்சயம். இந்த பின்னணியில் ஸ்ரீகனகதாஸரின் காலத்தை இவ்வாறு நிர்ணயம் செய்தால், மற்ற மூவரின் காலத்திலிருந்து அதிக வித்தியாசம் இல்லை என்று ஆகிறது.

ஸ்ரீகனகதாஸரின் காலத்தைப் பற்றி சரியான ஆதாரம் எங்கும் கிடைக்கவில்லை. ஸ்ரீவ்யாஸராஜரின் ஸிஷ்யரான அவர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீபுரந்தரதாஸர் ஆகிய மஹனீயர்களின் சமகாலத்தவர் என்னும் பின்னணியில் அவருடைய காலம் 16ம் நூற்றாண்டு என்பது நிச்சயம். தம் மோஹன தரங்கிணி கிருதியில் குமாரவ்யாஸ, குமார வால்மிகி ஆகியோரின் குறிப்பு இருப்பதால் அவர், அவர்களின் பிந்தைய காலத்தவர் என்பதும் நிச்சயம் ஆகிறது. மோஹன தரங்கியில் இருப்பதான, த்வாரகையின் வர்ணனை முதலான வர்ணனைகள், விஜய நகரத்தின்

வைபவத்தின் குறிப்புகளை கொண்டிருப்பதால், அவர் கிருஷ்ண தேவராயரின் காலத்தவர் என்று சொல்ல வேண்டும்.

ஸ்ரீகனகதாஸரின் சரித்திரம் - என்னும் புத்தகத்தில் ஸ்ரீகனக தாஸரின் ஜனன காலத்தின் நிர்ணயம் இவ்வாறு வந்திருக்கிறது. "இவ்விதமாக சரியான ஷாலிவாஹன சக 1235 ஆனந்த நாம சம்வத்ஸர கார்த்திக பகுள ததிகெ குருவாஸர இந்த ஷுப முஹூர்த்த ஷுப யோக ஷுப கரண ஷுப தாரெயில், நற்பெண்மணியின் கர்ப்பத்தில் திவாகரனந்தப்பா ஒரு சுபுத்திரனை பெற்றான்" .

போலவே, 'சில ஸத்புருஷர்களின் கதைகள்' என்னும் புத்தகத்தில் வந்திருப்பதைப் போல, கனகதாஸரின் பிறப்பின் விவரம் இவ்வாறு:

ஆனந்த வத்ஸரதி மானிதத கார்த்திகதி
மானிதனு பஹுள ததிகெய திதியொளு |
தானுதிஸிதனு மகனு தானி குருவாரதொளு
மானவரு ஹொகளுதிரெ ஸம்ப்ரமதொளு ||

இந்த இரண்டு குறிப்புகளிலிருந்து தெரிவதைப் போல, ஸ்ரீகனகதாஸர் பிறந்த சம்வத்ஸரம் - ஆனந்த. திதி - கார்த்திக பகுள திருதியை. நாள் - வியாழக்கிழமை. இந்த ஆதாரங்களினால், ஸ்ரீகனகதாஸர் பிறந்த ஆண்டு 1484 என்று ஆகிறது.

அடுத்து ஸ்ரீகனகதாஸர் இவ்வுலகை நீத்த காலம். இதைப் பற்றி 'ஸ்ரீகனகதாஸரின் வ்ருந்தாவன' என்று அழைக்கப்படுவதான, ஜயபுரத்தில் இருக்கும், ராணா ப்ரதாப ஸிம்ஹ மஹாராஜனால் நிர்மாணம் செய்யப்பட்டது எனப்படும், நினைவு மண்டலம், அபூர்வ ஆவணமாக இருக்கிறது. ராணா ப்ரதாப ஸிம்ஹனின் காலம் 1540 - 1597. ஸ்ரீகனகதாஸரின் மறைவின் செய்தியைக் கேட்டு, தனக்கு அவர் மேல் இருந்த மரியாதையின் குறியீடாக, ராணா ப்ரதாப ஸிம்ஹன் 'கனக வ்ருந்தாவன' என்னும் விருந்தாவனம் ஒன்றினை கட்டினான் என்று சொல்லப்படுகிறது. இதன்படி,

ஸ்ரீகனகதாஸர் மறைந்த ஆண்டு, 1597க்கு முன்னர் என்று அறியலாம். ஸ்ரீகனகதாஸரின் மொத்த வாழ்க்கைக் காலம் 90 ஆண்டுகளுக்கும் மேல் என்பதை பல இடங்களிலிருந்து அறிகிறோம். இவற்றின்படி அவரது காலம் ஆண்டு 1484 - 1574 என்று நிச்சயம் செய்யலாம்.

இந்த காலமானது, மேலுகோடெ செலுவ நாராயணனின் ரதோத்ஸவத்தைப் பற்றி ஸ்ரீகனகதாஸர் இயற்றியிருக்கும் இந்த குறிப்பிற்கு, சரியாகவே பொருந்துகிறது.

ஸகல ஜனரு காணுதிரலு
விக்ருதி வத்ஸர சைத்ர த்விதீயேகாதஷியொளு |
ப்ரகடிதா ஷுக்ரவாரதொளு தன்ன
பகுதரிகுத்ஸாஹ ஸந்த்ய காலதொளு ||
(கைய தோரித பகெய, அம்மம்ம யாதவகிரி கல்யாணி நீனு)

இது ஆண்டு 1530 மார்ச் 25 வெள்ளிக்கிழமைக்கு சரியாக பொருந்துகிறது. அப்போது, ஸ்ரீகனகதாஸர் சுமார் 40 வயது கொண்டவராக இருந்தார் என்பதால், அவரது மேற்சொன்ன இறுதிக்காலமும் சரியாக இருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

மோஹன தரங்கிணியில் வருவதான, அனிருத்தனின் ஜனன காலத்தை சொல்லும் இந்த கீழ்க்கண்ட பத்யம் கூட அவரது கால நிர்ணயத்திற்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது.

ஆனந்த சம்வத்ஸர மாக ஷுத்த ந
வீன பஞ்சமி ரவிவார
பானு உதயத ஸ்வாதிய நக்ஷத்ரதெ
தானுதிஸித கண்டு மகனு ||

இது 15.2.1495 ஆண்டின் ஞாயிறு, ஸ்வாதி நட்சத்திரத்திற்கு பொருந்துகிறது. இது ஸ்ரீகனகதாஸரின் ஜனன காலத்திற்கு சரியாக இருக்கிறது என்பது பலரின் ஊகம். இதை வைத்தே அவரது காலத்தை பலரும் நிர்ணயம் செய்திருக்கின்றனர்.

ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீவ்யாஸராஜரை சந்தித்து, அவரிடம் உபதேசம் பெறும் முன்னரே, மோஹன தரங்கிணி கிருதியை இயற்றிவிட்டார் என்பதற்கு, அந்த கிருதியில் உள்ள ராமானுஜாசார்யர் மற்றும் தாதாசார்யரின் ஸ்துதிகளே ஆதாரம். மற்றும் ஸ்ரீவ்யாஸராஜரின் ஸ்துதிகள் அதில் காணப்படவில்லை. மேலும், அவரது பார்வை, ஆத்யாத்மத்தின் பால் அதிகமாக திரும்பவில்லை. ஶ்ருங்கார ரஸம் அதிகமாக காணப்படும் இந்த கிருதியில், வைராக்கியத்தின் குறிப்பு காணப்படவில்லை. ஆகவே, இந்த கிருதி, ஸ்ரீவாதிராஜரின் மற்றும் அவரது ருக்மிணீஶ விஜயத்தின் அறிமுகம் கிடைத்த சமயத்தில் இயற்றப்பட்டதாக இருக்கலாம். ஏனெனில், இந்த கிருதி (மோகின தரங்கிணி), ருக்மிணீஶ விஜயத்தின் தொடர்ச்சியாக வரும் பாகத்தைப் போலவே இருக்கிறது என்பதையும் பார்க்கிறோம்.

ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து உபதேசம் பெற்றது, வ்யாஸ ஸமுத்ரத்தின் நிர்மாணத்தின் காலத்தில் என்பது அனைவரும் அறிந்ததாகும். 'குருபனிகேனு மந்த்ரவோ கோணமந்த்ர' என்னும் ஸ்ரீவ்யாஸராஜரின் வாக்கின்படி, ஸ்ரீகனகதாஸருக்கு, கோண என்னும் சொல்லே மந்திரமாக ஆனது. அதையே அவர் மிகுந்த பக்தியுடன் தொடர்ந்து ஜபம் செய்தபோது, யமதேவரின் கோணமே ப்ரத்யட்சம் ஆனது. அந்த கோணத்தின் உதவியைப் பெற்று, வ்யாஸ ஸமுத்ரத்தின் ஓட்டத்திற்கு தடையாக இருந்த பெரிய பாறையை ஸ்ரீகனகதாஸர் நகர்த்தினார் என்பதையும் நாம் படித்திருக்கிறோம். இதற்கான சாட்சியாக, இன்றும்கூட வ்யாஸ ஸமுத்ரத்தின் பகுதியில் ஒரு பெரிய பாறையானது அந்த நீரோட்டத்தை இழுத்து மாற்றியிருப்பதாக பார்க்கிறோம். அந்த பகுதிக்கு 'கோணன தூபு[3]' என்னும் பெயரே இன்றும் இருக்கிறது. இந்த வ்யாஸ ஸமுத்ரத்தின் காலம் சுமார் 1526 என்று அறிஞர்கள் சொல்கின்றனர். அந்த சமயத்திலேயே, ஸ்ரீகனகதாஸர் விரக்தி கொண்டு, அவரிடம் வந்திருக்கலாம். அதற்கு முன்னரே, அவர் மோகன தரங்கிணி போன்ற பல கிருதிகளை இயற்றிருந்தார். அதாவது, அவரது வயது அப்போது 35க்கு குறைவாக இருக்க சாத்தியம் இல்லை. ஆக, அவரது பிறப்பு

ஆண்டு சுமார் 1490 சமீபத்தில் இருக்கலாம் என்று சொல்ல வேண்டும். அவர் 98 ஆண்டுகள் பூர்ண ஆயுளைக் கொண்டிருந்தால் என்னும் நம்பிக்கையின்படி, அவருடைய இறுதிக்காலம் 1588 என்று இருந்தால், பிறந்த ஆண்டு 1490 என்று சொல்ல வேண்டும்.

இங்கு இன்னொரு முக்கியமான விஷயத்தை கவனிக்க வேண்டும். ஸ்ரீகனகதாஸருக்கு, விஜய நகரத்தின் அரசர்களிடமிருந்து, அதிலும், ஸ்ரீகிருஷ்ண தேவராயனிடமிருந்து பங்காபுர பிரதேசத்தின், ராணுவ பொறுப்பு அதிகாரி என ஒரு பதவி கிடைத்திருந்தது. ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் காலம் 1509-1529. ஸ்ரீகனகதாஸரின் பிறப்பு ஆண்டு, தற்போது பலரும் சொல்வதைப் போல 1508 என்று எடுத்துக் கொண்டால், கிருஷ்ண தேவராயரின் ஆட்சி வந்தபோது, அவர் 1 வயது குழந்தை. ஆட்சி முடியும்போது அவர் 21 வயது இளைஞர். அந்த வயதில், அவருக்கு அதிகாரி பதவி கிடைத்தது என்பதெல்லாம் முடியாத விஷயம் ஆகும். மேலும், மோகன தரங்கிணியில், அவர் கிருஷ்ணின் த்வாரகையின் வைபவத்தை விளக்கியிருப்பது, அவர் கிருஷ்ண தேவராயரின் காலத்தின் விஜய நகரத்தின் வைபவத்தைப் பார்த்தே என்பது நாம் அறிய வேண்டும். மேலும், ஸ்ரீகிருஷ்ண தேவராயனின் ஆட்சிக் காலத்தில், சுமார் 1520ம் ஆண்டு வாக்கில், ஸ்ரீகனகதாஸர் அரசருடன் தொடர்பில் இருந்தார் என்று இருப்பதால், மேற்சொன்ன கணக்கின்படி, அந்த சமயத்தில் அவருக்கு 10-12 வயதே ஆகியிருக்கும். இந்த அனைத்து ஆதாரங்களின்படி, ஸ்ரீகனகதாஸரின் பிறந்த ஆண்டினை 1508 என்று சொல்வது சரியல்ல என்பது நம் வாதம்.

ஸ்ரீவ்யாஸராஜரின் காலம் 1447 - 1539. ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீவ்யாஸராஜரின் ஸிஷ்யத்வத்தை வகித்ததும் கூட ஏறக்குறைய அதே காலத்திலேயே. இதனால், புரந்தர, கனகர் இருவரும்கூட ஒரு சமயத்தில், ஸ்ரீவ்யாஸராஜரின் அருகில் இருந்து, அவரிடமிருந்து பற்பல விதங்களில், தத்வ ரகசியங்களை அறிந்திருக்கிறார்கள். சுமார் 14 ஆண்டுகள் வரை, ஸ்ரீவ்யாஸராஜர் உடன் இருந்த நீண்ட காலம், இவர்களின் வாழ்க்கையில் ஒரு

பர்வகாலம். ஸ்ரீவ்யாஸராஜரின் காலத்திற்குப் பிறகு, ஸ்ரீகனகதாஸர், மற்ற இடங்களுக்கு, விசேஷமாக திருப்பதி முதலான இடங்களுக்கு சென்று வந்திருக்கிறார் என்பதை அறிகிறோம்.

ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் 2ம் பர்யாய காலத்தில், [ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் முதல் பர்யாய காலம் 1532-33 ஆண்டில் என்றும் இரண்டாவது 1548-49 ஆண்டில் என்றும் அறிகிறோம்] ஸ்ரீகனகதாஸர் பல ஆண்டுகள் வரை உடுப்பியில் நிலைத்திருந்தார் என்பதாக படிக்கிறோம். அந்த காலத்திலேயே அவர், விசேஷமான பக்தியினால் ஸ்ரீகிருஷ்ணனின் அருளைப் பெற்றார். அதன் சாட்சியாகவே, இன்றும் உடுப்பியில் கனகன கிண்டி இருக்கிறது. அதன் நேர் எதிரில், ஸ்ரீகனகதாஸரின் குடீர என்னும் பெயர் கொண்ட இடம், அவரது இருப்பிடமாக இருந்தது. இன்றும்கூட அந்த இடம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீகனகதாஸர், தம் கடைசி நாட்களில், அவருடைய முக்கிய கார்ய க்ஷேத்திரமான காகிநெலெயில் கழித்தார். அந்த காலத்தில், அவர் கதரமண்டலகி போன்ற அக்கம்பக்கத்து இடங்களுக்கு சென்று வந்து கொண்டிருந்தார். ஸ்ரீகனகதாஸருக்கும், மாத்வர்களுக்கும் இருக்கும் இன்னொரு சம்பந்தம் என்னவென்று பார்த்தால், காகிநெலெ ஆதிகேஶவனின் தேவஸ்தானத்தில், இருப்பதான ஒரு மாத்வ யதிகளின் பிருந்தாவனம். அவர், ஸ்ரீராஜவந்த்ய தீர்த்தர் என்று பெயர் கொண்ட, பண்டாரகெரெ மடத்தின் பரம்பரையில் வந்த யதிகள். அத்தகைய ஒரு மாத்வ யதிகளின் பிருந்தாவனம், அந்த கோயிலில் இருக்கிறது என்றால், அவர் அந்த ஊரில் பல காலம் தங்கியிருந்து, அந்த ஊர் மக்களின் மரியாதை, நம்பிக்கைகளைப் பெற்றிருக்கலாம் என்றும் நாம் நினைக்க வேண்டும்.

***

4. ஶ்ரீகனகதாஸரின் வாழ்க்கை

ஶ்ரீகனகதாஸரின் சில கிருதிகளில் அவரது வாழ்க்கைக் குறிப்பினை நாம் பார்க்கலாம். அவரைப் பற்றி இயற்றப்பட்ட கிருதிகளின் எண்ணிக்கை 50க்கும் மேல் இருக்கின்றன. அவருடைய வாழ்க்கை விவரிக்கும் நாடகங்கள் 7 இருக்கின்றன.

ஹரி நின்ன பரமார்த்த நிருததிந்தலி எனகெ
தொரெயதீ குருபாத ஹரியெ ||ப

குருமந்த்ர மூல ஸத்குரு மூர்த்தி நீனாகி
கரெய ஸேரிஸிதென்ன ஹரியே ||அப

தொரெதனவ பிடிஸி ஸுஸ்திர மார்க்க தோரிஸிதெ
நரமாத்ரதவனெனதெ ஹரியெ
கருவதெல்லிஹெனெம்புதரிதென்ன நின்ன தா
ஸரிகெ மாரிதெயோ ஹரியெ
துரதல்லி நால்கு ஸாவிரனில்லதெனதெஸெகெ
பரிஹரிஸிதெயெலோ ஶ்ரீஹரியெ
பரபலவ நோடிதரெ உரிதுரிது பீள்வ மன
ஸெரெ ஹாகி நிலிஸிதெயோ ஹரியே ||1

கனக தளதலி பந்து கலெதனெந்தரெ பெளஜு
கனகுமனகாகுவுது ஹரியெ
த்வனிமுகார்ப்பட மனஸிகானந்தபப்ப து
ர்குணவனெல்லவ களெதெ ஹரியெ
மனஸினொளகெரடில்ல மததானெ மேல்கடிவ
மனவ ஹிம்மெட்டிஸிதெ ஹரியெ
மொனெகார தணியெம்ப தைர்யவ பிடிஸி ஸேவ
கன மாடிஸிதெயோ ஹரியெ ||2

ஷரதிஷுக்யாதி பௌருஷ லோப பஹுஜனர
உருவீஷரன்னு கைபிடிதெ ஹரியெ
மரெவு தாமஸ அஹங்கார துர்மதியெம்ப

துரிதவனு ஹொரடிஸிதெ ஹரியெ
பரம மூர்க்கனு நின்ன அரிவித்த தாஸரிகெ
ஷரணெனத ராஜஸவோ ஹரியே
ஸிரி பிடிஸி ஹரியெ ஹரஸுரரிகளவல்லதிஹ
ஸ்மரணெ ஜிஹ்வெகெ பரெதெயோ ஹரியே ||3

மொதலு நின்னுபதேஷ ஸதரு மாடதெ திருகு
வுதனெல்ல உதுரிஸிதெ ஹரியெ
இது ரஹஸ்யவு எந்து ஹிதவு தோரிது இந்து
பதவ ஜயிஸிதெ நானு ஹரியெ
மதவெல்ல பிடிஸி ஸம்ஸம்ருது ரூபவனு தரிஸி
ஹ்ருதயதலி நீனித்தெ ஹரியெ
முததி நின்னய நாம ஸதரதோரிது எனகெ
பதுகிதெனு பதுகிதெனு ஹரியெ ||4

ஸ்வாரி ஹொரடரெ சத்ர பேரியு நகாரிகளூ
போரெம்ப பொங்கஹளெ ஹரியெ
தீர ராஹுதராண்ய பரிவாரலங்கார
பாரவனு தெகெதெயோ தோரிதெ ஹரியெ
நீர ஸங்கவ பிட்டு ஆணி முத்தாத க்ரியெ
ஸேரிஸிதெனோ நின்ன பாத ஹரியெ
ஆரிகஞ்செனோ நானு அதிகபுரி காகினெலெ
யாதிகேஶவராய ஹரியெ ||5

***

ஸாலதெ நின்னதொந்து திவ்ய நாம - அ
கால ம்ருத்யுவின கண்டலகாண ஹரியெ ||ப

ரணதொளகெ தேஹவ கண்டதுண்டவ மாடி
ரணவனுத்தரிஸி மரணவ தோரிதெ
ப்ரணவகோசரனாகி லீலெயிந்தலி பந்து
ஹெணகெ ப்ராணவனு தந்தித்த மஹாதுமனே ||1

தொந்திகொண்டென்ன பென்னலோஸருவ ரோஹிதகெ
அந்த்யமுக க்ரஹகளனு களசி பிஸுடெ
திந்த்ரிணி மரதடி உரக கச்சி ஒரகிரலு
மந்த்ரிஸி மனெகெ களுஹித கருடகமனனெ ||2

தம்ம ஹவணனரியதெ கர்வபிஷாசிகளு
எம்ம மனெயொடெவந்தெ கல்லலிட்டு
ஹெம்மக்களனு கரெது பந்திஸி ஒய்யலு
பிரம்மஜட்டிகன ஷிர ஹரிதெ நரஹரியெ ||3

க்ஷீண தேஹவ பிடுவெனெந்து பாடம்பட்டு
த்ராணதலி கரள தைலவ ஸேவிஸெ
வேணு கொரளிகெ இக்கி எவெயு அட்டதாக
த்ராணனித்ராண ஸத்ராணதலி ஜய ஜய ||4

ஓதி கேளிதரிதெ கதெயாகுதிதெ தூர
ஆதி மூருதி காகினெலெயாதி கேஶவனெ
ஹோத ஜீவனகெ வைத்யன ஸ்மரணெயன்னிட்டு
வாதகுண பிடிஸி தாஸன மாடிகொண்டெயோ ||5

மேற்கண்ட இரு பாடல்களும், அவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியதாகவே இருக்கின்றன என்பதை பார்க்கிறோம். அவர் முதலில் செல்வந்தராக இருந்தது, அதில் அவர் பெருமை கொண்டது, எதிரிகளைக் கண்டால் எரிந்து விழுந்தது, எதிரிகளை சண்டையிட்டு அழித்தது, அவருடைய நண்பர்களுக்கு / அவரை சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்தது, படைத்தலைவர் என்னும் பதவிக்கு வந்தது, ஸ்ரீஹரி அவரை தாஸன் ஆவாயாக என்று பல முறை எச்சரித்தது, ஆனாலும் அதைப் பற்றி அவர் கவனம் அளிக்காதது, அவர் வெளியில் கிளம்பும்போது, சத்ர, பேரி, நகாரிகள் ஆகியவை முழங்கியது என்று பல்வேறு விஷயங்கள் மேலே உள்ள முதல் பாடலிலிருந்து தெரிய வருகிறது. வெறும் நீர்த்துளியைப் போல இருந்த கனகரின் வாழ்க்கை, பிறகு விலைமதிப்பற்ற முத்து போல ஆனது என்னும் விவரமும் அதில் உள்ளது.

இரண்டாம் பாடலில், எதிரிகளுடன் நடந்த போரில் அவருக்கு மரண பயம் காட்டியதான அடி விழுந்தது, உடம்பு முழுவதும் ரத்தம் வழிந்தது, ஒரு மா மரத்தின் அடியில் இவரை பாம்பு கடித்து, பூமியில் மயக்கத்தில் விழுந்திருந்தபோது, அவருக்கு பகவந்தன் காட்டிக் கொண்டு, தன் ஸ்மரணையை அவருக்குக் கொடுத்து, வந்த பயங்கரமான ஆபத்தினை பரிகரித்தது, அவரை காத்தது ஆகிய விவரங்கள் உள்ளன. இவை அனைத்தும்கூட ஸ்ரீஹரியின் அபாரமான கருணையின் பல ஸ்ருதியாகவே உள்ளன. குரு மந்திரத்தின் யோகத்தை அருளி, அவரை உத்தாரம் செய்தது, ஸ்ரீஹரியின் அபாரமான மகிமை என்பது - இந்த இரண்டு பாடல்களின் கருத்தாக நாம் பார்க்க வேண்டும்.

மோகன தரங்கிணியில் வரும் அனேக யுத்த வர்ணனைகள், கனகதாஸர் தாமே போரிட்ட சந்தர்ப்பங்களின் வர்ணனைகளாகவே இருக்கின்றன என்பது போல தோன்றுகிறது. இவ்வாறு ஸ்ரீகனகதாஸரின் வாழ்க்கை என்பது, ஹரிதாஸர்களிலேயே மிகவும் வேறுபட்டதாக இருக்கிறது என்பதை பார்க்கிறோம். ஹரிதாஸ ஸாகித்யத்திற்கு ஸ்ரீகாரம் போட்டவர் என்று சொல்லப்படும் ஸ்ரீ நரஹரி தீர்த்தரைத் தவிர, வேறு எந்த ஹரிதாஸரும், தம் வாழ்க்கையில் நேரடியாக போர்க்களத்தில் இறங்கி போரிட்டதாக எங்கும் சொல்லப்படவில்லை. சம்சாரத்தில் இருந்ததுடன், போர்க் களத்தில் போரிட்டதான அவரது வாழ்க்கை குறிப்புகள் அவரது பல்வேறு கிருதிகளிலிருந்து தெரிய வருகின்றன.

ஸ்ரீகனகதாஸரின் தந்தை பீரப்பா. தாய் பச்சம்மா. பாட கிராமத்தில் பிறந்தார். பீரப்பா, அந்த காலத்தில் பாட மற்றும் பங்காபுர பகுதிகளின் 78 கிராமங்களின் படைத்தலைவராக இருந்தார். வெகு காலம் வாரிசு இல்லாமல் இருந்த அவர், திருப்பதி ஸ்ரீனிவாஸனின் சேவை செய்து, அதன் பலனாக கிடைத்த புத்திரனே ஸ்ரீகனகதாஸர். ஸ்ரீகனகரின் இயற்பெயர் திம்மப்ப. திம்மப்ப தனது சிறிய வயதிலிருந்தே, தந்தையின் வேலைக்கேற்ப, அதற்குத் தேவையான, குஸ்தி, கத்திச் சண்டை, குதிரை ஏற்றம்,

வேட்டையாடுதல் முதலான பல்வேறு வித்யைகளை கற்று தேர்ந்தான். மற்றும் அதற்கு தக்கதான அவரது கட்டுமஸ்தான தேகம், பல்வேறு லட்சணங்களை கொண்டிருந்தது. நல்ல வீரனாக அவர் வளர்ந்ததால் 'கனக தளதலி கலெதனெந்தரெ பௌஜு கனகுமனகாகுவுது ஹரியெ (கனகன் நுழைந்தால், போரின் சூழலே மாறும் நிலை ஆனது) என்னும் பேச்சு இருந்தது. தம் மகனை ஒரு மிகப்பெரிய படைத் தளபதியாக ஆக்கும் கனவினை பெற்றோர் கொண்டிருந்தனர். இவ்வாறாக யுத்தக் கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்த திம்மப்ப, அத்துடன் ராமாயண, மகாபாரத, ஹரிவம்ஷ, பாகவத முதலான புராண கதைகளையும் கேட்டு வந்தான்.

அந்த காலங்களில், கிராமப் பகுதிகளில், ஹரிகதை முதலான நிகழ்ச்சிகளால் ராமாயணம் முதலான புராண கதைகளை சொல்வது வழக்கமாக இருந்தது. விசேஷ திறமைகளை கொண்டிருந்த திம்மப்ப, அவற்றை கேட்டே அனைத்தையும் மனனம் செய்திருந்தான். கன்னட மொழியை மிகவும் சிறப்பாக கற்றிருந்தான் என்று தெரிய வருகிறது. குமாரவ்யாஸ பாரத மற்றும் குமார வால்மீகியின் தொரவெ ராமாயண கிருதிகளை கற்றான். மோகன தரங்கிணியின் வரும் குறிப்புகள் இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது. நமக்கு இதுவரை கிடைத்திருக்கும் சில சம்ஸ்கிருத கீர்த்தனைகள் மற்றும் சில நாட்டுப்புற கன்னட கீர்த்தனைகள் மூலம் அவரது அபாரமான சம்ஸ்கிருத பாண்டித்யத்தையும் நமக்கு விளக்குகின்றன.

திம்மப்பனின் சிறு வயதிலேயே, தந்தையை இழந்தார். தாயிடம் வளர்ந்த திம்மப்ப, தன் தந்தையின் உத்தராதிகாரியாகி, படைத் தளபதியாக ஆனார். அவருக்கான ஒரு சேனை இருந்தது. எதிரிகளின் இதயம் நடுங்குமாறு குதிரையில் ஏறி போர் புரிந்தார். அந்த சமயத்தில், ஏதோ ஒரு காரணமாக ஒரு இடத்தில் பூமியை தோண்டியபோது, ஏழு பெரிய மரத்தொட்டிகளில் தங்கப் புதையல் அவருக்கு கிடைத்தது. அந்த பணத்தினை, அவர், கோயில், சத்திரங்களின் ஜீர்ணோத்தார, ஏரி, கிணறுகளின் நிர்மாணம் ஆகிய

ஸத்காரியங்களுக்கு பயன்படுத்தி, மக்களின் அன்பிற்கு பாத்திரமானார். இதனால் அவருக்கு 'கனக நாயக' என்றே பெயர் பெற்றார்.

அந்த காலத்து வழக்கப்படி கனகனுக்கு சிறு வயதிலேயே திருமணம் நடைபெற்றது. ஒரு மகனும் பிறந்தான். தம்பதிகளில் இருந்த அன்யோன்யத்திற்கு குறியீடாக, கணவன் மனைவிக்கு விளக்குவதாக, மோஹன தரங்கிணியில், கதை இருப்பது கவனிக்க வேண்டிய விஷயம். அந்த கிருதியில் கணவன் மனைவியை மத்வல்லபே என்றும் மனைவி கணவனை மன்மனோநாத என்றும் அழைப்பதை காணலாம். மோஹன தரங்கிணியில் வரும் அவளுடைய ரூப வர்ணனை, கனகதாஸரின் மனைவியின் உருவ வர்ணனை என்றும் கூட நாம் புரிந்து கொள்ளலாம். இதிலிருந்து அறிவதைப் போல, அவள் மிகவும் அழகானவள் மற்றும் குணவதி. இதைத் தவிர அந்தப் பெண்மணியைப் பற்றி வேறு எந்த தகவலும், வேறு எந்த இடங்களிலிருந்தும் நமக்குத் தெரிய வருவதில்லை.

ஆனால், கனக நாயகனின் தாம்பத்யம், அதிக காலம் நடந்ததாக தெரியவில்லை. குழந்தை இன்னும் சிறு வயதில் இருந்தபோதே, அவருடைய மனைவி இறந்தார் என்று சொல்லப்படுகிறது. அதன் பின், அந்த குழந்தையும் சில நாட்களில் இறந்து விட்டது. அடுத்து அவருடைய தாயும் இறந்தார். இப்படியாக, ஸ்ரீகனகதாஸரின் சம்சாரிக வாழ்க்கை பல துன்பங்கள் இடையே நகர்ந்தது. அந்த சமயத்திலேயே இவருடைய மனதில், வைராக்ய பாவம் குடிகொண்டது. ஆனாலும், சமூகத்திற்காக, மக்களுக்காக அவர் அதிகாரத்தில் இருந்து வந்தார். ஒரு புறம் கடமை, மறு புறம் வைராக்ய பாவம். இந்த இரண்டின் நடுவில் அவருக்கு அவ்வப்போது தாஸன் ஆகுமாறு, அவருடைய ஆராத்ய தெய்வமான ஸ்ரீஹரியிடமிருந்து குறிப்பு வந்து கொண்டிருந்தது.

அதைப் பற்றி நன்றாக சிந்திக்கும் முன்னரே, எதிரிகளின் படையெடுப்பு நடந்தது. கனக நாயக, கடுமையாக போர் புரியத் துவங்கினார். மிகச் சிறந்த வீரனாக இருந்தாலும், எதிரிகளின்

வஞ்சனையினால், கனகனுக்கு போரில் வெல்ல முடியவில்லை. 10 நாட்கள் நடந்த போரில், தன் சைன்யங்கள் அதிகமாக இறந்து விழுந்ததைக் கண்டார். ஆனாலும் போரிட்டுக் கொண்டிருக்க, எதிரி, அவர் பின்னால் வந்து கத்தியால் குத்தி, கீழே தள்ளி விட்டார். வெங்கடா வெங்கடா என்று கூவியவாறு கீழே விழுந்த கனகனுக்கு, 'என்னை வந்து பார். என் சேவகன் ஆகு' என்று வேங்கடவன் தரிசனம் அளித்து கூறினான். அது காகினெலெ ஆதிகேஶவனே ஆவான்.

உடனடியாக கனக நாயகன், தன் அரசு வேலையை விட்டார். ஆத்ம உத்தாரத்திற்கான வழியை தேடினார். அவருடைய புகழ் பெற்ற பாடலான 'தாஸனாகு பவபாஶ நீடு' என்பது இதையே சொல்கிறது என்பதை பார்க்கலாம். ஸ்ரீஹரியின் ஆணையை கனக நாயகர் ஏற்றுக் கொண்டார். அதன் பலனாகவே, அவர் உடம்பு முழுக்க இருந்திருந்த விழுப்புண்கள் உடனடியாக விலகின. பூர்ண ஆரோக்கியம் அவருக்கு வந்தது. இவ்வாறு கனக நாயக, ஸ்ரீகனகதாஸராக மாற்றம் கண்டார்.

இவர் முன்னர் பல முறை விஜய நகரத்திற்கு சென்றிருந்தபோது, அப்போது அங்கு கண்டிருந்த ஸ்ரீவ்யாஸராஜரையே, தற்போது தன்னுடைய ஆத்மோத்தாரக குருவாக கண்டார். உடனே அவரிடமே சென்றார். அவருடைய கருணைக்கு பாத்திரம் ஆனார். கனகதாஸ என்னும் பெயரை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொண்டார். அவருடைய அந்தரங்க ஸிஷ்யர்களில் ஒருவராக பல காலங்கள் இருந்தார். கனகதாஸரின் அத்யாத்ம ஞானம், தினமும் படிப்படியாக, நம் ஊகத்திற்கும் மீறியதாக வளர்ந்து வந்தது.

அன்றிலிருந்து ஸ்ரீகனகதாஸரின் வாழ்க்கை முழுவதுமாக மாறியது. போர் வாழ்க்கை, அதன் விழுப்புண்கள் அனைத்தும் மறைந்தன. ஸ்ரீவ்யாஸராஜரிடம் இருந்து, ஆத்யாத்மத்தின் ரகசியங்களை அறிந்து கொண்டார். எப்போதும் ஹரி ஸ்மரணையிலேயே இருந்தார். அவரது அனுபவங்கள் அனைத்தும் பத்யங்களாக வெளியே வந்தன. கண்ட விஷயங்கள் அனைத்திலும், ஆத்யாத்மத்தையே கண்டவாறு, மக்களுக்கு அதன்

மகிமையை விவரிக்கத் தொடங்கினார். ஆத்யாத்மத்தை மறைந்து, வெறும் பௌதிக சுகத்தை அடைந்து கொண்டிருந்த மக்களைப் பற்றி அவருக்கு பரிதாபம் வந்தது. அத்தகையவர்களை நல்வழிக்கு கொண்டு வரவேண்டும் என்று பற்பல விதமான கிருதிகளை இயற்றத் தொடங்கினார்.

குருகளிடம் ஸ்ரவணம், உடன் இருந்தவர்களிடம் சர்ச்சை / விவாதம், மற்ற நேரங்களில் மனனம் மற்றும் தியானம் ஆகியவையே அவருடைய நித்ய வழக்கமாக ஆனது. குருகளின் அனுமதியைப் பெற்று, அவ்வப்போது தீர்த்தயாத்திரையையும் மேற்கொண்டார். மக்களுக்கு உபதேசம் செய்தார். அபாரமான எண்ணிக்கையில், மக்கள், அவருடைய கிருதி, ஆக்ருதி மற்றும் நடவடிக்கைகளை பார்த்து / கவனித்து, அவர் மேல் சிறந்த மரியாதைகளை செலுத்தினர்.

***

5. ஸ்ரீகனகதாஸரின் இனம்

ஸ்ரீகனகதாஸரின் இனத்தைப் பற்றி பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. அவர் வேடன் / குருபன் (இடையன்) என்று இருவேறு ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர். ஆனால், இதுவரை நடந்த ஆராய்ச்சியில், பெரும்பாலும் பலரும் அவர் ஒரு இடையர் என்பதையே ஒப்புக் கொள்கின்றனர். 'நானு குருப' என்னும் கீர்த்தனை, இந்த கனகதாஸர் நம்மவர் என்று இன்றைய குருபர்கள் சொல்வது, ஸ்ரீவ்யாஸராஜர், அவரைக் குறித்து 'குருபனிகேனு மந்த்ரவோ கோணமந்த்ர' என்று சொல்லியிருப்பதான வாக்கு மற்றும் பல்வேறு கிரந்தங்களில் அவ்வாறே வந்திருப்பதைப் பார்த்து அப்படி அறியலாம்.

ஸ்ரீகனகதாஸர் நாயக என்னும் இனத்தை சேர்ந்தவர் என்று சொல்பவர்களுக்கு, கனக நாயக என்னும் அவருடைய பெயர் முக்கிய ஆதாரமாக இருக்கிறது. ஆனால், அது அவருடைய

வேலைக்காகவும், பதவிக்காகவுமே வந்த பெயர் என்று சொல்வது மிகப் பொருத்தமாக உள்ளது. ஜாதியினால் குருபனாகவும், அதிகாரத்தினால் நாயகனாகவும் இருந்தது அவருடைய சிறப்பு. இந்த பத்யமானது, அவருடைய ஜாதியை குறிக்கிறது என்று சொல்ல முடியாது. மேலும், இதனால் அவருடைய ஜாதியைப் பற்றியதான சந்தேகங்களும் பரிகாரம் ஆகின்றன என்பதை அறியலாம்.

பாவன பதுக தனகரி எந்தானோ
பாவன பதுக தனகரி எந்தானய்யா
குருபனெந்து தா கரெயிஸிகொண்டானோ
குருபனெந்து தா கரெயிஸிகொண்டானய்யா ||

குருபனெந்தரெ பரி குருபனல்லோ
நரகுரிகள காயுவ குருபனய்யா
கம்பளி மஹிமா திளிதவனோ
கம்பளி மஹிமா திளிதவனய்யா ||

ஸாவிர கவனகள கட்டித குருபனோ
ஸாவிர கவனகள கட்டித குருபனய்யா
கனககிரிய ஹெஸரு ஸ்திர மாடிதனோ
கனககிரிய ஹெஸரு ஸ்திர மாடிதனய்யா ||

****

குருபன மஹிமா திளிஸ்யானோ
குருபன மஹிமா திளிஸ்யானய்யா
தாள தம்பூரி பாரிஸுத திரிக்யானோ
அல்லிகில்லிகெ இதொந்து ஸந்தி ஸந்திகேளபள் முந்த்ஹேளோ

****

ஹாலுமதத கனகதாஸனு ஸாலு மதகள திளிதவனு
ஸாலு மதகள திளித்ஹேளிதன ஸாகு மாடபேகு ஜாதிகளனு |
ஒந்து மத ஹிடித்ஹேளிதனோ மானவ மதவ திளிதவனு

மானவ மதவ திளித்ஹேளிதன பௌகினெ இல்ல ஜாதியனு ।

**

குருபனெந்தரோ கனகதாஸ மஹாபஹாதூரா
திளிஸிதான ஸரவரிகெல்ல தேவரிருவ களா ।।

**

கன்னட நாடின சென்னிக கவிவர
கனகதாஸ குருபனு கேளூ
கனகதாஸ குருபனு கேளூ
கேளிதக்காகி நம்மீ குல மேலு ।।

***

குருபர குலதல்லீக புட்டிதெ
எனகெ ஈ ஜன்மதலி முகுதி எந்தெம்பெ
என்னும் ஸ்ரீகனகதாஸரின் உகாபோகத்தில் உள்ளபடி, அவர் குருப ஜாதியை சேர்ந்தவரே என்பதை அறியலாம்.

***

நாவு குருபரு நம்ம தேவரு பீரய்யா - என்னும் ஸ்ரீகனகதாஸரின் கிருதியின்படி, அவர் தெளிவாக தம்மை குருபர் என்று சொல்லிக் கொண்டிருப்பதை பார்க்கலாம்.

ஸ்ரீவ்யாஸராஜரைக் குறித்து பாடிய தம்முடைய கிருதி ஒன்றில், ஸ்ரீகனகதாஸர் தம்மை குருப குலத்தின் பிறந்தவன் என்று அழைத்துக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கலாம்.

வ்யாஸமுனிராய ஸன்யாஸகுல ரதுன மன
தாஸெ ஸலிஸுத ஸலஹு தாஸனனு குருவே ।।
ஈ தரெயொளீக குருபர குலதி ஜனிஸிதேனு
ஒதிதவ நானல்ல ஷாஸ்த்ரகளனு
பாத கமலவ நம்பி ப்ரார்த்திஸுவெ பஹுமூட
நாவென்ன கை பிடதெ ஸலஹு ஸேவகன ।।

***

6. ஸ்ரீகனகதாஸரின் வித்வத்

ஸ்ரீகனகதாஸருக்கு இளமையில் சரியான கல்வி கிடைக்கவில்லை என்று பலரும் சொல்ல கேட்டிருக்கலாம். அதற்கு அவருடைய மோஹன தரங்கிணியின் ஒரு வாக்கியம் ஆதாரமாக காட்டுகின்றனர்.

பரெஹவ திளிபேடெனுதென்ன நொஸலொளு
பரெத நால்மொகனதரிந்தெ
பரெஹவனரியெ நா பதவிட்டு கடிததொள்
பரெது மாடித கைதியல்ல || 1-21

ஆனால், உண்மையில் அப்படி இல்லை என்று நினைக்கிறோம். அவருடைய இந்த க்ருதியில் மற்றும் மற்ற கிருதிகளில், கீர்த்தனைகளில் தெரியவரும் அபாரமான நடை மற்றும் மிகச் சிறந்த கருத்துக்கள், அவர் நல்ல கல்வியை கற்றிருந்தார் என்று செய்தியை சொல்கிறது. அதே மோகன தரங்கிணியில் அடுத்து வரும் வேறு பத்யங்கள், அவர் மிகச்சிறந்த வித்வத் பெற்றிருந்தார் என்பதை பார்க்கிறோம்.

அதரிந்தெ வர்ணதோஷங்களு பரம ஸம்
பதவித்து க்ருதிகில்லவெந்து
புதராம்னாயஷாஸ்த்ரார்த்தவ திளிது நா
நித பேள்வெ கேளாயதாக்ஷி || (1/31)

பெனகனோ நினகீ மதியனித்தவ பிரம்ம
ஜனகனோ வர ஸரஸ்வதியோ
ஸனக ஸனந்தாத்யரோ மேள்கதெ பேளு
கனகதாஸோத்தம தனகெ || (1/37)

மோகன தரங்கிணியில் வரும் குமாரவ்யாஸ, குமார வால்மிகிகளின் மேற்கோள்கள், ஸ்ரீகனகதாஸர் அந்த இருவரின் கிரந்தங்களையும் அத்யயனம் செய்திருக்கிறார் என்பதற்கு சாட்சி.

உரகாலபெஸர்வடெதவன மத்ஸ்யோ
தரஜாதெ யாத்மஸம்பவன
வரபுராணங்கள கன்னடிஸித கவி
வரர கொண்டாடுவெ முததி || (11/17)

அதைப் போல, அங்கு வரும் அனேக வர்ணனைகளில் அவருக்கு காவிய, புராணங்களைப் பற்றி அபாரமான ஞானம் இருந்ததற்கு ஆதாரமாக இருக்கிறது. 'அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி' என்னும் பேச்சுக்கள் அவருடைய சாஸ்திர அறிவுக்கு மிகச்சிறந்த உதாரணமாக இருக்கிறது.

நாட்டுப்புற பாடல்களில், ஸ்ரீகனகதாஸர், குருகளில் கல்வி கற்ற விவரம் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

ஸாலிய மனிகவன களிஸ்யாரு
ஸாலிய மனிகவன களிச்யாரய்யா ||

குருகள கண்டு ஹிரிஹிரி ஹிக்யானோ
குருகள கண்டு ஹிரிஹிரி ஹிக்யானய்யா
அக்ஷரவித்யா ஸரஸர கலிதானோ
அக்ஷரவித்யா ஸரஸர கலிதானய்யா ||

அப்படி கற்றது மட்டுமல்லாமல், சிறு வயதிலேயே அனேக பாடல்கள் அவர் இயற்றிய விவரம், இத்தகைய நாட்டுப்புற பாடல்களில் கிடைக்கிறது. அத்தகைய பாடல்களின் எண்ணிக்கை ஆயிரம் இருக்கலாம் என்னும்போது, ஸ்ரீகனகதாஸரின் க்ருதி ரசனை என்பது மிகவும் அற்புதமாக இருந்தது என்னும் அம்சம் கவனிக்க வேண்டியதாகும். ஆகையால், இந்த பின்னணியில் தமக்கு படிப்பு இல்லை என்று சொல்வது, அவருடைய அடக்கத்தன்மையையே காட்டுகிறது என்று அறிய வேண்டும். சம்ஸ்கிருத மற்றும் கன்னட ஸாகித்யங்களில் இந்த விதமான வினயம், ஞானிகளில் அனேக இடங்களில் வந்திருக்கிறது என்பதை பார்க்கிறோம். வெறும் வித்வத்தினால் மட்டும் அவரது கிருதிகள் இயற்றப்படவில்லை. ஆனால், பகவந்தனின் மற்றும்

முன்னோர்களின் அருளாலேயே அவற்றிக்கு முக்கிய காரணம் என்னும் இன்னொரு செய்தியையும் அத்தகைய பேச்சுக்கள் விளக்குகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

***

7. ஸ்ரீகனகதாஸரின் முக்கிய கார்ய க்ஷேத்திரங்கள் மற்றும் அவர் தரிசித்த முக்கிய க்ஷேத்திரங்கள்

எப்போதும் சஞ்சாரத்தில் இருப்பது, ஹரிதாஸர்களின் வாழ்க்கை விதியாக இருந்தது. தீர்த்த க்ஷேத்ரங்களை தரிசித்து, அங்கு இருக்கும் பகவன் மூர்த்தியை ஆராதனை செய்து, வாழ்க்கையை ஸார்த்தகம் செய்து கொள்ளும் வழி அது. அதே சமயத்தில், அந்த பகவன் மூர்த்திகளின் மகிமைகளை கொண்டாடியவாறு, லௌகிகத்தில் மூழ்கி ஆத்யாத்மத்திலிருந்து தூரமாக விலகியிருக்கும் மக்களின் மனதினை, அதே ஆத்யாத்மத்தின் பால் இழுக்கும் நோக்கமும் அதில் இருந்தது. ஹரிதாஸர்களின் சஞ்சாரம், மக்களின் பக்தியை அதிகப்படுத்தும் நோக்கத்திலேயே இருந்தது.

மிகவும் அதிகமாக சஞ்சாரம் செய்த ஹரிதாஸர்களின், ஸ்ரீகனகதாஸரும் ஒருவர். கர்னாடக, தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய தென் இந்தியாவின் பகுதிகள் மட்டுமல்லாமல், வட இந்தியாவில் மதுரா, த்வாரகை, ஜெய்ப்பூர் ஆகியவற்றையும் அவர் தரிசனம் செய்தார். சஞ்சாரம் என்பது சுலபம் இல்லாத அந்த காலகட்டத்தில் கூட, அவர், மிகவும் தூரமான இடங்களுக்குச் சென்று, தத்வபிரசார காரியங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார் என்பது சிறிய வேலை இல்லை. 'ஸ்ரீகனகதாஸரின் பிருந்தாவனம்' இன்றும் ஜெய்ப்பூரில் பாதுகாப்பாக உள்ளது என்னும் விஷயம் அவருடைய அபூர்வமான தத்வ பிரசாரத்தின் தீக்ஷைக்கு மிகப்பெரிய சாட்சியாக இருக்கிறது. மிகச்சிறந்த உடல் நலம், பல மொழிகளை அறிந்த திறன் மற்றும் சமூகத்தைப் பற்றிய ஞானம் ஆகியவற்றை அவர் கொண்டிருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகிறது.

காகினெலெ, பாட, கதரமண்டலகி, திருப்பதி, உடுப்பி, பேலூரு, ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கபட்டணம், ஹம்பி, மேலுகோடெ, பங்காபுர, திருக்கோயிலூர், பிளிகிரி ரங்கன பெட்ட, ஆகியவை ஸ்ரீகனகதாஸர் தரிசித்த முக்கிய க்ஷேத்திரங்கள். மிகவும் முக்கியமாக காகினெலெ, ஹம்பி, உடுப்பி மற்றும் திருப்பதி அவருடைய மிகவும் முக்கிய காரிய க்ஷேத்திரங்களாக இருந்தன. உடுப்பியின் அருகில் பாஜக க்ஷேத்ர வடபாண்டேஷ்வர, ஸுப்ரமண்ய, தர்மஸ்தள, பாகமண்டல, கொல்லூரு, ஷிரஸி, பீளகி, ஸோதெ, இக்கேரி, கௌதி மற்றும் ஹானகல், முளூரு, மதனப்பள்ளி, முத்தித்தி, கந்தகூரு, கனககிரி, அஹோபல, கயா, காஞ்சி, நிஷதபுரி, த்வாரகை, மதுரா, ப்ருந்தாவன, கோகுல, ஜகன்னாதபுரி, ராமேஸ்வர, தர்ப்பசயன, அனந்தசயன, சுப்ரமண்ய, ராமகிரி, மத்தூரு, நஞ்சனகூடு ஆகியவையும் இவர் தரிசனம் செய்த பிற க்ஷேத்திரங்கள் ஆகும்.

மற்ற ஹரிதாஸர்களும்கூட சஞ்சாரம் செய்திருந்தாலும், ஸ்ரீகனகதாஸரின் ஸஞ்சாரம், ஸ்ரீபுரந்தரதாஸர் சஞ்சாரம் செய்ததைப் போலவே மிகவும் விஸ்தாரம் ஆனது. அதைவிட முக்கியமான விஷயம், அவர் சஞ்சரித்த க்ஷேத்திரங்களில், அவரைப் பற்றியதான நினைவுச்சின்னங்கள் இன்னும் இருப்பது. இது ஸ்ரீகனகதாஸருக்கு அந்த ஊர் மக்கள் கொடுத்த சிறந்த கௌரவத்தை விளக்குவதாகக் கொள்ளலாம்.

1. காகிநெலெ

காகிநெலெயாதிகேஶவ தேவாலயத்தில் ஆதிகேஶவ மூர்த்தியுடன் லட்சுமி நரஸிம்ம மூர்த்தியின் தேவாலயமும் இருக்கிறது. முன்னர் இங்கு ஸ்ரீ லட்சுமி நரசிம்ம ஸ்வாமி ஆலயம் மட்டுமே இருந்தது. அதன் பின், ஸ்ரீகனகதாஸர், பாட' விலிருந்து கொண்டு வந்த ஆதிகேஶவ மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார். அந்த ப்ரதிஷ்டாபன காரியம் நடந்தது, அவரது குருவர்யரான ஸ்ரீவ்யாஸராஜரால் என்று சொல்லப்படுகிறது. அந்த ஆதிகேஶவ மூர்த்தி சுமார் 1.5 அடி உயரமாக இருக்கிறது. இந்த தேவாயலத்தின் அருகில், மகாலட்சுமி மற்றும் கருடனின் விக்ரங்களும்

இருக்கின்றன. இந்த தேவாலயத்தின் முன்னர் இருக்கும் ஒரு கட்டெயின் மேல் அமர்ந்து, ஸ்ரீகனகதாஸர் மக்களுக்கு ஆத்யாத்மிக தத்வங்களை உபதேசம் செய்தார் என்று சொல்லப்படுகிறது.

பற்பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த இந்த சம்பவங்களை, பல ஆதாரங்கள் மிகவும் அற்புதமாக வர்ணித்திருக்கின்றன. இந்த வர்ணனையினால், இது ஸ்ரீகனகதாஸரின் க்ஷேத்திரம் என்று அறியப்பட்டு, அடுத்தடுத்து பக்தி க்ஷேத்திரமாக உருவெடுத்து வந்திருக்கிறது. மலர்ந்த தாமரை போன்றதான கடல் அலைகள், பற்பல பூக்கள் மலர்ந்து விளங்கும் தோட்டங்கள், பற்பல தங்கும் இடங்கள், வ்யாபாரிகள், அங்கும் இங்குமான பல தேவாலயங்கள் என இன்று காகினெலெ மிகவும் அழகான இடமாக வளர்ந்திருக்கிறது.

காகினெலெயின் வர்ணனை ஒரு ஆதாரத்தில் இவ்வாறு உள்ளது.

ஸிரினெலெ குணத நெலெ பா
ஸுரகீர்த்தினெலெ விவேகவிபவத நெலெ வி
ஸ்தரிப ஜயவதுகெ நெலெமனெ
கரவெஸெகும் காகினெலெ தரித்ரீதளதொள் |

நவனிதியம் பளஞ்ச்ஹலெவ பெர்கெரெ செல்விடிதிர்தனந்தனம்
நிருபமமாகி கத்தலிஸுதிப்பலெவள்ளி மடல்து ரஞ்சிபா
ஸுரகியனாக நாககுஸுமங்கள புஷ்பலதாக்ருஹம் ஸவி
ஸ்தரவெஸெதொப்பெ காகினெலெ ஷோபெகெ தாய்னெலெயாகி
ரஞ்சிகும் ||

தளிதாம்போஜஸரோவர ப்ரததியிந்துத்யான ஸந்தோஹதிம்
பளபாரான்விதரம்யஷாளிவனதிம் நீளாப்ர ஸுந்தஸம்
குளதிம் ஸுத்தித பூர்ணவாரிபரிகாவிப்ராஜியிம் தீர்க்கிகா
வளியிம் கண்கெஸெதிந்து காகினெலெ நித்யானீகதிந்தொப்புகம்
||

பளஸித கோடி ஷுத்ரனிகேதனதிந்த குணகானிவாட ஸங்
குளத விளாஸதிம் த்விஜனிவாஸகதம்பகதிம் வணிக்ருஹா
வளியினுதாத்ததேவபப்வனங்கள திந்திணியிம் ஷோபெயம்
தெளெது பொதள்து காகினெலெ ஸந்ததமிந்தெஸெதொப்பி
தோருகும் ||

காகினெலெ, கும்னூரு மற்றும் இங்களகொந்தி ஆகிய மூன்று ஊர்களும் ஒரு முக்கோண ரூபத்தில் சிறிதே தூர வித்தியாசத்தில் இருக்கின்றன. இந்த அனைத்து ஊர்களிலும் / பகுதிகளும் குருபர்கள் மிகப்பெரிய அளவில் வசிக்கின்றனர்.

2. சன்னாபுர

சன்னாபுரத்தை சன்னபட்டண என்று அந்த காலத்தில் அழைத்தனர் என்று தெரிய வருகிறது. முதலில், இங்கு இருக்கும் சென்னகேஶவனையே, ஸ்ரீகனகதாஸர் ஆராதனை செய்து வந்தார் என்பதாக அறிகிறோம். இங்கிருந்த மூர்த்திகளை காப்பாற்ற / பாதுகாக்கப்பதற்காக, ஸ்ரீகனகதாஸர் இங்களகொந்தியில் சென்று அவற்றை ஸ்தாபனை செய்தார் என்பது நம்பிக்கை.

3. கும்மூரு

காகினெலெயிலிருந்து 3 கிமீ தூரத்தில் இந்த ஊர் உள்ளது. இங்கு ஸ்ரீகனகதாஸர் வந்து சென்ற திம்மகேஶவ தேவஸ்தானம் இருக்கிறது. இங்கு அவர் சில காலம் வஸித்தார் என்பதாகவும் அறிகிறோம். இங்கிருக்கும் மூர்த்தி சுயம்பு வடிவமாகும். உற்சவ மூர்த்திகள் - பஞ்சலோகத்தில் ஆனது. இந்த ஊர் மக்கள் - தங்களை தாஸரின் வம்சத்தவர் என்று சொல்லிக் கொள்கின்றனர். ஸ்ரீகனகதாஸர், இந்த திம்மகேஶவ தேவஸ்தானத்திற்கு அளித்த சுமார் 10 ஏக்கர் நிலம், இந்த வம்சத்தவரிடம் இருக்கிறது. ஸ்ரீகனகதாஸர் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஒரு வலம்புரி சங்கு, ஜாங்கடெ, கோபாள புட்டி ஆகியவை இங்கு இருக்கிறது.

4. பாட

ஹாவேரி ஜில்லா, ஷிக்காவி தாலூகாவில் பாட கிராமம் இருக்கிறது. பழைய பாட என்பதான இன்னொரு கிராமமும் அங்கு

உள்ளது. பாட ஶ்ரீகனகதாஸரின் பிறந்த ஊர். இங்கு ஒரு பழங்கால கோயில் ஒன்று இருக்கிறது. ஶ்ரீகனகதாஸரின் பாடல்களில் வருவதான 'பாடதாதி கேஶவ' என்று அவர் சொல்லியிருப்பதால், இது கேஶவனின் கோயில் என்று அனைவரும் சொல்கின்றனர்.

5. பங்காபுர

பாடவிற்கு மிகவும் அருகில் இருக்கும் ஊர் பங்காபுர. இதற்கு வங்கபுர, வங்காபுர, வெங்கபுர என்பதான பல பெயர்கள் இருக்கின்றன. ஶ்ரீகனகதாஸர் பாடியிருக்கும் ஶ்ரீ நரசிம்ம தேவஸ்தானம் இந்த ஊரில் இருக்கிறது. அவரது சில பாடல்களில் வரும் 'பங்காபுரத கேஶவ' என்னும் பெயரில் இருக்கும் கேஶவ மூர்த்தி கோயிலும் இந்த ஊரில் இருக்கிறது.

விஜயநகரத்தின் திருமலராயரின் காலத்தின் ஆவணம் ஒன்று பங்காபுரத்தில் கிடைத்தது. அதில் ஶ்ரீரகுநிதி தீர்த்தர் என்னும் வைஷ்ணவ யதிகளின் குறிப்பு தெரிய வருகிறது. அதில் 'உடுப்பியில் ஶ்ரீகிருஷ்ண தேவருக்கும் ஶ்ரீமத்பரமஹம்ஸனான வாதிராஜ தீர்த்த ஶ்ரீபாதங்களவருக்கும் பங்காபுரத்தின் ஶ்ரீரகு நிதி தீர்த்த ஶ்ரீபாதங்களவருகும் சமர்ப்பித்த அக்ரஹாரத்தின் தானம்' என்னும் குறிப்பு அதில் உள்ளது. இதிலிருந்தே, ஶ்ரீஸோதே மடத்தின் ஶ்ரீவாதிராஜ தீர்த்தரின் சமகாலத்தவராக இருந்தவர் ஶ்ரீரகுநிதி தீர்த்தர், அந்த காலத்தில் புகழ் பெற்ற வைஷ்ணவ யதிகளாக இருந்தார் என்று தெரிய வருகிறது. அந்த காலத்தில் பண்டாரகெரெ மடத்தின் யதிகளாக இருந்த ஶ்ரீராஜவந்த்ய தீர்த்தரின் பிருந்தாவனம் காகினெலெயில் இருந்ததும் கூட குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் ஆகும்.

6. கதரமண்டலகி

ஹாவேரி ஜில்லா ப்யாடகி தாலூகாவின் கிராமம் கதருமண்டலகி. இங்கிருக்கும் ஹனுமந்தனின் மூர்த்திக்கு, காந்தேஶ என்று பெயர். ஒரு முறை ஶ்ரீனிவாஸனின் தரிசனத்திற்காக, திருப்பதிக்கு சென்றிருந்த ஶ்ரீகனகதாஸருக்கு தரிசன பாக்கியம் கிடைக்காதபோது, அதற்கு காரணம் அவர் காந்தேஶனின் தரிசனம் செய்யாமல் வந்ததே என்று அறிந்து, அவர் கதருமண்டலகிக்கு

வந்து, காந்தேஶனின் தரிசனம் பெற்று, மறுபடி திருப்பதிக்கு சென்றபோது, தேவரின் தரிசன பாக்கியம் கிடைத்தது என்று சொல்வதுண்டு.

ஸ்ரீகனகதாஸரின் வயதான காலத்தில் திருப்பதி யாத்திரை செய்ய முடியாமல் போனபோது அவருக்கு கிடைத்த ஒரு அசரீரி வாணிக்கேற்ப, கதருமண்டலகியில் ஒரு இடத்தில் ஸ்ரீனிவாஸனின் மூர்த்தி ஒன்று கிடைத்து, அங்கேயே திம்மப்பனின் தரிசனம் செய்யும் பாக்கியம் அவருக்கு கிடைத்தது. கதருமண்டலகி ஹனுமந்தனைக் குறித்து ஸ்ரீகனகதாஸர் இயற்றிய கிருதிகளும் நமக்கு கிடைத்துள்ளன. அவர் தம்முடைய மோஹன தரங்கிணி காவியத்தை இயற்றியது இந்த காந்தேஶனின் சன்னிதானத்திலேயே என்று சொல்வதுண்டு. இந்த சன்னிதியிலேயே, அந்த கிருதியின் கையெழுத்துப் பிரதி கிடைத்துள்ளது. அந்த மூர்த்திக்கு நித்ய பூஜையும் நடைபெறுவது உண்டு. ஸ்ரீகனகதாஸருக்கு வந்த ஒரு நோய் இந்த மூர்த்தியின் சேவையினால் தீர்ந்தது என்று தெரிய வருகிறது. ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனை ஒன்றில் இந்த குறிப்பு உள்ளது. இந்த காந்தேஷனின் தேவஸ்தானத்தின் வலது பக்கத்தில், ஸ்ரீகனகதாஸரின் தேவாலயம் ஒன்று நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

7. மாதேவபுர

மாதேவபுர என்பது மாண்ட்யா ஜில்லா ஸ்ரீரங்கபட்டண தாலூகின் காவேரி நதிக்கரையில் இருக்கும் ஒரு கிராமம். ஸ்ரீகனகதாஸர், திருப்பதி யாத்திரைக்கு புறப்பட்டபோது, இந்த கிராமத்தை தோனியில் கடக்கும்போது, படகோட்டிகள் அவரை அவமானம் செய்து இங்கு இறக்கிவிட்டனராம். அப்போது ஸ்ரீகனகதாஸர் 'ஸாவிர களிஸிதரு ஸஞ்செகெ லயவாகலி நள்ளிகுள்ளியந்தெ மக்களாகலி' என்று சாபம் கொடுத்தார். அங்கு ஒரு தோட்டத்தில் ஒரு வாழையிலை கேட்டபோது, அவனும்கூட அவரை அவமானம் செய்தானாம். அப்போது அவர் அவனுக்கும் 'பாளெ பெளெதரு பல கொடதே இரலி' என்று சாபம் கொடுத்தாராம்.

அந்த சாபத்தின் காரணமாக இன்றைக்கும்கூட அங்கு வாழை மரம் இருந்தாலும், அது பழம் கொடுப்பதில்லையாம். அந்த பிரதேசத்தில் நதியின் நடுவில் ஒரு பாறையில் அதில் கைகள், கால்களின் அடையாளம் இருக்கிறது. அது ஸ்ரீகனகதாஸருடையது என்று சொல்வதுண்டு. இன்றைக்கும் அந்த ஊர் மக்கள் அதனை பக்தியுடன் வணங்கி பூஜிக்கிறார்கள்.

8. கனகாபுர

ஸ்ரீகனகதாஸர் இந்த ஊரில் டொள்ளு என்னும் வாத்தியத்தை இசைத்தார் என்றும், அவருடைய மகிமையினால் இந்த ஊரில் அபாரமான மழை பெய்தது என்றும், அதற்காகவே இந்த ஊர் கனகாபுர என்று பெயர் பெற்றது என்னும் சொல்வதுண்டு.

9. பண்டரபுர

ஸ்ரீகனகதாஸர், பண்டரிபுரத்தைக்கூட தரிசனம் செய்தார் என்று சொல்வதுண்டு. தேவஸ்தானத்தின் முக்கிய த்வாரத்தின் எதிரில் 'கனகதாஸரின் கட்டெ' என்று இருப்பது, அவருடைய அடையாளத்திற்காக சமீப காலம் வரை இருந்தது என்பதை அறிகிறோம்.

10. ஸ்ரீரங்கபட்டண

ஸ்ரீகனகதாஸர் தரிசனம் செய்த முக்கிய க்ஷேத்திரங்களில் ஸ்ரீரங்கபட்டண ஒன்று. யாகெ நீனில்லி பவடிஸிதெ ஹரியெ - ஜகதேக விக்யாத பஸ்சிமரங்கதாம - என்னும் கீர்த்தனை, ஸ்ரீஹரியின் தசாவதாரத்தின் வர்ணணையை செய்தவாறு, அவன் படுத்திருக்கும் காரணத்தை விதம்விதமாக வர்ணிக்கும் கிருதியாக இருக்கிறது. அதன் கடைசி நுடியில்:

இன்னெஷ்டு கால நீனில்லி மலகித்தரு
நின்னனெப்பிஸுவரொப்பரனு நா காணெ

என்னும் வாக்கினில் தெரியவரும் விஷயம் மிகவும் அபூர்வமானது. பற்பல அர்த்தங்களை அடக்கியிருக்கும் இந்த வரிகளில் வெளிவந்திருக்கும் ஸ்ரீகனகதாஸரின் காவ்ய மற்றும்

அனுபவ த்ருஷ்டி, நம்மால் வர்ணிக்கவே முடியாததாக இருக்கிறது.

11. திருப்பதி

ஸ்ரீகனகதாஸருக்கு மிகவும் பிடித்தமான க்ஷேத்திரம் - திருப்பதி. அவருடைய பிறப்பிற்கு காரணமான திருப்பதியின் திம்மப்ப நிலைத்திருக்கும் க்ஷேத்திரம். தம் வாழ்க்கை காலங்களில், திருப்பதி திம்மப்பனின் தரிசனத்தை பெறுவது அவருடைய முக்கிய கடமையாக இருந்தது. அப்போதெல்லாம் நடந்த சம்பவங்கள் / மகிமைகள் அனைத்தும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. தமது கடைசி காலங்களிலும் கூட ஒருமுறை அவர் திருப்பதிக்கு சென்று தரிசனம் செய்து வந்தார் என்பது தெரிய வருகிறது. தம் அதிகாரத்தின் கேந்த்ர ஸ்தானமாக இருந்த, ஸ்ரீவிஜய நகரத்தின் அரசருக்கு மிகவும் பிடித்த க்ஷேத்திரம் மற்றும் அங்கு இருக்கும் ஸ்ரீனிவாஸன் தம் குருகளான ஸ்ரீவ்யாஸராஜரால் 12 ஆண்டுகள் வரை பூஜிக்கப்பட்ட ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திர ஸ்வாமி என்னும் காரணத்தால், ஸ்ரீகனகதாஸருக்கு வாழ்க்கை முழுவதும், திருப்பதியின் தொடர்பு இருந்து வந்தது என்பதை கவனிக்க வேண்டும்.

12. பேலூரு

ஸ்ரீகனகதாஸரின் முக்கிய க்ஷேத்திரங்களில் காகினெலெ, உடுப்பி, திருப்பதிகளை போல இருப்பதான இன்னொரு க்ஷேத்திரம் பேலூரு. தன் அபூர்வ சிற்பங்களால் உலகப் புகழ் பெற்றிருக்கும் பேலூரு அன்றிலிருந்தே வைஷ்ணவ க்ஷேத்திரமாக இருந்தது. ஸ்ரீமத்வாசார்யரின் சாட்சாத் ஸிஷ்யரான ஸ்ரீபத்மனாப தீர்த்தர், பல ஆண்டுகள் இங்கு நிலைத்திருந்தார் என்பது அங்கு இருக்கும் பல ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. புகழ் பெற்ற பல ஹரிதாஸர்கள், பேலூரை வந்து தரிசனம் செய்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். ஸ்ரீவாதிராஜருக்கும், ஸ்ரீபுரந்தரதாஸருக்கும் மிகவும் பிடித்தமான இடம் பேலூரு. ஸ்ரீகனகதாஸரோ அங்கு அனேக ஆண்டுகள் வரை நிலைத்திருந்தார். அவருடைய ஹரிபக்திஸார என்னும் புகழ்பெற்ற கிருதி மற்றும் ஈஶ நின்ன

சரண பஜனெ என்னும் கேஶவ நாமா, நளசரித்ரெ ஆகிய அனைத்தும், அவர் இங்கு இருந்தபோதே இயற்றப்பட்ட கிருதிகள் ஆகும். பேலூரில் இருந்த ஶ்ரீவைகுண்ட தாஸர் என்பவருடன் ஶ்ரீகனகதாஸர் விசேஷ நட்பினை கொண்டிருந்தார். வரபுர, ஸுரபுர, பேலூரு ஆகிய அனேக பெயர்களால் இந்த பேலூரு அழைக்கப்பட்டு வந்தது.

13. வேறு சில க்ஷேத்திரங்கள்

* ஶ்ரீகனகதாஸர் தரிசனம் செய்த க்ஷேத்திரங்களில் ஒன்று - சென்னபட்டணத்தின் அருகில் கண்வ நதியின் தீரத்தில் மஞ்சரு.
* கதருமண்டலகி - அவரது இளமையிலிருந்து அவருக்கு மிகவும் பிடித்த க்ஷேத்திரத்தில் ஒன்று
* கனககிரி - நரசிம்ம ஸ்வாமி, ஶ்ரீகனகதாஸர் விரும்பி ஆராதனை செய்த மூர்த்திகளில் ஒன்று
* ஶ்ரீரங்கபட்டண
* உடுப்பி
* விஜய நகரம். பற்பல ஆண்டுகள் வரை ஶ்ரீகனகதாஸர் வசித்த இடம் இதுவே.
* திருப்பதி. அவருடைய பிறப்பிற்கு காரணமான க்ஷேத்திரம்.
* ஜமகண்டி, மங்களூரு, கனகபுர, ஹாவேரி, கனகனூரு, கனகனஹள்ளி, பாண்டவபுர, கனகொப்ப, கதக், பெங்களூரு என்னும் பற்பல ஊர்களுக்கு அவர் சென்று வந்திருக்கிறார் என்று தெரிய வருகிறது.

****

8. கனகதாஸர் நிகழ்த்திய அற்புதங்கள்

அனேக ஸந்தர்களைப் பற்றி கிடைப்பதைப் போல, ஸ்ரீகனக தாஸரைப் பற்றியும்கூட அனேக அற்புத நிகழ்ச்சிகள் கேள்விப்படுகிறோம். கவிகளைப் பற்றி இத்தகைய சம்பவங்களை கேட்பது மிகவும் அரிதானது. சிலரைப் பற்றி எதுவுமே தெரிவதில்லை என்றும் சொல்லலாம். மடாதீசர்களைப் பற்றி, ஸந்தர்களைப் பற்றி, ஸாமான்ய மனிதர்களைப் பற்றி பற்பல எண்ணிக்கையில் இவை கேட்கப்படுகின்றன. அனேக முறை ஒரே மாதிரியான அற்புதங்கள் வெவ்வேறு மகான்களுக்கு, வெவ்வேறு காலத்தில் கேட்கப்படுவதையும் பார்க்கிறோம். இத்தகைய சம்பவங்களையெல்லாம் உண்மை என்றோ, பொய் என்றோ ஒதுக்கிவிட முடியாது. அதற்குத் தேவையான ஆதாரங்கள் கிடைத்தபோது, அத்தகைய அற்புதங்கள் நிகழ வாய்ப்பில்லை, அது பொய் என்று சொல்வதையும் நாம் மறுக்கக்கூடாது.

வெறும் அற்புதங்களாலேயே வ்யக்தியின் சிறப்பினை அளப்பது, சாஸ்திரீய பத்ததி இல்லை என்று ப்ரஹ்மஸூத்ரங்கள் சொல்கின்றன. வ்யக்தி அல்லது மதத்தின் சிறப்பினை, அற்புதங்கள் என்றும்கூட அளவுகோலாக ஆகக்கூடாது என்பதே சாஸ்திரங்கள் கூறும் செய்தி. மக்கள் நலனில் சென்று முடியாத எந்த அற்புதமும்கூட உண்மையான ஸாதனை என்று அழைக்கப் படாது. மக்களின் வாழ்க்கைக்கு தேவையான உணவு, தண்ணீர், உடல்நலம் மற்றும் ஞானம் இவற்றின் ப்ராப்திக்கு ஆதரவு கொடுப்பதான ஸாதனையே உண்மையான அற்புதம். அதாவது, மழையின் மூலம் மக்களுக்கு நலன்களை அளிப்பது, நோய் நொடிகளை பரிகரிப்பது, அஞ்ஞான, மூட நம்பிக்கைகளை அழிப்பது ஆகியவையே உண்மையான அற்புதங்கள் என்று சொல்ல வேண்டும். இன்றும் ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகளைப் போன்றவர்கள் செய்து கொண்டிருக்கும் அற்புதங்கள் மக்களுக்கு நலன்களை பெற்றுத் தருகின்றன என்பதை பார்க்கிறோம். புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் பகவந்தனின் மகிமைகள், பக்தர்களை காப்பதற்காகவும், துஷ்டர்களை தண்டிப்பதற்காகவும்

செய்யப்பட்டிருக்கின்றன. அதன்படியே இருந்தால் மட்டுமே, பக்தர்களின் அற்புதங்களுக்கும்கூட பலன் வருவதற்கு சாத்தியம். ஆனால், உண்மையான அற்புதம் எது என்பதை சரியாக சொல்ல முடியாத விஷயமே. வெறும் அற்புதங்களால் ஒரு வ்யக்தியின் யோக்யதையை நிர்ணயம் செய்வதும் சரியல்ல. அவருடைய சிறப்பு, மற்ற விஷயங்களால் ஸித்தமானாலும், இத்தகைய அற்புதங்கள் அவருக்கு மேலும் அதிக சிறப்பினை பெற்றுத் தருகிறது.

ஸ்ரீகனகதாஸரைப் பற்றி இருக்கும் அற்புதங்களில் சில மெய்சிலிர்க்க வைப்பவை மற்றும் நம்பத்தகுந்தவை. அவை மந்திர, மாயாஜாலங்களைப் போல வெறும் உணர்ச்சிவசப்பட வைக்காமல், வாழ்க்கைக்கு வெளிச்சத்தைத் தரும் தாத்விக பின்னணியை கொண்டிருப்பதும் கவனிக்க வேண்டியது. அவருடைய முண்டிகெ பதங்களைப் போலவே அவருடைய அற்புதங்களும்கூட அபாரமானவை. 'நானு ஹோதரெ ஹோதேனு' , 'ஹிந்தினவரிகெ முந்தெ, முந்தினவரிகெ ஹிந்தெ' என்னும் அவருடைய வாக்குகள் உண்மையான தத்வஞானத்தின் பின்னணியை கொண்டிருக்கின்றன.

தெய்விக பின்னணியின் பிறப்பு

பீரப்ப - பச்சம்மா தம்பதிகளுக்கு செல்வம், அதிகாரம், கௌரவம் ஆகிய அனைத்தும் இருந்தாலும், வாரிசு இல்லாத குறை மட்டும் அவர்களை வருத்தியது. குரு, பெரியவர்களின் பேச்சினைக் கேட்டு, திருப்பதியின் ஸ்ரீனிவாஸனை ஆராதனை செய்தனர். அவர்கள் ஏற்கனவே நடுத்தர வயதை தாண்டியிருந்தனர். பகவந்தனின் கருணையால் கர்ப்பிணியாகி பச்சம்மா ஒரு ஆண் குழந்தையை பெற்றார். ஸ்ரீனிவாஸனின் நினைவாக, திம்மப்பா என்றே அந்தக் குழந்தைக்கு பெயர் வைத்தனர். இவ்வாறு அவருடைய பிறப்பும்கூட தெய்வீக பின்னணியை கொண்டிருக்கிறது.

கனக ப்ராப்தி ஆனது

ஸ்ரீகனகதாஸரின் அற்புதங்களில் முதலாவது, அவருக்கு அபாரமான செல்வம் கிடைத்தது எனலாம். சிறிய வயதில் ஒரு முறை அவர் பூமியை தோண்டிக் கொண்டிருந்தபோது, அங்கு ஏழு பானைகளில் செல்வம் (தங்கம்) அவருக்குக் கிடைத்தது. அந்த கால பத்ததிக்கேற்ப அவர் அவற்றை பல பழங்கால கோயில்களை புதுப்பிக்க பயன்படுத்தினார். மக்களின் நலனுக்காக ஏரி, குளங்களை நிர்மாணித்தார். ஏழை மக்களுக்கு தானம் அளித்தார். இவர் இவ்வாறு செய்தது, மக்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை அளித்தது. அவருடைய கருணையை அனைவரும் புகழ்ந்தனர். கனகத்தை (தங்கத்தை) அனைவரும் பகிர்ந்ததளித்தை நினைவுபடுத்தும் வகையில் அவரை 'கனக நாயக' என்று அழைக்கத் தொடங்கினர். இவ்வாறு திம்மப்ப கனகப்ப என்றானார்.

தெய்வானுக்ரஹத்தால் தாஸத்வ ப்ராப்தி

போரில் கனகனின் ஸாமர்த்தியம் அபாரமாக இருந்தது. அவரின் சக்தி, சாமர்த்தியத்தை கவனித்த மக்கள், அவர் சேனையில் (போரில்) இருந்தால், எதிரிகளின் தோல்வி நிச்சயம் என்று கூறத் துவங்கினர். ஒரு முறை, எதிரிகளுடன் நடந்த கடுமையான போரில், எதிரிகளின் ஆயுதத்தினால் கனகன் பயங்கரமாக அடிபட்டார். மூர்ச்சையாகி கீழே விழுந்தார். உடன் இருந்தவர்கள் பயந்து ஓடிப் போயினர். கீழே கிடந்த கனகனுக்கு பகவந்தனின் அசரீரி வாணி கேட்டது. 'நீ தாஸன் ஆகு; தாஸன் ஆகு என்று நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இப்போதாவது தாஸன் ஆகிறாயா? ஆம் என்றால், உன்னை காக்கிறேன்' . இதற்கு கனகன் சம்மதித்தார். மூர்ச்சையிலிருந்து எழுந்தார். பகவந்தனின் சிந்தனை அதிகமாயிற்று. தியானம் செய்யத் துவங்கினார். போரில் ஈடுபட்டு வந்த அவர், அடுத்து ஹரிதாஸர் ஆகி கெட்டவர்களுடன் போராடத் துவங்கினார். ஆத்யாத்மத்தின் தாஸ்யம், லௌகிகத்தின் அதிகாரத்தைவிட அதிகம் சக்தி கொண்டது என்பதை உலகிற்கு காட்டும் வ்யக்தியாகி அவர் திகழ்ந்தார்.

ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து கிடைத்த வரம்

ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து தீக்ஷை பெற்ற ஸ்ரீகனகதாஸரின் ஸாதனை அபூர்வமானது. ஸ்ரீவ்யாஸராஜரின் ப்ரிய ஸிஷ்யர்களில் ஒருவர் ஆகும் சிறப்பினை பெற்றார். தீர்த்தம் கொடுக்கும்போது, ஸ்ரீகனகதாஸரை மரியாதையுடன் அருகில் அழைத்து தீர்த்தம் கொடுக்கும் அளவிற்கு சிறப்பான அன்பினை ஸ்ரீகனகதாஸர் பெற்றிருந்தார். மேரு மலையளவிலான வ்யக்தித்வத்தை பெற்றவரான ஸ்ரீவ்யாஸராஜர், வித்வாம்ஸரின் ஆளுமையை மெச்சுவதாக ஒரு முறை தலை ஆட்டினாலே, அது அபாரமாக பாராட்டியதற்கு சமம் என்று சொல்வழக்கு இருந்தது. அத்தகைய ஸ்ரீவ்யாஸராஜரின் பரம ஆப்தரின் வரிசையில் ஸ்ரீகனகதாஸரும் இருந்தார் என்றால், அவருடைய சிறப்பினை நாம் உணரலாம்.

காகிநெலெ ஆதிகேஶவ

பாடத ஆதிகேஶவன் ஒரு முறை ஸ்ரீகனகதாஸரின் கனவில் வந்து, தன்னை காகிநெலெக்கு அழைத்து வந்து ப்ரதிஷ்டை செய் என்று ஆணையிட்டார். உடனே, ஸ்ரீகனகதாஸர் எழுந்து, தான் ஒருவராகவே தேவஸ்தானத்தில் இருந்த ஆதிகேஶவனை தூக்கிக் கொண்டு சுமார் 20 கிமீ தூரம் நடந்து காகிநெலெக்கு வந்தார். ஆனால், பாட மக்கள், கனகர் அந்த மூர்த்தியை அங்கிருந்து எடுத்துச் செல்லக்கூடாது என்று தடுப்பதற்காக ஒரு கும்பலாக அவர் எதிரில் வந்தனர். அப்போது அந்த மக்களுக்கு ஆதிகேஶவனே மறுபடி அசரீரியாக வந்து, கனகருக்கு தான் இட்ட ஆணையை கூறினார். அதன்படி, பின் அந்த மக்களே அந்த காரியத்திற்க்கு உதவி புரிந்தனர் என்பதை அறிகிறோம். இவ்வாறு பகவந்தனுக்கு மிகவும் ப்ரீதிபாத்ரரான ஆனார் ஸ்ரீகனகதாஸர்.

வாழைப்பழ சம்பவம்

ஸ்ரீகனகதாஸரின் நிஜ யோக்யதையை மடத்தில் இருக்கும் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டி, ஸ்ரீவ்யாஸராஜர்,

அனைவரையும் அழைத்து ஒரு விஷயத்தை கூறினார். அனைவரின் கையிலும் ஒவ்வொரு வாழைப்பழத்தைக் கொடுத்து, அனைவரும் அதனை யாரும் இல்லாத இடத்திற்குச் சென்று சாப்பிட்டு வருமாறு ஆணையிட்டார். அந்த வித்வாம்ஸர் களெல்லாம் ஊருக்கு வெளியே சென்று தமக்கு சரி என்று பட்ட இடங்களில் அந்த பழத்தை தின்றனர். அவ்வாறே ஸ்ரீவ்யாஸராஜரிடம் வந்து கூறினர். ஸ்ரீகனகதாஸர் மட்டும் தனக்கு யாரும் இல்லாத ஏகாந்தமான இடம் கிடைக்கவேயில்லை என்று கூறி, அந்த பழத்தை குருகளிடமே ஒப்படைத்துவிட்டார். சரீரத்தில், ஷப்த, வாக் ஆகியவற்றில், அனைத்து இந்த்ரியங்களில் தத்வாபிமானி தேவதைகள் நிரம்பியிருக்கும்போது, யாரும் இருக்காத இடம் என்பதுதான் எது?. அத்தகைய இடம் கிடைக்கவே கிடைக்காதபோது, பழத்தை எப்படி சாப்பிடுவது? என்று கேட்டார்.

ஸ்ரீவ்யாஸராஜர் உடனே அங்கிருந்த வித்வாம்ஸர்களிடம் இவ்வாறு கேட்டார். 'ஞானம் என்பது குரங்கின் கையில் சிக்கிய மாணிக்கம் ஆகக்கூடாது. குருடனின் முன் கண்ணாடி பிடித்ததைப் போல ஆகக்கூடாது. இந்த கனகனின் பேச்சினை கேட்டீர்களா?. இவருடைய மகிமையைப் பற்றி அறிய வேண்டும். மொத்த நாட்டில் தேடினாலும், இத்தகைய அனுஸந்தானத்தின் வ்யக்தியை பார்க்க சாத்தியம் இல்லை' .

பண்டிதர்களின் முகம் அவமானத்தில் குன்றிப் போனது. அனைத்து இடங்களிலும் பகவந்தன் வ்யாப்தனாக இருக்கிறான். அவனே அனைத்து காரியங்களையும் ஒவ்வொரு நொடியிலும் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்று அவர் கூறியது அனைத்து வித்வாம்ஸர்களுக்கும் ஒரு பாடமாக இருந்தது. உண்மையான வேதாந்தம் என்றால் இதுவே. கேட்பது ஒரு பாகம் என்றால், அதனை அனுஷ்டானத்திற்கு கொண்டு வந்து அனுபவம் ஆக்கிக் கொள்வது உண்மையான ஸாதனை ஆகும். இது ஸ்ரீமதாசார்யரின் 'சாஸ்த்ரார்த்தயுக்த அனுபவ: ப்ரமாணம் தூத்தமம் மதம்' என்னும் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தின் வாக்கினை நினைவு படுத்தும் சம்பவம் ஆகும். அத்துடன், அனைவரின் அனைத்து

காரியங்களுக்கும், ஒவ்வொரு நொடியிலும் 12 பேர் ஸாக்ஷியாக இருக்கிறார்கள் என்னும் மஹாபாரதத்தின் வாக்கியத்திற்கும் இது உதாரணமாகும்.

ஆதித்யசந்த்ராவனலோsனிலஷ்ச
த்யௌ பூமிராபோ ஹ்ருதயம் மனஷ்ச |
அஹஷ்ச ராத்ரிஷ்ச உபே ச ஸந்த்யே
தர்மஷ்ச ஜானாதி நரஸ்ய வ்ருத்தம் ||

பண்டிதர்கள் இதனை கேட்பதோடு நிறுத்தியிருக்க, கனகரோ அதனை அனுபவத்திற்கு கொண்டு வந்தார் என்பதை பார்க்கிறோம்.

கனகரின் திவ்யத்ருஷ்டி

ஸ்ரீவ்யாஸராஜர் மூலமாக வித்வாம்ஸர்களின் பரிட்சை நடந்து கொண்டிருந்தது. நிறைந்த சபையில் குருவானவர் தன் முஷ்டியை காட்டி இவ்வாறு கூறினார். என் முஷ்டியில் இருப்பது என்னவென்று சொல்லுங்கள். பார்ப்போம். பண்டிதர்களுக்கு வியப்பு ஏற்பட்டது. தமக்கு தோன்றியதையெல்லாம் கூறத் துவங்கினர். அந்த பதில்களை ஸ்ரீவ்யாஸராஜர் ஒப்பவில்லை. கடைசியில் ஸ்ரீகனகதாஸரின் முறை வந்தது. உடனே அவர் இவ்வாறு கூறினார். 'ஈதனீக வாஸுதேவனு' . அதாவது அவரது கையில் இருந்தது வாஸுதேவ ஸாலிக்ராம. இவருடைய திவ்யத்ருஷ்டியைப் பார்த்து பண்டிதர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. கனகர் கூறிய பதிலும், அதைக் கூறிய விதமும் அற்புதமாக இருந்தது என்று நினைத்தனர்.

நானு ஹோதரெ ஹோதேனு

ஒரு முறை நிரம்பிய சபையில் ஸ்ரீவ்யாஸராஜர் அங்கிருந்த பண்டிதர்களிடம் இன்னொரு கேள்வியை எழுப்பினார். உங்களில் மோக்ஷத்திற்கு செல்பவர்கள் யார்?. அதில் பலர் 'நான், நீ' என்று சொல்லத் துவங்கினர். கடைசியில் அவர் ஸ்ரீகனகதாஸரிடம்

கேட்டபோது 'நானு ஹோதரெ ஹோகபஹுது' (நான் போனால் போகலாம்) என்றார். இதைக் கேட்டு பண்டிதர்களுக்கு கோபம் வந்தது. தம்மைப் போன்ற பண்டிதர்கள் இருக்கையில், இவர் மட்டும் மோக்ஷத்திற்கு எப்படி போகலாம்? என்றனர். ஸ்ரீவ்யாஸ ராஜர் முன்னேயே இவ்வாறு பேசலாமா? என்றனர். அப்போது ஸ்ரீவ்யாஸராஜர் கனகரிடம் இவ்வாறு கூறினார். 'கனகா, நீ கூறியதை நீயே விளக்கிக் கூறு' .

உடனே ஸ்ரீகனகதாஸர் இவ்வாறு விளக்கினார். நான் மோக்ஷத்திற்குச் செல்லும் விஷயத்தைப் பற்றி இங்கு சொல்லவில்லை. மோக்ஷத்திற்கு செல்லும் தகுதி என்ன என்பதையே நான் அனைவருக்கும் கூறினேன். நான் என்றால் அஹங்காரம். கர்வம். இதை துறந்தாலே மோக்ஷத்திற்கு செல்ல சாத்தியம் என்பதையே நான் கூறினேன். 'நிர்மமோ நிரஹங்கார: ஸ ஷாந்திமதிகச்சதி' என்னும் கருத்தையே அவர் கூறினார். இவ்வாறாக குருவானவர் இன்னொரு முறை கனகரின் மகிமையை அனைவருக்கும் எடுத்துக் காட்டினார்.

ஜனார்த்தனனின் தரிசனம்

ஸ்ரீகனகதாஸர் அபரோக்ஷ ஞானி என்று இந்த சம்பவங்களிலிருந்து மக்களுக்கு புரிய வந்தது. அந்த விஷயம் உண்மையென்றால், அவர் தமக்கும் பகவந்தனின் தரிசனத்தை பெற்றுத் தரட்டும் என்று பண்டிதர்கள் அனைவரும் சேர்ந்து தீர்மானித்து, குருவான ஸ்ரீவ்யாஸராஜரிடம் சென்று கூறினர். குருவும் அவர்களது விருப்பத்தை கனகரிடம் கூறினார். கனகரும் அதற்கு ஒத்துக் கொண்டார். அடுத்த நாள், பூஜையின் சமயத்தில் பகவந்தனை காட்டுவதாக ஒப்புக் கொண்டார். அந்த சமயமும் வந்தது. அனைவரும் பகவந்தனை பார்ப்பதற்கு காத்துக் கொண்டிருந்தனர். இந்த விஷயம் அனைவருக்கும் தெரிந்து பொதுமக்களும் அங்கு வந்துவிட்டனர்.

அந்த சமயத்தில் அங்கு ஒரு நாய் வந்தது. பண்டிதர்களில் துவங்கி அனைவரும் 'மைலிகெ, மைலிகெ' (மடி, மடி) என்று கூவத்

துவங்கினர். சிலர் அதன் மேல் கல் வீசி அந்த நாயினை துரத்தினர். மக்கள் அனைவரும் பகவந்தன் வரவேயில்லையே என்று ஸ்ரீகனகதாஸரிடம் கேட்டனர். அப்போது ஸ்ரீகனகதாஸர், 'பகவந்தன் வந்திருந்தான், ஆனால் நீங்கள் அவனை கவனிக்காமல் துரத்தியதால் ஓடிப் போனான்' என்றார். அதாவது, நாய் ரூபத்தில் வந்திருந்தது பகவந்தனே என்றார்.

பகவந்தன் எல்லா இடங்களிலும் இருக்கிறான். அவனின் ஸன்னிதானம் இல்லாத இடமே இல்லை. அவனை பார்க்கும் த்ருஷ்டி மட்டும் நமக்கு இருக்க வேண்டும். இதுவும் கீதையில் வந்திருக்கும் பகவந்தனின் வாக்கே ஆகும். வஸ்துக்கள் வெவ்வேறானாலும், அதில் நிலைத்திருக்கும் பகவந்தன் மட்டும் ஒருவனே ஆகிறான். அவன் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறான் என்பதே இதன் அர்த்தம். இவ்வாறு பண்டிதர்கள் காணாததை ஸ்ரீகனகதாஸர் தம் அனுபவத்தினால் கண்டார்.

இதே போல், இன்னொரு முறை ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீகனக தாஸருக்கு ஸ்வாமியை காட்டுமாறு அங்கிருக்கும் மக்களின் சார்பாக கேட்டுக் கொண்டார். அதற்கு ஸ்ரீகனகரும் ஒப்புக் கொண்டு, மறுபடி ஸ்வாமியை ப்ரார்த்தனை செய்தார். இன்னொரு நாள் பூஜா காலத்தில் பாம்பு ஒன்று சரசரவென வந்தது. பயந்த மக்கள் அங்கிருந்து ஓடிப் போயினர். அதன் அர்த்தத்தை அறிந்திருந்த ஸ்ரீவ்யாஸராஜர் அதற்கு பால் நைவேத்யம் செய்து ஆரத்தி எடுத்தார். அதன் பிறகே, மக்களுக்கு பாம்பு ரூபத்திலும் பகவந்தனே வந்திருந்தான் என்று தெரிய வந்தது. இவ்வாறு பகவந்தனுடன் நெருங்கிய நட்பினை கொண்டிருந்தது, ஸ்ரீகனகதாஸரின் முக்கிய ஸாதனையாக இருந்தது.

திருப்பதியில் நடந்தது

ஒரு முறை ஸ்ரீகனகதாஸர் திருப்பதி யாத்திரைக்கு சென்றிருந்தார். அப்போதே அவருடைய பெயர் புகழ்பெற்றிருந்தது. அவர் அங்கு வரும் விஷயம் அந்த அதிகாரிகளுக்கு தெரிந்தது. கனகரை வரவேற்க அனைவரும் காத்திருந்தனர். கனகரும் அங்கு

வந்தார். ஆனால் அவரை அடையாளம் தெரியாத அந்த அதிகாரிகள், அவரிடமே கனகதாஸர் எங்கு / எப்போது வருகிறார் என்று கேட்டனர். அதற்கு கனகதாஸர் இவ்வாறு பதில் அளித்தார். 'முந்தே ஹோகுவவரிகெ ஹிந்தெ, ஹிந்தே பருவவரிகெ முந்தெ' . (முன்னால் செல்பவர்களின் பின்னே; பின்னால் வருபவர்களுக்கு முன்னே). இதன் அர்த்தம் புரியாத அந்த மக்கள் மேலும் கனகரின் வருகைக்காக அங்கு காத்திருக்க, பின்னரே அவர்களுக்கு அந்த அர்த்தம் புரிந்தது; அவரே கனகர் என்பதும் புரிந்தது.

அவர் கூறியதன் அர்த்தம் என்னவென்றால், 'ஹிந்தே இருவவரிகெ' என்றால், தக்க ஸாதனையை செய்யாமல் பின்னால் இருப்பவர்களுக்கு முன்னர் என்றும், 'முந்தெ இருவவரிகெ' என்றால், ஸாதனையில் முன்னால் சென்றவர்களுக்கு பின்னே என்றும் அர்த்தம். அதாவது, பற்பல ஸாதகர்கள் இருந்து அவர்களுடைய ஸாதனை அவர்களுடையதே ஆகியிருப்பதால், அதற்காக அஹங்காரம் கொள்வது சரியல்ல என்றும் அதன் அர்த்தம். இவ்வாறு இது ஸ்ரீகனகதாஸரின் அபூர்வமான வாக்குகளில் ஒன்று.

ரதம் நகர்ந்த விதம்

திருப்பதியில் ப்ரஹ்மோத்ஸவத்தின் சமயத்தில் ஸ்ரீகனகதாஸர் ஒரு முறை அங்கு சென்றிருந்தபோது, இவரை அடையாளம் காணாத அதிகாரிகள், இவரை அந்தத் தேரை இழுக்க ஒரு சந்தர்ப்பம் தரவில்லை. அப்போது, மக்கள் எவ்வளவுதான் அந்த தேரை இழுத்தாலும், அது முன்னர் நகராமல் திடமாக ஒரேயிடத்தில் நின்றுவிட்டது. ஸ்ரீகனகதாஸருக்கு தாங்கள் செய்த அவமானத்தினால்தான் இவ்வாறு ஆகிறது என்று பிறகு அறிந்த அதிகாரிகள், அவரிடம் செய்து மன்னிப்பு கேட்டு, ரதத்தை இழுக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். உடனே ஸ்ரீகனகதாஸர் 'பாரோ பாக்யத நிதியே' என்னும் க்ருதியை இயற்றி, ப்ரார்த்தித்து தேரை இழுத்தபோது, அது உடனே சரசரவென்று முன்னே

நகர்ந்தது. ஸ்ரீஹரி பக்தவத்ஸலன், ஸ்ரீகனகதாஸர் நிஜ பக்தர் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

கனகரின் வைராக்கியம்

மேற்கண்ட சம்பவங்களால் ஸ்ரீகனகதாஸரின் பெருமை அனைவருக்கும் தெரிந்து, அவர்கள் அவரை மிகவும் விஸேஷமாக ஆதரித்தனர். அப்போது ஒரு முறை, பகவந்தனான ஸ்ரீவெங்கடேஸ்வரன், பக்தர் ஒருவரின் கனவில் வந்து - தனக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கும் காணிக்கைகள் அனைத்தையும் கனகருக்கு கொடுத்தால், அது தனக்கு வந்துவிடும் - என்று கூறினார். அதைப் போலவே, மக்கள் தங்கள் காணிக்கைகளை ஸ்ரீகனகதாஸரிடமே கொடுக்க, அவரும் அவற்றை பகவந்தனுக்கு சமர்ப்பிக்க மனதில் வேண்ட, உடனே ஸ்ரீஹரி அவருக்கு காட்சியளித்தான். அவருடைய சிறந்த குணம், கனகத்தையும் (தங்கம் / செல்வம்) கூட விரும்பாத அவரது வைராக்கியம், அவர் மேல் மக்களுக்கு அதிக மதிப்பு வருவதற்கு ஒரு காரணம் ஆனது.

ஆற்றினை தாண்டினார்

ஸ்ரீரங்கபட்டணத்தின் அருகில் மாதேவபுர. ஒரு நாள் அங்கு காவேரி நதியை தாண்டும் நிலை ஸ்ரீகனகதாஸருக்கு வந்தது. அங்கிருந்த தோணி ஓட்டுபவர்கள் அவரை அவமானம் செய்து, கீழே இறக்கிவிட்டார்கள். அப்போது ஸ்ரீகனகதாஸர் அவர்களிடம் 'ஸாவிர களிஸிதரூ ஸஞ்ஜெகெ லயவாகலி, நள்ளிகுள்ளெயந்தெ மக்களாகலி' (ஆயிரம் ரூபாய் வந்தாலும், மாலையில் அது நஷ்டமாகட்டும்; மக்கள் குள்ளர்களாக பிறக்கட்டும்) என்று சாபம் கொடுத்தார். அடுத்து, தோட்டக்காரர் ஒருவர் வாழையிலை கொடுக்காமல் இருந்ததற்காக, அவனுக்கும் 'வாழை வளர்ந்தாலும் பழம் கொடுக்காதிருக்கட்டும்' என்று சபித்தார். அவருடைய சாபத்தின்படியே அங்கு இன்றும் வாழை வளர்வதில்லை என்று சொல்வதுண்டு. ஸ்ரீகனகதாஸரின் வாயில் சாப வசனம் வரும் சந்தர்ப்பம் இல்லை. ஆனால், எக்காரணமும் இன்றி மற்றவர்களை அவமானம் செய்பவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று

அத்தகைய மஹனீயர்கள் இவ்வாறு சாபம் கொடுப்பதுண்டு. அதாவது, அவருடைய சாப வசனமும்கூட லோக கல்யாணம் என்னும் நோக்கத்திற்காக என்றே இருக்கிறது. தவிர, மற்றவர்களுக்கு கேடு விளைவிக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டது அல்ல.

யானையை அடக்கினார்

ஸ்ரீகனகதாஸரின் பயணம் ஒரு முறை நஞ்சன்கூடு அருகில் இருந்தது. வழியில் ஒரு விசித்ரமான சம்பவம் நடந்தது. நூற்றுக்கணக்கான பேர் பயந்து ஓடிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் கனகரைப் பார்த்து - ஸ்வாமி, ஒரு யானை மதம் பிடித்து இங்கே வந்து கொண்டிருக்கிறது. அதனை யாராலும் அடக்க முடியவில்லை. அதனால் நாங்கள் ஓடிக் கொண்டிருக்கிறோம்' என்று கூறி ஓடினார்.

ஆனால், ஸ்ரீகனகதாஸரோ அங்கிருந்து ஓடவுமில்லை. யானைக்கு பயப்படவும் இல்லை. அதே வழியில் முன் சென்றார். யானையோ அவரிடம் வந்தேவிட்டது. ஸ்ரீகனகதாஸர் அதனை தன் கையால் தொட்டார். என்ன ஆச்சரியம்?. உடனே யானை அமைதியடைந்தது. தன் தும்பிக்கையால் அவரை தூக்கி தன் மேல் அமர்த்தியது. யானை மேல் அமர்ந்தே கனகர், தேவஸ்தானத்திற்கு வந்தார். மக்களுக்கு பெரும் வியப்பு. அவருடைய சாமர்த்தியத்தை கண்டு மயங்கினர். அதன் ரகசியத்தை கேட்டபோது இவ்வாறு கூறினார்.

'பகவந்தன் அனைத்து இடங்களிலும் இருக்கிறான். அவனை நம்பியவர்களை என்றும் அவன் கைவிடுவதில்லை. யானையில் இருக்கும் பகவந்தனை நான் தொட்டேன். அவன் தன்னிடம் என்னை இழுத்துக் கொண்டான்' என்றார். ஸ்ரீகனகதாஸரின் தத்வ ஞானத்தின் பக்குவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பத்மபுராணத்தின் உத்தர கண்டத்தில் வரும் கீதையின் 18ம் அத்யாயத்தின் பல ஸ்ருதியின் கதை இதைப் போலவே

இருக்கிறது. மதம் ஏறிய யானையால் ஊரே பயந்தபோது, வாஸுதேவ என்னும் ப்ராஹ்மணன், மந்த்ரம் ஒன்றை சொல்லி, அதன் மேல் நீர் ப்ரோக்ஷணம் செய்ய, அதன் மதம் இறங்கியது என்பதை அங்கு பார்க்கிறோம். பகவந்தனின் மகிமையை வர்ணிக்கும் பகவத்கீதையின் 16ம் அத்யாயத்தை தினமும் பாராயணம் செய்ததால் தனக்கு இந்த சக்தி வந்திருக்கிறது என்பது அதன் கருத்தாகும். ஸ்ரீகனகதாஸருடைய கதையும் இதுவே. ஸ்ரீமத்பாகவதத்தின் 7ம் ஸ்கந்தத்தில் வரும் ப்ரகலாத கதையிலும் இத்தகைய அற்புதங்கள் இருக்கின்றன என்பதை அறிவோம்.

வெங்கடேஸ்வர ப்ரதிஷ்டாபனை

ஒவ்வொரு ஆண்டும் ப்ரஹ்மோத்ஸவத்தின் காலத்தில், ஸ்ரீகனகதாஸர் திருப்பதிக்கு சென்று ஸ்ரீவெங்கடேஸ்வரனை தரிசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். வயதாகிவிட்டபிறகு, அவருக்கு அவ்வளவு தூரம் செல்ல முடியாமல் போனது. அவர் இருந்த இடத்தில் ஒரு முறை 'நான் வருகிறேன், என்னை அழைத்துக் கொண்டு போ' என்ற ஒரு குரல் அவருக்கு கேட்டது. சுற்றிப் பார்த்தால் அங்கு யாரும் இல்லை. தான் துணி துவைத்துக் கொண்டிருந்த கல்லின் கீழேயிருந்து அந்தக் குரல் வந்தது என்பதை அறிந்தார். உடனே அந்த கல்லை திருப்பிப் பார்த்தபோது, அது ஒரு அழகான சென்ன கேஶவமூர்த்தியை கண்டார். அதனை கொண்டு வந்து ஸ்ரீகனகதாஸர், காகிநெலெயின் அருகில் இங்களகொந்தி என்னும் ஊரில் ப்ரதிஷ்டை செய்தார். அதைப் போல இன்னொரு முறை திம்மப்பனின் குரல் கேட்டபோது, தக்க சிலைக்காக அவர் காத்திருக்கலானார். அப்போது திருப்பதியின் திசையிலிருந்து வந்த ஒரு ஜோதி ஒன்று அனைவருக்கும் தென்பட்டது. அது காகிநெலெயின் அருகில் கும்மூர் கிராமத்தின் ஒரு சிறிய குன்றின் மேல் ஏறியது. தான் அங்கு நிலைத்திருக்கிறேன் என்று பகவந்தன் அனைவருக்கும் ஸூசனை செய்தான். அந்த இடம் பிறகு திம்மகேஶவ தேவஸ்தானம் என்று மக்களால் அழைக்கப்பட்டு புகழ் பெற்றது.

பாத்திரம் கழுவும்போதும் தத்வ தர்சனம்

ஸ்ரீகனகதாஸரின் சிறப்பினை அனைவருக்கும் சொல்வதற்காக ஸ்ரீவ்யாஸராஜர் செய்த உபாயங்களில் இன்னொரு சம்பவமும் இருக்கிறது. ஒரு முறை குருகள், அனைத்து பண்டிதர்களிடமும், ஸ்ரீகனகதாஸரிடமும் பல சொம்புகளைக் கொடுத்து, அவற்றை தூய்மையாக தேய்த்துக் கழுவிக் கொண்டு வருமாறு கூறினார். அதில் பலபேர், அந்த பாத்திரங்கள் வெளியில் பளபளவென மின்னுமாறு கழுவி, கொண்டு வந்து குருவிடம் கொடுத்தனர். ஆனால் ஸ்ரீகனகதாஸரின் பாத்திரமோ அப்படி பளபளக்கவில்லை. ஆகையால், வெற்றி தங்களுக்கே என மற்றவர்கள் நினைத்தனர். ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீகனகரிடம் அவரது பாத்திரத்தின் நிலை குறித்து காரணம் கேட்டார். அதற்கு அவர் இவ்வாறு பதில் அளித்தார்.

தனது பாத்திரம் வெளியே அப்படி தெரிந்தாலும், உள்ளே சுத்தமாக இருக்கிறது என்று சொல்லி, அதனை பார்க்குமாறு கூறினார். அதை ஸ்ரீவ்யாஸராஜர் சரிபார்த்து, மற்றவர்களின் பாத்திரங்களின் உள்ளே அவ்வாறு சுத்தமாக இல்லை என்பதையும் கவனித்தார். ஸ்ரீகனகதாஸர் இவ்வாறு கூறினார். அந்தரங்க சுத்தி மற்றும் புற சுத்தி இரண்டுமே பாவித்ரத்தில் முக்கியம். அதிலும், அந்தரங்க சுத்தி மிகவும் முக்கியம். பால் ஆகியவற்றை நிரப்பும் பாத்திரம், உள்ளே சுத்தம் இல்லையென்றால், அதில் போடும் பதார்த்தங்கள் கெட்டுப் போய்விடும். அதைப் போல மனஸ் சுத்தியில்லாதவனின் ஸாதனை வீண் ஆயிற்று என்று அவர் கூறிய தத்வம் அனைவருக்கும் பாடம் ஆயிற்று. இன்று சமூகத்தில் நடப்பது இதுவே. புறத்தில் ஆசாரமாக தெரிபவர்கள், அகத்தில் அனாசாரியாக இருப்பது நாம் காண்பதே. 'ஆசாரவில்லத நாலிகெ' , 'நகெயு பருதிதெ' , 'உதரவைராக்யவிது' முதலான அனேக க்ருதிகள் இத்தகைய மனிதர்களைப் பற்றியே விளக்குகிறது.

தொற்று நோயை பரிகரித்த யோக ஸித்தி

உடுப்பி யாத்திரை சமயத்தில் தீர்த்தபுர என்னும் கிராமத்தில் நடந்த சம்பவம். ஸ்ரீகனகதாஸர் அந்த கிராமத்திற்கு வரும் சமயத்தில் அங்கு ஒரு தொற்று நோய் பரவி, மக்களை மிகவும் துன்புறுத்தியது. ஸ்ரீகனகதாஸரின் ஸித்தியைப் பற்றி அறிந்த மக்கள், உடனே அவரிடம் வந்து தம்மை காக்குமாறு வேண்டினர். உடனே ஸ்ரீகனகதாஸர், எலுமிச்சை ரசத்தில் துளசியை சேர்த்து அதனை அவர்களை குடிக்குமாறு கூறினார். அப்போதே அனைவரும் நோயிலிருந்து விடுதலை அடைந்தனர். இவ்வாறாக அவர் ஆயிரக்கணக்கான மக்களை காத்த கருணாளு ஆவார். யோகஸித்தியை இவ்வாறு லோக கல்யாணத்திற்காக பயன்படுத்திய சிறப்பு அவருடையது. யோகிகள் என்ற பெயர் பலர் இன்று மக்களை ஏமாற்றி, அவர்களுக்கு த்ரோகம் செய்வது நாம் பார்க்கிறோம். மக்களை ஏமாற்றுவது, ஜனார்த்தனன் மெச்சாத காரியம். மக்களின் சேவையே ஜனார்த்தனனின் சேவை என்னும் சாஸ்த்ர செய்தியை இவ்வாறு தம் வாழ்க்கை முழுவதும் ஸ்ரீகனகதாஸர் தம் யோகஸித்தியினால் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்.

மானஸ பூஜையின் ஸித்தி

ஸ்ரீகனகதாஸரின் மானஸ பூஜையின் சிறப்பினை விளக்கும் இன்னொரு சம்பவம் இது. உடுப்பியில் இருந்தபோது ஒரு முறை அவர் ஸ்ரீகிருஷ்ணனின் கோயிலுக்கு அருகில் இருந்தபோது, ஸ்ரீகிருஷ்ணனின் நைவேத்யத்திற்காக சமைப்பவர்கள் வடித்த கஞ்சி, கோயிலுக்கு வெளியே வந்து விழுந்து கொண்டிருந்தது. இதனைக் கண்ட ஸ்ரீகனகதாஸர் உடனே அதனை கிருஷ்ணார்ப்பணம் என்றார். அதன் பின், நைவேத்ய காலத்தில் யதிகள் அது அப்போதே நைவேத்யம் ஆகிவிட்டது என்பதை கவனித்து, காரணம் தேடியபோது, ஸ்ரீகனகதாஸர் செய்த காரியமே அது என்று அறிந்து, அவருடைய உபாஸனையின் சிறப்பினை அறிந்து மகிழ்ச்சியடைந்து அவரை புகழ்ந்தார். ஸ்ரீவிஜயதாஸரின் ஸுளாதி ஒன்றின் 'ஜதெ' இதனை குறிக்கிறது.

அச்யுதகர்ப்பிதவெந்து தாஸரெனலு கல
கச்சு குடித காணோ விஜயவிட்டல மெச்சி ||

ஸ்ரீகிருஷ்ணனின் அபூர்வமான தரிசனம்

ஸ்ரீகனகதாஸரின் ஸாதனையின் உச்சம் என்றால், அது உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனின் அபூர்வ தரிசனமே. ஒரு மனிதனின் ஸ்மரணைக்காக ஒரு ஜன்னலே நிர்மாணம் ஆயிற்று என்பது சாதாரண விஷயம் அல்ல. ஸ்ரீகனகதாஸர் தம் உடுப்பி க்ஷேத்ரத்தின் ஸஞ்சார சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணனை தரிசனம் செய்ய வேண்டும் என்று நினைத்தார். ஸ்ரீகிருஷ்ணன் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி அருளினான். பகவந்தனை தரிசனம் செய்ய வேண்டும் என்பது பக்தனின் முயற்சி. ஆனால், அவனுக்கு அருளி விஸேஷமான ஸ்மரணையை / தரிசனத்தை கொடுப்பது பகவந்தனின் கருணை. நடுவில் சுவர் இருந்தது. அந்த சுவரை உடைத்து தரிசனம் அளித்தது, அந்த பக்தனின் ஸாதனைக்கான பதிலே. பக்தர்களின் சிறந்தவர் ஸ்ரீகனகதாஸர் என்று கூறுவது இந்த சம்பவத்தினாலேயே.

கனகரின் இறுதிக்காலம்

ஸ்ரீகனகதாஸரின் பிறப்பினைப் போல, இறுதிக் காலமும்கூட ஒரு அற்புதமே ஆகிறது. 90+ வயது ஆகியிருந்தாலும், அவருடைய உடல் நலம் நன்றாகவே இருந்தது. கண், கை, கால், காதுகள் என அனைத்து இந்த்ரியங்களும் சரியாகவே வேலை செய்தன. சிறிய வயதில் செய்த ஷஸ்த்ர அப்யாஸம், பிறகு செய்த ஆத்யாத்ம சிந்தனைகள் இதனால் பக்குவமான மனஸ், இதனால் அவருடைய ஆரோக்கியம் உத்தமமாகவே இருந்தது. அவர் தேகத்தை விடும் முன்னர், திருப்பதியின் ஸ்ரீனிவாஸனின் ஸன்னிதிக்கு ஒப்படைக்க வேண்டும் என்று ஸ்ரீபுரந்தரதாஸர் கொடுத்த தம்பூரியை மற்றும் தண்டத்தை, அவர் ஸ்ரீனிவாஸனின் கர்ப்ப க்ருஹத்தின் வாயிலில் வைத்தார். பிறகு, காகிநெலெக்கு வந்து கர்ப்பக்ருஹத்திற்கு சென்று, ஸ்ரீஹரியின் சேவையை

நிறைவேற்றி தன் உடலை விட்டார். ஸ்ரீஹரியின் அருளால் பிறந்த அவர் ஸ்ரீஹரி பதத்தையே சேர்ந்தார்.

இவ்வாறு ஸ்ரீகனகதாஸருக்கு சம்பந்தப்பட்ட அனேக அற்புத சம்பவங்கள் உள்ளன. இத்தகைய சம்பவங்களை அஸம்பாவித (நடக்க வாய்ப்பு இல்லை) என்று புறம் தள்ளும் மக்களும் உள்ளனர். அதற்கு காரணம் இல்லை. இந்த சம்பவங்களிலிருந்து நாம் அறியவேண்டியது அதன் தத்வங்களையே.

ஸ்ரீமன் மத்வாசார்யார் தனது மஹாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் 'ஸிக்ஷா க்ராஹ்யா நார்த்தா: கதஞ்சன' (22/385) என்று மஹாபாரதத்தின் உபாக்யானங்களைப் பற்றி வந்திருக்கும் வாக்கினை, இத்தகைய (கனகர்) ஞானிகளின் அற்புதங்களுக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

***

9. ஸ்ரீகனகதாஸர் & உடுப்பி ஸ்ரீகிருஷ்ண

ஹரிதாஸர்களின் முக்கிய பகவத் ரூபங்கள் என்றால் அது விட்டல, ஸ்ரீனிவாஸ மற்றும் ஸ்ரீகிருஷ்ண. விட்டலன் நாதப்ரஹ்மன். ஸ்ரீகிருஷ்ணன் அன்னப்ரஹ்மன். ஸ்ரீனிவாஸன் காஞ்சன ப்ரஹ்மன். இந்த மூன்று கேந்த்ரங்களையும் தரிசிக்காத ஹரிதாஸர்கள் மிகவும் குறைவு. பண்டரிபுரத்தின் விட்டலன், ஸ்ரீஹரிதாஸர்களின் க்ருதி ரசனைக்கு முக்ய ஸ்பூர்த்தி எனப்படும் தெய்வம். ஸ்ரீகனகதாஸர் பண்டரிபுரத்தை தரிசித்த ஆதாரமும் இருக்கிறது. திருப்பதி - மற்றும் அங்கு நடக்கும் ப்ரஹ்மோத்ஸவம் என்பது, ஹரிதாஸர்களுக்கு பிடித்த மஹோத்ஸவம். வைஷ்ணவ ஹரிதாஸர்களுக்கு மிகவும் பிடித்தமான மூர்த்தியென்றால், அது உடுப்பி ஸ்ரீகிருஷ்ணன். மத்வ மதத்தை சேர்ந்த ஹரிதாஸர்கள், அந்த மதத்தின் மூலப்ரவர்த்தகரான ஸ்ரீமன் மத்வாசார்யார் ப்ரதிஷ்டை செய்த ஸ்ரீகிருஷ்ணன் - த்வாரகையிலிருந்து வந்த மூர்த்தி. மூலகுரு மற்றும் அவரால் ஆராதனை செய்யப்பட்ட க்ஷேத்ரம் என்பதால், ஹரிதாஸர்களுக்கு மிகவும் இஷ்டமான

இடம் உடுப்பி. தம் குருஸ்தானீயரான ஸ்ரீவாதிராஜரின் முக்ய க்ஷேத்ரம் மற்றும் தம் குருவர்யரான ஸ்ரீவ்யாஸராஜரின் அங்கீத தேவதை என்னும் காரணத்தால் ஸ்ரீகனகதாஸருக்கு உடுப்பியின் தரிசனம் மிகவும் மஹத்வபூர்ணமான காரியம் என்று ஆயிற்று.

'பூர்வஜன்மதலி நானு மாடித கர்மதி உர்வியொளு ஜனிஸிதெனோ கிருஷ்ணா' என்ற க்ருதியின் கடைசியில் 'நா காணுவந்ததலி உடுப்பியாதிகேஶவ ஏகெ தருஶனவீயே கிருஷ்ணா' என்று தெளிவாக சொல்லியிருக்கிறார். அது அவர் உடுப்பியில் தரிசனம் செய்ததற்கு இன்னொரு ஆதாரம் ஆகும்.

மக்களுக்கு தெரிந்ததான கதை இவ்வாறு இருக்கிறது. 'அவருக்கு ஜாதியின் காரணத்தால் ஸ்ரீகிருஷ்ணனின் தேவஸ்தானத்தின் உள்ளே ப்ரவேசம் கிடைக்காமல் ஸ்ரீகிருஷ்ணனின் திவ்ய விக்ரஹத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிற்று. ஆகையால், அவருக்கு மிகவும் கஷ்டமாயிற்று. மேலும், அதே ஜாதி ப்ரச்னையால், அவரை கயிற்றில் கட்டி அடிக்க, அந்த சமயத்தில் ஸ்ரீகனகதாஸரின் பக்திக்கு மெச்சி உடுப்பியின் ஸ்ரீகிருஷ்ணன் மேற்கு நோக்கி நின்று அவருக்கு தரிசனம் அளித்தான். அதுவே இன்றைய கனகனின் கிண்டி' .

ஆனால், உண்மை நிலை இவ்வாறு இல்லை. ஸ்ரீகிருஷ்ணன் மேற்கு நோக்கி திரும்பினான் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. ஒரு சிலை அவ்வாறு திரும்புவதில்லை என்பது பலரின் கருத்து. உடுப்பியின் ஸ்ரீகிருஷ்ண மடம், அஷ்ட மடங்களின் ஆதிபத்யத்திற்கு சேர்ந்தது. அது பொது மக்கள் வந்து தரிசனம் செய்யக்கூடிய தேவாலமாக இருந்ததில்லை. ஆனால், பக்தர்கள் ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்தை பெறவேண்டும் என்பதற்காக, அஷ்ட மடாதீசர்களும் அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். ஆனால், அன்றைய காலகட்டத்தில், மடத்தின் உள் அரங்கத்தில் நுழைந்து, ஸ்ரீகிருஷ்ணனை நேரடியாக தரிசனம் செய்யும் வாய்ப்பு எல்லாருக்கும் இல்லை. இந்த பின்னணியில் ஸ்ரீகிருஷ்ணனின் பக்தராக இருந்த ஸ்ரீகனகதாஸர், மடத்தின்

நியமங்களை மீறாமல், ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்தை எப்படி செய்வது என்ற சிந்தனையில் இருந்தார்.

அன்றைய காலத்தில் புகழ்பெற்று இருந்தவரும், உடுப்பிக்கு அழைப்பின் பேரில் வந்திருந்த சிறப்பு விருந்தினராகவும் இருந்த ஸ்ரீகனகதாஸருக்கு ஸ்ரீகிருஷ்ண தரிசனம் செய்விக்க வேண்டும் என்பதற்காக சந்த்ரஷாலைக்கு அருகில் இருந்த சுவரில் ஒரு ஜன்னல் வைக்கலாம் என்று அன்றைய பர்யாய பீடாதிபதிகள் ஏற்பாடு செய்திருக்கலாம். அவர் ஸ்ரீவாதிராஜவும் இருக்க வாய்ப்புண்டு. அவருக்காக செய்த விஷயம் என்பதால் 'கனகன கிண்டி' என்ற பெயரே அதற்கு வந்தது.

***

10. ஸ்ரீகனகதாஸரின் க்ருதிகள்

ஸ்ரீகனகதாஸரின் க்ருதி ரசனையானது எப்போது துவங்கியது என்பது சரியாக தெரிவியல்லை. அவர் தனது தாம்பத்ய வாழ்க்கையில் சுகமாக இருந்த காலத்தில் இதனை துவக்கியிருக்கலாம். மோஹன தரங்கிணி அப்போதே எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்த க்ருதியில் இருக்கும் உற்சாகம், விவாஹாதி உத்ஸவங்கள் ஆகியவற்றின் விவரணைகள், போர் முதலானவற்றின் சுவாரஸ்யமான வர்ணனைகள், பற்பல அழகான பொருட்களின் அற்புதமான வர்ணனைகள், ஊர்ப் பெண்களின் பற்பல வர்ணனைகள், முக்கியமாக க்ருதியில் தெரியும் ஸ்ருங்கார ரஸம் ஆகியவை இதில் கவனிக்கத் தக்கவை.

அதற்கு அடுத்த காலத்தின் ரசனை - நளசரித்ரெ. மஹாபாரதத்தின் நளோபாக்கியானத்தை தழுவிய இந்த க்ருதியில், ஸ்ருங்கார வர்ணனை குறைந்து, அழகான வாழ்க்கையின் வர்ணனை முக்கியமாக இருக்கிறது. தமயந்தியின் பாத்திரத்தைப் பற்றி கொடுத்திருக்கும் முக்கியத்துவம், அவர் தம்முடைய மனைவியைப் பற்றி கொண்டிருக்கும் பவித்ரமான அன்பிற்கு குறியீடாக இருக்கிறது.

ஸ்ரீராமதான்யசரிதெ, மேலே கூறப்பட்ட க்ருதிகளுக்குப் பிறகான காலத்தில் வந்திருக்கலாம். அதில் ஸ்ருங்காரபாவம் இல்லவே யில்லை. தாம்பத்தியின் வர்ணனைக்கும் அதில் இடம் இல்லை. அதில் வருவது, இரு தான்யங்களின் நடுவில் நடக்கும் ஒரு பேச்சுவார்த்தை. அங்கு முறையே பக்தியின் அம்சம் அதிகமாக காணப்படுவது தெரிகிறது. எவ்வித காரணங்களும் இன்றி, ஜாதியின் பேரில் சண்டை போகும் மக்களின் ஸ்வாபாவத்தினை சொல்வதாக இந்த க்ருதி இருக்கிறது. வாழ்க்கைக்கு தேவையான தானியங்களில் இருக்கும் சண்டை, எவ்வித அர்த்தமும் இல்லாதது என்பது போல, சமூகத்தில் நடைபெறும் குழப்பங்களுக்கும் எவ்வித காரணமற்றதான ஜாதி, எவ்வித அர்த்தமும் இல்லாதது என்னும் சிந்தனை அதில் காணப்படுகிறது.

ஸ்ரீகனகதாஸருக்கு, ஸ்ரீவ்யாஸராஜரின் தொடர்பு, மத்வ ஸித்தாந்தத்தைப் பற்றிய ஆழமான புரிதலுக்கு காரணமாயிற்று. விஷ்ணு ஸர்வோத்தமத்வம், குணபூர்ணத்வம், ஸகல தோஷதூரத்வம், உலகின் ஸ்ருஷ்ட்யாதிகளை செய்வது, மற்ற தேவதைகளின் மேல் அவன் செய்யும் நியந்த்ரணம், பக்தர்களின் மேல் அவனுக்கு இருக்கும் காருண்யம், முக்கியமாக அனாதி காலத்திலிருந்து அனந்த காலம் வரைக்கும் அனைவருக்கும் பிம்பனாக இருந்து, அனைத்து வித உன்னத்திக்கும் காட்டும் க்ருபை முதலான தத்வங்கள், அவருடைய மனதிற்கு அமைதியை தந்தது. ஸ்ரீஹரியே ஸ்வாமி, மற்ற அனைவரும் அவனுக்கு தாஸர்கள் என்னும் மத்வ ஸித்தாந்தத்தின் முக்கியமான கருத்து அவரை ஹரிதாஸர் ஆவதற்கு தூண்டியது. அந்த சமயத்தில், ஸ்ரீவ்யாஸராஜரின் சன்னிதியிலேயே நிலைத்திருந்த ஸ்ரீவாதிராஜரின், ஸ்ரீபுரந்தரதாஸரின் தொடர்புகளும் அவருக்கு கிடைத்து, மத்வ ஸித்தாந்தங்களின் ரஹஸ்ய தத்வங்களின் ஞானம் அவருக்கு நன்றாக புரிந்தது. அதன் பலஸ்ருதி என்பது போல, பிறகு அவரிடமிருந்து வந்ததான மத்வ ஸித்தாந்த ப்ரதிபாத்யமான அவருடைய க்ருதிகள் இருக்கின்றன. 'ஹரி பக்தி ஸார' போன்ற க்ருதி மற்றும் மத்வ ஸித்தாந்தத்தின் ப்ரமேயங்களை விளக்கி இயற்றப்பட்ட க்ருதிகளே அதிகம்.

ஸ்ரீமத்வாசார்யரை ஹனுமந்த, பீமஸேனராக அவதரித்த வாயுதேவரின் மூன்றாம் அவதாரம் என்று அனைவரும் ஒப்புக் கொண்ட விஷயத்தை, ஸ்ரீகனகதாஸரும் கூட தெளிவாக குறிப்பிட்டிருப்பது, அவருடைய மாத்வ தீக்ஷையை தெளிவாக காட்டுகிறது. மத்வ ஸித்தாந்தத்தில் தேவதா தாரதம்ய, ஜகத் ஸத்யத்வ முதலான ப்ரமேயங்கள் அவருடைய க்ருதியில் தெளிவாகவே நிரூபிக்கப்பட்டுள்ளன. அவருடைய ஹரிபக்திஸார க்ருதியோ, மத்வ ஸித்தாந்தத்தின் முக்கிய கோட்பாடுகள் அனைத்தையும் பற்பல விதமாக நிரூபித்த அற்புதமான க்ருதி. ஆகவே, இதுவும்கூட அவருடைய பிறகாலத்தில் இயற்றப்பட்ட க்ருதி என்றே ஆகிறது. கடைசியாக சொல்வதானால், ஸ்ரீகனகதாஸர் துவக்க காலத்தில் கவிகளாக இருந்து, கவிதை உலகிற்கு தன்னை இணைத்துக் கொண்டவர். அதன் பின், பக்தி கவியாக ஆகி, ஹரிதாஸரின் குழுவில் சேர்ந்தவர். முதலின் திம்மப்பனான அவர், பின், திம்மப்ப நாயக ஆகி, கனக நாயக ஆகி, கவி கனக என்றாகி, கடைசியில் பக்தகவியாகி, ஸ்ரீகனகதாஸர் என்று புகழ் பெற்றார்.

அவருடைய கீர்த்தனைகளில் பகவத் பக்தியை விளக்கும் க்ருதிகளே அதிகம். அவருடைய அனைத்து கீர்த்தனைகளும் ஹரிபக்தி ஸாரத்தின் வழியிலேயே இருக்கின்றன. சில இடங்களில், ஹரிபக்திஸாரத்தின் விளக்கம் போல அவருடைய கீர்த்தனைகள் இருந்தால், பல இடங்களில் அவருடைய கீர்த்தனைகளின் சுருக்கமே ஹரிபக்திஸாரம் என்பது போல தெரிகிறது.

ஸ்ரீகனகதாஸர், தம் க்ருதி ரசனையில் துவக்கத்தில் பயன்படுத்தியது - ஸாங்கத்ய. ஸாங்கத்ய என்றால் - நான்கு வரிகளைக் கொண்ட பத்யங்கள். அதில் 1ம் & 3ம் வரிகள் ஒரு அளவு எழுத்துக்களையும், 2ம் & 4ம் வரிகள் ஒரு அளவு எழுத்துக்களையும் கொண்டதாக இருக்கும். மோஹன தரங்கிணி - ஸாங்கத்ய க்ருதி. நரஸிம்ஹ ஸ்தவ என்னும் ஸாங்கத்ய க்ருதியும், அதே சமயத்தில் இயற்றப்பட்டதாக இருக்கலாம்.

ஆனால், இதற்குப் பிறகு அவர் இயற்றிய மூன்று ஸ்வதந்த்ர க்ருதிகளும் பாமினி ஷட்பதியில் இயற்றப்பட்டவை. இது (ஸாங்கத்ய) என்பது அவருக்கு குமாரவ்யாஸ பாரத ஆகியவற்றினால் கிடைத்த ப்ரேரணையாக இருக்கலாம் என்றாலும், அதைவிட முக்கியமாக ஶ்ரீவாதிராஜரின் ஸ்வப்னபத முதலான க்ருதிகளால் கிடைத்த உந்துதலாக இருக்கலாம். மோஹன தரங்கிணி 42 ஸந்திகளைக் கொண்ட தீர்க்க க்ருதி. மஹாகாவ்யத்திற்கு தேவையான அனைத்து லக்ஷணங்களையும் கொண்ட க்ருதி. நளசரித்ரெ மற்றும் ராம தான்ய சரித்ரெ க்ருதிகள் சிறிய காவியங்கள். நளசரித்ரெ மஹாபாரதத்தை தழுவிய க்ருதி என்றால், ராமதான்ய சரித்ரெ ராமாயண காலத்தில் நடந்ததாக சொல்லப்படும் க்ருதி. நள சரித்ரெ கதையை சொல்வதான பற்பல க்ருதிகள் ஸம்ஸ்க்ருதத்திலும், கன்னடத்திலும் வந்திருந்தாலும், நளசரித்ரெ என்றவுடன் ஞானத்திற்கு வரும் க்ருதி - ஶ்ரீகனகதாஸரின் நளசரித்ரெயே ஆகும் என்பதில் இதன் சிறப்பினை அறியலாம். கன்னடத்தின் பல கவிகள் அனுபாவிகள் என்னும் குழுவை சேர்ந்தவர்கள் அல்ல என்பதாலேயே அவர்கள் யாரும் ஶ்ரீகனகதாஸரைப் போல விஸேஷ சிறப்பினை பெறவில்லை. பம்ப, குமாரவ்யாஸ ஆகியோர் மஹாகாவ்ய ப்ரகாரங்களை இயற்றியவர்கள் என்னும் வரிசையை சேர்ந்தவர்கள் என்றால், ஶ்ரீகனகதாஸர், மஹாகாவ்ய, கண்டகாவ்ய, கீர்த்தனை, தண்டக, முண்டிகெ, உகாபோக, ஸுளாதி முதலான பற்பல விதமான ரசனைகளை செய்து, தனக்கான ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்.

தற்போது தெரியவருவதான அவரது க்ருதிகள் இவ்வாறு:

1. மோஹன தரங்கிணி	7. கீர்த்தனைகள்
2. ஶ்ரீ நரஸிம்ஹஸ்தவ	8. உகாபோகங்கள்
3. நளசரித்ரெ	9. தண்டகங்கள்
4. ஶ்ரீராமதான்ய சரித்ரெ	10. ஸுளாதி
5. ஹரிபக்திஸார	11. முண்டிகெகள்
6. வ்யாஸகோஷ்டீ	12. உதயராகங்கள்

1. மோஹன தரங்கிணி

ஸ்ரீமத் பாகவத, ஹரிவம்ச, விஷ்ணு புராண, சிவபுராண முதலான புராணங்களைத் தழுவி எழுதப்பட்ட மஹாகாவ்யம் மோஹன தரங்கிணி. இதன் பெயரே மோஹனமானது. க்ருதியின் எந்த பாத்திரத்தையும் குறிக்காமல் காவியத்தின் சிறப்பினை சொல்வதான இந்தப் பெயர் ஒரு வகையில் வினோதமானதாகும்.

ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யார் இயற்றிய உஷாஹரண க்ருதியும், ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் ருக்மிணீஷ விஜயமும், மோஹன தரங்கிணிக்கு ஒரு ஆதாரமாக உள்ளது. உஷாஹரண க்ருதியில் உள்ள ஸர்க்கங்கள் இவ்வாறு:

1. ஸ்ரீகிருஷ்ண சரித்ரெ (கம்ஸ வதம் வரை) - 114
2. காலயவனனின் ஆக்ரமண & த்வாபர நிர்யாண - 75
3. ருக்மிணீ கல்யாண - 76
4. ஸ்ரீகிருஷ்ண ருக்மிணி கல்யாணம், ப்ரத்யும்ன ஜனன, ஷம்பராஸுர வதம், அனிருத்த ஜனனம் - 57
5. உஷா அனிருத்தரின் விஹாரம், திருமணம் - 78
6. பாணாஸுரன் மூலம் அனிருத்தனின் தோல்வி - 107
7. ஸ்ரீகிருஷ்ணனின் ஷோணீபுரத்தின் ஆக்ரமண - 70
8. ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் சிவ & பாணாஸுரன் போர் மற்றும் அவர்களின் தோல்வி - 93
9. பாணாஸுரனின் சரணாகதி, உஷா அனிருத்தருடன் ஸ்ரீகிருஷ்ணன் த்வாரகைக்கு வருதல் - 74

இந்த உஷாஹரண க்ருதியில் மொத்தம் 744 ஸ்லோகங்கள் உள்ளன. மோஹன தரங்கிணி மொத்தம் இந்த உஷாஹரண க்ருதியையே முக்கியமாக தழுவியதைப் போல தெரிகிறது. ஸ்ரீவாதிராஜரின் ருக்மிணீஷ விஜயத்தின் தொடர்ச்சியான பாகம் போல, இந்த க்ருதி இருக்கிறது. ஸ்ரீகனகதாஸர் தம்மதேயான நடையில் உஷாஹரணத்தின் நிரூபணையை செய்திருக்கிறார்.

ருக்மிணீஷ விஜய க்ருதி, ருக்மிணீஷ கல்யாணத்தின் முக்கிய பகுதியை நிரூபித்தால், அதன் தொடர்ச்சியான பாகம் போல இருக்கும் மோஹன தரங்கிணியில், க்ருஷ்ண ருக்மிணியின் வ்ருத்தாந்தம் (காமதஹன கதை), கிருஷ்ணனின் புத்ரனான ப்ரத்யும்ன ரதியின் (ஷம்பராஸுரனின் ஸம்ஹாரத்தின் கதை) மற்றும் பௌத்ரனான அனிருத்த உஷையின் (பாணாஸுரனின் பராபவத்தின் கதை) திருமணம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. த்ரிவிக்ரதாஸஸ்ய தாஸ - என்று தம்மை ஸ்ரீவாதிராஜரின் ஸிஷ்யன் என்று அழைத்துக் கொள்ளும் ஸ்ரீகனகதாஸர், அவருடைய ருக்மிணீஷ விஜய க்ருதியிலிருந்து ஊக்கம் பெற்றிருப்பது அற்புதம்.

பொஸரதஹன காமோத்பத்தி வரஷம்ப
ராசுரவதெ கந்துஸுதன
பாஸுரலீலெ பாணவ கெத்த ஜயல
க்ஷமீஷன க்ருதிய வர்ணிபெனு || 1-22

மோஹன தரங்கிணி என்னும் பெயரே மிகவும் மோஹனமானது. இங்கு கதை கேட்பவள் - ஸுஞானதூடி. சொல்பவர் - ஸ்ரீகனகதாஸர். இதன் இரண்டாம் ஸந்தியிலிருந்து, ஒவ்வொரு ஸந்தியின் முதல் பத்யத்தில், 'கதையை தொடர்ந்து சொல்லுமாறு' ஸுஞானதூடியின் ப்ரார்த்தனை இருக்கிறது. மனைவியின் கேள்வி ரூபத்தில், ஒவ்வொரு கேள்வியிலும் ஸ்ரீகிருஷ்ணனின் ஒரு மஹிமையின் விளக்கம் வருகிறது. அதைப் போல, அதற்கு பதிலாக வரும் கவியின் பதிலில் கிருஷ்ணனின் மஹாத்ம்யத்தை அறியும் விருப்பம் இருந்தால், கதை சொல்லும் பதியின் மனதில் அதைப் பற்றி ஸ்ருங்காரத்தின் பாவம் தெரிகிறது.

மோஹன தரங்கிணி க்ருதியில், ஸ்ரீகனகதாஸரின் அத்யயன வ்யாப்தியுடன், அனுபவத்தின் வ்யாப்தியும் சேர்ந்திருக்கிறது. அந்த காலத்தின் மக்களின் வாழ்க்கையைப் பற்றி விஷயங்களையும் இது சொல்கிறது. அங்கு வரும் பற்பல வர்ணனைகள், கவிஞருக்கு அதைப் பற்றிய ஆழமான ஞானம்

இருக்கிறது என்பது தெளிவாகிறது. விஸேஷமாக ப்ராஹ்மணரின் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றி கவிஞர் சொல்லும்போது, அவை வெறும் அவருடைய கேள்வி ஞானம் என்று இல்லாமல், அனுபவத்தின் வாக்கு என்று தெரிய வருகிறது. இது ஸ்ரீகனகதாஸருக்கு ப்ராஹ்மண முதலான அனைத்து வர்க்கத்து மக்களின் நடவடிக்கைகளும் பரிச்சயம் என்று தெளிவாக தெரிகிறது.

இந்த க்ருதியின் ஸந்தி விஷயங்கள் இவ்வாறு உள்ளன.

1. நாந்தி – 41	22. பாணாஸுரனின் போகவைகரி – 58
2. ஸௌராஷ்ர வர்ணனை – 57	23. உஷாதேவியின் ஸ்ருங்காரம் - 58
3. த்வாரகா வர்ணனை – 71	24. உஷாதேவி செய்த சிவபூஜை - 73
4. கந்தர்ப்பன ஜனன – 93	25. உஷைக்கு கிடைத்த சிவ வரம் - 46
5. தேவதைகளின் கோரிக்கை – 93	26. உஷை சித்ரலேகையின் பேச்சுவார்த்தை - 41
6. மன்மதனின் தண்ட யாத்ரை – 55	27. உஷையின் கனவு - 66
7. காமதஹன – 44	28. உஷையின் விரக தாபம் - 42
8. ரதியின் விலாபம் – 50	29. சித்ரபட ஸந்தி - 60
9. ஷம்பன் - ரதி – 47	30. சித்ரபட வர்ணனை - 44
10. ஷம்பராஸுரனிடம் ரதி – 44	31. அனிருத்தனின் வருகை - 61
11. ப்ரத்யும்னனின் ஜனன – 80	32. உஷா அனிருத்தர் சந்திப்பு - 59
12. ப்ரத்யும்னன் மூலம் ஷம்பராஸுரனின் வதை - 95	33. உஷா அனிருத்தர் திருமணம் - 64
13. ரதி மன்மதனின் திருமணம் – 82	34. அனிருத்த கும்பாண்டர சண்டை - 44

14. ரதி மன்மதனின் ஜலக்ரீடை – 93	35. பாண அனிருத்தரின் சண்டை - 37
15. ரதி மன்மதரின் ஸ்வாகதம் – 39	36. கருடனின் ஸந்தி - 73
16. கர்ப்பவதியான ரதி – 66	37. கும்பாண்டனின் அறிவுரை - 60
17. அனிருத்த ஜனன – 85	38. ஹரிஹர சண்டை – 66
18. அனிருத்தனின் நகர ஸஞ்சாரம் – 110	39. ஸ்ரீகிருஷ்ண சிவ சண்டை – 45
19. அனிருத்தனின் வேட்டை – 88	40. ஸ்ரீகிருஷ்ண பாணாஸுர போர் – 95
20. ஷோணிதபுரத்தின் வர்ணனை – 63	41. உஷா அனிருத்தரின் கிருஷ்ண தரிசனம் – 65
21. பாணாஸுரனின் சிவபூஜை – 73	42. ஸ்ரீகிருஷ்ணன் த்வாரகைக்கு வருதல் - 78

என மொத்தம் 2709 ஸ்லோகங்கள்.

க்ருதிகாரரே சொல்வதைப் போல, இந்த க்ருதியின் சிறப்பு மிகவும் அற்புதமானது.

ஹரிஷரணர பெச்சு புதஜனரிகெ மெச்சு
துரிதவனகெ காள்கிச்சு
விரஹிகளொர்தகிச்சு வீர்ர்கெ புச்சு கே
ள்வரிகிது தனிபெல்லதச்சு || 1-39

2. ந்ருஸிம்ஹஸ்தவ

இந்த க்ருதியில் மொத்தம் 97 ஸாங்கத்ய நுடிகள் உள்ளன. இதில் முதலில் காகிநெலெயின் மேல் மங்களம்; பிறகு ராமானுஜ ஸ்துதி இருக்கிறது.

3. நளசரித்ரெ

மொத்தம் 9 ஸந்திகள். 481 பாமினி ஷட்பதி பத்யங்கள். மகாபாரத நளோபாக்கியானத்தை விஷயமாக ஆக்கிக் கொண்டு கன்னடத்தில் அதிகமாகவும், ஸம்ஸ்க்ருதத்தில் 40க்கும் அதிக க்ருதிகள் வந்திருக்கின்றன. நள சரித்ரத்தை மக்கள் விரும்புவதே இதற்கு சாட்சி. பெரும்பாலான மக்கள், ஸாஹித்யத்தின் பார்வையில் நளசரித்ரெயை படித்தால், சிலர் தர்மத்தின் பார்வையில் இதனை படித்து மகிழ்கின்றனர். ஸ்ரீகனகதாஸர் இதனை ஸ்ருங்கார மற்றும் பக்தியின் சித்திரமாக இயற்றியிருப்பது விஸேஷமான அம்சம்.

4. ராமதான்ய சரிதெ

இது 158 பாமினி ஷட்பதி பத்யங்களைக் கொண்டது. இதுவரை கிடைத்ததில் இது ஒன்றே கையெழுத்துப் ப்ரதியாக கிடைத்து, பதிப்பிக்கப்பட்டது என்று தெரிய வருகிறது. ராகி மற்றும் அரிசியைப் பற்றி நடந்த ஒரு சண்டையை கதை போல நிரூபிக்கும் இந்த க்ருதியில், ஏழைகளின் தானியமான ராகிக்கு, செல்வந்தர்களின் தான்யமான அரிசியைவிட முக்கியத்துவம் உள்ளது என்னும் தீர்ப்பு உள்ளது. ராமாயணத்திற்கு சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் என்பது போல இதில் சொல்லப்பட்டிருந்தாலும், இது எந்தவொரு ராமாயணத்திலும் கண்டு வருவதில்லை. ஆகவே, இது கவியின் கற்பனைக் க்ருதி என்றே சொல்ல வேண்டும். ராகியின் சிறப்பினை சொல்லும் ஸ்ரீராமனின் மகிமை என்றும் இந்த க்ருதி உள்ளது. ஸ்ரீகனகதாஸரின் மனோபாவம், பக்தியின் பால் செல்வதை இந்த க்ருதியில் மிகவும் தெளிவாக நம்மால் பார்க்க முடிகிறது.

5. ஹரிபக்திஸார

ஹரிபக்திஸார, ஸ்ரீகனகதாஸரின் க்ருதிராஜ (மிகச்சிறந்த க்ருதி) எனலாம். இது அளவில் அவரது மற்ற மூன்று காவிய க்ருதிகளைவிட குறைவாக இருந்தாலும், விஷயத்தின் அடர்த்தி,

சிந்தனையினை தூண்டுதல், நிரூபணையின் காம்பீர்யம், அனுபவத்தின் தீவிரம், சீரிய நடை இவை அனைத்தையும்விட பகவந்தனைப் பற்றி சொல்லப்படும் சமர்ப்பண பாவம் இவையே போன்ற அனைத்து காரணங்களாலும், இது அவரது 'க்ருதிராஜ' என்று சந்தேகமின்றி அழைக்கலாம்.

ஹரிபக்திஸார - இதில் 'ஹரி' என்றால், அவரது ப்ரியமான ஆராத்ய தெய்வமான ஸ்ரீஹரி. காகிநெலெயின் நரஸிம்ஹாதி கேஶவ, பங்காபுரத்தின் நரஸிம்ஹ & கேஶவ, பாட' வின் ரங்கநாத, திருப்பதியின் வெங்கடேச, ஸ்ரீரங்கத்தின் ரங்கநாத, உடுப்பியின் ஸ்ரீகிருஷ்ணன் முதலான அனைத்து ரூபத்தின் தேவனென்றால் இந்த ஸ்ரீஹரியே. மத்வ பரம்பரையின் முழுமையான பின்பற்றுபவராக ஸித்தி பெற்ற ஸ்ரீகனகதாஸரின் இந்த க்ருதி, பக்தி ஸாஹித்யத்தில் ஒரு மைல்கல்லாக திகழ்கிறது என்றே சொல்லலாம்.

ஸ்ரீகனகதாஸரின் 'ஹரிபக்திஸார' ஹரிதாஸ ஸாஹித்யத்திலேயே முதல்முறையாக பக்தி தத்வத்தின் அருமை பெருமைகளின் நிரூபணைக்காக இயற்றப்பட்ட அபூர்வமான க்ருதி. பாமினி ஷட்பதியில், 108 பத்யங்கள் + 4 பல ஸ்ருதி பத்யங்கள் இதில் உள்ளன. முதல் 16 பத்யங்களில் ஸ்ரீராம மற்றும் ஸ்ரீகிருஷ்ண ரூபத்தின் ஸ்ரீஹரியின் ஸ்தோத்ரம் வந்து, பின்னர் வரும் பத்யங்களில் ஸ்ரீஹரியின் சிறப்புகளை விதம்விதமாக நிரூபிக்கிறார்.

ஸ்ரீஹரி, சர்வதந்த்ர ஸ்வதந்த்ரன். அனந்தானந்த கல்யாண குணபரிபூர்ணன், ஸகல தோஷதூரன். இந்த உலகின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த மற்றும் மோக்ஷ என்னும் அஷ்ட மஹாகாரியங்கள் நடப்பது அவனாலேயே. அவனின் ப்ரேரணை இன்றி, மற்ற அனைவரும் வெறும் பொம்மைகளே. நாம் ஆட்டினாலேயே பொம்மைகள் ஆடுவதைப் போல, ஸ்ரீஹரியின் ப்ரேரணையினால் மட்டுமே ரமா ப்ரஹ்மாதிகளைக் கொண்ட இந்த ஜகத், தன் அஸ்தித்வத்தை, நடவடிக்கைகளைக் கொண்டிருக்கிறது. ஸ்ரீஹரியின் மூத்த மகன் -

ப்ரஹ்மதேவர். ஸ்ரீருத்ரர், ப்ரஹ்மதேவரின் மகன்; ஸ்ரீஹரியின் பேரன். இவர்கள் இருவரும், தம்மை வேண்டும் பக்தர்களுக்கு வரம் கொடுப்பவர்களாக இருந்தாலும், அந்த வரங்களை தவறாக பயன் படுத்தினால், அவற்றை வழிமுறைப்படுத்தும் சாமர்த்தியத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. ஸ்ரீஹரி அப்படியல்ல. அவன், அயோக்யருக்கு வரங்களை கொடுப்பதேயில்லை. ப்ரஹ்மதேவர் கொடுத்த வரங்களை தைத்யர்கள் தவறாக பயன்படுத்தினால், அந்த வரங்களை தடுக்கும் மஹாஸாமர்த்தியத்தினை அவன் பெற்றிருந்தான்.

ஸ்ரீஹரியின் மகனான ப்ரஹ்மதேவர், உலகின் ஸ்ருஷ்டியை செய்யும் காரியத்தை செய்தால், அந்த ஸ்ரீஹரியின் இன்னொரு மகனான காமன், ஸ்த்ரீ - புருஷர்களில் பரஸ்பரம் ஈர்ப்பு வருமாறு செய்து, ப்ரஜா வ்ருத்திக்கு காரணமாகிறான். துஷ்ட நிக்ரஹம் செய்வதற்கு ஸ்ரீஹரி ஸமர்த்தர் என்பது போல, ஸிஷ்ட ரக் ஷணையையும் செய்யும் ஸமர்த்தனும் ஆகிறான். தன் பக்தரானவர், ஏதோ காரணங்களினால் தவறுகளை செய்தாலும், மன்னிக்கும் கருணாளு அவன். தன் கர்மங்களின் பலனாக, ஜீவனுக்கு வரும் ஜன்மங்கள் அனந்தமானவை. ஜீவர்கள் பிறக்காத ஊர்கள் இல்லை. உண்ணாத ஆகாரங்கள் இல்லை. பேசாத மொழிகள் இல்லை. இவ்வாறு ஜென்மங்களின் எண்ணிக்கை அபாரமானது. இத்தகைய பற்பல பிறவிகளில் ஜீவன் குடிக்கும் தாய்ப்பாலின் துளிகள்கூட பாற்கடல் அளவிற்கு இருக்கும். அவன் உண்ட அன்னம் மேரு பர்வதத்தைவிட அதிகமானது. இவ்வளவு ஆனபிறகும், அவனுக்கு மனைவி, மக்கள் ஆகியோரின் மேல் இருக்கும் மோகம் அவ்வளவு சுலபமாக அழிவதில்லை. அது குறையாதவரை, அவனுக்கு இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை இல்லை. அப்படி மோஹம் அழிக்கும் பெரிய ஸாதனம் எதுவென்று கேட்டால், அது ஸ்ரீஹரியின் அனுக்ரஹமே.

அத்தகைய அருள் கிடைக்க அவன் எப்போதும் ஸ்ரீஹரியின் ஸ்மரணையை செய்ய வேண்டும். ஸ்மரணைக்கு பக்தி தேவை.

அத்தகைய பக்தி பிறக்க, ஸ்ரீஹரியின் சிறப்பினைப் பற்றிய ஞானம் தேவை. அந்த ஞானம் இல்லாத பக்தி, மூடபக்தியே ஆகும். அது உண்மையான பக்தி இல்லை. அதற்கு ஜீவனுக்கு தேஹாதிகளின் மேல் வைராக்கியம் பிறக்க வேண்டும். யோக்ய குருகள் கிடைத்து, ப்ரஹ்மஞானத்தின் உபதேசம் கிடைக்க வேண்டும்.

அத்தகைய உபதேசங்களை தவறாமல் பின்பற்றி, ஸ்ரீஹரியின் சிறப்புகளை தன் வாழ்க்கையின் மற்றும் உலகின் ஒவ்வொரு காரியத்தின் பின்னணியிலும் அடையாளம் கொண்டு வாழ்வதே மிகப்பெரிய ஸாதனை ஆகும். இத்தகைய ஸாதனையை செய்பவர்களுக்கு அவனின் அருளால் முக்தி கிடைத்து, முழுமையான ஆனந்தத்தினால் கூடிய ஸித்தி கிடைக்கிறது. இத்தகைய ஸாதனைக்கு மிக முக்கியமான தேவை - ஸ்ரவணம். இவ்வாறு ஹரிபக்தியைப் பற்றி அனைத்து விஷயங்களும் ஒரே இடத்தில் தொகுக்கப்பட்டது என்றால் அதுவே ஹரிபக்திஸார க்ருதி.

ஹரிபக்தியே அனைத்து வாழ்க்கையின் ஸாரம் என்னும் இங்கு சொல்லப்படும் பாவம், வேதாந்தத்தின் ஸாரம். ஸ்ரீகனகதாஸரின் அனைத்து க்ருதிகளுமே, ஒரு அர்த்தத்தில் 'ஹரிபக்திஸாரமே' ஆகும்.

6. வ்யாஸகோஷ்டி

தொட்டபள்ளாபுரத்தின் ராகவேந்த்ரப்ப என்னும் கவிஞரின் 'ஸாரஸ்வத பரிணய' என்னும் புத்தகத்தில் இந்த க்ருதியைப் பற்றிய குறிப்பு உள்ளது. ராகவேந்த்ரப்ப 1799ம் ஆண்டில் மைஸூரு ஸம்ஸ்தானத்தின் ப்ரஸிடெண்டாக இருந்த கர்னல் க்லோஸ் என்னும் அதிகாரிக்கு ஆப்த காரியதரியாக இருந்தவர் என்பது இந்த புத்தகத்தில் தெரிகிறது.

7. ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகள்

ஸ்ரீபுரந்தரதாஸரைப் பற்றி, அவர் மற்றும் பின்வந்த ஸ்ரீவிஜய தாஸர் ஆகியோர் கொடுத்திருக்கும் தகவல்களை வைத்து, அவருடைய க்ருதிகளின் எண்ணிக்கையை சரியாக சொல்லும் சாத்தியம் இருக்கிறது. ஆனால், ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளின் எண்ணிக்கையை தெளிவாக கூறும் எந்த ஆதாரமும் இல்லை. நாட்டுப்புற பாடல்களில் அவருடைய க்ருதிகள் ஆயிரக்கணக்கானவை என்னும் பேச்சு உள்ளது. அது உண்மை என்றானால், விவாதத்திற்கு காரணமே இல்லை. ஆனால், இன்று பலதரப்பட்ட இடங்களிலிருந்து சேர்க்கப்பட்ட ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகள் 500க்கும் அதிகம் ஆகவில்லை.

ஸ்ரீகனகதாஸரின் தன்னுடைய ஸஞ்சார காலத்தில் இயற்றப்பட்ட பல க்ருதிகள் எழுதப்படவில்லை என்று அறிகிறோம். மாத்வரில் மட்டுமே அவருடைய பாடல்களை பாடும் பத்ததி இருப்பதால், அவற்றின் ப்ரசாரம் மாத்வர் அல்லாதவர்களில் அவ்வளவாக இல்லை என்றே சொல்ல வேண்டும். மாத்வர்கள் இல்லாதவர்களின் கவனம் ஸ்ரீகனகதாஸர் மேல் பரவியது சென்ற நூற்றாண்டிலிருந்தே என்று கூறலாம். அதற்கு முன்னர் அப்படி இல்லை. சென்ற நூற்றாண்டிலிருந்து, மாத்வ ஸம்ப்ரதாயத்தில், ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளை சேகரிக்கும் வேலையும் தொடங்கி, உடுப்பி, தார்வாட, பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து பற்பல தொகுப்புகள் வந்திருக்கின்றன என்பது மிகப்பெரிய ஆறுதல்.

தேவதா ஸ்துதி, குரு ஸ்துதி, ஆத்மகதன, மோக்ஷ ஸாதன நிரூபணை, ஹரி ஸர்வோத்தமத்வ ப்ரதிபாதனை, நீதிபோதனை, ஸ்ரீகிருஷ்ண லீலை, தசாவதார வைபவம், முண்டிகெ, உதயராக முதலான பற்பல விபாகங்களில் ஸ்ரீகனகதாஸரின் க்ருதிகளை வகைப்படுத்துவதற்கு சாத்தியம் இருக்கிறது.

இவருடைய க்ருதிகளைப் பற்றி சிலர் ‘கனகதாஸர் ஹரிதாஸர்களில் ஒரு கவி என்று சொல்வதின் பின்னணியை

ஆராய வேண்டும்' என்று சொல்வதுண்டு. அது சரியல்ல. முண்டிகெயின் ஸ்வரூபத்தை தெரியாதவர்கள் மட்டும் செய்யும் விமர்சனம் இது என்று சொல்லலாம். அவருடைய க்ருதிகளை முழுமையாக ஆராய்ந்து படித்தவர்களுக்கு இந்த விமர்சனம் தவறாகவே தோன்றும்.

பகவானின் பாரம்யத்தை வர்ணிப்பதில் அவருடையது தாத்விக சிந்தனை என்றால், விஷய நிரூபணையில் அவருடையது - காவிய நடையே ஆகும். சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை விமர்சித்து சொல்வதில் அவர் ஏராளமான க்ருதிகளை இயற்றியிருக்கிறார். லௌகிக வாழ்க்கையின் தோஷங்களை நிரூபிக்கும் அவருடைய க்ருதிகள் மிகவும் மர்மம் நிறைந்தது. பழமொழிகளைப் போல தெரியும் அவருடைய அனேக கீர்த்தனைகள், நம் வாழ்க்கைக்கு காட்டும் வெளிச்சம் அபாரமானது. தசாவதார ஸ்துதிகளில் தெரியும் நடை மற்றும் காவியமயம் மிகவும் அற்புதமானது. புராணத்தின் கதைகளிலிருந்து தெரியும் தத்வங்களை, வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு ஏற்றதாக அவர் சொல்லும் விதம் நம் மனதை மயக்குகிறது. ஸ்ரீபுரந்தரதாஸர் போலவே, பௌராணிக கதைகளின் பின்னணியில் உதயராகங்களை இயற்றிய கீர்த்தி அவருடையது. அவருடைய க்ருதிகளில் சகஜமாக தெரியவரும் பக்திபாவம், அவருடைய சிந்தனையின் தூய்மையை சொல்லும் கண்ணாடி போல இருக்கிறது.

' ಈಶ நின்ன சரணபஜனெ' என்னும் அவருடைய க்ருதி கேசவ நாமா குறித்த க்ருதிகளில் முதன்மையானது. வைஷ்ணவர்களில் இந்த க்ருதி, மந்த்ர துல்யமாக கருதப்பட்டு தினமும் பாடப்பட்டு வருகிறது. 'தனு நின்னது ஜீவன நின்னது ரங்க', 'நீ மாயெயொளகோ நின்னொளு மாயெயோ', 'தல்லணிஸதிரு கண்ட்ய தாளு மனவே' முதலான அவருடைய அனேக க்ருதிகள் அனைத்து காலங்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

8. உகாபோகங்கள்

உகாபோகங்கள், தாஸ ஸாஹித்யத்தின் ஒரு சிறப்பான வகை. ஸம்ஸ்க்ருதத்தின் பழமொழிகள் போல இருக்கும் இவை, ஆத்யாத்ம விஷயத்தை சார்ந்திருப்பது இதனுடைய சிறப்பு. இன்றைக்கு கிடைக்கும் உகாபோகங்களில் அதிக எண்ணிக்கையில் இருப்பது - ஸ்ரீபுரந்தரதாஸருடையதே. அடுத்த இடம் - ஸ்ரீவிஜயதாஸருக்கு. ஸ்ரீகனகதாஸரின் உகாபோகங்களைப் பற்றிய சரியான எண்ணிக்கை இல்லை. இன்று கிடைப்பது வெறும் நான்கு உகாபோகங்கள் மட்டுமே.

'அளிவ தேஹவா ஸிங்கரிஸுவேகெ' என்ற அவருடைய ஒரு உகாபோகத்தில் இருந்தது ஹரிபக்தி மட்டுமே. இந்த உடல் நிரந்தரம் அல்ல. உள்ளே இருக்கும் ஜீவன் நித்ய. பிம்பரூபியான பகவந்தனும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான பரதத்வம். ஒவ்வொரு நொடியிலும் அவனுடைய த்யானம் தேவை. இதுவே நாம் இன்னொரு முறை ஸம்ஸாரத்தின் சுழற்சிக்கு சிக்காத வகையில் இருப்பதற்கான உபாயம். ஸ்ரீஆதிகேஶவன் தன்னை நம்பியவர்களை என்றும் கைவிட மாட்டான்.

'பெனகனொல்லெனவ்வ' என்னும் இன்னொரு உகாபோகத்தில் வினாயக, ஷண்முக, இந்த்ர, சந்த்ர, ஸூர்ய மற்றும் ருத்ர தேவரின் குறிப்புகள் உள்ளன. இதில் வினாயகர் அசைந்து அசைந்து நடப்பவன். ஷண்முகன் பல முகங்களைக் கொண்டவன். இந்த்ரன் உடல் முழுக்க கண் கொண்டவன். சந்த்ரன் களை இழப்பவன். ஸூர்யன் தொடர்ந்து எரிபவன். ஹரன் மயங்குபவன். ஆனால், காகிநெலெ ஆதிகேஶவனான ஸ்ரீஹரி மட்டும் அனைத்து விதங்களிலும் பரிபூர்ணன் ஆனவன். அவன் அனைத்து ரீதியிலும்கூட த்யானிப்பதற்கு யோக்யமானவன். பரதேவதை - என்னும் செய்தி இந்த உகாபோகத்தில் உள்ளது.

இதே போல அவருடைய மற்ற உகாபோகங்களும் ஹரி ஸர்வோத்தமத்வமே முதலான தத்வவாத தத்வங்களை பறைசாற்றுகின்றன என்பதை பார்க்கிறோம்.

9. தண்டகங்கள்

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இன்னொரு சிறப்பான வகை - தண்டகங்கள். மிக நீண்டதும், மிகவும் பழமையானதுமான தண்டகம் என்றால், அது ஸ்ரீஸ்ரீபாதராஜரின் லக்ஷ்மி ந்ருஸிம்ஹ ப்ராதுர்பாவ தண்டகம். பிறகு, தண்டகங்கள் அவ்வளவாக இயற்றப்படவில்லை. மீண்டும் தண்டகங்கள் இயற்றப்பட்டது ஸ்ரீகனகதாஸராலேயே. பல்லவி, அனுபல்லவி, நுடி, தாளம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் இவை கத்யம் போலவே இருக்கின்றன. இத்தகைய தண்டகங்கள், ஸ்ரீகனகதாஸரின் பெயரில் 80க்கும் மேல் இவை என்று சொல்லப்படுகின்றன. இதுவரை 7 தண்டகங்கள் ப்ரசுரம் ஆகியிருக்கின்றன. அவை மிகவும் ஆழமான தாத்விக விசாரங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. முக்கியமாக மத்வ ஸித்தாந்தத்திற்கு தக்கதான கர்மயோகம், ஞானயோகங்களையும், ஸ்ரீமத் பாகவதத்தின் கபில கீதையில் உள்ள தேகத்தின் பிறப்பு முதலானவைகளையும், வாழ்க்கையின் அர்த்தங்களையும், ஸ்ரீஹரியின் உபாஸனையின் விதங்களையும் மிகவும் விளக்கமாக இந்த தண்டகங்களில் நிரூபணம் செய்திருக்கிறார்.

10. ஸுளாதி

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இன்னொரு சிறந்த வகை - ஸுளாதி. பல்லவி, அனுபல்லவி, ராகம் ஆகியவை குறைவாகவும், தாளத்தை முக்கியமாகவும் உள்ள க்ருதி வகை இது. ஒரு வகையில் கத்யம் போல இருந்தாலும், இது ஒரு தனிப்பட்ட வகை. கீர்த்தனையில் தெரியும் நுடிகளைவிட வேறானதாக, வெவ்வேறான தாளங்களில் பாடப்படுவது இதன் சிறப்பு. கடைசியில் வரும் 'ஜதெ' என்பது ஸுளாதியின் ஸாரத்தை நிரூபிக்கிறது. கீர்த்தனைகளில் இருக்கும் பல்லவியைப் போல ஸுளாதியில் இந்த ஜதெ இருக்கிறது எனலாம். இரண்டே வரிகளில் ஸுளாதியின் விஷயத்தை இது நிரூபிக்கிறது. எடுத்துக் கொண்ட விஷயத்தை, வெவ்வேறு தாளங்களில் நிரூபிக்கும் ஸுளாதி வகையானது, கொண்ட சிறப்பு அபாரமானது. ஒரு சிறிய

ஆராய்ச்சிக் கட்டுரையைப் போல தெரியும் இத்தகைய க்ருதிகள், ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வரப்ப்ரஸாதம் எனலாம். எண்ணிக்கையில் அதிகமான ஸுளாதிகளை இயற்றிய பெருமை - ஸ்ரீபுரந்தரதாஸருக்கு உரியது. ஆனால், இன்று கிடைத்திருக்கும் ஹரிதாஸ ஸாஹித்யத்தின் ஸுளாதிகளில் அதிகமான எண்ணிக்கை ஸ்ரீவிஜயதாஸருடையது. ஸுளாதி தாஸர் என்றே பெயர் கொண்டவர். பிறகான எண்ணிக்கை ஸ்ரீகோபால தாஸருடையது. ஸ்ரீஜகன்னாத தாஸரின் பெயரில் கிடைத்திருக்கும் ஸுளாதி - இரண்டு. அதே போல, ஸ்ரீகனகதாஸரின் பெயரில் கிடைத்திருக்கும் ஸுளாதி - ஒன்றே ஒன்று. த்ருவ, மட்ய, த்ரிபுட, அட்ட, ஏக மற்றும் ஜதெ என்று இந்த முறையில் இருக்கும் இந்த க்ருதி, ஸ்ரீகிருஷ்ணனின் விதம்விதமான மகிமைகளை அற்புதமாக விளக்குகிறது.

11. முண்டிகைகள்

முண்டிகைகள் ஸ்ரீகனகதாஸரின் சிறப்பு வகை ரசனைகள் ஆகும். இதர ஹரிதாஸர்களைவிட ஸ்ரீகனகதாஸர் வேறாக தெரிவதற்கு அவருடைய இந்த முண்டிகைகளே முக்கிய காரணமாகும். மற்ற தாஸரின் க்ருதிகளிலும் இவ்விதமான முண்டிகைகள் தெரிய வந்தாலும், அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால், ஸ்ரீகனகதாஸரின் பெயரில் கிடைத்திருக்கும் முண்டிகைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். ஸ்ரீவிஜயதாஸரை எப்படி ஸுளாதி தாஸர் என்று சொல்கிறோமோ, அப்படியே ஸ்ரீகனகதாஸரை முண்டிகெ தாஸர் என்று அழைக்கலாம்.

புராணங்களில் வரும் ரகசிய மொழி (குஹ்ய பாஷை) என்னும் விதம், இந்த முண்டிகைகளுக்கு மிக அருகில் வருகின்றன. வைதிக ஸாஹித்யத்தில் வரும்:

சத்வாரி ஸ்ருங்கா த்ரயோ அஸ்ய பாதா
த்வே ஸீர்ஷே ஸப்தஹஸ்தாஸோ அஸ்ய |
த்ரிதா பத்தோ வ்ருஷபோ ரோரவீதி
மஹோ தேவோ மர்த்யாம் ஆ விவிஸேஷ ||

என்னும் ரிக்வேத 4-58-3 என்னும் மந்த்ரம் இதற்கு ஒரு உதாரணம்.

அபாணிபாதோ ஜவனோ க்ரஹீதா
பஷ்யத்யசக்ஷு: ஸ ஸ்ருணோத்யகர்ண: |
- ஷ்வேதஷ்வதரோபனிஷத் 3-19

த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே |
தயோரன்யா: பிப்பலம் ஸாத்வத்தி அனஷ்னன்னன்யோ அபிசாகஷீதி ||
- முண்டகோபனிஷத் 3-1

த்வைத அத்வைத வாதத்திற்கு பேசுபொருளாக இருக்கும் மஹா வாக்கியங்கள் எனப்படும் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' , 'தத்வமஸி' , 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' , 'நேஹ நானாஸ்தி கிஞ்சன' முதலான வேத வாக்கியங்கள்கூட மூலத: வைதிக உலகின் முண்டிகைகளே ஆகும். மேல்நோட்டமாக பார்த்தால், அத்வைத பரமாகத் தெரியும் இவை, த்வைத வேதாந்தத்தின் மஹா ப்ரமேயங்களை நிரூபிக்கும் த்வைத வசனங்களே ஆகும்.

மகாபாரதம் அனைத்து சாஸ்திரங்களின் ஸாரம். பகவத்கீதை மஹாபாரதத்தின் ஸாரம். பகவத்கீதையின் 15ம் அத்யாயம், மொத்த பகவத்கீதையின் ஸாரம் என்பது சாஸ்திரங்கள் சொல்லும் விஷயம். பகவத்கீதையின் 15ம் அத்யாயத்தின் முதல் இரு ஸ்லோகங்கள் முண்டிகைகளே ஆகும்.

ஊர்த்வமூலமத: ஷாகமஷ்வத்தம் ப்ராஹுரவ்யயம் |
சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித் ||

அதஷ்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ்தஸ்ய ஷாகா
குணப்ரவ்ருத்தா விஷயப்ரவாலா: |
அதஷ்ச மூலான்யனுஸந்ததானி
கர்மானுபந்தீனி மனுஷ்யலோகே ||
(பகவத்கீதை 15/1-2)

மண்டெ என்றால் தலை. தலைக்கு சிந்தனைக்கு ஆஹாரத்தை கொடுக்கும் ஸாஹித்ய என்னும் அர்த்தத்தில் இந்த முண்டிகை சொல்லின் இலக்கணக் குறிப்பு இருக்கிறது என்று சிலர் சொல்கின்றனர். முண்டிகைகளை முடிகெ என்றும் சிலர் சொல்கின்றனர். முடி என்றாலும் தலைதான். முடிகெ என்றால் தலைக்கு சவாலாகும் ரசனை என்று இதற்கு அர்த்தம் இருந்திருக்கலாம். சிவசரணர்களின் வசன ஸாஹித்யத்தில் 'பௌகின வசனங்கள்' என்னும் அனேக க்ருதிகள் கண்டு வருகின்றன. அவையும் முக்கியமாக இந்த விதமே. ஸ்ரீகனகதாஸர் அந்த அர்த்தத்திலும் தம் முண்டிகைகளை அமைத்திருக்கிறார்.

கனகனு ஹேளித பெடகு கண்டவரு நீவு
கேளிதிளிது நிம்ம மனதல்லி நோடி
காகிநெலெய கனகதாஸ ஹேளிதந்த முண்டிகெய பல்லனு
ஆதிகேஶவனொப்பனு
பல்லவரு நீவு பேளிரய்ய பாவதுபயார்த்தவிது
எல்லரிகெ ஸம்மதவாதீ நாம

சில முக்கிய தத்வங்களை நேரடியாக கூறினால், தவறான அர்த்தமும் வந்து, அவற்றை கெட்ட பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்னும் சிந்தனையும், முண்டிகெ க்ருதிகளை இயற்றுவதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். விதுரன், துரியோதனனின் கெட்ட தந்திரத்தினால், பாண்டவர்கள் வாரணாவதத்திற்கு வந்த போது, அரக்கு மாளிகை பற்றி யுதிஷ்டிரனிடம் ஒரு ரகசிய மொழியில் கூறுகிறான் என்று மஹாபாரதம் சொல்கிறது. பாண்டித்தத்தின் கர்வம் இருந்தவர்களுக்கு இத்தகைய ரசனைகளை ஒரு சவாலாகக் கொடுத்து அவர்களின் கர்வத்தை குறைப்பது, இவற்றின் ரசனைக்கு இன்னொரு காரணம். ஆழமான சிந்தனையை தூண்டுவதன் மூலம், புத்தியை கூர்மைப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கம் என்றும் சொல்லலாம்.

முள்ளு கொனெய மேலெ மூரு கெரெய கட்டி எரடு தும்பவு ஒந்து தும்பலெ இல்லா - என்பது தாத்விக சிந்தனையின் பின்னணியில் உள்ள முண்டிகைகள். வேறு சில புராண கதைகளின் பின்னணியில் இருக்கின்றன. குமாரவ்யாஸரின் 'வேதபுருஷன ஸுதன ஸுதன' என்பது இதற்கான உதாரணம். ஸ்ரீகனகதாஸரின் க்ருதிகளில் உள்ள இந்த விதமான முண்டிகைகள்கூட அனேக எண்ணிக்கையில் கிடைக்கின்றன. வேறு சில - தசாவதார வர்ணனைகளுக்காக வந்தவை. தன்னை ஜாதி முதலான காரணத்தினால் அவமானம் செய்ய முனைந்த பண்டிதர்களின் கர்வத்தினை கண்டித்து அவர்களுக்கு ஞானோதயம் வரச்செய்யும் நோக்கத்துடனும் ஸ்ரீகனகதாஸர் அதிகமான முண்டிகைகளை இயற்ற காரணம் இருக்கலாம்.

ஸ்ரீகனகதாஸரின் முண்டிகைகளின் ரசனைக்கு அவருடைய குருகளான ஸ்ரீவ்யாஸராஜரின் முண்டிகெ க்ருதிகளும் கூட ஒரு ப்ரேரணையாக இருந்திருக்கலாம்.

12. உதய ராகங்கள்

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இன்னொரு விதமான விஸேஷ ரசனை - உதயராகங்கள். ஸம்ஸ்க்ருதத்தின் ஸுப்ரபாதங்களின், மங்களாஷ்டகங்களின் ஸ்பூர்த்தியில் இயற்றப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவதான இந்த க்ருதிகள், ப்ராத:ஸ்மரணைக்கு விஸேஷமாக இருப்பதான க்ருதிகள் ஆகும். மூலத: ஸ்ரீமத் பாகவதாதி புராணங்களில் காலை வேளைகளில் படிக்கக் கூடியதான விதம்விதமான ஸ்தோத்ரங்கள் கிடைக்கின்றன. அவற்றில் கஜேந்த்ர மோக்ஷம், த்ரௌபதி மானஸம்ரக்ஷணெ ஆகியவற்றை குறித்தான அனேக உதயராகங்கள் ஹரிதாஸ ஸாஹித்யத்தில் வந்திருக்கின்றன. ஸ்ரீகனகதாஸர் இயற்றிய உதய ராகங்களின் எண்ணிக்கை அதிகமானது.

***

11. ஶ்ரீகனகதாஸரின் குருபக்தி
வித்வான் ஶ்ரீபன்னஞ்செ கோவிந்தாசார்யர்

ஶ்ரீகனகதாஸருக்கு லக்ஷ்மி நாராயணர் தேவ-தேவியர் என்றால், முக்யப்ராணனே முக்ய குரு. முக்யப்ராணனுக்கு மூன்று அவதாரங்கள். ஹனும, பீம, மத்வ. இதில் ஶ்ரீகனகதாஸரை மிகவும் ஈர்த்த அவதாரம் - ஹனுமன். ஆஞ்ஜனேயன். அவர் ஹனுமந்ததேவரை பார்த்த விதம் மற்ற அனைவரும் பார்த்ததைவிட வேறானது. அவருக்கு ஹனுமன் தூரத்தில் இருப்பவன் அல்ல. அவருடைய கிராமத்திலேயே, அருகிலேயே இருப்பவன் ஹனுமன். அவருக்கு அந்தரங்கத்து நண்பன். அந்த அழகினை அவர் பாடிய பாடலின் மூலமே பார்ப்போம்.

என்ன கந்த ஹள்ளிய ஹனும ||ப
சின்னாகைதார லக்ஷ்மணதேவரு ||அப

துப்ப பஞ்சாம்ருதவந்து அடவிகட்டெகளிந்து
கப்புர வீள்யவந்து குருகு இந்து |
ஸுப்பத்திகெ மஞ்சவந்து ஹுல்லுஹாஸிகெயிந்து
ஶ்ரீபதி ராகவ க்ஷேமதலைதாரெ ||1

நவவஸ்த்ரகளந்து நாரு-ஸீரெகளிந்து
ஹுவின கண்டு அந்து ஜடெகளிந்து |
ஜவ்வாஜி கத்துரியந்து பஸிததூளிந்து
ஶ்ரீவர ராகவ க்ஷேமதலைதாரெ || 2

கனகரதகளந்து காலுனடிகெயிந்து
கனசத்ரசாமரவந்து பிஸிலு இந்து |
ஸனகாதிகளோலைப ஆதிகேஶவ நம்ம
ஹனுமேஷ ராகவ க்ஷேமதலைதாரெ ||3

சென்னாகி ஐதார = நன்றாக இருக்கிறாரா?. குருகு = மென்று தின்னும். காடு = உண்ணச் செய். ஸுப்பத்திகெ = மிருதுவான படுக்கை. ஐதாரெ = இருக்கிறார். நாருஸீரெ = நாரினால்

செய்யப்பட்ட புடவை. கண்டு = முடிச்சு. ஜவ்வாஜி = சுகந்த த்ரவ்யம் / புனுகு. பஸித = பஸ்மம்.

கடல் தாண்டி இலங்கைக்கு வந்த ஹனுமந்தனிடம் ஸீதாதேவி கேட்கிறார். 'என்ன கந்த, ஹள்ளிய ஹனும, சென்னாகைதார லக்ஷ்மணதேவரு' . (என் கந்தனே, ஹள்ளிய ஹனுமனே, லக்ஷ்மண தேவர் நலமாக இருக்கிறாரா?). 'என்ன கந்த' என்று கூறியதில் தாயின் அன்பு. 'ஹள்ளிய ஹனும' என்பதில் தூய்மையான பாசம் தெரிகிறது.

ஸீதைக்கு தன் கணவனைப் பற்றி கேட்க வேண்டும். ஆனால், எந்தவொரு மரியாதைக்குறிய பெண்ணும் 'என் கணவன் எப்படியிருக்கிறான்?' என்று நேரடியாக கேட்பதில்லை. அதற்காகவே ஸீதையும் இவ்வாறு கேட்கிறாள். 'சென்னாகித்தார லக்ஷ்மணதேவரு?' (லக்ஷ்மணன் ஸ்வாமி நன்றாக இருக்கிறாரா?).

மானின் ரூபத்தில் வந்த மாரீசனை ஸ்ரீராமன் கொன்றான். மாரீசன் இறக்கும்போது 'லக்ஷ்மணா' என்று கூவியவாறு இறந்தான். அப்போது ஸீதை லக்ஷ்மணனை கடும் சொற்களால் திட்டி, ராமனிடம் அனுப்பினாள். லக்ஷ்மணன் அங்கு சென்றபோது, இங்கு ராவணன் வந்து ஸீதையை அபகாரம் செய்தான். தன் செயலால் வருந்திய ஸீதை, தன் மைத்துனனை 'லக்ஷ்மணதேவரு' என்று கௌரவத்துடன் அழைக்கிறாள். அதுமட்டுமல்ல. தேவரு என்றால் தேவர = மைத்துனன். ஆக, லக்ஷ்மணதேவர் என்றால், மைத்துனனான லக்ஷ்மணன் என்றே அர்த்தம்.

மைத்துனன் நலமாக இருக்கிறார் என்றால், அவருடைய அண்ணனும் நலமாக இருக்கிறான் என்றே அர்த்தம். ஆகையால், 'லக்ஷ்மணதேவரு சென்னாகித்தாரா?' என்று பேச்சை மாற்றிக் கேட்கிறாள் ஸீதை. அதற்குள் இன்னொரு அர்த்தமும் இருக்கிறது. லக்ஷ்மணனின் தேவர் = லக்ஷ்மண தேவர் = ராமசந்த்ர. தன்னுடைய தேவர், லக்ஷ்மணனின் தேவரும்தானே?. அல்லது லக்ஷ்மண மற்றும் தன் தேவர் நலமா? இவ்வாறு பலவிதமாக இந்த

கேள்வியை புரிந்து கொள்ளலாம். ஆனால், முதலில் கூறிய அர்த்தமே அனைத்தைவிட பொருத்தமாக இருக்கிறது.

ஸீதையின் இந்த கேள்விக்கு ஹனுமந்தனின் பதிலே அடுத்த மூன்று பத்திகளில் இருக்கின்றன. முன்பு அனுபவித்த ராஜயோகம் மற்றும் தற்போதைய வனவாச வாழ்க்கை இரண்டையும் ஶ்ரீராமசந்திரன் ஒரே மாதிரியாக பார்க்கிறான். இவ்வாறாக அவன் எப்போதும் நலமாகவே இருக்கிறான்.

'லக்ஷ்மணதேவரு சென்னாகித்தார?' என்னும் ஸீதையின் கேள்வியின் அர்த்தம் ஹனுமந்தனுக்கு தெரிந்தேயிருக்கிறது. ஆகையால், அவன் லக்ஷ்மணனின் பேச்சையே எடுக்காமல், இவ்வாறு கூறுகிறான். 'ஶ்ரீபதி ராகவ க்ஷேமதல்லெயிதாரெ' . வெறும் ராகவ என்றால் லக்ஷ்மணனுக்கும் அது பொருந்தும். ஆகவே ஹனுமந்தன் கூறுவது - 'ஶ்ரீபதி ராகவ' .

கடைசியாக கூறுவது மிகவும் பொருத்தம். 'ஹனுமேஷ ராகவ' . ஸீதையின் ஸ்வாமியான ராமசந்த்ரன் தனக்கும் ஸ்வாமியே. அவனுடைய தாஸனான நான், இங்கு வந்ததே அவன் நலமாக இருக்கிறான் என்பதற்கு சாக்ஷி, தாயே.

'நினகிந்த குந்தேனோ நின்னர்த்தாங்கி லக்ஷ்மி' என்று கூறிய ஶ்ரீகனகதாஸர், ஹனுமந்தனையும் அதே வழியில் புகழ்கிறார். நாராயணனுக்கு லக்ஷ்மி எப்படி தக்க அர்த்தாங்கியோ, அப்படியே, ஶ்ரீராமனுக்கு ஹனுமந்தன் தக்க தாஸன்.

அரஸனந்தெ பண்டனோ ஹனுமராய ||ப

அரஸனந்தெயெ பண்டனெம்புதனு நீனு
குருஹு தோரிதெ மூரு லோகக்கெ ஹனும ||அப

ஒடெயனம்புதியொளு பொக்கு தைத்யன கொந்து
தடெயதெ ஸ்ருதியனஜகித்தனெந்து |
ஸடகரதிந்த கடல தாண்டி மஹிஜெ பெ
ர்மடிய மாணிகவ ராகவனிகித்தெ ஹனும || 1

மந்தரதர கோவர்த்தன கிரியனு | லீலெ
யிந்தலி நிந்து நெகஹிதனெந்து
ஸிந்துபந்தனகெ ஸமஸ்தபர்வதகள
தந்து நள்ன கையொளகித்தெ ஹனும || 2

ஸிரிதர பரகாகி நெலெயாதிகேஶவ
ஸுரரிகம்ருதவனு எரெதனெந்து |
வரஸஞ்ஜீவன தந்து ஸௌமித்ரிகந்து
எரெது ஸ்ரீராமன நிஜதூதனெனிஸிதெ ஹனும || 3

அரஸனந்தெ = அரஸனைப் போல. பண்ட = தாஸன். தடெயதெ = தடை செய்யாமல் / உடனடியாக. அஜகெ = சதுர்முகனுக்கு. ஸடகர = விமரிசையாக / உற்சாகத்துடன். ஷரதி = கடல். மஹிஜெ = பூமியின் மகளான ஸீதை. பெர்முடி = சிறந்ததான தலைமுடி (கொண்டை). மாணிகவ = சூடாமணியை. நெகஹு = மேலே ஏறியது. நள = கடலுக்கு ஸேது கட்டிய கபிகளின் ஷில்பி. எரெ = பொழிவாயாக.

மத்ஸ்யனாக ஸ்ரீஹரி கடலில் இருந்தான். வேதசோரனான ஸோமகாஸுரனை கொன்று, சதுர்முக பிரஹ்மதேவருக்கு வேதங்களை திருப்பிக் கொடுத்தான். ஹனுமந்தன், கடல் தாண்டி சூடாமணியை ராமனுக்கு கொடுத்தான்.

ஹரி கோவர்த்தன மலையை தூக்கினான். ஹனுமந்தன் ஸேது கட்டுவதற்கு மலைகளை கொண்டு வந்து தந்தான்.

ஹரி அமிர்தத்தை கொடுத்து தேவதைகளை காத்தான். ஹனுமந்தன், ம்ருத ஸஞ்ஜீவினியை கொண்டு வந்து லக்ஷ்மணனை, கபிகளை காத்தான்.

ஸீதை ஹனுமந்தனுடன் பேசிய விதத்தை பார்த்தோம். இப்போது சூடாமணியுடன் ஹனுமந்தன் திரும்பியிருக்கிறான். ஸ்ரீராமன், அவனிடம் குதூஹலத்துடன் ஸீதையைப் பற்றி கேட்கிறான்.

ஏனெந்தளேனெந்தளோ
நின்னொளு ஸீதெ ஹனுமய்ய ||ப

ஜனகனரமனெயல்லி | ஜனிஸி ஸுகதல்லிரலு
தனு முரிது கைபிடிது தரலு |
கன பதவியனு பிட்டு | வனவ ஸேரிதெனெந்து
வனிதெ தபிஸுத மனதி நொந்து ||1

குருஹினுங்குரவன்னு | தரளாக்ஷிகித்தாக
திருளிகிந்ததிகவை கரடவெந்து |
பெரளிந்த சிம்மிதளெ அஷோகவனதாசே
நிருத ஸந்தாபதலி மனதி நொந்து ||2

ஸேதுவிய கட்டி ஸிந்துகெ விபீஷணாக்ர
ஜாத லங்காதிபன வதிஸி |
ஸீதெயனு ஸெரெயிந்த பிடிஸித்தெ ஆதரெ
நாதாதிகேஶவகெ பலுபிருது எந்து ||3

கரட = தேங்காய் நார். நிருத = நிரந்தரம். விபீஷணாக்ரஜாத = விபீஷணனின் அண்ணன் ராவணன்.

இந்த பத்யம் இயற்றிய விதம் இவ்வாறு இருக்கிறது. பல்லவியில் ஸ்ரீராமனின் கேள்வி, அடுத்த இரு பத்திகளில் ஸ்ரீராமன் புலம்புவதைப் போல இருக்கிறது. கடைசி பத்தியில் ஹனுமந்தனின் பதில்.

இலங்கையிலிருந்து திரும்பிய ஹனுமந்தனை ஸ்ரீராமன் இவ்வாறு கேட்கிறான். 'ஏனெந்தளேனெந்தளோ நின்னொளு ஸீதே ஹனுமய்ய?' (ஹே ஹனுமய்யா, ஸீதாதேவி உன்னிடம் என்ன கூறினாள்?).

இந்த வாக்கியத்தில் 'என்ன கூறினாள்?' என்பதை இரு முறை கூறியதில், ஸ்ரீராமனின் தவிப்பினை பார்க்கிறோம். அதிலும், ஹனுமந்தனை கௌரவத்துடன் அழைக்கும் விதம் அருமை - 'ஹனுமய்யா' .

உண்மையில் ஸ்ரீராமன், ஹனுமந்தனுக்கு 'அய்ய' . ஹனுமந்தன் ஸ்ரீராமனின் சேவகன். ஆனாலும், ஸீதையைக் கண்டு வந்தவன் என்னும் அபிமானத்தினால் ஸ்ரீராமன் அவனை 'ஹனுமய்யா' என்று அழைத்து, தன் அன்பினை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

பல்லவியில் இந்த கேள்வியை முன்வைத்த ஸ்ரீராமன், அடுத்த பத்தியில் ஸீதையின் எதிர் நடவடிக்கையைப் பற்றி இவ்வாறு சொல்கிறான்.

யக்ஞஸாலையில் பிறந்து, ஜனகரின் அரண்மனையில் சுகமாக வளர்ந்தவன் ஸீதை. நான் சிவ தனுஸ்ஸினை முறித்து, அவளின் கை பிடித்து அயோத்திக்கு அழைத்து வந்தேன். அடுத்து பட்டாபிஷேகம் ஆகி, அவள் பட்டத்து ராணி ஆக வேண்டியிருந்தது. நான் ராஜ்யத்து பதவியை விட்டு காட்டிற்கு வந்தேன். அவளும் என்னுடன் காட்டிற்கு வந்தாள். சுகத்தின் உச்சத்தில் இருக்க வேண்டியதான அவளுக்கு நான் சுகத்தை கொடுக்கவில்லை. காட்டில் கடினமான ஜீவனத்திற்கு அவளை ஈடுபடுத்தினேன். அதனையே நினைத்து, துக்கப்பட்டு, அந்த துன்பத்தில் இருந்த அவள் என்ன கூறினாள் ஹனும?. அன்பாக பேசினாளா?. இல்லை கோபப்பட்டாளா?. என்ன கூறினாள்? என்ன கூறினாள்? ஹனுமந்தா?.

இந்த பத்தியில் இதுவரை நடந்து முடிந்த விஷயங்களைப் பற்றி ஸ்ரீராமன் பேசினான். அதைப் பற்றிய ஸீதையின் நடவடிக்கைகள் / பதில்கள் என்ன என்று அறிய விரும்பினான்.

அடுத்த பத்தியில், 'ஹனுமய்யா, நீ ஸீதையை தேடுவதற்கு சென்றபோது, அடையாளத்திற்காக உன்னிடம் ஒரு மோதிரத்தை கொடுத்தேன். நீ அதனை ஸீதையிடம் கொடுத்தாய் அல்லவா?. அவள் தன் கண்களை படபடவென அடித்து, சந்தேகத்துடன் பார்த்தாளா?. உன் மேல் சந்தேகம் கொண்டாளா?. அல்லது, அந்த மோதிரத்தை பெற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்று நினைத்தாளா?. இதில் உண்மையைவிட நாடகமே அதிகம் என்று நம்பிக்கையின்றி பார்த்தாளா?. நான் உயிருடன் இருக்கிறேனா

இல்லையா என்று கேட்டாளா?. அல்லது உன் ப்ரயாணத்தைப் பற்றி கேட்டாளா?. கடைசியில் அந்த மோதிரத்தை பெற்றுக் கொண்டாளா இல்லையா?. அல்லது விரல் நுனியால், அதனை தள்ளி விட்டாளா?. நிரந்தரமான விரஹ தாபத்தினால் வெந்து நொந்து, என் மேல் இருந்த கோபத்தினால் இவ்வாறு ஏதாவது செய்தாளா?. உன்னையும் திட்டினாளா?. என்ன கூறினாள்? என்ன கூறினாள்? ஹனுமந்தா?.

ராமாயணத்தில் ஸ்ரீராமன் இவ்வாறு பேசுவதில்லை. ஸ்ரீகனகதாஸரின் ராமன் மட்டுமே இவ்வாறு பேசுகிறான். கவிஞரின் திறமை, பெண்களின் வழக்கமான நடவடிக்கைகள், ஆண்களின் பொதுவான செயல்களை, இவ்வாறு அற்புதமாக வெளிப்படுத்துகிறது.

ஸ்ரீராமனின் இந்த தவிப்பிற்கு ஹனுமனின் பதில் இவ்வாறு கடைசி பத்தியில் இருக்கிறது.

ஸீதை அப்படியெல்லாம் எதையும் செய்யவில்லை. அவளுக்கு உன் மேல் அபிமானம் இருக்கிறது. ஆனாலும் அவள் உன்னிடம் இதனை வேண்டுகிறாள். நீ கடலில் ஸேதுவை கட்டி, இலங்கைக்கு செல்ல வேண்டும். விபீஷணனின் அண்ணன், லங்காதிபதியான ராவணனை கொல்ல வேண்டும். ஸீதையை அசுரனின் சிறையிலிருந்து மீட்டுக் கொண்டு வரவேண்டும். அப்போதே ஸீதைக்கு திருப்தி. நமக்கும் திருப்தி. அதுவே உனக்கு ராஜ்யபதவியைவிட பெரிய விருது. பெரிய கௌரவம்.

ராமாயணத்தின் ஹனுமந்தன் இவ்வாறு சொல்வதில்லை. ஸ்ரீகனகதாஸரின் ஹனுமந்தனே இவ்வாறு கூறுகிறான். ஸ்ரீதாஸர் மிகப்பெரிய பக்தர். அதைவிட மிகப்பெரிய கவி.

அவர் தன்னுடைய முக்கிய குருவான ஆஞ்சனேயனுடன் வினோதமாக பேசுகிறார். இது ஒரு வித ஸக்ய-பக்தி. அவருடைய நகைச்சுவையின் உச்சம் இந்த பத்யத்தில் இருக்கிறது.

ஸேவகதனத ருசியனேனரிதேயோ
தேவ ஹனுமராய வைராக்ய பேடி ||ப

உததியனு தாடி ஸீதெய கண்டு பந்தாக
மதுவெயனு மாடென்னபாரதித்தெ |
பததிந்த பாஷாண பெண்ண மாடிதாதகெ
இதேனஸாத்யவோ நீ பயஸலொப்பதெ || 1

க்ஷணதல்லி ஸஞ்ஜீவன பர்வத தந்தாக
ஹண ஹொன்னுகள பேடபாரதித்தெ |
வினயத விபீஷணகெ ராஜ்யவனெ இத்தந்த
தணிகெ ஏனஸாத்யவோ ஹனும நீனொல்லதெ || 2

ஸார்வபௌமனு தானெ மெச்சி பளிகெய்தாக
உர்வியனு பேடிதடெ கொடதெ இஹனெ |
ஸர்வவனு தொரெது ஸ்ரீ நெலெயாதிகேஶவன
நிர்வ்யாஜ்ய பகுதியனு பேடிகொண்டெ || 3

ருசி = ஸ்வாரஸ்யம். பததிந்த = காலினால். பாஷாண = கல். நெலெயாதிகேஶவ = காகிநெலெ ஆதிகேஶவ (பெயரின் ஒரு பகுதியை மட்டும் சொல்லி, அதன் மூலம் முழுவதையும் குறிக்கும் வழிமுறை. பாமை என்றால் ஸத்யபாமை. ருக்கு என்றால் ருக்மிணி - என்பதைப் போல. நிர்வ்யாஜ்ய = கபடம் இன்றி / பலன்களின் அபேக்ஷையின்றி.

ஸ்வாமியிடம் பக்தி செய்பவர், அதிலிருந்து ஒரு பலனை எதிர்பார்க்கின்றனர். ஸ்வாமிக்கு ஒரு பூஜை, ப்ரஹ்மோத்ஸவ செய்தால், மகளுக்கு ஒரு திருமணம் ஆகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இது பக்தியல்ல. ஸ்வாமியுடன் செய்யும் வ்யாபாரம். ப்ரகலாதராஜர் கூறுகிறார். 'யஸ்ய ஆஸிஷ ஆஷாஸ்தே ந ச ப்ருத்ய: ஸ வை வணிக்' - உன்னிடமிருந்து ஏதாவது ஒரு

ப்ரதிபலனை எதிர்பார்ப்பவன், அவன் பக்தனே அல்ல. அவன் பக்தி செய்யும் வ்யாபாரி.

நமக்கு என்ன வேண்டும் என்று ஸ்ரீஹரிக்கு தெரியும். அதனால், அவனிடம் எதையும் கேட்காதீர்கள். வெறும் பக்தி மட்டுமே செய்யுங்கள். நீங்கள் எதையாவது கேட்டால், கேட்டது மட்டுமே கொடுக்கிறான். எதையும் கேட்காவிட்டால், அனைத்தையுமே கொடுக்கிறான். தன்னையே கொடுக்கிறான். ஹனுமந்தனுக்கு கொடுத்ததைப் போல. அதற்காக நம் பக்தி நிர்வ்யாஜ்யமாக இருக்கட்டும் என்னும் எச்சரிக்கையாக தாஸர் நகைச்சுவையுடன் சொல்வது -

'ஹனுமராய, ஒருவரை புகழ்ந்து, அதன் மூலம் லாபம் அடையவேண்டும் என்னும் விஷயமே உனக்கு தெரியவில்லை. நீ ஒரு வெகுளியைப் போல, வைராக்கியத்தை மட்டும் வேண்டி, வேலையை கெடுத்துக் கொண்டாய். நீ ஒரு புத்திசாலியாக இருந்தால், இவ்வாறு சொல்ல வேண்டியிருந்தது. 'உன் மனைவியை நான் தேடிக் கொடுத்தேன். எனக்கு ஒரு மனைவி வேண்டும் என்று தோன்றுகிறது. எனக்கு ஒரு திருமணம் செய்துவை' . இவ்வாறு சொல்லியிருந்தால், அவன் இல்லை என்று சொல்லியிருப்பானா?. கண்டிப்பாக இல்லை. உனக்கு ஒரு நல்ல பெண்ணைத் தேடி திருமணம் செய்திருப்பான். காலால் மிதித்து, அதனை ஒரு பெண்ணாக ஆக்கியவனுக்கு, உனக்கு ஒரு பெண்ணைத் தேடுவது கஷ்டமா?. ஆனால், நீயோ பெண்ணை கேட்காமல், வைராக்கியத்தை கேட்டாய். உனக்கு ஸேவகதனத்தின் ருசியே தெரியவில்லை ஐயா' .

'கபிகளெல்லாம் மயங்கி விழுந்தபோது, நீ ஸஞ்ஜீவன மூலிகை கொண்டு வந்து அவர்களை காப்பாற்றினாய். லக்ஷ்மணனும் பிழைத்தான். இதைவிட பெரிய உதவி உண்டா?. இதற்கு ப்ரதியாக நீ ஸ்ரீராமனிடம், மிகப்பெரிய அளவில் செல்வத்தை கேட்டிருக்க வேண்டுமே?. விபீஷணனுக்கு இலங்கையின் ராஜ்யத்தையே கொடுத்தவனுக்கு, காட்டிற்கு அனுப்ப காரணமாக இருந்தாலும், பரதனுக்கு தன் ராஜ்யத்தையே கொடுத்தவனுக்கு, நீ கேடும் பணம்,

தங்கம் ஆகியவற்றை கொடுப்பது பெரிய விஷயமா?. நீ ஒரு பிழைக்கத் தெரியாதவன். ராஜ்யத்தை கேட்காமல், வைராக்யத்தை கேட்டிருக்கிறாய். உனக்கு ஸேவகதனத்தின் ருசியே, ஸ்வாரஸ்யமே தெரியல்லை. அனைத்தையும் கெடுத்துக் கொண்டாய். இது எத்தகைய அநியாயம்?. நீயும் உண்ணவில்லை. இன்னொருவரை உண்ணவும் விடவில்லை.

'எல்லாம் போகட்டும். ஸ்ரீராமன் இலங்கையிலிருந்து திரும்பி வந்தான். அயோத்தியின் ஸிம்ஹாஸனத்தில் ஏறினான். பூமண்டலத்தின் ஸார்வபௌமன் ஆனான். உன்னிடம் அவனே வந்து இவ்வாறு கேட்டான். 'உனக்கு என்ன வேண்டும் என்று கேள். தேவையானதை கொடுக்கிறேன்'. அப்போதாவது, 'எனக்கு கொஞ்சமாவது நிலங்களை கொடு. நான் ஒரு ஜமீன்தாராக நிம்மதியாக இருந்து விடுகிறேன்' என்று கேட்கவேண்டியிருந்தது. ஆனால், நீ என்ன கேட்டாய்?. நிர்வ்யாஜ்ய பக்தியை கேட்டாய். உன்னை நம்பியவருக்கு ஸ்வாமியே கதி'.

இது ஹனுமந்ததேவரின் பக்தியின் உச்சத்தை / சிறப்பினை கொண்டாடும் அபூர்வமான நிந்தா ஸ்துதி. ஸ்ரீதாஸர் ஹனுமந்தனின் பக்தியை மெச்சியவாறு, மேல்நோட்டத்திற்கு ஹனுமந்தனை கேலி செய்தவாறு நம் பக்திக்கு கண்ணாடி காட்டுகிறார் (நாம் என்ன செய்கிறோம் என்பதை குத்திக் காட்டுகிறார்). இத்தகைய கவித்திறனாலேயே ஸ்ரீகனகதாஸர் நமக்கு மிகவும் ப்ரியமானவராக இருக்கிறார்.

ஹனுமந்த மற்றும் பீமன் இருவரும் ஒரே ப்ராண தத்வத்தின் இரு அவதாரங்கள். அவன் அசுரர்களுக்கு பயங்கரனாக இருக்கிறான் என்பதை இந்த பதம் சொல்கிறது.

பீமனெம்புவரிகெ யாதர பயவில்ல பீமராய |
காமிதபலகள கொட்டு நீ ஸலஹய்ய பீமராய ||ப

அஞ்ஜனெயாத்மஜ அகணித பலவந்த பீமராய |
கஞ்ஜனாபன தூத கருணிஸோ பலவந்த பீமராய ||1

கட்டித பூமாலெ கத்துரி நாமத பீமராய | பொம்
பட்டெ பீதாம்பரவனுட்டு மெரெவந்த பீமராய || 2

வாரிதியனு தாடி ஸீதெகுங்குரவித்த பீமராய |
ஸுரிவெக்களதன கித்து ஈடாடித பீமராய ||3

ராமராயரிகெ நீ ப்ரேமத பண்டனு பீமராய |
காமித பலவித்து கருணதி ஸலஹய்ய பீமராய || 4

சப்பன்ன தேஷக்கெ ஒப்புவ காகிநெலெ பீமராய |
தப்பதெ கனகங்கெ வரகள கொடுவந்த பீமராய || 5

பீமனெம்புவரிகெ = பீமனின் நாமத்தை ஜபம் செய்பவர்களுக்கு. கத்துரி நாம = கஸ்தூரி திலகம். வெக்களதன = ஸர்வோத்தமத்வம். ஸுரி+வெக்களதன = பண்டிதர்களின் புகழ்ச்சி. சப்பன்ன = 56.

முதலாம் பத்தி முழுக்க ஹனுமந்தனின் ஸ்துதி. இரண்டாம் பத்தியில் ஹனுமந்த மற்றும் பீம இருவரின் ஸ்துதி. பூமாலை மற்றும் கஸ்தூதி திலக பீமராய மற்றும் ஹனுமந்தனுக்கும் பொதுவானதே. மூன்றாம் பத்தியில் ஹனுமந்தனுடன் மத்வராயரின் ஸ்துதியும் உள்ளது. பண்டிதரின் வாதங்களின் சிறப்பினை முறியடித்து, அவர்களை துரத்திய, மாயாவாதிகளுக்கு பயங்கரமான பீமராய என்றால், மத்வராயர் தானே அவர்?.

நான்காம் பத்தியில் மறுபடி முழுக்க ஆஞ்ஜனேயர். 'ராமராயர ப்ரேமத பண்ட பீமராய' . கடைசி பத்தியில் காகிநெலெ ஆஜ்ஞனேயருடன், ஆதிகேஶவனும் பீமராயனாக ஆகிறான்.

ஆசார்ய மத்வரும் இதை சொல்லியிருக்கிறார்.

ராமோऽகிலானந்ததனு: ஸ ஏவ
பீமோऽதிபாபேஷு துரந்தவீர்ய: |

(ஆனந்த ரூபனான ராமனும் அவனே. பாபிகளுக்கு பீமனும் அவனே).

'சப்பன்ன தேஷ' என்றால், 56 ப்ராந்தியங்களாக பிரிந்திருக்கும் பாரத தேசம். முன்னொரு காலத்தில், இந்த நாடு 56 ராஜ்யங்களாக பிரிந்து, 56 பேரின் ஆட்சியில் இருந்தது என்று சொல்கின்றனர். 'தேஷக்கெ ஒப்புவ' என்பது பீமராயனுக்கும் பொருந்துகிறது. காகிநெலெக்கும் பொருந்துகிறது. மொத்த நாட்டிற்கே ஒப்புவதான க்ஷேத்ரம் - காகிநெலெ. நாட்டின் மொத்த மக்களுக்கும் வணங்குவதான தெய்வம் - பீமராயர்.

ப்ராணதத்வத்திற்குப் பிறகு குரு ஸ்தானத்தில் இருப்பது - சிவன். ஸ்ரீகனகதாஸரின் சிவ ஸ்துதியும், சுத்தமான வைஷ்ணவ ப்ரஜ்ஞையின் சிவ ஸ்துதி. உதாரணத்திற்கு ஒன்றிரண்டு பத்திகளை பார்ப்போம்.

ஜவன பாதெய நீவு ஜயிஸபேகாதரெ
ஶிவ ஶிவ ஶிவ என்னிரோ | நிஜ
ஸுவிமல முக்திய படெயபேகாதரெ
ஶிவ ஶிவ ஶிவ என்னிரோ ||

ப்ருத்விகெ ஸத்குரு ஆகபேகாதரெ
ஶிவ ஶிவ ஶிவ என்னிரோ | நீவு
தத்வபதி ஆதிகேஶவன கொடபேகாதரெ
ஶிவ ஶிவ ஶிவ என்னிரோ ||

ஜவ = எமன். எமனின் தொந்தரவினை ஜெயிக்க வேண்டுமெனில், ஶிவ ஶிவ ஶிவ என்று சொல்ல வேண்டும். ஶிவ என்பவர் ம்ருத்யு தேவதைதானே?. அவனின் நாமஸ்மரணையினால் ஸாவினை வெல்லலாம்.

ப்ருத்விக்கு ஸத்குரு என்று சொல்ல வேண்டுமென்றால், மனதில், நிரம்பியிருக்கும் அஞ்ஞானத்தை விலக்க வேண்டும். மனோபிமானியான ஶிவனின் கருணையால் மட்டுமே அது

சாத்தியம். முக்தியை அடைய வேண்டுமெனில், முக்திப்ரதனான நாராயணன் மகிழ வேண்டும். அவன் மகிழ வேண்டுமெனில், மனஸ் அவனில் நிலைக்க வேண்டும். அதற்கு மனோ நியாமகனான ஶிவனின் அருள் வேண்டும்.

இதையே கடைசி பத்தியும் சொல்கிறது. தத்வபதி ஆதிகேஶவனை அடைய வேண்டுமெனில், த்யானத்தில் மானசிகமாக மற்றும் முக்தியில்கூட, ஶிவனின் அருள் வேண்டும்.

***

12. ஸ்ரீகனகதாஸர் - தத்வவாத

தாஸ ஸாஹித்யத்தில் கவிதையின் அழகையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் பொருத்தி, ஸாஹித்ய உலகினை மெருகேற்றியவர்களில் முக்கியமானவர்கள் இருவர் - ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர். ஷூத்ரர்களை 'மைலிகெ' என்று விலக்கும் ப்ராஹ்மணர்களுக்கு தாஸ ஸாஹித்யம் அர்த்தம் ஆகாது. ப்ராஹ்மணர்களை புறக்கணிப்பதே ஸத்யத்தின் வழி என்று சொல்லும் ஷூத்ரர்களுக்கும் இவ்வாறே. நீங்கள் தூய்மையான (கண்டிப்பான) ப்ராஹ்மணர் என்றால், உங்களுக்கு ஸ்ரீகனகதாஸர் அர்த்தம் ஆவதில்லை. மற்றும் தூய்மையான (கண்டிப்பான) ஷூத்ரர் என்றால், ஸ்ரீபுரந்தரதாஸர் அர்த்தம் ஆவதில்லை. மடங்களின் மடி / நடவடிக்கைகளிலிருந்து தாஸர்களை விலக்கி வைக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் உள்ள இயந்திரத்தனமான சிந்தனைகளிலிருந்தும். ப்ராஹ்மணத் வத்திலிருந்து மற்றும் ஷூத்ரத்வத்திலிருந்து விலகி நின்று, தாஸ ஸாஹித்யத்தை பார்க்க வேண்டும். மடங்களிலிருந்து, பல்கலைக் கழகங்களிலிருந்து தூரமாக நின்று தாஸ ஸாஹித்யத்தின் சிந்தனையை செய்ய வேண்டும்.

அத்தகைய ஒரு முயற்சியே இது. அதுவும் ஸ்ரீகனகதாஸரைப் பற்றியது. அனைத்து மஹாபுருஷர்களின் இதிஹாஸமும், பக்தர்களின் கையில் சிக்கி சின்னாபின்னம் ஆகியிருக்கிறது.

ஸ்ரீகனகதாஸரின் இதிஹாஸம் இதற்கு விதிவிலக்கல்ல. ஸ்ரீகனக தாஸருக்காக ஸ்ரீகிருஷ்ணன் திரும்பவில்லை என்று தெரிந்திருந்தாலும், 'கிருஷ்ணன் திரும்பியது நிஜம்' என்று வாதிப்பதில் ஒரு சந்தோஷம். இது தாமஸ ஆனந்தம் எனப்படுகிறது. மேலும் சிலருக்கு, கிருஷ்ணன் திரும்பவில்லை என்று தெரிந்திருந்தாலும் 'ஸ்ரீகனகதாஸரை ப்ராஹ்மணர்கள் அடி அடியென்று அடித்தனர்' என்று வாதிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி. இது இன்னொரு விதமான தாமஸ ஆனந்தம். நமக்கு எது இஷ்டமோ, அதுவே இதிஹாஸிக ஸத்ய என்று நாம் நினைக்கிறோம். நம் ராகத்வேஷம் அதனை தீர்மானிக்கிறது.

இதற்கு ஒரு சரியான உபாயம் என்றால், ஆதாரம் இல்லாத அனைத்து கதைகளையும் விலக்கி, ஸ்ரீகனகதாஸரின் பாடல்களின் மூலமே அவருடைய வாழ்க்கை கதைகளை அடையாளம் செய்வது. இதனை அவர் இயற்றிய தேவர நாமாக்களின் மூலமே செய்ய வேண்டும்.

இதிலும் ஒரு பிரச்னை இருக்கிறது. ஒரு தாஸரின் பாடல், இன்னொரு தாஸரின் முத்திரையில் பழக்கத்தில் இருக்கிறது. எந்த பாடல், யாருடையது என்று தீர்மானம் செய்வதே கஷ்டம். ஆனாலும், பல ப்ரமாணங்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட, ஸ்ரீகனக தாஸருடையதே என்று நம்பக்கூடியதான சில புகழ்பெற்ற பாடல்களின் மூலம் அவருடைய வாழ்க்கையைப் பற்றி, அவருடைய தாத்விக சிந்தனையை, அவருடைய நம்பிக்கைகளை பார்ப்பதற்கு முயற்சி செய்வோம்.

ஸ்ரீகனகதாஸர் மூடசம்ப்ரதாயங்களின் விரோதியாக இருந்தார். ஆனால், ஸம்ப்ரதாயங்களின் விரோதி அல்ல. கெட்ட ஆசாரங்களின் விரோதியாக இருந்தார். ஆனால், ஆசார விரோதியாக இருக்கவில்லை. அனைத்து சம்ப்ரதாயவாதிகளும் மூடசம்ப்ரதாயங்களையும் விரோதம் செய்கின்றனர். அனைத்து ஆசாரவந்தர்களும், கெட்ட ஆசாரங்களையும் விரோதம் செய்கின்றனர். இது சரியான ஞானம் உள்ளவர்களின் வழியே ஆகும்.

ஸ்ரீகனகதாஸரும் இந்த வழியில் சென்றார். ஸம்ப்ரதாயத்தின் எல்லைக்கு உள்ளேயே இருந்து, அதன் குறைகளை, ப்ரச்னைகளை திருத்த முயற்ஸித்தார். எது ஸ்ரீகனகதாஸரின் ஸம்ப்ரதாயம்?. ஆத்யாத்ம ஸாதனையில் அவர் நடந்த வழி எது?. இதனை அவருடைய பாடல்களிலேயே தேட வெண்டும்.

ஸ்ரீவைஷ்ணவரின் கண்களுக்கு அவர் ஸ்ரீவைஷ்ணவராக தெரிகிறார். மாத்வரின் கண்களுக்கு அவர் மாத்வராக தெரிகிறார். இரண்டும் இல்லை. அவர் ஸ்வதந்த்ரமாக சிந்திப்பவர். எந்த வழிக்கும் அவர் கட்டுப்பட்டவர் அல்ல. துவக்கத்தில் அவர் ஹரி-ஹர அபேதவாதி - என்று சொல்பவர்களும் உண்டு.

அவரவரின் இஷ்டத்திற்கு ஏற்றபடி ஸ்ரீகனகதாஸர் மாறிக் கொண்டே இருக்கிறார். வாஸ்தவமாக ஸ்ரீகனகதாஸர் யார்? அவருடைய இஷ்டம் என்ன என்று யாரும் சிந்திப்பதில்லை. நம் இஷ்டமே அவருடைய இஷ்டம் என்ற ப்ரமையில் இருக்கிறோம். அனைவரின் வாதமும் ஸத்யமே. அனைவரின் வாதமும் பொய்யே. ஆனால், எதுவும் முழுமையான உண்மையும் அல்ல; முழுமையான பொய்யும் அல்ல.

ஸ்ரீகனகதாஸர் ராமானுஜரின் வழிமுறையில் ஈடுபடும் முன்னர், ஹரி-ஹரர்களில் ஒற்றுமையை கண்டது நிஜம். இது அவருடைய வாழ்க்கையின் முதல் படி.

யாரு பல்லரு ஹரிஹராதிகள மஹிமெயனு
வாரிஜோத்பவ ஸுரேந்த்ராதிகளிகளவல்ல ||

இந்தப் பாடல், அவருடைய ஸாதனையின் முதலாம் பகுதியில் இயற்றப்பட்டது. இங்கு சில பிரச்னைகள் உள்ளன. முதல் பத்தியில் 'ஹரிஹராதிகள' என்பதில் 'ஆதி' என்னும் சொல் தேவையில்லை என்று தோன்றுகிறது. 'ஹரிஹரர மஹிமெயனு' என்று மட்டும் இருந்திருந்தால் போதுமானது.

இரண்டாம் பத்தியில் 'வாரிஜோத்பவனிகளவல்ல' என்று இருக்கிறது. ஆனால், கடைசி பத்தியில் அதே வாரிஜோத்பவ 'வாகீஷ' , 'ஸ்திதிகாரண' என்று ஹரிஹரனுக்கு சமமாக சொல்லியிருக்கிறார்.

போகிஷயனனு ஆகி போகிபுஷணனாகி
வாகீஷனாகி ஸ்ருஷ்டிஸ்திதிலயக்காகி

வாய்மொழியாக பரவி வந்த இத்தகைய பாடல்களில் பாடாந்தர (வெவ்வேறு விதமான வார்த்தைகள்) குழப்பங்களும் போதுமான அளவு இருக்கின்றன. எதிர்மறையான அர்த்தம், தெளிவான வார்த்தைகள், முன்னுக்குப் பின் வார்த்தைகள் மாற்றிப் போடுதல் - இவையெல்லாம் பாடாந்தரத்தின் பலன்கள்.

ஸ்ரீகனகதாஸரின் சனி ஸ்துதியும்கூட இதே காலகட்டத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

பல்லிதவர பங்கபடிஸிதெ நினகெணெ
யில்ல ஶனைஶ்வரனே
ஹரிஹரப்ரஹ்மாதிகள பங்கபடிஸிதெ
கருணவில்லவெ நினகெ?

ஹரிஹர ப்ரஹ்மாதிகளுக்கும் ஶனியின் பிரச்னை இருந்தது என்பது உலக வழக்கத்தில் இருக்கும் பேச்சு. பொதுவாக மக்கள் சொல்வது. இது பயத்தினால் ஏற்பட்ட வேதாந்தம். பக்தியின் வேதாந்தம் அல்ல. ஆசார்ய ராமானுஜரின் விஸிஷ்டா த்வைதத்திலும், ஆசார்ய மத்வரின் தத்வவாதத்திலும், இத்தகைய நம்பிக்கைகளுக்கு இடமில்லை.

ஸ்ரீகனகதாஸரின் ஜீவனத்தின் இரண்டாம் பகுதி. அவர் ஆசார்ய ராமானுஜரின் வைஷ்ணவ தர்மத்தினை பின்பற்றியது.

கிருஷ்ணதேவ ராயரின் ஆட்சி காலத்தில் விஜய நகரத்தில், மக்களால் போற்றப்பட்டவராக இருந்த தாதாசார்யரின் ப்ரபாவம், ஸ்ரீகனகதாஸர் மேல் விழுந்தது. மோஹன தரங்கிணியில் ஸ்ரீகனக

தாஸர் தாதாசார்யரை குரு ஸ்தானத்தில் நினைத்திருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

இந்த காலகட்டத்தில் ஸ்ரீகனகதாஸரின் மனம் ஸ்ரீவைஷ்ண தர்மத்தை பின்பற்றத் துவங்கியது. ஸத்யத்தினை தேடுவதில் ப்ராமாணிகனான ஸாதகன் ஒருவனின் வாழ்க்கையில் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது சகஜமே. இந்த சமயத்தில் வந்த அவரது சில பாடல்கள் இவ்வாறு.

ராமானுஜரே நமோ நமோ
ஸ்வாமி லக்ஷ்மணரூப நமோ நமோ
...
கேஶவ பாதாம்புஜ மதுகரா
பாஷண்டகர்வஹர குருதிலகா |
ஸேஷாவதாரி முனீஷவந்தித ஆதி
கேஶவமூருதி நமோ நமோ ||

ஆசார்ய ராமானுஜருக்கு அந்த பெயர் ஏன் வந்தது என்னும் அபூர்வமான சிந்தனை இந்த பத்யத்தில் இருக்கிறது.

ராமனின் அனுஜன் (தம்பி) லக்ஷ்மணன். (ஆனால், ஸ்ரீவைஷ்ணவர் களிலேயே ஒரு குழப்பம் இருக்கிறது. பிற்காலத்தில் வந்த ஸ்ரீவைஷ்ணவ வித்வாம்ஸர்கள், ராமனின் நேரடியான தம்பி பரதன். பரதனின் தம்பி லக்ஷ்மணன் என்றும் சொன்னார்கள்). லக்ஷ்மணன் ஸேஷ அவதாரம். ராமனுஜரும் ஸேஷ அவதாரரே. ஆகவே, அவர் 'ராமானுஜர்' என்னும் பெயர்க் காரணம் இந்த பத்யத்தில் இருக்கிறது.

ஸ்ரீகனகதாஸர் இந்தப் பாடலில் ஆசார்ய ராமானுஜரை 'குருதிலக' என்றும் 'முனீஷ' என்றும் பக்தியுடன் அழைத்திருக்கிறார். இன்னொரு பாடலின் பல்லவி இவ்வாறு.

யதிராமானுஜ எம்ப பேரெ மனஸின
மதவெ ஒள்ளெயது

இந்த வரிகளில் சிறிது குழப்பம் இருக்கிறது. ராமானுஜரின் மதம் என்பது, ராமானுஜ மதம் என்று ஆகியிருக்கிறது. ராமானுஜ என்னும் வேறு மனஸ்; அதன் மதம் என்று கூறினாலும் அர்த்தம் சரியாகவில்லை. அப்போது பரவியிருந்த சைவ நம்பிக்கையின் மனஸ்ஸைவிட வேறான வைஷ்ணவ ப்ரஜ்ஞையை உருவாக்கிய மனஸ் ராமானுஜருடையது என்னும் சிந்தனை இருக்கலாம். ஆனாலும், இது ஸ்ரீகனகதாஸரின் உண்மையான வரிகள் இல்லை. ஏதோ சில வரிகள் / வார்த்தைகள் விட்டுப் போயிருக்கலாம் / மாறியிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

இன்னொரு பத்யத்தில் வீர வைஷ்ணவரின் மற்றும் வீர சைவரின் விவாதத்தின் ஒரு மேற்கோள் வருகிறது.

ராமானுஜ மதோத்தாரக
தாமஸகணகிரிவஜ்ரதண்ட |

இந்த பல்லவியின் பாடத்திலும் சிறிது மாற்றம் இருக்கலாம். முதலில் வரியில் 'ராமானுஜ வரமதோத்தாரக' என்றிருந்தால் போதும். இரண்டாம் வரியில் இருக்கும் 'தாமஸகுண பாஷ கிரி வஜ்ரதண்ட' . கணம் மறந்து குணம் ஆகியிருக்கிறது. நடுவில் பாஷ என்றும் இருக்கிறது. 'தாமஸகண' என்னும் மலைக்கு, வஜ்ராயுதம் போல இருப்பவர் என்றால், அர்த்தத்திற்கு ஏற்றதான அழகான வரிகள் கிடைக்கின்றன. கனகதாஸரைப் போன்ற கவிகள் இவ்வாறே சொல்லியிருக்க வேண்டும். அர்த்தம் புரியாதவர்கள் அந்த எழுத்துக்களை மாற்றியிருக்க வேண்டும்.

ஸ்ரீகனகதாஸரின் வைஷ்ணவ தீக்ஷை இங்கு நன்றாக தெரிகிறது.

மஸ்தகதொளு ருத்ர பாததொளு விஷ்ணு
மஸ்தக மஹதேவ மேலெம்பரு |
மஸ்தக பந்து பாதகெ பித்து ஷரணெம்ப
முக்திய பாத மேலு திளிது நோடண்ண ||

தலை எவ்வளவு உயரமாக இருந்தாலும், பாதத்தில் விழுந்தால் தான் அதற்கு ஸார்த்தக்யம் அல்லவா?. இவ்வாறு ஶ்ரீகனக தாஸருக்கு, ஷரணரின் பரம்பரையைவிட, ராமானுஜரின் சரணாகதியின் வழி அதிகமாக இஷ்டமாயிற்று.

ಲಿಂಗವெ ಕನವೆಂದು ಹೊಚ್ಚಿ ಕುಣಿತಾಡುವ
ಸಂಗನ ಷರಣರೆ ಎಲ್ಲರು ಕೇಳಿರಿ |
ಲಿಂಗಪ್ರಸಾದವು ಮುಟ್ಟದಂತಾಯಿತು ನಮ್ಮ
ರಂಗಪ್ರಸಾದವು ಲೋಕಪಾವನವು ||

ವೀರ ವೈಷ್ಣವರ್‌ಕಳ್ ಶಿವಾಲಯಂಗಳಿಲ್ ಪ್ರಸಾದಂ ಏಟ್ರುಕ್ ಕೊಳ್ವದಿಲ್ಲೈ. ಅವರ್‌ಗಳುಕ್ಕು, 'ಉಚ್ಚಿಷ್ಟಂ ಶಿವನಿರ್ಮಾಲ್ಯಂ' . ಇಂದ ವಿಷಯತ್ತೈ ಶ್ರೀಕನಕದಾಸರ್ ಇಂಗು ಸೊಲ್ಕಿರಾರ್. ಇಂದ ಶೈವ - ವೈಷ್ಣವ ಸಂಡೈಕ್ಕು ಅವರ್ ಕೊಡುತ್ತ ಪರಿಹಾರತ್ತಿನ್ ವಳಿ ಮಿಕವುಂ ಅರುಮೈಯಾನದು.

ಶಿವನು ಮಹದೇವನು ತರೆಕೆ ಹರಿಯೇ ದೆಯ್ವ
ಪುವನಕ್ಕೆ ಹರಿ ಹರರೇಕಸ್ತರು |
ಪವರೋಕಹರ ಕಾಕಿನೆಲೆಯಾದಿಕೇಶವನ
ವಿವರ ತಿಳಿದು ಪಜಿಸಿ ಪಕ್ತಜನರು ||

ಶಿವನೈ, ಮಹಾದೇವ ಎನ್ರು ಅೞೈಕ್ಕಿರಾರ್‌ಕಳ್. ಪೂಮಿಯಿಲ್ ಒರುವನೇ ಪರದೆಯ್ವಂ ಎನ್ಕಿನ್ರನ ಸಾಸ್ತಿರಂಗಳ್. ಅವ್ವಾರು ಇರುಕ್ಕೈಯಿಲ್ ಅವನುಂ ಮಹಾದೇವನ್ ಆನಾನ್ ಅಲ್ಲವಾ?. ಅದೆಲ್ಲಾಂ ಇರುಕ್ಕಟ್ಟುಂ, ಹರಿ ಹರರ್‌ಕಳ್ ಒರುವರೇ. ಏಕ-ಅಪಿಪ್ರಾಯಂ ಉಳ್ಳವರ್‌ಕಳ್. ಅವರ್‌ಕಳಿಲ್ ವಿರೋದಂ ಇಲ್ಲೈ. ಸಂಡೈ ಇಲ್ಲೈ. ಅಪ್ಪಡಿಯಿರುಕ್ಕೈಯಿಲ್, ಅವರ್‌ಕಳಿನ್ ಪಕ್ತರ್‌ಕಳ್, ಅವರ್‌ಕಳಿನ್ ಪೆಯರಿಲ್ ಏನ್ ಸಂಡೈ ಪೋಡುಕಿರಾರ್‌ಕಳ್?.

ಸ್ವಾರಸ್ಯಂ ಎನ್ನವೆನ್ರಾಲ್, ಹರನ್ ಒರುವನೇ ಹರನ್ ಅಲ್ಲ. ಹರಿಯುಂ ಹರನೇ. ಪವರೋಕ ಹರನಾನ ಹರಿಯಿನ್ರಿ, ವೇರು ಯಾರ್ತಾನ್ ಉಣ್ಮೈಯಾನ ಹರ ಎನ್ರು ಅೞೈತ್ತುಕ್ ಕೊಳ್ಳ ಮುಡಿಯುಂ?. ಇವ್ವಾರು ಅನೈವರಿನ್ ಉಳ್ಳಿರುಂದುಂ ಅನೈತ್ತು

சப்தங்களால் வாச்யனான ஆதிகேஶவனை, அவனின் மஹிமையின் விவரங்களை அறிந்து பஜிப்பீர்களாக.

இந்த பதிலானது, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைவிட மாத்வ ஸித்தாந்தத்திற்கு அதிகம் நெருக்கமாக இருக்கிறது. இது வெறும் லிங்காயதரின் வீர சைவ வாதத்திற்கு அளித்த ஹிதோபதேசம் அல்ல. சிவனை பூஜிக்கும் வீரவைஷ்ணவர்களுக்கும் இங்கு பதில் சொல்லப்பட்டுள்ளது.

ராமானுஜ ஸித்தாந்தத்திலிருந்து, மாத்வ ஸித்தாந்தத்தின்பால் ஸ்ரீகனகதாஸரின் மனம் சென்று கொண்டிருந்தபோது, இந்தப் பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

உண்மையை அறியும் பயணத்தில், கடைசியாக ஸ்ரீகனகதாஸர் வந்து சேர்ந்தது ஆசார்ய மத்வரின் தத்வவாதத்திற்கு. இது அவருடைய கீர்த்தனைகளிலிருந்து தெரிய வருகிறது. ஸ்ரீகனகதாஸர் ஒரு மிகச்சிறந்த சிந்தனையாளர். அவருடைய ஜீவ யோக்யதை மிகப்பெரியது. உடன் ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர் போன்ற மஹா யதிகளின் பரிச்சயமும் அவருடைய இந்த மாற்றத்திற்கு காரணமாக இருந்திருக்க வேண்டும். பிறகு வந்த அனைத்து பாடல்களும் அவருடைய மாத்வ தீக்ஷைக்கு ஸாக்ஷியாகவே இருக்கின்றன.

எஷ்டு ஹொகளலி நானு என்னொடெய நிம்ம வி
ஸிஷ்ட மஹிமெகளன்னு ஸுஜனரிகெ பந்திருவ
கஷ்டவளியல்கெ நீ ஸுரகாமதேனு || ப

ப்ராணதத்வத்தின் மூன்று அவதாரங்களுக்கும் பொருந்துமாறு பல்லவியுடன், அனுபல்லவியும் இதனை தொடர்ந்து வருகிறது.

விஷ்ணுவே பரதெய்வவெந்து துஷ்டராக்ஷஸர கொந்தெ
ஸ்ருஷ்டிஸி பாலிப ஸ்ரீராமர இஷ்ட பக்தரொளு
ஸ்ரேஷ்டனெந்தெனிஸிதெ || அனு

முதல் இரண்டு வரிகளில், ஹனும அவதாரத்தின் கதையை சொல்லி, மூன்றாம் வரியில் ஹனுமந்தனை மத்வ ரூபத்தில் நம் எதிரில் நிறுத்தி விடுகிறார் ஸ்ரீகனகதாஸர்.

மூரு ரூபவ தாளி | மஹாயோக்யருகளிகெ
ஸார தத்வவ பேள்தெ | ஷரணு ஹொக்க மனுஜர
கோர துரிதவ ஸீள்தெ | தீரதனு துருதுண்டி

இது தற்போது வழக்கத்தில் இருக்கும் பாடம் (version). முதல் வரியில், இரண்டாம் பாகத்தில், இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றி வரவில்லை. 'ஸாரி யோக்யருகளிகெ' அல்லது 'பூரி யோக்யருகளிகெ' என்று மூல பாடத்தில் இருந்திருக்கலாம். அப்போது சந்தஸ்ஸும் சரியாக பொருந்தியிருக்கும்.

யோக்யர்களிலும் சிறந்தவர்களுக்கு மட்டுமே ஆசார்ய மத்வரின் இந்த தத்வவாதம் தெரிகிறது. அறிந்து தலைக்குள் நிற்கிறது. நின்று வழிகாட்டியாகிறது. என்னும் த்வனி இந்த வார்த்தைகளில் இருக்கிறது.

இன்னொரு பாடல். இந்த மூன்று அவதாரங்களையும் அற்புதமாக வர்ணிக்கிறது.

ஜய மங்கலம் நித்ய ஶுபமங்கலம் || ப

வாதஜாதனு ஆகி க்யாதியலி மெரெதவகெ
ஸேதுவெய பரதிந்த லங்கிஸிதகெ
ஸீதெயனு வந்திஸுத உங்குரவனித்தவகெ
தைத்யபுரவனு பரதலுரிஸிதவகெ || 1

வஸுதெயலி குக்தினந்தனனாகி உதிஸிதகெ
குஸுமவனு தந்து த்ரௌபதிகெ இத்தவகெ
குஶலதனதலி கௌரவாதிகள ஸம்ஹரிஸி
தஸஹாய வீர ஸ்ரீ பீமஸேனனிகெ || 2

மத்யக்ருஹதாதனா ஸதியல்லி உதிஸிதகெ |
பௌத்த சார்வாக மாயிகள ஜரிதவகெ
மத்வ சாஸ்த்ரவனெல்ல ஸஜ்ஜனரிகொரெதவகெ
மத்வ ஶ்ரீ ஆதிகேஶவன பஜகனிகெ || 3

இதைப் போன்றதான இன்னொரு பாடல்.

பரமபதவியனீவ குருமுக்யப்ராணன
தரெயொளகுள்ள மானவரெல்ல பஜிஸிரோ || ப

அந்து த்ரேதாயுகதி ஹனுமனாகவதரிஸி
பந்து தாஶரதிய பாதகெரகி |
ஸிந்துவனு தாடி முத்ரெகெயித்து தானவர
வ்ருந்த புர தஹிஸி சூடாமணிய தந்தவன || 1

த்வாபரத யுகதல்லி பீமஸேனனு எனிஸி
ஶ்ரீபதிய பாத கடு பஜகனாகி |
கோபதாவேஶதலி து:ஶ்ஶாஸனன ஸீளி
பூபனா ஜலதொளகெ கரெது ஜரெதவன || 2

கலிய யுகதலி துரீயாஸ்ரமவனே தரிஸி
கலுஷதா மாயிகளனெல்ல கெலிது |
கிலவாத மத்வமத பலிதெனிஸி வர காகி
நெலெயாதிகேஶவனெ பரதெய்வவெந்தவன || 3

சென்ற பாடலில் 'மத்வசாஸ்த்ர' என்னும் சொல் வந்திருக்கிறது. இங்கு 'மத்வமத' என்று இருக்கிறது. மத்வ சாஸ்த்ர என்றால் மத்வர் முதலில் கண்டுபிடித்த சாஸ்த்ரம் அல்ல. மத்வ மத என்றால் மத்வரால் நிர்மாணம் செய்யப்பட்ட மதம் அல்ல.

மறந்து போன தத்வவாதத்தை மத்வர் நினைவுபடுத்தினார். வைதிக உலகில் மறைந்திருந்த ஸனாதன தர்மத்தை திறந்து காட்டினார். அதற்காகவே ஶ்ரீகனகதாஸர் 'கிலவாத மத்வமத' என்றார். 'கிலவாதத்து' என்றால் மறைந்திருந்தது.

அப்படியெனில், அது மத்வரின் மதம் என்று எப்படி ஆனது?. 'மத்வ' சொல்லின் அர்த்தம் தெரிந்தால், இந்த கேள்விக்கு பதில் கிடைக்கும். மது = ஆனந்தமயமான. வ = அறிவு. பகவந்தனின் அறிவைக் கொடுத்து, ஆனந்தத்தின் பதவியை கொடுக்கும் மதம் - மத்வமதம். அத்தகைய சாஸ்த்ரம் மத்வ சாஸ்த்ரம். அது மத்வர் வரும் முன்னரே இருந்தது. இருந்தாலும் மறைந்திருந்தது. மறைந்திருந்த சாஸ்த்ரம், ஆசார்ய மத்வாசார்யரால் திறக்கப்பட்டது. மேலோட்டமாக பார்த்தால், சாதாரணமாக தெரியும் ஒரு சொல்லில் எத்தகைய அபூர்வமான அர்த்தம் அடங்கியிருக்கிறது என்பது தெரிகிறது.

இன்னொரு அவதார த்ரய ஸ்துதியில், ஸ்ரீகனகதாஸர் ஆசார்ய மத்வரை இவ்வாறு கொண்டாடியிருக்கிறார்.

தாரிணியொளு துர்வாதிதைத்யர கண்டலகாணவாதகெ
மூரேளு மதவ முரித தீர மத்வராயகெ |
ஸார தத்வகளனெல்ல ஷோதிஸி ஸுரெ மாடிதாதகெ
உருவியொளு வரதேவதாதி கேஶவதொரெ தாஸகெ ||

ஆசார்ய மத்வரின் தத்வவாதத்தைப் பற்றி ஸ்ரீகனகதாஸருக்கு இருந்த கௌரவத்தின் சிறப்பு இந்த பாட்டில் அற்புதமாக வெளிவந்திருக்கிறது.

'மூரேளு மதகளு' என்றால் ஆசார்ய மத்வருக்கு முன்னர் ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு பாஷ்யம் எழுதி, தம்முடையதேயான ஒரு வழியை நிறுவிய 21 பேர் பாஷ்யகாரர்களின் மதங்கள். இந்த 21 பேரில் ஆசார்ய ராமானுஜரும் ஒருவர்.

இதன் அர்த்தம். இந்த காலகட்டத்தில் ஸ்ரீகனகதாஸர், ஆசார்ய ராமானுஜரின் விஸிஷ்டாத்வைதத்திலிருந்து தூர விலகி, ஆசார்ய மத்வரின் தத்வவாதமே தன் ஸாதனையின் வழி என்று தீர்மானித்தார். ஸ்ரீகனகதாஸரின் மாத்வ தீக்ஷை அற்புதமானது.

அவருடைய கீர்த்தனை அனைத்திலும், இந்த மாத்வ தீக்ஷை தெரிகிறது.

தஶமதிவந்தித | தஶஶிர ஸம்ஹர |
தஶரூபதி கள | தஶன மூருதி எந்து |
ஹெஸரு ஹேளுவரு |

இது விஜயதசமியன்று காகிநெலெ ஆதிகேஶவனின் உத்ஸவத்தின் சமயத்தில் ஸ்ரீகனகதாஸர் இயற்றிய கீர்த்தனை என்று சொல்லப்படுகிறது. இதில் வரும் ஒரு சிறப்புக் குறிப்பு 'தஶமதிவந்தித' . 'தஶமதி' என்பது ஆசார்ய மத்வரின் பெயர். 'தஶப்ரமதிம் ஜனயந்த யோஷண:'.

ஆசார்ய மத்வர் அவதரித்த நாள் விஜயதசமி. காகிநெலெயில் உத்ஸவம் நடந்த நாளும் விஜயதசமி. ஆக, அந்த உத்ஸவத்தில் பங்கேற்ற ஸ்ரீகனகதாஸருக்கு திடீரென்று ஆசார்ய மத்வரின் நினைவு வந்தது. உடனே காகிநெலெ ஆதிகேஶவனை, 'தஶமதிவந்தித' என்று பாடினார்.

இன்னொரு பாடலில் ஸ்ரீதாஸர் இவ்வாறு பாடுகிறார்.

நந்திதீர்த்தர மததொளகெ பந்தவரெல்ல
எந்திகாதரு பரமானந்த பொந்துவரு |

அவருடைய தீர்த்த (சாஸ்திர) ஆனந்தகரமானது. ஆகவே, அவர் ஆனந்ததீர்த்தர். நந்தி தீர்த்தர். ஆனந்ததீர்த்தரின் ஸித்தாந்தத்தைப் பற்றி அவருடைய நிஷ்டை அபாரமானது. அவருடைய தீக்ஷை அற்புதமானது. ஆகவே, அவருக்கு ஆசார்ய சங்கரரின் மாயாவாதம் என்றால் அப்படியொரு ஆக்ரோஷம்.

ஸாதுஸஜ்ஜனர நோயிஸித மாயா
வாதிகெ நரகவு தப்பீதெ |
ஸேஷஶயனனாதி கேஶவராயன
தாஸரொடெய மத்வத்தவேஷிகளிகல்லதெ
அந்தந்தமஸு இன்னாரிகெ ||

ஸ்ரீகனகதாஸரின் பாடல்களில், ஆசார்ய மத்வரின் ஸித்தாந்தத்தின் ப்ரமேயங்களை முழுமையாக காணலாம்.

பல்லவரே பல்லரு எல்லவரு அரியரு
புல்லலோசன பரப்ரஹ்மனெம்புதனு || ப

அஜ ஞானாதிக பல்ல அனலஸ்னேஹித பல்ல
கஜசர்மாம்பர பல்ல கருட பல்ல |
புஜகேஷ்வர பல்ல பூரிலோசன பல்ல
த்ரிஜகததிபதி த்ரிவிக்ரமனெம்புதனு || 1

இந்த பத்யத்தில் தேவ தாரதம்யத்தின் குறிப்பு இருக்கிறது. ஸர்வோத்தமனான நாராயணனே பரப்ரஹ்ம என்னும் ஸத்யத்தை அஜ = சதுர்முக ப்ரஹ்மன் அறிகிறார். ஏனெனில் அவர் ஜீவோத்தமர். ஜீவர்கள் அதிக ஞானம் உடையவர். அவருக்குப் பின் அவருடைய சமானரான அனலஸ்னேஹித = வாயுதேவர் அறிகிறார்.

ப்ரஹ்ம வாயுகளுக்குப் பிறகு கருட ஸேஷ ருத்ரர். அதையே அடுத்த வரி சொல்கிறது. கஜசர்மாம்பர = சிவன் அறிகிறார். கருட அறிகிறார். மற்றும் புஜகேஸ்வர = ஸேஷன் அறிகிறார். தாரதம்யத்தில் இந்த மூவருக்குப் பிறகு இந்த்ரன். அதையே அடுத்த வரி சொல்கிறது. பூரிலோசன = 1000 கண்களைக் கொண்ட இந்த்ரன் அறிகிறார்.

மத்வ ஸித்தாந்தத்தின் அந்தரங்க ப்ரமேயங்களை அறிந்தவர்களுக்கு மட்டும் இந்த பாடல் அர்த்தம் ஆகிறது. அதையே தாஸர் கூறுகிறார். பல்லவரே பல்லரு; எல்லவரு அரியரு (தத்வவாதத்தை அறிந்தவர்களே அறிந்தவர்கள். மற்றவர்கள் அறியமாட்டார்கள்) என்கிறார்.

ஸ்ரீகனகதாஸருக்கு ஆத்மீயரான 'த்ரிஜகததிபதி த்ரிவிக்ரமனின்' உபாஸகரான ஸ்ரீவாதிராஜரின் மதம்தானே அது. 'பரே ச தத்வவாதேऽஸ்மின் கரியஸி பரோ மம' .

இன்னொரு கவனிக்க வேண்டிய செய்தி இருக்கிறது.

ஸ்ரீகனகதாஸர் பற்பல தசாவதார கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார். அனைத்து பாடல்களிலும் அவர் புத்தனை துதித்திருக்கிறார். ஆசார்ய ராமானுஜரின்படி பத்து அவதாரங்களில் புத்த என்பது இல்லை. ஸ்ரீராமனுக்குப் பிறகு பலராமன், கிருஷ்ணன் மற்றும் கல்கி என்று இருக்கிறது.

ஸ்ரீகனகதாஸரின் எந்த பாடல்களிலும் ஆசார்ய ராமானுஜரின் பத்ததியின் தசாவதார வர்ணனை இல்லை. ஷுத்தோதனனின் மகன் புத்தனே விஷ்ணுவின் 9ம் அவதாரம் என்று கூறிய ஆசார்ய மத்வரின் வழியையே இவர் பிடித்திருக்கிறார்.

ஸ்ரீகனகதாஸரின் மத்வ தீக்ஷையின் திடத்தைப் பற்றி இவ்வளவு உதாரணங்கள் போதும். நமக்கு இஷ்டப்படி ஸ்ரீகனகதாஸர் இருக்க வேண்டும் என்று விரும்பி, அவரைப் பற்றி எழுதக்கூடாது. அவருடைய வாக்கின்படியே அவருடைய வாழ்க்கையை, நம்பிக்கைகளை அடையாளம் செய்ய வேண்டும். நம்முள் ராக த்வேஷங்களை நிரப்பிக் கொண்டு இதிஹாஸங்களை எழுதக்கூடாது.

விஷயம் இவ்வளவு தெளிவாக இருந்தாலும் சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வாறு சொல்கிறார்கள். 'ஸ்ரீகனகதாஸரின் வாக்குகள், அவர் ராமானுஜ வழியில் வைஷ்ணவ தர்மங்களை பின்பற்றியவர் என்று தெளிவாகவே சொல்கிறது. அதைவிட்டு வேறான தார்மிக வழியினை பின்பற்றினார் என்பது அவருடைய ஸாஹித்யத்தில் கண்டுவருவதில்லை' . இப்படி கூறுபவர், ஒன்று, ஸ்ரீகனகதாஸரின் அனைத்து பாடல்களையும் படிக்கவில்லை. அல்லது, வேண்டுமென்றே நடத்தும் குழப்ப நாடகம்.

இன்னும் சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வாறு கூறுகின்றனர். 'ஸ்ரீகனகதாஸர் மாத்வரோ, ராமானுஜ வைஷ்ணவரோ என்பதில் வாத விவாதம் நடந்திருக்கிறது. அவருடைய காவியங்களில்

தெரியும் சில காரணங்களினால் அவரை இந்த இரு வழிகளிலும் சேர்ப்பதுண்டு. ஆனால், அவர் எந்த மதத்தையும் புறக்கணிக்காமல், எந்த தேவரையும் விலக்காமல், விஷ்ணு சிவனில் பேதத்தை சொல்லாமல் ஆத்ம ஸாக்ஷாத்காரம் செய்து கொண்டு காவ்யக்ஷேத்ர, ஆத்யாத்ம க்ஷேத்ரங்கள் இரண்டிலும் சமான புகழினை பெற்ற மஹானுபாவர்’. இது எவ்வளவு பெரிய தவறான கருத்து. நமக்குள் இருக்கும் ராக, த்வேஷங்களைக் கொண்டு, ஸ்ரீகனகதாஸரை படித்தால் இவ்வாறான விஷயங்களே வெளிவருகின்றன.

இத்தகைய அபவாதங்களை விலக்கும் முயற்சியே இந்த சிறிய கட்டுரை.

***

13. உடுப்பியுடன் தொடர்பு

By திரு. ஜெயஸிம்ம தாஸர் (திருமலேஶ ஹரிவிட்டல தாஸர்)

கிபி 1539ல் குருகளான ஸ்ரீவ்யாஸராஜர் ஆனேகொந்தியில் நடுவில் ப்ருந்தாவனஸ்தர் ஆகும்வரை, விஜயநகரத்தின் குரு மடத்திலேயே நிலைத்திருந்த ஸ்ரீகனகதாஸர், அதற்குப் பிறகு தேச சஞ்சாரம் செய்யத் தொடங்கினார். தாஸர் அதிக காலங்கள் வசித்த இடம் என்றால் அது உடுப்பியும் ஒன்று. காகிநெலெ, பேலூர், திருப்பதிகளைப் போல உடுப்பியும் தாஸருக்கு மிகவும் இஷ்டமான க்ஷேத்ரம் என்பதற்கு இரு காரணங்கள் உண்டு. 1. த்வைத ஸித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீமன் மத்வாசார்யரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட உடுப்பியின் பாலரூபி முத்து கிருஷ்ணன் மேல் இருந்த ஈர்ப்பு. 2. விஜயநகரத்தில் தாஸரின் மிகவும் ப்ரியராக இருந்த ஸ்ரீவாதிராஜரின் மேல் இருந்த பக்தி. ஸ்ரீகனகதாஸரின் குருகளாக இருந்த ஸ்ரீவ்யாஸராஜரின் காலத்திற்குப் பிறகு, அந்த ஸ்தானத்தில் ஸ்ரீவாதிராஜரை வைத்து பார்த்திருக்கலாம்.

உடுப்பி அஷ்ட மடங்களின் ஒன்றான ஸோதா மடாதீஸராக இருந்த, ஸ்ரீவாதிராஜர் மிகவும் ப்ரபாவசாலியாக இருந்தார். ஸ்ரீமத்வாசார்யர் ஏற்பாடு செய்திருந்த இரு மாத பர்யாய காலத்தை, இரு ஆண்டுகளாக மாற்றியமைத்த புகழ் அவருடையது. ஆசார்யருக்குப் பிறகு அவரைப் போலவே முக்யஸ்தராக இருந்து, அதிகாரமுள்ள த்வனியை பெற்றிருந்தவர் ஸ்ரீவாதிராஜர் மட்டுமே என்று சொல்லலாம். அபாரமான பண்டிதராக இருந்த ஸ்ரீவதிராஜர் 'ருக்மிணீஷ விஜய, யுக்தி மல்லிகா, ந்யாய ரத்னாவலி, ஸரஸபாரதி விலாஸ, தீர்த்த ப்ரபந்த' ஆகிய பற்பல ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை இயற்றி, கன்னடத்திலும்கூட 'குண்ட க்ரியெ, வைகுண்ட வர்ணனெ, ஹரி ஸர்வோத்தம ஸார' ஆகிய கிருதிகளை 'ஹயவதன' என்னும் அங்கிதத்தில், தம் வித்யாகுருவான ஸ்ரீவ்யாஸராஜரைப் போலவே நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றி ஸாஹித்ய உலகிற்கு பெரும் சேவை செய்தவர். தேசம் முழுக்க சஞ்சாரம்

செய்து, தன் பெயருக்கேற்பவே, வாதிராஜராகி, அனேக குவாதிகளை வாதத்தில் வென்று த்வைத ஸித்தாந்த துந்துபியை அற்புதமாக முழங்கினார்.

இத்தகைய பன்முக வ்யக்தித்வ ஞானிகளான ஸ்ரீவாதிராஜருக்கு ஸ்ரீகனகதாஸரைக் கண்டால் மிகவும் ப்ரியம் இருந்தது. ஸ்ரீதாஸரின் நற்குணம், ஸ்வபாவங்களை மிகவும் மெச்சிய ஸ்வாமிகள், பர்யாய உத்ஸவத்தில் உடுப்பியில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீகனகதாஸரையும் அழைத்திருந்தார். விஜயநகரத்தின் ஸ்ரீவ்யாஸராஜரின் ஸன்னிதானத்தில் கூட இருந்த காரணத்தால், அவருக்கு ஸ்ரீதாஸர் மேல் அதிக அன்பு, விஸ்வாஸம், கௌரவம் இருந்தது.

ஸ்ரீகனகதாஸரும் ஸ்ரீவாதிராஜரின் அழைப்பினை புறக்கணிக்காமல், அவர் அழைத்தபோதெல்லாம் உடுப்பிக்குச் சென்று மத்வவரதனான ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்தின் பாக்கியம் மற்றும் ஸ்ரீவாதிராஜரின் நட்பினையும் அனுபவித்தவாறு பற்பல மாதங்கள் வரை அங்கு வசித்து வந்தார். உடுப்பியில் ஸ்ரீவாதிராஜர் இருந்த காலம் வரை, ஸ்ரீகனகதாஸருக்கு கிருஷ்ண தரிசனம், தீர்த்த ப்ரஸாதம் ஆகிய விஷயத்தில் எந்த ப்ரச்னையும் இருந்திருக்கவில்லை.

ஸ்ரீகனகதாஸருக்கு கிடைத்த இந்த மரியாதைகளைக் கண்ட சில பண்டிதர்களுக்கு அவரைக் கண்டால் பிடிக்கவில்லை. ஸ்ரீதாஸரை எதிர்க்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தாலும், ஸ்ரீவாதிராஜரை எதிர்த்து பேச முடியாததால் அவர்கள் அமைதியாக இருந்தனர்.

ஒரு முறை ஸ்ரீகனகதாஸர் உடுப்பிக்கு வந்தபோது, ஸ்ரீவாதிராஜர் ஸோதே க்ராமத்திற்கு சென்றிருந்தார். அந்த சமயத்தில் நடந்த ஒரு சம்பவம் ஸ்வாரசியமானது.

ஸ்ரீகனகதாஸர், மத்வ ஸரோவரத்தில் ஸ்னானம் செய்து ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்திற்காக மடத்திற்குச் சென்றார்.

ஆனால், இந்த சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்த சில பண்டிதர்கள், தாஸரை மடத்தின் வாயிலுக்கு அருகிலேயே தடுத்தனர். ஹீனகுலத்தை சேர்ந்தவர் என்னும் காரணத்தினால் அவரை தரிசனம் செய்ய அவர்கள் விடவில்லை. ஆனால், ஸாத்விக குண ஸம்பன்னரான ஸ்ரீகனகதாஸர் எந்த எதிர்வினையும் செய்யாமல், மடத்தின் வடக்கு வாயிலில் அமர்ந்து கிருஷ்ணனை த்யானம் செய்யத் தொடங்கினார். அந்தரங்கத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்வரூபத்தை சிந்தித்தவாறு, அவனுடைய குண கானங்களை செய்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில், ஸ்ரீதாஸர் பாடிய 'பூர்வஜன்மதலி நா மாடித கர்மதிம்' என்னும் கீர்த்தனையில் அவருடைய கிருஷ்ண தரிசனத்தின் ஆவலை நாம் அறியலாம்.

பூர்வ ஜன்மதலி நா மாடித கர்மதிம்
ஊர்வியொளு ஜனிஸிதெனோ கிருஷ்ண ||ப

புட்டிதந்தினாரப்ய ஸுகவெம்புவுதனரியெ
கஷ்ட பட்டெனு கேளோ கிருஷ்ண
தொட்டில ஶிஶு தாயிகெ பாய்பிட்டு தெரதி கங்
கெட்டு ஶோகிஸிதெனோ கிருஷ்ண
முட்டலெம்மரு என்ன பந்துகளு கண்டரெ
அட்டி படிவுதலிஹரோ கிருஷ்ண
தட்டி தாரித்ர்யவனு பரிஹரிஸதித்தரெ
முட்டுவுது தூரு நினகெ கிருஷ்ண || 1

காஶியா வாஸவனு பயஸி பஹு தினதிந்த
காஸி பட்டெனு நானு கிருஷ்ண
ஈ ஶரீரவனாந்து ஹீனாயகொண்டெனு
நீ ஸலஹபேகய்யா கிருஷ்ண
ஹேஸிகெய ஸம்ஸாரதி நீனிந்து மாயா
பாஶதொளு பிகிவரே கிருஷ்ண
காஸி மாடதெ என்ன பாபவனு பரிஹரிஸோ
ஸாஸிர நாமத முத்துகிருஷ்ண || 2

லோகதொளு என்னந்த பாபிகளு உண்டெந்து
நீ கேளி பல்லெயா கிருஷ்ண
ஸாகேளு எனகொந்து கதிய தோரிஸி ஸத்வி
வேகிதனு மாடய்ய கிருஷ்ண
ராகேந்து முகி த்ரௌபதிய மானவனு காய்து
ஆகேகக்ஷயவித்தெ கிருஷ்ண
நா காணுவந்ததலி உடுபியாதிகேஶவ
ஏகே துருஶனவீயே கிருஷ்ண || 3

இவ்வாறு ஶ்ரீகனகதாஸர் பாடும்போது மேற்குப் பகுதி சுவர் உடைந்து, ஶ்ரீகிருஷ்ணன் அங்கிருந்த ஶ்ரீகனகதாஸருக்கு தரிசனம் அளித்தான். அடுத்து ஶ்ரீவாதிராஜர், ஶ்ரீகனகதாஸரை கௌரவிக்கும் விதமாக அந்த மேற்குப் பகுதியில் ஒரு கிண்டி (ஜன்னல்) அமைத்து அதற்கு 'கனகன கிண்டி' என்று பெயர் வைத்து, ஶ்ரீகனகதாஸர், கிருஷ்ணனைக் கண்ட அந்த கிண்டியிலேயே, ஶ்ரீகிருஷ்ண தரிசனத்திற்காக வரும் அனைவரும் ஶ்ரீகிருஷ்ணனை தரிசனம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இப்போது அந்த 'கனகன கிண்டி' யின் எதிரில் ஶ்ரீகனகதாஸரின் சிலை இருக்கிறது. அந்த இடத்தில் அமர்ந்தே ஶ்ரீகனகதாஸர் கிருஷ்ணனைக் குறித்து பாடினார் என்ற நம்பிக்கையும் உள்ளது.

ஶ்ரீகனகதாஸர் உடுப்பியில் வசித்து வந்த காலத்தில், ஶ்ரீதாஸரின் பக்தியின் சக்தியை வெளிப்படுத்துவதான பல்வேறு ஸ்வாரசியமான சம்பவங்கள் நடந்தன. ஶ்ரீதாஸரின் கீர்த்தனைகளில் இவற்றின் சுருக்கம் கிடைக்கிறது. இன்றைய காலகட்டத்திலும், கனகனின் ஸ்மரணையை கொடுக்கும் 'கஞ்சி நைவேத்ய' முதலான பூஜைகள் உடுப்பியின் கிருஷ்ண மடத்தில் நடந்து கொண்டிருப்பது, உடுப்பியுடன் ஶ்ரீகனகதாஸர் கொண்டிருந்த சம்பந்தத்தை பறைசாற்றுகின்றன.

14. வைகுண்ட தாஸரின் நட்பு

ஸ்ரீகனகதாஸர் அதிகம் வசித்த இன்னொரு இடம், வேலாபுர என்று பெயர் பெற்ற பேலூர். இதற்கும்கூட இரு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று வேலாபுரத்தின் 'சென்னகேஶவ' ; மற்றொன்று சென்னகேஶவனின் 'பரம தாஸோத்தமரான' ஸ்ரீவைகுண்ட தாஸர்.

ஸ்ரீவைகுண்ட தாஸர், ஸ்ரீராமானுஜாசார்யரின் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை சேர்ந்தவர். தாஸர் எப்போதும் நெற்றியில் தரித்திருந்த மங்கலமயமான திருநாமங்கள், வைகுண்டத்தின் மார்க்கத்தை காட்டுமாறு இருந்தன. பேலூரை சேர்ந்தவரேயான தாஸர் சென்னகேஶவனை த்ருடபக்தி மற்றும் கடினமான சேவைகளால் மகிழ்வித்துக் கொண்டிருந்தார். 'வைகுண்ட விட்டல' என்னும் அங்கிதத்தில் பற்பல கன்னட கீர்த்தனைகளை இயற்றினார். வைகுண்ட தாஸரின் ஒவ்வொரு கீர்த்தனையிலும், சென்னகேஶவனின் தரிசனத்திற்காக ஏங்கும் அவரது நிர்மலமான இதயம் மற்றும் அவருடைய வாக்கு, நடவடிக்கைகளிலும் தெரிந்து, அவரது பக்தியினை அனைவருக்கும் தெரிவித்தது.

வைகுண்ட தாஸரின் மேரு ஸத்ருஷ்யமான பக்தி, ஸரள ஸ்வபாவம், விசாலமான ஹ்ருதயம் ஆகியவற்றை மிகவும் விரும்பிய ஸ்ரீகனகதாஸர், ஒரு முறை பேலூருக்கு வந்திருந்த போது, ஸ்ரீவைகுண்ட தாஸருக்கு தம் பரிச்சயத்தை சொல்லிக் கொள்ளாமல், அவருடைய வீட்டில் வேலையாளாக சேர்ந்தார். தினமும் தாஸரின் வீட்டுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து கைங்கர்யங்களையும் சரியாக செய்து வந்த இவரது நிஷ்டை, கடமை உணர்வு ஆகியவற்றை ஸ்ரீவைகுண்ட தாஸர் கவனித்தார். சில நாட்கள் கழித்தே, தன் வீட்டில் வேலையாளாக இருக்கும் இவர் 'கேஶவனின் பரம பக்தர் ஸ்ரீகனகதாஸர்' என்று தெரிந்தபோது ஸ்ரீவைகுண்ட தாஸருக்கு ஆன வேதனை அபாரமானது. இத்தகைய பாகவதோத்தமரை வேலையாளாக வைத்துக் கொண்டேனே என்று மிகவும் வருந்தி, தாஸரிடம் மன்னிப்பு கேட்டார். ஆனால், ஸ்ரீவைகுண்ட தாஸர் போன்ற

ஹரிபக்தரின் கைங்கர்யத்தை செய்வது தம் பூர்வ ஜென்மத்து ஸுக்ருதம் என்று கூறிய ஸ்ரீகனகதாஸர், அந்த சமயத்தில் ஒரு பாடலை இயற்றினார்.

பண்டனாகி பாகில காய்வே ஹரிய ||ப
வைகுண்டத ஸொம்பின தாஸர மனெய ||அப

ஹொரஸுத்து ப்ராகார நா ஸுத்தி பருவே
பருவ ஹோகுவர விசாரிஸுத்திருவெ
கரதி கம்பிய பொத்து அல்லி நிந்திருவே ஸ்ரீ
ஹரிய ஸம்முகத ஓலகதொளிருவே ||1

தொத்து தொண்டனாகி பாகில காய்வெ
சித்ரத சாவடி ரஜவனு பளிவெ
முத்தின ரங்கவல்லியனிட்டு பரெவெ
ரத்னகம்பளி ஹொத்து ஹாஸுவெனு || 2

வேளெவேளெகெ நானுளிகவ மாடுவெ
அலவட்டிகெ சாமரவ பீஸுவெ
தாளதண்டிகெ ப்ருங்கி மேளகள கூடி ஸ்ரீ
லோலன கொண்டாடி பாடுவெனு || 3

எஞ்ஜல ஹரிவாணங்கள பெளகுவெ
கஞ்ஜலாபன பாதகமலவ தொளிவெ
ரஞ்ஜிப குஸுமத மாலெ தந்திடுவெ
ஸஞ்ஜெகெ பஞ்ஜின தாஸனாகிருவெ || 4

மேலலுளிகவ நா மாடிகொண்டிருவெ
ஸேஷ ப்ரஸாதவ உண்டுகொண்டிருவெ
ஸேஷகிரி காகிநெலெயாதி கேஶவன
தாஸர தாஸர தாஸர மனெய || 5

இந்த கீர்த்தனையின் கடைசி வரியில் வரும் 'தாஸர தாஸர தாஸர மனெய' என்னும் பதப்ரயோகம் கவனத்தை ஈர்க்கிறது.

கனகருக்கு வைகுண்ட தாஸரின் மேல் இருந்த உத்தமமான ஸ்ரத்தா பக்திகளை நமக்கு காட்டுகிறது.

இத்தகைய பாகவதோத்தமரான ஸ்ரீவைகுண்ட தாஸரின் தொடர்பினை விரும்பி, ஸ்ரீகனகதாஸர் பலமுறை பேலூருக்கு வந்து, ஸ்ரீவைகுண்ட தாஸருடன் பல மாதங்கள் வரை வஸித்தார். அந்த சமயத்தில் தாஸர் பாடிய 'கேஶவனொலுமெயு ஆகுவ தனக' என்று தொடங்கும் கீர்த்தனையுடன் மேலும் பல கீர்த்தனைகளை இயற்றினார். இவ்வாறாக இருவரும் ஒருவர் மேல் ஒருவர் மிகச் சிறந்த அபிப்ராயத்தினை கொண்டிருந்தனர் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

***

15. கனகதாஸர் மற்றும் ஹரிதாஸ பரம்பரை

Dr.T.N.Nagaratna

புரந்தர மற்றும் கனகதாஸர்களின் பெயர்கள் கர்னாடகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் தவழும் பெயர்களாகும். ஹரிதாஸ ஸாகித்யத்தின் அஸ்வினி தேவதைகள் என்று புகழ் பெற்றிருக்கும் இந்த ஹரிபக்தர்கள் கன்னடத்தில் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் கிருதிகளை இயற்றியிருப்பதன் மூலம் ஸ்ரீஹரி பக்தியை எல்லா திசைகளிலும் பரப்பியதோடு மட்டுமல்லாமல், தம் உபதேசங்களால் பாமர மக்களை நல்வழியில் நடத்தியவாறு, இன்றைக்கும் மக்களின் மனங்களில் வாழ்ந்து வருகிறார்கள். தாஸத்வயர்களின் இந்த முன்னெடுப்புக்கு பரம்பரையும் ஒரு காரணமாக இருக்கிறது.

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர், கர்னாடகத்திலேயே பிறந்து, தம் த்வைத தத்வத்தினால் புகழ்பெற்ற ஸ்ரீமன் மத்வாசார்யரின் ஸித்தாந்தமே ஹரிதாஸர்களின் ஸித்தாந்தமும் ஆகும். ஆசார்யரின் ஸிஷ்ய ப்ரஸிஷ்யர்கள், த்வைத மத தத்வங்களை அனைத்து இடங்களிலும் பிரசாரம் செய்வதற்காக புறப்பட்டபோது, ஸ்ரீமத்வரின் நேரடி ஸிஷ்யரான ஸ்ரீபத்மனாபதீர்த்தரின் பரம்பரையில் ஒன்பதாவது பீடாதிபதியாக இருந்த ஸ்ரீஸ்ரீபாதராஜர் முளுபாகிலில் தம் மடத்தை நிறுவியதோடு மட்டுமல்லாமல், பூஜாகாலத்தில் கன்னட க்ருதிகளை இயற்றி, பாடுவதுடன், அங்கிருந்த மக்களின் மனங்களில் த்வைத தத்வ பிரசாரம் செய்யும் ஒரு புதிய வழியை பின்பற்றினார்.

மடாதிபதியும் ஹரிதாஸ ஸாகித்யத்தின் மூலபுருஷரும் ஆன ஸ்ரீபாதராயர், சென்னபட்டண அப்பூரில் பிறந்து, அசாதாரண பாண்டித்யத்தைப் பெற்று 'ரங்கவிட்டல' என்னும் அங்கிதத்தில் கீர்த்தனை, ஸுளாதி, உகாபோகங்களை இயற்றி ஒரு பரம்பரையையே துவக்கி வைத்தார். கன்னடத்தில் 'வேணுகீதை' , 'ப்ரமரகீதை' , 'ஸ்ரீலட்சுமி நரசிம்ம ப்ராதுர்பாவ தண்டக' ஆகியவை இவரின் கிருதிகளில் சில. இவரின் வித்யா குருகள் - ஸ்ரீஸ்வர்ணவர்ண தீர்த்தர்.

தாஸ்ய, சக்ய, மதுர, வாத்ஸல்ய, ஷாந்த என்று இந்த ஐந்து வித பாவங்களிலும் ஸ்ரீபாதராயரின் பக்தி பாவம் அவரது கிருதிகளின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. ஸ்ரீஹரியின் தசாவதார சிந்தனை, ராமாயண, பாரத, பாகவதாதி புராணங்களின் கதை, இவற்றின் மூலம் மத்வ மத தத்வங்களின் நிரூபணம், என இந்த அனைத்து விஷயங்கள் மூலமாகவும், ஹரிதாஸ ஸாகித்யத்தை ஒரு சம்பிரதாய ரீதியில் வளர்த்த பெருமை ஸ்ரீஸ்ரீபாதராயருடையது ஆகும்.

ஆழ்வார்களின் தமிழ் கிருதிகள், ஷிவசரணர்களின் கன்னட கிருதிகள், சாதாரண மக்களின் மனதில் எவ்விதம் போய் சேர்ந்திருக்கின்றன என்பதை ஸ்ரீஸ்ரீபாதராயர் நன்கு அறிந்திருந்தார். ஆகையாலேயே, அவர் தம் பூஜா காலத்தில் தம் கன்னட கிருதிகளை பாடத் துவங்கினார். இந்த பழக்கம், அவரது ஸிஷ்யரான ஸ்ரீவியாஸராயரின் காலத்திலும், ஸ்ரீவாதிராஜரின் காலத்திலும் முன்னெடுத்து வந்தது. அவர்கள் மூலமாகவும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் கன்னட கிருதிகள் இயற்றப்பட்டு வைஷ்ணவ பக்தி ஸாகித்யம் கன்னடத்தில் நன்கு பரவியது.

ஸ்ரீபாதராயரில் இருந்த பக்தி பாவங்கள், அவரின் ஸிஷ்யரான ஸ்ரீவியாஸராயரிடம் இன்னும் அதிகமாக இருந்தது. அவர், தம் குருகளைவிட அதிக எண்ணிக்கையில் உகாபோகங்களை இயற்றினார். இவரின் உடுப்பி கிருஷ்ணனின் மோஹினி அலங்காரத்தின் வர்ணனை, ஸ்ரீபாதராயரின் தண்டகத்தை நினைவு படுத்துகிறது என்று சொல்வர். இவரது அங்கிதம் 'ஸ்ரீகிருஷ்ண' .

ஸ்ரீபாதராயர் மடத்து செயல்களில் கன்னடத்தின் பழக்கத்தைக் கொண்டு வந்தவர் என்று சொன்னால், ஸ்ரீவியாஸராயரோ, ஹரிதாஸர்களின் ஒரு குழுவையே தயார் செய்ததன் மூலம் ஹரிதாஸ பரம்பரையின் துவக்கத்திற்கும் ஒரு முக்கிய காரணமாக இருந்தார். ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீபுரந்தரர், ஸ்ரீகனகதாஸர் போன்ற ஸிஷ்யர்களை கன்னடிகர்களுக்கு (ஹரிபக்தர்களுக்கு) கொடுத்தவர் இவர்.

மடாதிபதிகளாக இருந்தாலும் அவரின் செயல்கள் வெறும் தேவபூஜைகளில் மட்டுமே கட்டுப்படாமல், விஜய நகர அரசனான கிருஷ்ணதேவராயனின் ராஜகுருவாகவும் இருந்தார். அரசனின் குஹு யோகத்தை பரிகரித்தார். நூற்றுக்கணக்கான கிருதிகளை இயற்றி, தம் குருகள் துவக்கிய பரம்பரையை, அற்புதமாக முன்னெடுத்த கீர்த்திவந்தர் இவர்.

அடுத்து இதே பரம்பரை, பிரசாரம் ஆகியவை இவரின் ஸிஷ்யரான ஸ்ரீவாதிராஜரின் காலத்திலும் அருமையாக வளர்ந்தது. கன்னடம், சம்ஸ்கிருத என இந்த இரண்டிலும் அற்புத பாண்டித்யத்தைப் பெற்று, தம் பெயருக்கு ஏற்பவே, வாதத்தில் எல்லைகள் இல்லாதவராக இருந்தவர் ஸோதே மடத்தின் ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள். இவரே வியாஸராயரின் முக்கிய ஸிஷ்யர்களில் ஒருவர்.

இவர் 1480ல், ஹுவினகெரெ கிராமத்தில் ராமாசார்ய சரஸ்வதி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவரின் இஷ்ட தெய்வமான 'ஹயவதன' அங்கிதத்தில் நூற்றுக் கணக்கான கீர்த்தனைகள், உகாபோகங்கள், ஸுளாதிகளை இயற்றி ஹரிதாஸ ஸாகித்யத்தை வளர்த்தார். கீசக வத, குண்டக்ரியெ, லட்சுமி ஷோபானெ, வைகுண்ட வர்ணனெ, ஸ்வப்னபத இவை அவரின் தத்வங்களால் நிரம்பிய, சரளமான கிருதிகளாகும். இவரின் கிருதிகளால் ஹரிதாஸ ஸாகித்யத்தின் வியாப்தி, அதன் மூலம், மத்வ மத பிரசாரமும் அனைத்து இடங்களிலும் பரவியது.

ஸ்ரீபாதராயர், வியாஸராயர் மற்றும் வாதிராஜர் என்னும் இந்த யதி த்ரயர்களால் நன்கு வளர்ந்து வந்த ஹரிதாஸ ஸாகித்ய, பிறகு வந்த 100 ஆண்டுகளில் மேன்மேலும் பாய்ந்து ஓடத் துவங்கியது.

விஜயநகர சாம்ராஜ்யத்தில், ஸ்ரீவியாஸராயர், கிருஷ்ணதேவ ராயனின் ஆஸ்தான குருகளாக இருந்தபோது, அவரிடம் பல்வேறு ஸிஷ்யர்கள் தீக்ஷையைப் பெற்று, மத்வ மதத்தின் பிரசார காரியத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போதே தாஸ த்வயர்களான

கனக, புரந்தரர்களும் வெவ்வேறு காரணங்களால் அங்கு வந்து அவரிடம் சேர்ந்தனர்.

சுமார் 1484ல் புரந்தரட என்னும் இடத்தில் பிறந்த புரந்தரர், தம் அபாரமான கிருதி செல்வத்தினால் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டிருக்கிறார். தாஸதீக்ஷையைப் பெறுவதில் முதலாமானவர் என்ற பெயரைப் பெற்றவர் அவர். அவரின் மகனின் மரணத்தால் ஏற்கனவே துக்கப்பட்டுக் கொண்டிருந்த அவர் மனதை, அவரது மனைவி மடைமற்றி பகவத் பக்தியின் பால் திருப்பினார் என்று சொல்லலாம்.

ஹெண்டதி ஸந்ததி ஸாவிரவாகலி என்று மனைவிக்கு தன் நன்றியை தெரிவித்திருக்கிறார். பரம்பரையாக வரும் மூக்குத்தி கதையும் இதற்கு உறுதுணையாக இருக்கிறது. ஸ்ரீவியாஸ ராயரிடமிருந்து 'புரந்தரவிட்டல' என்னும் அங்கிதத்தைப் பெற்று, ஆயிரக்கணக்கான கிருதிகளை இயற்றினார். கீர்த்தனைகள் எண்ணிக்கை, அதில் தெரியும் பாவம், அர்த்தம், தத்வம் ஆகியவற்றிலிருந்து, ஹரிதாஸ ஸாகித்யத்தில் புரந்தர தாஸருக்கு ஒரு சிறப்பான இடம் இருக்கிறது. அவரது குருகளிடமிருந்தே 'தாஸரெந்தரெ புரந்தர தாஸரய்யா' என்று புகழப்பட்டிருக்கிறார்.

இத்தகைய கங்கா வாஹினியில் கனகதாஸரின் காவ்ய வாஹினியும் நுழைந்து சங்கமித்திருக்கிறது. தாரவாட் ஜில்லா பங்காபுரத்தின் அருகில் பாட கிராமத்தில் பிறந்த கனகதாஸர் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தவர். பெரும் செல்வந்தராக இருந்த அவர், போர்க்களத்தில் மனமாற்றம் அடைந்து கேஶவனின் பக்தர் ஆனார். வியாஸராயரிடம் ஸிஷ்யத்வம் பெற்று 'ஆதிகேஶவ' அங்கிதத்தில் அனேக எண்ணிக்கையில் கிருதிகளை இயற்றினார். கீர்த்தனைகள் மட்டுமல்லாமல் நள சரித்ரெ, ராமதான்ய சரிதெ, மோஹன தரங்கிணி, ஹரிபக்திஸார என இந்த காவியங்களை இயற்றி தாம் ஒரு கவிஞர் என்றும் சொல்லியிருக்கிறார். ஹரிதாஸர்களில் புரட்சிகர மனோபாவத்தைக் கொண்டவர் என்று புகழ்பெற்றிருக்கிறார்.

புரந்தர கனகரின் கிருதிகளின் வருகையால், கன்னட வைஷ்ணவ பக்தி ஸாகித்யம் புத்துயிர் பெற்றது. சாதாரண மக்களின் மனங்களை அவர்களின் கிருதிகள் தொட்டன. அவர்களது தினப்படி வேலைகள் பக்தி மயமானது. காக்கை, குயில்களின் குரல், நகாரியின் சத்தம் முதல் பூகம்பம் வரை என அனைத்திலும் ஹரியின், ஹரிபக்தியின் செய்திகள் எனக்கூறிய கனக புரந்தரர், அவற்றை தம் பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தி, சூழ்நிலையையே ஹரிமயமாக மாற்றினர்.

இஸ்லாமியர்களின் படையெடுப்பால் விஜயநகர சாம்ராஜ்யத்தின் நிலை தடுமாறியபோது அங்கிருந்த பண்டிதர்கள், பக்தர்கள், மகாராஜர்கள் அனைவரும் வெவ்வேறு திசைகளில் பரவினர். ஹரிதாஸ ஸாகித்யத்தின் நிலையும் அப்படியே குறைந்தது.

தெற்கில் விஜய நகரமானது, ஹரிதாஸ ஸாகித்யத்தின் கேந்திரமாக இருந்ததைப் போல, சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, வட கர்னாடகத்தில் ராயசூர் ஜில்லா, ஹரிதாஸ ஸாகித்யத்தின் கேந்திரமானது. இதற்கு நடுவில், காகண்டிகியின் மஹிபதி தாஸர் மற்றும் அவரது மகன் கிருஷ்ணராயர் இருவரும் ஆயிரக் கணக்கான கிருதிகளை இயற்றி, ஹரிதாஸ ஸாகித்யத்தை மறுபடி மீட்கத் துவங்கினர்.

இதே காலகட்டத்திலேயே, மந்திராலயத்தின் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள், தம் கிரந்தங்களின் மூலம், சஞ்சாரங்களின் மூலம் த்வைத மதத்தை மக்களுக்கு போய்ச் சேரும் செயலை அற்புதமாக செய்து கொண்டிருந்தார். அவரின் புகழ் அதோனியின் சுற்றுப் புறங்களில் பரவி வந்திருந்த காலம்.

பிற மதங்களின் பிரசாரமும் அதிகமாக இருந்த காரணத்தால், அந்த காலத்தில் இருந்த ஹரிதாஸர்கள், தம் பக்திசாதனையுடன் மத பிரசாரத்தையும் ஒரு கடைமையாக எடுத்துச் செய்து கொண்டிருந்தனர். ஆகையால் அப்போது ஹரிதாஸ பரம்பரையை முன்னெடுத்த ஸ்ரீவிஜயதாஸரின் காலத்தில், தத்வ, சாஸ்திர பிரசாரங்கள் அதிகமாக முன்னெடுக்கப்பட்டன. ஸ்ரீவாதிராஜரின்

காலத்திற்குப் பிறகு, ஸ்ரீவிஜயதாஸரின் காலத்திலேயே இந்த வேலைகள் துரிதமாக நடந்தன. இதுவே ஹரிதாஸ ஸாகித்யத்தின் ஒரு முக்கியமான திருப்பம் என்று சொல்லலாம்.

18ம் நூற்றாண்டில், சிகலபரவி கிராமத்தில் ஸ்ரீனிவாஸ மற்றும் கூஸம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த தாஸப்ப, மிகவும் ஏழ்மையில் பிறந்து, புரந்தரதாஸரிடமிருந்து கனவில் அங்கிதத்தைப் பெற்று விஜயதாஸர் என்று புகழ் பெற்றார்.

ஹரி நாம மகிமை, ஹரிசர்வோத்தமத்வம், பிம்பரூபி பரமாத்மனைக் காணும் வழி, ஞான பக்தி வைராக்கியங்கள், குருகருணை சம்பாதிப்பது - என அனேக தத்வங்கள், அவரது கிருதிகளில் முக்கியமாக ஸுளாதிகளில் விளக்கப்பட்டன. 'ஹரி கருணவெம்பந்த கீலிகை' 'குருகருணவெம்பந்த ஷக்தி' யின் உதவியினாலேயே கிடைத்தது என்கிறார். மாத்வ ஸம்பிரதாயத்தில், குரு நமனத்தை செய்யும்போது, ஸ்ரீபாதராயர், ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸருடன் 'விஜயார்யாயதே நம:' என்று இவரையும் துதிக்கும் வழக்கம் இருக்கிறது.

விஜயதாஸரின் தத்வ பிரசாரத்தை, அவரது முக்கிய ஸிஷ்யர்களில் ஒருவரான கோபாலதாஸர் முன்னெடுத்தார். ராய்சூர் ஜில்லா தேவதுர்கா தாலூக்கின் மொசருகல்லு என்னும் கிராமத்தில் பிறந்த இவரது இயற்பெயர் பாகண்ணா. இளம் வயதில் தந்தையை இழந்து, தாயுடன் ஏழ்மையில் வாழ்ந்து வந்தார். பகவத் பக்தியினால் பக்குவப்பட்ட மனது, தமது ஸிஷ்யரான ஸ்ரீனிவாசாசார்யருக்கு ஆயுர் தானம் கொடுப்பதில் பின்வாங்கவில்லை. அவரின் இந்த தியாக புத்தி, வைராக்கியத்தின் உண்மையான அர்த்தத்தை விளக்குகிறது.

கோபாலதாஸருக்குப் பின்னால், ஹரிதாஸ ஸாகித்ய பரம்பரையை முன்னெடுத்தவர்களில் முக்கியமானவர் ஜகன்னாததாஸர். 1727ல் ராய்ச்சூர் ஜில்லா மான்வி தாலுக்கா ப்யாகவாடத்தில் பிறந்த இவரது அங்கிதம் 'ஜகன்னாதவிட்டலா' . நூற்றுக்கணக்கான கிருதிகளை இயற்றி, ஹரிதாஸ ஸாகித்ய

பிரபஞ்சத்தை வளர்த்தெடுத்தார். தத்வசுவ்வாலி என்னும் த்ரிபதியில் இயற்றப்பட்ட கிருதிகள் இவரது சிறப்பு. விஜயதாஸரால் மறுபடி பெருக்கெடுத்து ஓடிய ஹரிதாஸ வாஹினி, ஜகன்னாததாஸரின் ஹரிகதாம்ருதஸார என்னும் கிரந்தத்தினால் வேகமடைந்தது. இவரது பிற கிருதிகளும்கூட தத்வங்களை விளக்குவதாகவே இருக்கின்றன.

ஹரிதாஸர்களின் இந்த பரம்பரையில் ஜகன்னாததாஸரின் சமகாலத்தவராக இருந்த பிரசன்னவெங்கட தாஸருக்கும் ஒரு மிக முக்கிய இடம் உண்டு. பாகல்கோடேயில் பிறந்து, எழ்மையில் உழன்று, திருப்பதி திம்மப்பனின் பிரசாதத்தால் 'ப்ரசன்ன வெங்கட' என்னும் அங்கிதத்தைப் பெற்று, கிருதிகளை இயற்றியிருக்கிறார். பாகவத 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தத்தை கன்னடத்தில் இயற்றியது இவரது சிறப்பு.

இப்படி, ஸ்ரீபாதராஜரிடமிருந்து துவங்கி, புரந்தர கனகதாஸர் வரைக்கும் வளர்ந்து வந்த ஹரிதாஸ ஸாகித்ய பரம்பரையை முதல் கட்டம் என்றும், விஜயதாஸரிலிருந்து, ப்ரசன்ன வெங்கட தாஸர் வரைக்குமான கட்டத்தை இரண்டாம் கட்டம் என்றும் சொல்லலாம்.

இந்த குருஸிஷ்ய பரம்பரையானது எங்கும் தடைபடாமல், ப்ராணேஷ தாஸர், ஹொளவனகட்டெ கிரியம்மா, சுரபுர ஆனந்ததாஸர், மொதலகல்லு சேஷதாஸர், அடவி ராமதாஸர் என, ஆராய்ச்சியாளர் பேலூர் கேஶவதாஸ் அவர்கள் சொல்வதைப் போல, இந்த நாகரீக காலம் வரைக்கும் இந்த பரம்பரை தொடர்ச்சியாக வந்திருக்கிறது. உதாரணம்: ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர் மற்றும் அவரது ஸிஷ்ய பரம்பரை.

இப்படி 700 ஆண்டுகள் காலம் வரை வந்திருக்கும் ஹரிதாஸ ஸாகித்ய பரம்பரையில், கனகதாஸரின் பங்கு என்ன என்பதை, அவரது கிருதிகளை மற்றவர்களின் கிருதிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தால் தெரிய வரும். பரம்பரைக்கு கனகதாஸரின்

மிக முக்கியமான பங்கு என்னவென்றால், மற்ற ஹரி தாஸர்களைப் போலவே இவரும் மாத்வ தத்வத்தை பரப்பி, பக்தி சாதனை செய்திருப்பதே. இப்படி மாத்வ மத தத்வங்களை பின்பற்றிய ஹரிதாஸர்கள் ஸகுணபக்தர்கள் எனலாம்.

அவர்களின்படி ஸ்ரீஹரியே சர்வோத்தமன். ஸ்வதந்த்ரன். குணாதீதன். தோஷங்கள் அற்றவன். ஸர்வவியாப்தன். ஸர்வஷக்தன். ப்ராக்ருத தேகம் இல்லாதவன். இந்த ஜகத் ஸத்யம். பஞ்சபேதங்கள் உண்மை. ஸ்ரீஹரி பிம்பரூபி. ஜீவர்கள் பிரதிபிம்பர்கள். வாயுதேவர் பரமகுருகள். இப்படியாக அனேக தத்வங்கள், ஸித்தாந்தத்தின் முக்கிய கருத்துகளை அனைத்து ஹரிதாஸர்களின் கிருதிகளிலும் பார்க்கலாம்.

இவற்றை கனகதாஸரின் கிருதிகளில் ஒப்பிட்டுப் பார்த்தால், அவரது காவியங்களில் ஒன்றான மோஹன தரங்கிணியில் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீராமானுஜரின் ஸ்துதி அதில் இருப்பதை பார்க்கலாம். கீர்த்தனைகளிலும் 'திருமணி' 'திருசூர்ண' என்னும் ஸ்ரீவைஷ்ணவ சம்பந்தப்பட்ட சொற்களை காணலாம். இவற்றுடன், முட்டபேடா முட்டபேடா என்னும் கிருதியில் ராமானுஜமதோத்தாரக என்றும் பாடியிருக்கிறார்.

கனகதாஸர் முதலில் ஸ்ரீவைஷ்ணவ தத்வங்களை ஒப்புக்கொண்டு, பின்னர் ஸ்ரீவியாஸதீர்த்தரின் சம்பந்தம் பெற்று, அவரின் ஸிஷ்யத்வத்தைப் பெற்று, அங்கித, தீக்ஷைகளைப் பெற்று, மாத்வ மத தத்வங்களை பின்பற்றத் தொடங்கியிருக்கலாம். மாத்வ மதத்தின் குருகளான ஹனும பீம மத்வர்களைப் பற்றி கனகதாஸர் பரமபதவீவ குருமுக்யபிராண, எஷ்டு பொகளலி நாம ஆகிய கிருதிகளில் பாடியிருப்பதைப் பார்க்கிறோம்.

தனு நின்னது ஜீவன நின்னது - என்று ஜீவர்களின் தத்த ஸ்வாதந்த்ர்யத்தைப் பற்றி சொல்கிறார். ஹரியின் ஸர்வோத்தமத்தைப் பற்றி அவரது பல்வேறு கிருதிகள்

இருக்கின்றன. ஸ்ரீஹரி ஸர்வவியாப்தன் என்பதை: எல்லிருவனோ ரங்க எம்ப சம்ஷய பேடா என்று பாடுகிறார்.

இப்படியே ஹரி நாம மகிமை, ஹரி ஸ்மரணை, ஹரிகீர்த்தனை, வந்தனை, ஆத்மஸமர்ப்பணம் ஆகியவை ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளில் அதிகமாக காணப்படுகின்றன. ஹரிதாஸ்யத்தின் மேல் அவருக்கு உள்ள விருப்பத்தை, அனைவரும் தினமும் பாராயணம் செய்யக்கூடிய 'ஈஶ நின்ன சரண பஜனெ' என்னும் கேஶவ நாமத்தில் பார்க்கலாம். பஞ்சபாவங்கள் எனப்படும் தாஸ்ய, சக்ய, மதுர, வாத்ஸல்ய மற்றும் ஶாந்த பாவங்களில் கனகதாஸர் பல்வேறு கிருதிகளை இயற்றியுள்ளார்.

மற்ற ஹரிதாஸர்களைப் போலவே கனகதாஸரும் தம் பக்தி ஶாதனைக்கு ராமாயணம், மஹாபாரதம், பாகவதங்களிலிருந்து கதைகளை எடுத்து விளக்கியிருந்தாலும், மக்கள் புகழுமாறு அவற்றிற்கு ஒரு புது அர்த்தத்தையே அவர் விளக்கினார் எனலாம். உதாரணத்திற்கு: பொம்பெயாடவனாடிதே மஹாபாரதத என்னும் கிருதி. இதிலிருந்து கனகதாஸர் ஒரு சிறந்த கவி, தர்க்கம் செய்பவர் என்பதை அறியலாம். அனைத்து பிரச்னைகளுக்கும் ஸ்ரீகிருஷ்ணனையே அபராதி (குற்றவாளி) என்ற இடத்தில் நிறுத்தி அவன் மகிமைகளை பாடுகிறார். இதுவே நிந்தாஸ்துதி என்று சொல்லப்படுகிறது.

கனகதாஸர் பல தீர்த்த க்ஷேத்திரங்களை தரிசித்து, அங்கு இருக்கும் க்ஷேத்திர மூர்த்திகளைப் பற்றி பாடியிருக்கிறார். ஹரிதாஸ ஸாகித்யத்தில் இந்த க்ஷேத்ர, க்ஷேத்ர மூர்த்திகளின் வர்ணனையை பாடுவது ஒரு சம்பிரதாயமாகவே ஆகியிருக்கிறது. திருப்பதி, பேலூர், மேலுகோடெ, ஸ்ரீரங்கபட்டண, உடுப்பி - இவையே கனகதாஸர் தரிசித்த முக்கியமான க்ஷேத்திரங்களாகும்.

இவற்றில் உடுப்பி கனகதாஸரின் பக்தி ஜீவனத்தில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. கனகதாஸர் தம் வாழ்க்கையில் பல்வேறு ஆண்டுகளை உடுப்பியில் கழித்திருக்கிறார்.

அங்கிருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் அவரின் பக்திக்கு மெச்சி, அவருக்கு அங்கு தரிசனம் அளித்தான் என்று சொல்லப்படுகிறது. அதுவே 'கனகன கிடிகி' என்று இன்றும் அனைவரும் தரிசனம் செய்யும் வழியாக இருக்கிறது.

ஸ்ரீவாதிராஜர் வைகுண்டவர்ணனெ, லக்ஷ்மி ஷோபானெ, குண்டக்ரியெ ஆகிய கண்ட காவியங்களை இயற்றினால், கனகதாஸர் மோஹனதரங்கிணி, ராமதான்ய சரிதெ, நளசரித்ரெ, ஹரிபக்திஸார ஆகியவற்றை இயற்றி, அதன்மூலம் ஹரி தாஸர்களின் பக்தி மார்க்கத்தை விளக்கியிருக்கிறார்.

மோஹன தரங்கிணியில் த்வாரகையின் வர்ணனை, கிருஷ்ண ருக்மிணிகளின் வர்ணனை ஆகியவற்றில் அவரது பக்தி பாவம் நன்கு வெளிப்படுகிறது. ராமதான்ய சரிதையில் கவியின் புரட்சிகர மனோபாவம் வெளிப்படுகிறது. மற்ற ஹரிதாஸர்களில் அங்கங்கு வெளிப்படும் இந்த பாவம், கனகதாஸரிடம் முழுமையாக தென்படுகிறது. நள தமயந்தியின் பரிசுத்தமான ப்ரேமத்தை இவரது நளசரித்ரெ சொல்கிறது. ஹரிபக்திஸாரத்தில் பகவந்தனின் அவதாரங்கள், குண நலன்கள், காருண்யம் ஆகியவற்றை விளக்குகிறார்.

கீர்த்தனைகளில் கனகதாஸரின் இந்த கவி மனோபாவம் அற்புதமாக வெளிப்பட்டிருக்கிறது. அவரது ஆத்ம அனுபவங்களை மிகவும் அழகாக பல்வேறு கிருதிகளில் விளக்கியிருக்கிறார். இதற்கு பல்வேறு உதாரணங்களை சொல்லலாம்.

கனகதாஸர் பிராமணர் அல்லாதவர். சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்து, அவர்களுடன் நன்கு பழகியவராகையால், மற்ற ஹரிதாஸர்களை ஒப்பிட்டால், இவரது சமூக, நீதி கருத்துகள் மிகவும் புரட்சிகரமானவையாக இருக்கின்றன. சமூக நீதி, சம நிலை, அவற்றின் முன்னேற்றம் ஆகியவற்றை அவரது கிருதிகளில் மிகவும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார். ஜாதி மதங்களின் பேச்சு வந்தாலே, கனகதாஸர் கோபம் கொண்டு

வார்த்தைகளில் விளையாடுகிறார். ஆத்மா யாவ குல? ஜீவ யாவ குல? என்று கேட்கிறார்.

நீ மாயெயொளகோ நின்னொளு மாயையோ? மற்றும் பல பாடல்களின் மூலமாக, மக்களின் அஞ்ஞானத்தை கண்டித்து, அவர்களை பக்தி மார்க்கத்தில் திருப்ப முயல்கிறார்.

பொதுவாக ஹரிதாஸ ஸாகித்யத்தில், பக்திக்கு புரந்தரதாஸர், ஞானத்திற்கு ஜகன்னாததாஸர், வைராக்கியத்திற்கு கனகதாஸர் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. ஆனால், கனகதாஸரின் கிருதிகளில் பக்தி ஞான வைராக்கியங்கள் மூன்றும் அதிகமாகவே காணப்படுகின்றன.

தொரெது ஜீவஸபஹுதே ஹரி நின்ன சரணவ - ஆகிய கிருதிகள் அவரது பக்திக்கு சாட்சி. ஒளகண்ணினிந்தலெ தேவர நோடண்ணா - ஆகியவை அவரது ஞானத்திற்கும் சாட்சியாக சொன்னால், அவரது வாழ்க்கையையே வைராக்கியத்திற்கு உதாரணமாக சொல்லலாம். அவருக்குக் கிடைத்த புதையலை கொப்பர தேவாலயத்திற்கு காணிக்கையாகக் கொடுத்தது, மனைவி, தாய் இவர்களின் மரணத்தால் வந்த வைராக்கியம், போர்க்களத்தில் பார்த்த ரத்தம், மரணங்களால் வந்த வைராக்கியம் என பல உதாரணங்களை சொல்லலாம்.

இப்படி ஞான, பக்தி, வைராக்கியங்களைக் கொண்டு பல்வேறு கீர்த்தனைகளை இயற்றி, காவியங்களை படைத்து, ஹரிதாஸ ஸாகித்யத்திற்கு மட்டுமல்ல. கன்னட ஸாகித்யத்திற்கே ஒரு கைவிளக்காக, வழிகாட்டியாக இருந்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், தன்னுடைய ஆழமான கருத்துக்களை கவிதை வடிவில் இயற்றி, மனிதகுலத்திற்கே ஒரு ஆதர்ச நாயகனாக இருக்கிறார். புரட்சிக்காரராக இருக்கிறார்.

ஆகையாலேயே, வியாஸராயர் போன்ற யதிகள், மடாதிபதிகள் அந்த காலத்தில் கனகதாஸரை ஆதரித்தார். கௌரவித்தார். புரந்தரதாஸர் 'இவகெ நாடெல்ல ஹுடுகிதரூ ஈடார காணே'

என்று புகழ்த்து பாடினார். இப்படி ஒரு ஆளுமையாக தானும் வளர்ந்து, ஒரு பரம்பரையையே துவக்கி வளர்த்த கனகதாஸர் தம் காவிய சக்தியினால் அதற்கு தேவையான சக்தியையும் கொடுத்திருக்கிறார்.

***

16. பக்தி ஸாகித்யத்தில் பின்னணியில் ஹரிபக்திஸாரம்
ஸ்ரீ ஸீதாராம ஜாகீர்தார்

கவி கனகதாஸரின் கிருதிகளில் மிகவும் புகழடைந்ததும், மக்களுக்கு மிகப் பிடித்ததுமான ஒரு கிருதி - ஹரிபக்திஸாரம். இது மிகவும் சரளமான பாமினி ஷட்பதி நடையில் இயற்றப்பட்டுள்ள கிருதி. ஹரிபக்தியின் அருமை பெருமைகளையும், ஆத்மனின் தாஸத்வத்தையும், அஸ்வதந்த்ரத்தையும், ஷரணாகதி தத்வத்தையும் விளக்கும் அற்புத கிரந்தம் இது.

பக்திஸாரத சரிதெயொளு ஹரி
பக்திலாலிஸுவந்தெ ரசிஸுவெ
யுக்தியலி பரெதோதிதவரிஷ்டார்த்த ஸித்திபுது |
முக்திகிது நெலெதோருபுது ஹரி
பக்தரித லாலிபுது நிஜமதி
பக்திகொலிவந்ததலி ரக்ஷிஸு நம்மனனவரத ||

ஹரிபக்தர்கள் ஹரியின் பக்தியைப் பற்றி கேட்கவேண்டும் என்று இதை இயற்றுகிறேன். அவர்களின் முக்திக்கு இது காரணமாக இருக்கட்டும். இதனை யார் படிக்கிறார்களோ, எழுதுகிறார்களோ, அவர்களின் இஷ்டார்த்தங்கள் நிறைவேறுகின்றன. நம் புத்தி பக்தியில் ஒன்றுமாறு எப்போதும் இருக்கட்டும். அப்படி இருந்தால் அவன் நம்மைக் காப்பான் என்கிறார் கனகதாஸர். ஹரிபக்திஸார கிருதியின் நோக்கம் என்னவென்று இதிலிருந்து அறியலாம்.

பாரதியரின் ஜீவ நதியில் அனந்த காலங்களிலிருந்து பாய்ந்து வரும் கங்கையைப் போன்றதொரு புனித நீர் - பக்தி. இதன் மூலம் இன்னும் நமக்குத் தெரியவில்லை. வேத, உபநிஷத், புராண இந்த மூன்று காலங்களிலும் பக்தியின் இருப்பு நமக்குக் கண்டு வருகின்றது.

ஆசார்ய த்ரயர்கள், வசனகாரர்கள் இவர்களுக்கெல்லாம் பிறகு, கனகதாஸர் தம் கிருதிகளை இயற்றும் காலத்தில் பல

நூற்றாண்டுகள் முடிந்து விட்டன. கவிஞர்கள் அனைவரும் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்பவே கவிதைகளை இயற்றுகின்றனர். கனகதாஸரும் இதற்கு தப்பவில்லை. அந்த காலத்தில் இருந்த, அவர் கேட்ட, படித்த சம்ஸ்கிருத ஸாகித்யத்தின் பிரபாவத்தை அவரது கிருதிகளில் அங்கங்கு பார்க்கிறோம். அந்த விஷயங்களையே தமது மனதில் ஏற்றி, பின் அங்கிருந்து தமது கிருதிகளில் இறக்கியிருக்கிறார். இதில் வியப்படைய ஒன்றும் இல்லை.

விஷ்ணு, விஷ்ணுவின் அவதாரங்கள் அனைத்தும் ஹரிஸ்வரூபமே. இத்தகைய விஷ்ணுவை கனகதாஸர் தம் ஆராத்ய தெய்வம் என்று அனைத்து கிருதிகளிலும் வெளிப்படுத்தி யிருக்கிறார். இந்த ஹரிபக்திஸாரவிலும் இருக்கும் 108 பத்யங்களில் 'ரக்ஷிஸு நம்ம அனவரத' என்று பரமாத்மனை பிரார்த்தித்திருக்கிறார். இறுதியான 3 பத்யங்கள், மங்கள பத்யங்களாக இருக்கின்றன.

வேத, ராமாயண, மகாபாரத மற்றும் புராணங்களில், ஆதி, மத்ய, அந்த்யத்தில் விஷ்ணு ஸ்துதியே வந்திருக்கிறது என்பதை ஹரிவம்சம் சொல்கிறது.

வேதே ராமாயணே சைவ புராணே பாரதே ததா |
ஆதாவந்த்யேச மத்யேச விஷ்ணு: ஸர்வத்ர கீயதே ||

கர்னாடகத்தில் விஷ்ணு, விஷ்ணு பக்தி, வைஷ்ணவ தர்ம, பாகவத தர்ம இவை மிகவும் பழங்காலத்திலிருந்தே இருப்பதாக கல்வெட்டுகள் சொல்கின்றன. பின் வந்த ராமானுஜாசார்யர், ஸ்ரீமன் மத்வாசார்யர் இவர்களால் இன்னும் பலமடங்கு இவை பெருகி வளர்ந்தன. பகவந்தன் பாகவதர்களை காப்பாற்றுகிறான். தன் மனைவியான லட்சுமிக்கும் தெரியாமல், ஓடோடி வந்து அவர்களுக்கு அருள்கிறான். இதே விஷயத்தையே ஹரிபக்திஸாரத்தில் இந்த பத்யம் சொல்கிறது.

ஸாகரன மகளரியதந்தெ ஸ
ராகதலி சம்பரிஸுரிஹ வு
த்யோகவேனு நிமித்த காரணவில்ல லோகதலி |
பாகவதராதவர ஸலஹுவ
நாகி சஞ்சரிஸுவுது ஈ பவ
சாகரதி முளுகிஸதெ ரக்ஷிஸு நம்மனனவரத ||

தம் சாதனைகளில் ஈடுபட்டிருந்த கனகதாஸர், பரமாத்மனிடம் எவ்வகையாக பக்தியைக் கொண்டிருந்தார் என்பதை அவரது கீர்த்தனைகள் மற்றும் ஹரிபக்திஸார இவற்றிலிருந்து நாம் அறியலாம்.

பாகவதத்தில் பக்தி கொண்டிருக்கும் அவர், அதன் செய்திகளை அங்கங்கு விவரித்துள்ளார். பாகவதத்தில் பக்தியை ஒன்பது விதமாக சொல்லியிருக்கின்றனர்.

ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம் ச

இந்த பாகவத ஸ்லோகத்தை அப்படியே மொழி பெயர்த்திருப்பதைப் போல கனகதாஸர் ஹரிபக்திஸார இந்த பத்யத்தில் சொல்கிறார்.

கேளுவுது ஹரிகதெய கேளலு
ஹேளுவுது ஹரிபக்தி மனதலி
தாளுவுது ஹிரிதாகி நின்னய சரணஸேவெயலி |
ஊளிகவ மாடுவுது விஷயவ
ஹுளுவுது நிஜமுக்திகாந்திய
நாளுவுது க்ருபெமாடி ரக்ஷிஸு நம்ம அனவரத ||102

கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் ஆகிய தன் இந்திரியங்களை அடக்காமல், ஒருவன் தன் ஜீவன சாதனைகளை செய்யப் புறப்பட்டால், அந்த சாதனைகள் முழுமையடையாது. பிரம்மரிஷி

ஆவதற்குப் புறப்பட்ட விஷ்வாமித்ரர், இந்திரியத்தைக் கட்டுப் படுத்தமுடியாமல் சம்சாரத்தில் விழுந்தார் என பார்க்கிறோம்.

ஸ்ரேயாம்ஸி பஹு விக்னானி.

நற்காரியங்களை செய்யப் புறப்பட்டால், பல தடங்கல்கள் வரும் என்பது வாக்கு. இதை கனகதாஸரும் அறிந்திருந்ததால், இன்னொரு பத்யத்தின் மூலமாக இதை நமக்கு விளக்குகிறார்.

எஞ்சலெஞ்சலு எம்பரா நுடி
எஞ்சலல்லவெ வாரி ஜலஜர
தெஞ்சலல்லவெ ஹாலு கர்வின எஞ்சலெனிஸிரதெ |
எஞ்சலெல்லியதெல்லியும் பர
ரெஞ்சலல்லதெ பேரெ பாவிஸ
லெஞ்சலாண்டெ தேவ ரக்ஷிஸு நம்ம அனவரத ||

பக்தி ஒன்றே ஆனாலும், அதை பல விதமாக வெளிப்படுத்தலாம் என்று சொல்கின்றனர். அதாவது,

* பரமாத்மனின் குண மஹாத்ம்யங்களில் ஈடுபாடு
* அவனின் ரூபத்தில் ஈடுபாடு
* அவனின் பூஜையில் ஈடுபாடு
* அவனின் ஸ்மரணையில் ஈடுபாடு
* அவனின் தியானத்தில் ஈடுபாடு
* அவனின் நட்பைப் பேணுவதில் ஈடுபாடு
* அவனின் வாத்ஸல்யத்தைப் பெறுவதில் ஈடுபாடு
* அவனின் மனைவியைப் போல நினைத்து அவனைப் போற்றுவதில் ஈடுபாடு
* அவனுக்கு தன்னையே அர்ப்பித்துக் கொள்வதில் அதாவது ஆத்ம நிவேதனையில் ஈடுபாடு

என பல விதங்களில் பரமாத்மன் மேல் நாம் வைத்திருக்கும் அன்பு, பக்தியை வெளிப்படுத்தலாம். அமலா பக்திஸ்ச தத் சாதனம் என்று ஸ்ரீவியாஸராயர் கூறியதைப் போல பக்தியையே தன்

வாழ்க்கையின் சாதனமாக்கி வாழ்ந்து வந்தவர் கனகதாஸர். தனக்குக் கிடைத்த செல்வம், தன் மனம், உடல் என தன்னுடைய அனைத்தையும் பரமாத்மனுக்கே அர்ப்பணம் செய்து வெறும் 'தாஸோஹம்' என்று வாழ்ந்தவர். இதையே ஒரு பத்யமாகவும் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீமதுத்ஸஹதேவனுத ஸ்ரீ
ராம நின்னய சரணசேவக
ப்ரேமதிந்த சாஷ்டாங்கவெரகியெ மாள்பெ பின்னபவ |
ஈ மஹிமெயொளீவரெகெ நாவு சு
க்ஷேமிகளு நின்னய பதாப்ஜ
க்ஷேம வார்த்தெயனருஹி ரக்ஷிஸு நம்மனனவரத ||

இத்தகைய பகவந்தனின் செய்யும் பக்தியில் அவர் தனது லௌகிக மற்றும் வைதிக வியாபாரங்களை முழுவதுமாக துறந்து, பகவந்தனிடம் தாஸ்ய பாவத்துடன், வேண்டிக் கொள்கிறார். அவனின் குணகானங்களை செய்கிறார். இப்படியாக பாடும்போது, விஷ்ணுவின் அவதாரங்கள் அனைத்தையும் ஒன்றே என்று ஐக்ய பாவத்தில் சிந்தித்து, இவ்வாறு பாடுகிறார்.

க்ஷீரவாரிதிஷயன ஷாந்தா
கார விவித விசார கோபி
ஜார நவனீதசோர சக்ராதார பவதூர
மாரபித குணஹார ஸரஸா
கார ரிபுஸம்ஹார தும்பரு
நாரத ப்ரிய வரத ரக்ஷிஸு நம்மனனவரத ||

கிருஷ்ணனைப் பற்றிய இந்த பத்யத்தைப் போல ஸ்ரீராமனைக் குறித்த மற்றொரு பத்யமும் உள்ளது.

தாமரஸதள நயன பார்க்கவ
ராம ஹலதரராம தஷரத
ராம மேகஷ்யாம சத்குணதாம நிஸ்ஸீம |
ஸாமகான ப்ரேம காஞ்சன

தாமதர ஸுத்ராமவினமித
நாம ரவிகுலஸோம ரக்ஷிஸு நம்ம அனவரத ||

இப்படியாக பகவந்தனின் முன் நின்று அவனின் குண கானங்களைப் பாடுகிறார். கோபிஜார, நவனீதசோர என்றும், சத்குணதாம, நிஸ்ஸீம என்றும் புகழ்கிறார். அவனை மறப்பது ஒன்றே நம் பிரச்னைகளுக்கெல்லாம் காரணம் என்று கூறுகிறார்.

பக்தி பிரபஞ்சத்தில் கோபியர்களுக்கு மிகவும் முக்கியமான இடம் இருக்கிறது. பாகவதத்தில், ஸ்ரீகிருஷ்ணனே கோபியர்களைப் பற்றி, அவர்களின் பக்தியைப் பற்றி, அவர்கள் மேல் தான் வைத்திருக்கும் விசேஷ மரியாதையைப் பற்றி சொல்லியிருக்கிறார். அந்த கோபியர் கிருஷ்ணனை தம் உயிர் என்றே நினைத்து, அனைத்து லௌகிக சம்பந்தங்களை துறந்து, அவனையே ஆராத்ய தெய்வம் என்று நினைத்து, அவனே சர்வஸ்ரேஷ்ட பரமாத்மன் என்று மனதில் நிரந்தரமாக தியானம் செய்கின்றனர் என்று ஸ்ரீகிருஷ்ணனே சொல்கிறார். இந்த கிருஷ்ணனை கனகதாஸரும், பரமாத்மன் என்றே பாடுகிறார்.

வேதகோசர வேணு நாத வி
நோத மந்தர ஷைலதர மது
ஸூதனாச்யுத கம்ஸதானவரிபு மஹாமஹிம |
யாதவேந்திர யஷோதெனந்தன
நாதபிந்து களாதிஷய ப்ர
ஹ்லாதரக்ஷக வரத ரக்ஷிஸு நம்ம அனவரத ||

கிருஷ்ணாவதாரம், ராமாவதாரம், ந்ருசிம்ஹாவதாரம், வராஹ அவதாரம் ஆகிய பல அவதாரங்களில் பரமாத்மன் தன் பக்தர்களை காத்த சங்கதிகளை, கனகதாஸர் விவரித்து, அவர்களை காத்ததைப் போலவே, நம்மையும் காப்பாயாக என்று வேண்டிக் கொள்கிறார்.

தன் காம கிரோத அபிமான ஆகியவற்றை துறந்து, நித்யமான தாஸ்ய பாவத்தைக் காட்டி, அதன் மூலம் தன்னை காக்குமாறு வேண்டுகிறார்.

தீன நானு சமஸ்த லோகக்கெ
தானி நீனு விசாரிஸலு மதி
ஹீன நானு மஹாமஹிமெ கைவல்பபதி நீனு |
ஏனுபல்லெனு நானு நெரெ ஸு
க்ஞான மூர்த்தி நீனு நின்ன ஸ
மானருண்டே தேவ ரக்ஷிஸு நம்மனனவரத ||

நாம் எந்த வேலையை செய்தாலும், அப்போது பகவந்தனின் குணங்களைக் கேட்டவாறும், கீர்த்தனை செய்தவாறும் இருக்க வேண்டும். பின் அந்த வேலைகளை அவனின் சேவையென்றே நினைத்து, அவனுக்கே அர்ப்பிக்க வேண்டும். இதையே நாரதர் 'லோகேऽபி பகவத்குண ஸ்ரவண கீர்த்தனாத்' என்று கூறியிருக்கிறார். கனகதாஸரும் இதே கருத்தை தன் ஒரு பத்யத்தில் இவ்வாறு கூறுகிறார்.

அளிவ ஒடலனு நெஜ்ஜி விஷயங்
களிகெ காதுரனாகி மிகெ கள
வளிஸி காலன பளிகெ ஹங்கிகனாகி பாளுவரெ |
திளிது மனதொளு நின்ன நாமா
வளிய ஜிஹ்வெகெ தந்து பாபவ
களெத பதுகி லேஸு ரக்ஷிஸு நம்ம அனவரத ||

கனகதாஸர், பரமாத்மனின் இருப்பை எல்லா பத்யங்களிலும் சொல்லியவாறு, நம் வாழ்க்கையின் தற்காலிக தன்மையையும் சொல்லி, மங்களம் செய்கிறார்.

மங்களம் சர்வாதிபூதகெ
மங்களம் சர்வவனு பொரெவகெ
மங்களம் தன்மொளகெ லோகவ லயிஸிகொம்பவகெ |
மங்களம் சர்வஸ்வதந்த்ரகெ

மங்களம் சத்யஸ்வரூபகெ
மங்களம் சிரிகொடெய சென்னிகராய கேஶவகெ ||

ஹரிபக்தர்களின் பக்தியின் சாதனைக்கு, ஹரிபக்திஸாரம் ஒரு கைவிளக்கைப் போல உதவுகிறது. பக்தி ரசகங்கையின் பிரவாகம் நம் சாதனைக்கு அற்புதமாக உதவுகிறது.

***

17. ஸ்ரீவ்யாஸராயர், ஸ்ரீபுரந்தரதாஸர் & ஸ்ரீகனகதாஸர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ உடுப

பாரதீயர்களின் பண்பாடு தொடர்ந்து வாழ்ந்து வருவதற்கு பக்தியே அதன் முதுகெலும்பாக இருக்கிறது. லௌகிக ஜீவனத்தில் பக்தி என்பது ஒரு மனிதனுக்கு, மனதில் அமைதியையும், நிம்மதியையும் தருவதாக இருக்கிறது. பாரலௌகிக திருஷ்டியில், பக்தி என்பது மனிதனை பகவந்தனின் அருகில் அழைத்துக் கொண்டு போகும் ஒரு கைவிளக்காக இருக்கிறது. ஆகையாலேயே பாரதீய ஸந்தர்கள் அனைவரும் பக்தியையே பின்பற்றி, அதனை பரப்பும் விதங்களில் ஈடுபட்டனர். நம் இதயத்தில் இருக்கும் கதவை பக்தியினால் திறந்து, உள்ளே இருக்கும் பகவந்தனை தரிசிக்க, அவனுடன் பேச முற்பட்டனர்.

ஸ்ரவண, கீர்த்தன இத்யாதி நவவித பக்தி மார்க்கங்களை பாகவதம் விளக்குகிறது. வங்காளத்தில் ஒரு காலத்தில் முக்கியமாக வளர்ந்து வந்த சைதன்ய மதமானது, பக்தியை ஒரு ரசமாக, சுவையாகவே பார்த்து வந்தது. ஷாந்த, தாஸ்ய, சக்ய, மதுர மற்றும் வாத்ஸல்ய என்னும் பஞ்சபாவங்களில் இந்த பக்தியை கண்டுகொண்ட இந்த மதத்தவர், இவற்றில் 'மதுர' பாவத்தையே பின்பற்றத் துவங்கினர்.

தென்னிந்தியாவில் சுமார் 12ம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி என்னும் விளக்கு, கர்னாடக ஹரிதாஸர்களின் கையில் பிரகாசமாக எரியும் விளக்காயிற்று. இதன் வெளிச்சத்தில் ஹரிதாஸர்கள் தங்களின் அக, புறங்களை கண்டுகொண்டனர். இந்த லௌகிக ஜீவனத்திலிருந்து, பாரமார்த்திக என்னும் உயரத்திற்கு செல்லும் வழியை கண்டுபிடித்தனர். இப்படி செய்யும்போது, கன்னட ஸாகித்யம் என்னும் கடலுக்கு, பக்தி ஸாகித்யத்தின் கீர்த்தனை, ஸுளாதி, உகாபோக முதலான ஆகிய நதிகள் வந்து சேருமாறு செய்தனர்.

வேத, உபநிஷத்களில் இருக்கும் ஆழமான தத்வங்களை, சாமான்ய மக்களுக்கு போய் சேரும் வகையில் சுகமுனிவர்

பாகவதத்தை இயற்றினார். இதைப் போலவே, ஹரிதாஸர்கள் தெளிவான சுலபமான கன்னடத்தில், பத பத்யங்களில் இயற்றினர். ஆழ்வார்கள் ஸ்ரீ ராமானுஜரின் விஸிஷ்டாத்வைத தத்வங்களை தமிழ்நாட்டின் ஒவ்வொரு பக்தர்களிடமும் கொண்டு சேர்த்ததைப் போல, கர்னாடகத்தின் ஹரிதாஸர்கள், மத்வாசார்யரின் த்வைத ஸித்தாந்தத்தை, கன்னட மக்களின் மனதிற்குக் கொண்டு போகும் சேர்க்கும் வேலையை செய்தனர். பண்டிதர்களிடம் இருந்த பிறருக்குக் கிடைக்காத ஸாகித்யத்தை, 12ம் நூற்றாண்டில் சிவசரணர்கள் செய்ததைப் போல, சாமான்யரின் அருகில் கொண்டு சேர்க்கும் வேலை செய்தனர்.

கர்னாடகத்தில் ஹரிதாஸ பரம்பரை, மத்வாசார்யரிடமிருந்தே துவங்கியது என்று நம்புபவர்கள் இருக்கின்றனர். ஆனால், ஸ்ரீபாதராயரே இந்த பரம்பரையின் நாயகனாக இருந்தார் என்பது வித்வாம்ஸர்களின் கருத்து. ஸ்ரீபாதராயரின், ஸன்யாசி ஸிஷ்யரான ஸ்ரீவியாஸராயர், ஹரிதாஸ பரம்பரை மேன்மேலும் வளர்வதற்கு முக்கிய காரணராக இருந்தார் என்பது வரலாற்று உண்மை.

நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே வியாஸயோகினே |
நம: புரந்தரார்யாய விஜயார்யாய தே நம: ||

என்னும் ஸ்லோகத்தில், தாஸ பரம்பரையின் தூண்களான ஸ்ரீபாதராஜர், வியாஸராயர், புரந்தரதாஸர் மற்றும் விஜயதாஸர்களின் பெயர்களை பார்க்கிறோம். இந்த பரம்பரையை துவக்குவதற்கு வித்திட்ட ஸ்ரீபாதராயர் அதனை முன்னெடுக்கும் பொறுப்பை ஸ்ரீவியாஸராயரிடம் கொடுத்தார். அந்த பரம்பரையின் கடிவாளத்தை கையில் பிடித்து, அதனை சாமர்த்தியமாக நடத்தியவர் ஸ்ரீவியாஸராயர். அதனை மக்களுக்கு பிடிக்குமாறு கீர்த்தனைகளை இயற்றி அவர்களிடம் கொண்டு சேர்த்தவர் புரந்தரதாஸர். சிறிது ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்த பரம்பரையை மீட்டெடுத்தவர் ஸ்ரீவிஜயதாஸர். ஆக, இந்த நால்வரை வணங்கும் விதமாக இந்த ஸ்லோகம் அமைந்திருக்கிறது.

ஸ்ரீவியாஸராயரிடம் பாண்டித்யத்துடன், ஹரிதாஸர்களிடம் இருக்க வேண்டிய பாவங்கள் இருந்தன என்பதற்கு அவரது ஸிஷ்ய வாத்ஸல்யமே சாட்சி. மக்களுடன் கலக்க வேண்டிய அவசியம் அவருக்கு இருந்திருக்கவில்லை. விஜயநகர அரசனான கிருஷ்ணதேவராயருக்கு குருவாக இருந்து, அவரிடமிருந்து பல விருதுகளைப் பெற்றவர் ஸ்ரீவியாஸராயர். ஆன்மிக, சமூக விவகாரங்கள் என இந்த இரண்டிலும் தன் ஆளுமையைக் காட்டிய மிக அபூர்வமான சக்தி ஸ்ரீவியாஸராயருடையது.

ஆனாலும், அந்த புகழின் மயக்கத்தில் அவர் இருக்கவில்லை. பாண்டித்யத்தின் உச்சியில் அமர்ந்து, கீழே இருப்பவர்களை மறக்கும்படியாக அவர் இருந்ததில்லை. பக்தியை சாமான்யரின் மனதிலும் கொண்டு வரவேண்டுமென்ற பகீரத சபதம் ஏற்றார். அவருக்கு பிறரின் ஜாதி, அந்தஸ்து முக்கியமாக இருந்திருக்கவில்லை. தகுதி மட்டுமே அவர் பார்த்தார். ஆகையாலேயே அவர், பண்டிதரும் அல்லாத வைதிகரும் அல்லாத புரந்தரதாஸரை தம் ஸிஷ்யராக ஏற்றுக் கொண்டார். அது மட்டுமல்ல, அவரது மகிமையை, தம் நெஞ்சார புகழ்ந்து கொண்டாடினார்.

ஜாதியில் இடையனாக இருந்த கனகதாஸரின் புகழ், ஆளுமைகளை உணர்ந்து, அவருக்கும் தன் கருணை மழையை பொழிந்தார். ஆசாரம், மடி ஆகியவற்றால் கட்டுப்பட்டிருந்த அந்த காலத்தில், ஸ்ரீவியாஸராயரின் இந்த செயல் ஒரு புரட்சி என்றே சொல்லலாம். அவரின் தொலை நோக்குப் பார்வை ஆகியவற்றை பார்த்தால், நாம் வியக்கிறோம், மெய்மறக்கிறோம்.

வியாஸராயர், சம்ஸ்கிருத, கன்னட என இரு மொழிகளிலும் கிரந்த ரசனை செய்திருக்கிறார். நியாயாம்ருத, தர்க்கதாண்டவ, தாத்பர்ய சந்திரிகா ஆகியவற்றை இயற்றி கஷ்டமான தத்வங்களை சாமான்யருக்கும் அர்த்தமாகுமாறு விவரிக்க முயற்சி செய்தார். இதைத் தவிர, உண்மையான ஸன்யாசிக்கு இருக்கவேண்டிய மக்களிடம் அன்பு, அவர்களின் சுகத்தை விரும்புதல் ஆகியவற்றையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அவரது ஸிஷ்யர்களில் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர், கோவிந்த ஒடெயர், நாராயண யதிகள் முதலான மிகச்சிறந்த பண்டிதர்கள் இருந்தனர். புரந்தரதாஸர், கனகதாஸர், வைகுண்ட தாஸர் முதலான ஹரிதாஸர்களும் இருந்தனர். வியாஸகூட, தாஸகூட என்னும் இந்த இரு குழுவும், அவரிடம் நன்றாக விஷயங்களை கற்றுக் கொண்டு, ஞான மற்றும் பக்திகளின் அர்த்த, மஹாத்ம்யங்களை ஒருவருக்கொருவர் சரியாகப் புரிந்து கொண்டு, அவரவர்கள் சிறந்த ஆளுமைகளாவதற்கு வழி கோலியவர் ஸ்ரீவியாஸராயர்.

இப்படியாக அவரது கவனம் பண்டிதர்கள் மேல் இருந்தது என்றாலும், சாமான்யர்களின் பிரதிநிதியாக இருந்த தாஸர்கள் மேலும் இருந்தது. முக்கியமாக புரந்தரதாஸர், கனகதாஸர் மேல் வியாஸராயர் காட்டிய கருணை, ஹரிதாஸ ஸாகித்ய வரலாற்றில் கண்டிப்பாக எழுதப்படவேண்டிய சங்கதி. புரந்தர தாஸரைக் குறித்தான புகழ் பெற்ற பாடல் ஒன்றில் 'தாஸரெந்தரே புரந்தர தாஸரய்யா' என்று அவர் தம் மனதார புகழ்ந்திருப்பதை பார்த்தால், பக்தி பரம்பரையின் மேல் அவர் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு சாட்சி நமக்குப் புரிகிறது. அவரின்படி புரந்தரதாஸர் உண்மையான தாஸர். ஏனெனில்:

நீதியெல்லவனரிது நிகமவேத்யன நித்ய
மாதுமாதிகெ பிடதெ வர்ணிஸுதலி
கீத நர்த்தனதி ஸ்ரீகிருஷ்ண பூஜிஸுத
பூதாத்மதாஸ புரந்தரதாஸரய்யா ||

இப்படியாக, புரந்தரதாஸரைப் பற்றிய தம் கருத்தை சொல்வதுடன், உண்மையான ஹரிதாஸருக்கு இருக்க வேண்டிய குணங்களை பட்டியலிடுகிறார் ஸ்ரீவியாஸராயர். விதிகளை அறிந்து, பக்தி கொண்டு, கீத நர்த்தனங்கள் மூலமாக பகவந்தனின் ஆராதனை, இவை அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் அக/புற தூய்மை இவை அனைத்தும் ஹரிதாஸர்களுக்கு இருக்கவேண்டிய குணங்கள் என்று சொல்கிறார்.

புரந்தரதாஸரைப் போலவே அவருக்கு ப்ரியமான இன்னொரு ஸிஷ்யர் கனகதாஸர். கனக புரந்தரர்கள் இருவரும் தாஸ ஸாகித்யத்தின் அஸ்வினி தேவதைகள் என்று அனைவரும் சொல்வது வழக்கம். கனகர் வெறும் தாஸரல்ல. கவிஞரும் கூட. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வந்த கனகதாஸர், வியாஸ ராயரின் பரம ஸிஷ்யர் ஆனார். புரந்தரதாஸரின் நெருங்கிய நண்பர் ஆனார். தாஸஸ்ரேஷ்டர் எனப்பட்டார். இது கனகதாஸரின் பெருமைகளை சொல்வதோடு மட்டுமல்லாமல், தாஸகூடத்தின் விசாலமான மனோதர்மத்தையும் விளக்குகிறது.

கனகதாஸன மேலெ தய மாடலு வியாஸ
முனி மடத ஜனரெல்ல தூரிகொம்புவரோ ||

என்று தொடங்கும் புரந்தரதாஸரின் கீர்த்தனையில் வியாஸராயர் கனகர் மேல் வைத்திருந்த அன்பு, மடத்தவர் அவரிடம் காட்டிய சிறுமை ஆகியவை தெரிகிறது. கனகதாஸரின் கதையில் வரும் ‘வாழைப்பழ சம்பவம்’ இந்தப் பாடலில் வருகிறது. வியாஸ ராயரின் மூடிய கையில் இருந்தது, தேவரமூர்த்தி என்று சரியாகச் சொன்னது கனகர் மட்டுமே என்னும் குறிப்பும் இந்தப் பாடலில் இருக்கிறது. கனகரின் மகிமையை முக்கியமாக சொல்லும் இந்த பாடலில், குருவான வியாஸராயரின் கருணை கொண்ட மனமும் நன்றாக புரிகிறது.

அன்பாக இருக்கும் குருவிடம் ஸிஷ்யர்கள் மிகவும் பக்தி கொண்டிருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. புரந்தரதாஸர் தம்முடைய பற்பல கிருதிகளில் நேரடியாகவோ, குறிப்பாகவோ வியாஸராயரை போற்றுகிறார். ஆனால் கனகதாஸர் தமது கிருதிகளில் எங்கும் வியாஸராயரைக் குறித்து பாடவில்லை என்பதும் சிறிது ஆச்சரியமான விஷயமே. மேலே கூறிய ‘கனகதாஸன மேலே தயமாடலு வியாஸ’ என்னும் பாடல், கனகதாஸர் இயற்றியதே என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

புரந்தரதாஸரின் வியாஸராய ஸுளாதி என்று பெயர் பெற்றிருக்கும் ஸுளாதியில்:

வியாஸராயர சரண கமல தருஷனவெனகெ
யேசு ஜன்மத ஸுக்ருத பலதி தொரகிதோ என்ன
ஸாஸிர குலகோடி பாவன்னவாயிது
ஸ்ரீஷன பஜிஸுவதகதிகாரி நானாதே
தோஷவிரஹிதனாத புரந்தர விட்டலன்ன
தாஸர கருணவு யெனம்யாலெ இரலாகி ||

என்று மிகவும் பக்தி பாவத்துடன் தம் குருவான வியாஸராயருக்கு தம் மரியாதையை தெரிவித்திருக்கிறார் புரந்தரதாஸர்.

குருகளான வியாஸராயரின் சாயல், கனக புரந்தரர்களின் பாடல்களில் வருவதொன்றும் வியப்பில்லை. தாஸரெந்தரெ புரந்தரதாஸரய்யா என்ற பாடலில் வியாஸராயர், தாஸர்களின் வேடம் பூண்டு மக்களை ஏமாற்றுபவர்களைப் பற்றி பாடியிருக்கிறார். வியாஸராயரைவிட, கனக புரந்தரர்கள் இருவரும் சமூகத்தை மிகவும் அருகில் இருந்து பார்த்தவர்கள். அதில் இருக்கும் சிறுமைத்தனம், ஏமாற்றுவது, கள்ளதனம் ஆகியவை இவர்கள் இருவருக்கும் நன்றாகவே தெரியும். ஆகையால், வியாஸராயரைவிட இவர்கள் இருவரும் சமூகத்தில் இருக்கும் ஏமாற்றுக்காரர்களை மிகவும் கடுமையாக சாடுகின்றனர்.

பாடகன தெரனந்தெ பதகளனு தா பொகளி
கூட ஜனரனு ஸந்தோஷபடிஸி
கூட நாமகளிட்டு கொட்டரியெ தானெனுத
பூடகவ மாடலவ ஹரிதாஸரே?

என்று வியாஸராயர் கேட்டால், புரந்தரதாஸர்

பூடகதனதல்லி பஹுள பகுதி மாடி
திடனீத ஸரியாரில்லெனிஸி
நாடக ஸ்த்ரீயந்தெ பயலு டம்பவ தோரி
ஊடத மார்க்கவ ஞானவில்லதெ

உதர வைராக்யவிது, நம்ம பதுபனாபனல்லி லேஷபகுதியில்லா என்கிறார்.

கனகதாஸரோ இன்னும் தெளிவாக, 'தீர்த்தவனு பிடிதவரெல்ல திரு நாமதாரிகளே? ஸார்த்தகவில்லதவரெல்ல பாகவதரே?' என்று கேட்கிறார்.

பட்டி நாமவ பளிது பாத்ரெ கையலி பிடிது
குட்டினலி ஜபிஸுவ குருதரியதெ
கெட்ட கூகனு கூடி ஹொட்டெயனு ஹொரெவந்த
ஹொட்டெகுடுமகளெல்ல பரம வைஷ்ணவரே?

என்று சமூகத்தில் இருக்கும் வஞ்சனைக்காரர்களை கடுமையாக வசை பாடுகிறார்.

இந்த மூன்று கீர்த்தனைகளிலும் இருக்கும் பொருள், மொழி, சந்தஸ்களில் இருக்கும் சாயல் நம்மை மிகவும் மகிழ்விக்கிறது. குரு வியாஸராயரின் சமூகப் பார்வையை ஸிஷ்யர்கள் இருவரும் மேலும் கடுமையாகக் கொண்டிருப்பது இந்த உதாரணங்களிலிருந்து நன்றாக தெரிகிறது.

ஹரிதாஸரானவர்கள் சமூகத்தின் உள்ளேயே இருக்க வேண்டியது அவசியம். சமூகத்தின் நன்மை, தீமைகளை கவனித்து, நல்லதின் பால் சமூகத்தினை நடத்தும் கடமை ஹரிதாஸர்களுக்கு இருக்கிறது. நீதியைப் பற்றி அறிந்திருத்தல், உலக வாழ்க்கையில் தர்மத்தின் இடம் ஆகியவற்றை, பக்தியின் மகத்துவத்தை, கீர்த்தனைகளின் மூலம் மட்டுமல்லாமல், தம் சொந்த வாழ்க்கையின் மூலமாகவும் மக்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியது தாஸரின் பொறுப்பாக இருந்தது.

வெவ்வேறு தரப்பட்ட மக்களுடன் பழகி, ஊர் ஊராக சுற்றித் திரிந்து, மக்களில் ஒன்றாகி, அவர்களுக்கு பக்தியின் சுவாரஸ்யத்தை தெரிவிப்பது தாஸர்களின் கடமை - என்று திரு. ராமசந்த்ரராவ் அவர்கள் தன் புத்தகத்தில் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீபுரந்தரதாஸர்,

ஸ்ரீகனகதாஸர் ஆகியோர் இந்த செயல்களை இப்படியே செய்தவர்கள். இந்த உலகத்தில் / சமூகத்தில் சேர்ந்து கொண்டு, இங்கு இருக்கும் சுக, துக்கங்களின் பாக்கியங்களையே நித்ய அநித்ய என்று நினைக்கும் மக்களின் நடுவிலேயே வாழ்ந்து, அவர்களை ஒரு புறம் இருக்கும் ஸத்தியத்தின் பக்கம் திருப்பும் செயல் சுலபம் அல்ல. வ்யாஸராஜரே தமது ஒரு கீர்த்தனையில் இவ்வாறு சொல்கிறார்.

மாயெயெம்ப துஷ்டராய
மானவெம்ப பினுகு மந்த்ரி
இந்த்ரியகளெம்ப திருதோடுவ பரிவார ....

இத்தகைய சூழலில் தவிக்கும் மக்களைக் கண்டு கவலைப்படுகிறார். இத்தகைய மக்களைக் குறித்தே, ஸ்ரீபுரந்தரதாஸர் 'மானவ ஜன்ம தொட்டது, இதஹானிமாடலி பேட ஹுச்சப்பகளிரா' என்று எச்சரிக்கைக் குரலை கொடுக்கிறார்.

கண்ணு கை கால் கிவி நாலிகெ இரலிக்கெ
மண்ணு முக்கி மரளாகுவரெ?
ஹெண்ணு மண்ணிகாகி ஹரிய நாமாம்ருத
உண்ணதெ உபவாஸ இருவரெ கோடி? ||

காலன தூதரு கால் பிடிதெளெவாக
தாளு தாளெந்தரெ தாளுவரெ?
தாளிபாரத முன்ன தர்மவ களிஸிரோ
ஸுள்ளின ஸம்ஸார ஸுளிகெ ஸிக்கலு பேடி ||

ஸ்ரீகனகதாஸரும் தமது ஏராளமான க்ருதிகளில் இவ்வாறான எச்சரிக்கையை கொடுக்கும் செயலை செய்திருப்பதை நாம் பார்க்கலாம். உதாரணத்திற்கு:

கட்டலில்ல பிச்சலில்ல கஷ்டபட்டு பாளலில்ல
ஸுட்டு ஸுட்டு ஸுண்ணதரளு ஆயிதீ காய
பிட்டு ஹோகுவாக தொட்ட பட்டெ நினகெ ஹொந்தலில்ல

த்ருஷ்டினோட கட்டகடெகெ பட்டெபயலாகுதிதெ |
கருவதோரி நிந்த நீனு பரிதெ கால களிதெ முந்
தரிது நோடு நரர தனுவு தொரகலரியது ||

அபூர்வமாக கிடைத்த மனித சரீரத்தின் அனைத்து ஸாமர்த்ய ஸாத்யங்களையும் மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இதற்கு வரும் தடைகள் ஏராளம். நம் அந்தரங்கத்தின் உள்ளே நம் எதிரிகள் சூழ்ந்திருக்கிறார்கள். ஞானரத்னத்தை பறிப்பதற்காக அங்கிருக்கும் திருடர்கள் அவர்கள். ஆகையால், புத்திசாலியானவன் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அந்தர்வஸந்தி ஷட் சோரா: துர்ஜயா லோக விஸ்ருதா
ஞான ரத்னாபஹாராய தஸ்மாத் ஜாக்ரத ||

மனிதன் தன் இச்சைகளை வெல்ல வேண்டும். மனைவி, மக்கள், சாம்சாரிக மோஹங்களை விடவேண்டும். அப்போதே வாழ்க்கையில் ஆத்யாத்மிக அனுபவங்களை பெற முடியும். இதுவே புரந்தர கனகர் இருவரின் அபிப்ராயமும்கூட. ஸ்ரீபுரந்தரதாஸர் இவ்வாறு கேட்கிறார்.

ஆரு ஹிதவரு நினகெ - மூரு மந்தியொளகெ
நாரியோ, தாருணியோ, பலுதனத ஸிரியோ?.

தாஸரின் இந்த கேள்விக்குப் பின்னால், சாம்சாரிக வாழ்க்கையின் மேல் அவர்களுக்கு இருந்த வெறுப்பு என்று நினைக்கக் கூடாது. புரந்தர, கனகர் - இவர்களும் சம்சாரிகளே. வ்யாஸகூடத்திற்கு சேர்ந்த யதிகள் அல்லர். ஆனால், வாழ்க்கையில் எதற்கு அதிக மதிப்பு கொடுக்க வேண்டும் என்னும் சிந்தனை, நித்ய அநித்யங்களை குறித்தான தாரதம்ய ஞானம் - இவற்றைப் பற்றி உலகத்து மக்களை எச்சரிப்பதே இவர்களின் வேலை. சாமான்யர்களான நாம், நம்முடைய இந்த நிலம் நமக்கு நிரந்தரம் என்று நினைக்கிறோம். ஆகையால் 'நாரி' , 'தாருணி' , 'ஸிரி' இந்த மூவரும் நம்முடைய தாஸர்களாக இருக்க வேண்டுமே

தவிர, நம் அரசர்களாக இல்லை (நம்மை ஆள்பவர்களாக இல்லை). இதே அர்த்தத்திலேயே கனகதாஸர், இவ்வாறு கூறுகிறார்.

ஹெண்ணு ஹொன்னு மண்ணு மூரு தன்னலித்து காணலில்ல
அண்ண தம்ம தாயி தந்தெ பயஸலாகது
அன்ன வஸ்த்ர போகியாகி தன்ன ஸுகவ காணலில்ல
மண்ணுபாலு ஆதமேலெ ஆரிகாஹோது ?

என்று மனிதனின் வாழ்க்கையில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். லௌகிக வாழ்க்கையில் மனிதனின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஶ்ரீபுரந்தரதாஸர் 'கேரு ஹண்ணினல்லி பீஜ ஸேரிதந்தெ ஸம்ஸாரதி மீரியாஸெ மாடதலெ' இருந்து 'ஈஸபேகு, இத்து ஜெயிஸபேகு' என்று போதிக்கிறார்.

***

வசனகாரர்களைப் போல, ஹரிதாஸர்களையும் தீவிரமாக வாட்டிய ஒரு விஷயம் என்னவென்றா, சமூக ஏற்றத்தாழ்வுகள். சங்கரர், ராமானுஜர், மத்வாசார்யார், காந்திஜி, அம்பேத்கர் இந்த அனைவரும் ஜாதியை ஒழிப்பதற்கு தத்தம் முயற்சிகளை செய்தாலும், அது மறுபடி வளர்ந்து கொண்டே வருகிறது. வ்யாஸராஜர் தம் ஸிஷ்ய வர்க்கத்தில் கனகதாஸரையும் சேர்த்துக் கொண்டபோது, பலருக்கு அதிருப்தியே ஏற்பட்டது. வ்யாஸராஜர் கனகதாஸரின் சிறப்பான வ்யக்தித்வத்தை காட்டிக் கொடுத்து, அனைவரின் வாயினை அடைத்தார். 'குல' என்னும் கற்பனையின் நிஜமான அர்த்தத்தை மக்களுக்கு போதிக்கும் வேலையை செய்ய வேண்டிய நிலைமை ஷிவசரணர்களின் காலத்தில் இருந்ததைப் போல, ஹரிதாஸர்களின் காலத்திலும் இருந்தது. புரந்தர கனகர்கள் இருவரும் குலங்களைப் பற்றி பாடியிருக்கின்றனர்.

'ஹொலய ஹொரகிஹனெ, ஊரொளகில்லவே?' என்று துவங்கும் ஶ்ரீபுரந்தரதாஸரின் கீர்த்தனையில் 'ஹொலய'

என்னும் பதம் ஜாதியை குறிப்பதல்ல, குணத்தை குறிக்கிறது என்பது தெளிவாகவே தெரிகிறது. அதன்படி, 'ஹேளித சாஸ்த்ரவன்னு திளியதவ' (ஆசார்யரின் சாஸ்திரங்களை அறியாதவன்), 'தானதர்மவ மாடதவ' (தான தர்மங்களை செய்யாதவன்), 'ஹுஸியாடுவவ' (பொய் பேசுபவன்), 'உண்டமனெகெரடு பெகெயுவவ' (உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்பவன்) என்னும் வார்த்தைகளை தொடுத்து, ஜாதி என்பது பிறந்ததிலிருந்து வந்ததல்ல என்பதை குறிக்கிறார். இதே விஷயத்தை மேலும் தீவிரமாக இவ்வாறு சொல்கிறார்.

ஹொலெய பந்தனெந்து ஒளகெ தேவர மாடி
கணகண கண்டெ பாரிஸுவரய்யா
தனுவின கோபவு ஹொலெயல்லவெ?
பரதன பரஸதி ஹொலெயல்லவெ ?
ஹொரகித்த ஹொலெயன ஒளகெ பச்சிட்டரெ
இதகெனோ மத்தோ புரந்தர விட்டலா?

என்று மடிவந்தர் என்று நினைத்துக் கொள்பவர்களின் மனதினை குத்தி, ஜாதி தத்வத்தைக் குறித்து மறுபரிசீலனை செய்விக்கிறார்.

பிறப்பிலிருந்து மேல்வர்க்கத்தை சேர்ந்தவரான ஸ்ரீபுரந்தர தாஸருக்கு, இந்த ஜாதி பத்ததியினால் ஆகும் கஷ்டங்களின் அனுபவங்கள் நேரடியாக வந்ததில்லை. ஆனால், ஸ்ரீகனக தாஸருக்கு இந்த அனுபவங்கள் ஏராளம். கீழ் மக்களை இந்த சமூகம் புறக்கணிக்கும் விதம் எப்படிப்பட்டது என்பது ஸ்ரீகனக தாஸருக்கு மிகவும் நன்றாக தெரிந்திருந்தது. இப்படிப்பட்ட மேல் / கீழ் ஜாதி / வர்க்கத்தவர்களின் ப்ரச்னைகளைக் குறித்து, ஸ்ரீகனக தாஸர், தனது ராமதான்யசரிதெ க்ருதியில் நன்றாக / தீவிரமாகவே வெளிப்படுத்தியிருப்பார். இந்த காவியத்தில் நாம் பார்க்கும் 'ராகி' , தலித் வர்க்கத்தவர்களின் கதையே ஆகும்.

தம் அனேக கீர்த்தனைகளில் ஸ்ரீகனகதாஸர் 'குல' விஷயத்தை தொட்டிருக்கிறார். இதன் பின்னே, தனது சொந்த அனுபவத்தின் நிலைகள் இருப்பினும், இந்த சமூகத்தை திருத்த வேண்டும்

என்னும் நல்லெண்ணமும் இருந்தது. 'குல குல குலவென்னு திஹரோ | குலவாதுது ஸத்யஜனரிகெ?' என்னும் கேள்வியில் இருக்கும் ஆழம் கவனிக்கத்தக்கது. தாமரை சேற்றில் பிறந்தாலும், பூஜைக்கு யோக்யமாகிறது. பசுவிடமிருந்து வரும் பாலினை பவித்ரம் என்று சொல்லி அனைவரும் பயனபடுத்துகின்றனர். அது மட்டுமல்ல. பராஷர, வஸிஷ்ட, நாரதர் முதலான புகழ்பெற்ற ரிஷிகள் பிறப்பில் ப்ராஹ்மணர்கள் அல்லர். என்று பல்வேறு உதாரணங்களின் மூலம் ஸ்ரீகனகதாஸர், ஒரு மனிதனுக்கு சிறப்பு வருவது பிறந்த குலத்தில் அல்ல. அந்த:கரண சுத்தியினால், ஆசாரத்தினால் என்பதை நிறுவுகிறார். ஆத்மன் எந்த குலம், ஜீவன் எந்த குலம்?, தத்வேந்த்ரியங்களின் குலம் எது?. இது வெறும் ஸ்ரீகனகதாஸரின் கேள்விகள் அல்ல. ஆதிகவி பம்ப ஆகியோரும், கர்ணன் மூலமாக இந்த கேள்விகளை கேட்டிருப்பதை நாம் பார்க்கலாம். ஆத்மா, ஜீவ, இந்த்ரியங்கள் ஆகியவை குலத்தின் கற்பனைக்கு மீறியவை. ஆகையால், தேகத்திற்கு மட்டும் ஜாதியின் ஏற்றத்தாழ்வுகளை சொல்வது சரியல்ல. இன்னொரு கீர்த்தனையில் ஸ்ரீகனகதாஸர் இவ்வாறு சொல்கிறார். 'யாதரவனெந்துஸுரலி, ஜகன்னாத மாடித ஒந்து நரரூபவய்ய' . இங்கும் குலத்தின் கற்பனையை குறித்தான வலி இருக்கிறது. தான் ஸ்வாமியின் மகன் 'ஜகன்னாதமடித ஒந்து நரரூப' என்று சொல்வதன் மூலம், தன் ஜாதி மானவ ஜாதி, பகவந்தனே தன் தந்தை, இவ்வாறு பிறப்பின் மூலம் 'கீழ்' ஆவதற்கு சாத்தியம் இல்லை - என்பதை திடமாக சொல்கிறார். 'ஈ தேஹதலி நீ நெலஸிரலு ஹொலெயுண்டே?' என்னும் வாக்கியமும் ஹரிபக்திஸாரத்தில் வருகிறது. பகவந்தனின் இருப்பிடமான தேகம், கீழாக ஆகாது என்பதை இங்கு நிறுவுகிறார்.

ஹரிதாஸ ஸாகித்யத்தின் அனைத்து பிரிவுகளிலும் பொதுவாக காணப்படும் ஒரு விஷயம் என்னவென்றால், ஆத்ம நிவேதனை, ஸ்தோத்ர, உபதேசம், தத்வ சிந்தனை ஆகிய விஷயங்களில் காணப்படும் பக்தி. 'ஹரி' என்னும் பராசக்தியில் இருக்கும் அசைக்க முடியாத ஸ்ரத்தை, அந்த சக்திக்கு தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் முழுமையான சமர்ப்பண பாவம்,

ஆகியவை ஹரிதாஸர்களின் அனைத்து க்ருதிகளிலும் காணப்படுகின்றன. வ்யாஸராஜ ஸ்வாமிகள் 'அந்தரங்கதலி ஹரிய காணதவ ஹுட்டு குருடனோ' என்று சொல்கிறார். 'ஹரிதாஸர ஸங்க, குருகருணெகளிகெ ப்ரதியில்ல' என்னும் நம்பிக்கை அவருடையது. 'ஹரிய ஹொஸரிந்த பதுகுவ தாஸ நானு, ஸிரிகிருஷ்ண தாஸர தாஸ நானு' என்று தன்னுடைய வினயத்தினை, தன் ஸிஷ்யர்களுக்கு சொல்லிக் கொள்கிறார்.

ஆளு நா நின்னளு நின்னாளு நானு
நீனு தந்தெ, நின்ன கந்த
ஷரண்ய நா நின்ன ஷரணாகதனு ....

என்று அஹங்கார, கர்வம் ஆகியவற்றை பக்தி என்னும் யக்ஞத்தில் ஆஹுதியைக் கொடுத்து, கிருஷ்ணார்ப்பணம் செய்கிறார். ஶ்ரீபுரந்தர, கனகதாஸர்களின் க்ருதிகளில் இந்த சிந்தனை (பாவம்) பல இடங்களில் தெளிவாக காணப்படுகிறது.

ஶ்ரீபுரந்தரதாஸர்:
நின்ன பாதாம்புருஹ பஜிஸுவுதெ ஸௌபாக்ய
நின்ன நிர்மால்யகளெ போகத்ரவ்ய
நின்ன கதெ கேளுவுதெ மங்கள ஸுவாத்யகளு
நின்னந்த அரஸெனெகெ புரந்தர விட்டலா ||

மற்றும்:
அனாதனு நானு பந்து நீனு
ஹீனனு நானு தயாவந்த நீனு
த்யானமந்த்ரனு நீனு த்யானிஸுவெனு நானு
ஞானகம்யனு நீனு அஞ்ஞானி நானு ||

என்றும் சொல்லி, பகவந்தனின் ஸர்வஜ்ஞத்வ, ஸர்வஷக்தித்வ, காருண்ய ஆகிய கல்யாண குணங்களையும், தம்மில் இருக்கும் அல்பஷக்தித்வ, அஸ்வாதந்த்ர்ய, ஆகியவற்றை சொல்லிக் கொள்கின்றனர். ஶ்ரீகனகதாஸரும்,

ஏனெந்து கொண்டாடி துதிஸலோ தேவ
நானேனு பல்லெ நின்னய மஹிமெ மாதவ
...
ஹரிமுகுந்தனு நீனு நரஜன்ம ஹுளு நானு
பரமாத்மனு நீனு பாமரனு நானு
கருடகமனனு நீனு மருளு பாபியு நானு
பரஞ்யோதியு நீனு திருகனு நானு ||

என்று பகவந்தனின் மகிமைகளை சொல்வதுடன், மனிதரான நம் குறைகளை சொல்லிக் கொள்கிறார். 'தாஸதாஸர மனெய தாஸியர மக நானு ஸாஸிர நாமதொடெய ரங்கய்யன மனெய' என்னும் பேச்சில் கனகதாஸர் காட்டும் பக்தியானது, ஶ்ரீவ்யாஸராஜர் கூறிய 'ஆளு நா நின்னாளு, நின்னாளு நானு' என்பதைவிட ஒரு அடி முன்னே செல்கிறது.

ஹரியானவன் விஶ்வவ்யாபகன் என்னும் ஸத்யத்தை ஹரிதாஸர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஶ்ரீவ்யாஸராஜர் தம் கீர்த்தனை ஒன்றில்:

எல்லி நீ நில்லிஸிதரெனகேனு பயவில்ல
பல்லெனோ விஶ்வவ்யாகனெம்புத

என்கிறார். ஶ்ரீபுரந்தரதாஸர் தமது கீர்த்தனை ஒன்றில் 'ஸகல க்ரஹபல நீனே ஸரஸிஜாக்ஷ; நிகில வ்யாபக நீனே விஶ்வரக்ஷ' என்று சொல்லி, பகவந்தன் கால, தேஶங்களுக்கு மீறியவன், உலகத்தின் அனைத்து நடவடிக்கைகளின் பின் ஸூத்ரதாரியாக இருப்பவன் என்பதை விளக்கியிருக்கிறார். காலதேஶங்களை வ்யாபித்து விராட ரூபியாக இருக்கும் பகவந்தன், பக்திக்கு மயங்கி, பக்தனின் ஹ்ருதய குகையில் நிலைத்தபோது, பக்தனுக்கு ஆகும் ஆனந்தம் அற்புதமே. இத்தகைய அனுபவத்தின் ப்ரவாஹத்திற்கு தம்மை ஈடுபடுத்திக்கொண்ட ஶ்ரீகனகதாஸர்:

பதுகிதெனு பதுகிதெனு பவ எனகெ ஹிங்கிது
பதுமனாபன பாததொலுமெ எனகாயிது

என்று அந்த:கரணத்துடன், தன்யன் என்று சொல்கிறார். இந்த அனுபவத்தின் துரீய ஸ்திதியின் முன், மற்ற எல்லா ஐஹிக விசாரங்களும் எதுவுமேயில்லை. மேலும்:

இந்தென்ன ஜீவக்கெ ஸகல ஸம்பதவாய்து
முந்தென்ன ஜன்ம ஸபலவாயிது
தந்தெ ஶ்ரீ காகினெலெயாதி கேஶவராய
பந்தென்ன ஹ்ருதயதலி நெலெயாகி நிந்த ||

உண்மையில் ஶ்ரீதாஸருக்கு 'இது பாக்ய' . இதைவிட வேறு பாக்யம் இல்லை.

இவ்வாறாக ஶ்ரீவ்யாஸராஜர், ஶ்ரீபுரந்தரதாஸர் மற்றும் ஶ்ரீகனகதாஸர்களின் ஒப்புமைக்கு சிக்கும் அனேக அம்சங்கள் இருக்கின்றன. மேற்கூறிய விஷயங்கள் இன்றி முக்கியமாக இன்னும் சொல்ல வேண்டியது, ஶ்ரீகிருஷ்ண லீலையைக் குறித்த க்ருதிகள். பாகவத 10ம் ஸ்கந்தத்தில் வரும் ஶ்ரீகிருஷ்ணனின் மனதை மயக்கும்படியான பாலலீலைகளை, ஹரிதாஸர்கள் அனைவரும் மிகவும் அற்புதமாக தம் கீர்த்தனைகளில் வர்ணித்திருக்கிறார்கள்.

ஶ்ரீவ்யாஸராஜர் - கண்ணிகெ கட்டிதந்திதெ, பண்ணத கொளல பாவிஸி நோடபாரதெ - என்னும் கீர்த்தனை; ஶ்ரீபுரந்தரதாஸரின் - ஆடிதனோ ரங்க அத்புததிந்தலி காளிங்கன பணியலி - என்னும் க்ருதி; ஸையவே இது ஸையெ கோபி | ஸையெ கோபி நின்ன மகனிகெ ஒள்ளெபுத்திகலிஸிதெ நோடு' என்னும் கோபியரின் கோள்மூட்டுதலைப் போல இருக்கும் ஶ்ரீகனகதாஸரின் கீர்த்தனை - ஆகியவை மிகவும் அற்புதமானவை. கிருஷ்ண லீலையைக் குறித்தான கீர்த்தனைகளுக்கு இவை வெறும் ஓரிரு உதாரணங்கள் மட்டுமே. ஶ்ரீபுரந்தரதாஸர் அளவிற்கு ஶ்ரீகனகதாஸர் அதிகமாக இத்தகைய கீர்த்தனைகளை இயற்றவில்லை. ஆனால் 'மோஹன தரங்கிணி' என்னும் காவியத்தையே இயற்றி ஶ்ரீகனகதாஸர், ஶ்ரீகிருஷ்ணனின் மகிமையை பரோக்ஷமாக மற்றும் ப்ரத்யக்ஷமாக வெளிப்படுத்தியிருக்கிறார். தம் காவியத்தின்

மகிமையை அவர் சொல்லும் விதமே தனி. அவர்படி, 'மோஹன தரங்கிணி' என்பது:

ஹரிஷரணரபெச்சு புதஜனரிகெ மெச்சு
துரிதவனகெ காள்கிச்சு
விரஹிகளிகெதெகிச்சு வீர்ர்கெ புச்சு கே
ள்வரிகிது தனிபெல்லதச்சு ||

கடைசியில் ஸ்ரீகனகதாஸர் ஒருவரைப் பற்றியே தனியாக சில விஷயங்களை சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. ஸ்ரீவ்யாஸராஜர் போற்றி வளர்த்த பக்தி என்னும் மரத்திற்கு, புரந்தர கனகர்கள் இருவரும் இரு முக்கிய கிளைகள். பக்தி ஸாஹித்யத்தின் வரலாற்றில் அவர்கள் இருவரின் பெயருக்கும் சமானமான கௌரவம் இருப்பது உண்மையே. ஆனால், ஸ்ரீபுரந்தரதாஸரைவிட ஸ்ரீகனகதாஸர் எவ்வளவோ விஷயத்தில் வேறுபட்டிருந்தார் என்னும் விஷயமும் உண்மையே. திரு.G.S.ஷிவருத்ரப்ப அவர்கள் சரியாகவே சொல்லியிருப்பதைப் போல, 'புரந்தரதாஸரின் கீர்த்தனைகளைவிட ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளில் காவ்யகுணம் ஒரு கைப்பிடி அதிகமாக இருப்பதைப் போலவே தோன்றுகிறது. அதற்குக் காரணம், ஸ்ரீகனக தாஸர் முக்கியமாக ஒரு கவி என்பதே. ஸ்ரீகனகதாஸரில் கண்டு வருவதான ஆச்சரியம், ஆராய்ச்சி, கற்பனைகள் என்பவை வேறு யாரிலும் அவ்வளவாக தெரிவதில்லை. தம் சம காலத்து ஹரி தாஸர்களைவிட வெறும் வேறாக தெரியுமாறு கீர்த்தனைகளை இயற்றாமல், காவ்யங்களையும் இயற்றி, பெரும் சேவை செய்திருக்கிறார் ஸ்ரீகனகதாஸர். அதிலும், 'ராமதான்ய சரிதெ' போன்றதான உருவக வகையிலான காவியத்தை ஸ்ரீகனகதாஸர் தம் காலத்தில் இயற்றியிருக்கிறார் என்பதை கவனிக்கும்போது, அவர் மேல் இன்னும் மரியாதை கூடுகிறது.

***

18. கனக ஸாஹித்யத்தில் பக்தி ஸ்வரூப

Prof. வஸந்த குஷ்டகி

ஸாஹித்யம் என்றால் வாழ்க்கையில் ஸ்ரத்தையை கொண்டு வருவதாகும். அனைத்தும் பரமாத்மனுடையதேயானாலும், அனைத்தும் அவனின் ப்ரேரணையினாலேயே நடந்தாலும், புருஷார்த்தத்திற்கு முக்கியத்துவத்தை கொடுத்து, வாழ்க்கையை மலரச் செய்வதே ஸாஹித்யம். நாட்டின் அனைத்து ஸாஹித்யங்களும் இதையே செய்கின்றன. அதிலும், கன்னட ஸாஹித்யம், இந்த விஷயத்தில் முன்னோடியாக நிற்கின்றன. ஏனெனில், கன்னட ஸாஹித்யத்தின் ஜீவ நதியாக பக்தி கங்கை இங்கு பாய்ந்ததே அதற்கு காரணம். விஸேஷமாக, ஷரணர்கள், தாஸர்கள் பக்தி ப்ரவாஹத்தை தத்தம் வாழ்நாளில் ப்ரவஹிக்குமாறு செய்தது மட்டுமல்லாமல், அவர்கள் தம் ஸாஹித்யத்தினால் மூன்று காலங்களிலும், பக்தியின் சக்தியை எப்போதும் ப்ரவஹிக்குமாறு செய்திருக்கிறார்கள்.

பரமாத்மனின் மேல் பக்தி வருவதற்கு, அவனின் தரிசனத்தைப் பெறுவதற்கு, இந்த ஸாஹித்யம் வந்திருக்கிறது. அந்தரங்கத்தில் த்ருப்தியை அடைந்து, மகிழ்ச்சியை கொடுப்பதில் இந்த ஸாஹித்யம் முக்கிய பங்கு வகிக்கிறது. கன்னட நாட்டில் ஷரணர்கள் பக்தி மார்க்கத்தில் அபாரமாக திகழ்ந்தனர். ஹரிதாஸர்கள் அதனை ஸங்கீதத்தின் வழியில் மேலும் சுலபமாக்கினர். இவர்கள் கூறும் பக்தி என்றால், அது பரமாத்மனில் பரம ப்ரீதி, ப்ரேமையே ஆகும். இதையே ஸத்ருட ஸ்னேஹ என்று ஒருவர் கூறினால், இன்னொருவர் அம்ருத ரூப, ஷாந்த ரூப என்றார். இந்த ஷாந்தரூபமே பரமானந்த ரூபம். இத்தகைய அபூர்வமான பக்தியின் வகைகளை ப்ரகலாதராஜர்:

ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம் ||

என்று ஒன்பது வகைகளை கூறினார். அவையெல்லாம் ஹரிதாஸ ஸாஹித்யத்தில் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன.

மிகவும் பக்தி மரியாதையுடன், ஸர்வ ஸமர்ப்பணைக்கு ப்ரேரணையாகி, பரமாத்ம தத்வத்தை திடம் செய்து, ஸான்னித்யத்தை கொடுக்கிறது. இந்த பக்தி மார்க்கத்தில் நிர்வஞ்சனை இல்லை. வாழும் கலையே இது. அனைத்தையும் பரமாத்மனின் தலையில் கட்டிவிட்டு அமைதியாக இருப்பதில்லை. தத்த ஸ்வாதந்த்ர்யத்தை பெற்று, ஸாதனை செய்வதேயாகும். இதையே புரந்தர கனகர்கள் செய்தனர். அதற்கு ஒரு உதாரணமாகவே திகழ்ந்தனர். இவர்கள் ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இரட்டையர்கள். மனித வாழ்க்கையின் சிறப்பினை கூறிய ஹரிதாஸர்கள். பக்தி மார்க்கத்தினால் பூமியையே வைகுண்டம் ஆக்கினார்கள். அதற்காக தாம் பெற்ற அனுபவங்கள் அனைத்தையும் கீர்த்தனைகள் ஆக்கினர்.

கனகதாஸர் வெறும் கீர்த்தன ஸாஹித்யத்தை படைத்ததுடன், பற்பல காவியங்களையும் இயற்றி கன்னட ஸாஹித்ய செல்வத்தை பெருக்கினார். அந்த காவியங்களிலும் பாகவத மனோதர்மமே முக்கிய விஷயமாக சொல்லப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். பாகவத மனோதர்மம் என்றால், ஹரிஹர்களில் பேதத்தை காண்பது. இந்த மனோதர்மத்தினால், பரந்த மனதை கொண்டவரான ஸ்ரீகனகதாஸர், காந்தி ஸாகரனான, நாத ஸாகரனான, அம்ருத ஸாகரனான, ஞான பல காருண்ய ஸாகரனான, ஷாந்தி ஸாகரனான பரமாத்மனை ஸாக்ஷாத்காரம் செய்து கொண்டார். இந்த நிலையை அடைவதற்கு அவர் செய்த ஸாதனை, பக்தியின் பற்பல ப்ரகாரங்களில் - விஸேஷமாக தாஸ்ய பக்தி, அர்ப்பணை பக்தியின் மூலம் அவர் செய்த சேவைகள் முக்கியமானவை. இந்த பாவங்களை நாம் அவரது அனைத்து ஸாஹித்ய க்ருதிகளில் கண்டாலும், அவருடைய கீர்த்தனைகள் மற்றும் ஹரிபக்திஸாரம் இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது.

கனகர், கனகதாஸர் ஆனபிறகு, இஹலோகத்தில் நிர்லிப்தமாக வாழும் கலையை தம் வாழ்க்கையின் மூலமே செய்து

காண்பித்தார். அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

ஸாகு ஸாஅகு மனுஜஸேவெயு ரங்கய்யா இன்னு ||ப

ஸாகு ஸாகு மனுஜஸேவெ
மாடி தணிது நொந்தெ நானு
பேகு நின்ன பாத பஜனெ லோகதொடெய ரங்கய்யா ||அப

ஹொத்தரெத்து போகி பரரசித்தவ்ருத்தியன்னெ அரிது
நித்யதல்லி ஹலவு கெலஸ ப்ருத்யனந்தெ மாடி ரிக்த
ஹஸ்ததிந்த மனெகெ ஸேருவெ அஸெகாகி |
மத்தெ கண்டகடெகெ தொலகுவெ பந்து அபர
ராத்ரியலி திந்து ஒரகுவெ ரங்கய்யரங்க ||1

ஸ்னானமௌன நித்யஸந்த்யான நேமகளனெ தொரெது
ஹீனனாகி கெட்டஜனர மனெகளன்னு திருகி திருகி
ஷ்வானனந்தெ தினவ களெவெனோ துராஸெயன்னு
மனதல்லிட்டுகொண்டு குதிவெனோ கொனெகூ எள்ளு கா
ளினஷ்டு ஸுகவ காணெனோ ரங்கய்யா ரங்க ||2

ஒடலினாஸெகாகி நொணவு துடுகி பித்த சோனினொளகெ
மிடுகுவந்தெ பாயபிடுவெ பிஸுருஹாக்ஷனெ
பிடிஸோ என்ன பந்தபாஷவா காகிநெலெயாதிகேஶவ
கொடிஸோ நின்ன பக்தர ஸங்கவ
ஒடெய வெங்கடாத்ரி மாதவ ரங்கய்ய ரங்க ||3

என்று, ஞானம் வராத முந்தைய நிலையில் பச்சாதபம் கொண்டு, மிகவும் பக்தியுடன் அந்தரங்க பரிசோதனையை செய்து கொள்கிறார். பிறகு, தாம் செய்த தவறை மற்றவர்கள் செய்யக் கூடாது என்றும், சமூகம் திருந்த வேண்டும் என்றும், அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்றும், தம் அனுபவங்களை கீர்த்தனைகள் மூலம் பகிர்ந்து கொண்டார். அவருடைய ஒரு கீர்த்தனை இவ்வாறு:

ஜபவ மாடிதரேனு தபவ மாடிதரேனு ||ப
கபடகுண விபரீத கலுஷவித்தவரு ||அப

ஆதிகுருவரியதெ அத்தலித்தலு தொளலி
வேதசாஸ்த்ரகளோதி பாயாரலு |
ஆதியனு காணதிந்திருத்தித்து ஹலவெண்டு
வாத தர்க்கதொளித்து பேதவாதிகளு ||1

நுடிநடெவ காலதலி தானதர்ம மாடதெ
அடவியொளு கெரெதும்பி பத்திதந்தெ
மடதிமக்களிகெந்து ஒடவெ வஸ்த்ரகளிஸெ
ஹிடியலா யமனவர கட்டிகொளகாகி ||2

சளிமளெ அதி காருகத்தலெயொளகித்து
இளிமுளுகி நதியொளகெ ஜபவமாடி
களவளிஸி நூரெண்டு தொளலி பளலபேட
நளினாக்ஷ ஆதிகேஶவன நெனெ மனவெ ||3

என்று வாழ்க்கையின் மர்மத்தை சொல்வதோடு மட்டுமின்றி, சுத்தமான நடவடிக்கைகளே பக்தி என்பதின் அடிப்படை என்பதை தெளிவுபடுத்துகிறார். இத்தகைய கீர்த்தனைகளில் இருக்கும் விஷயம், வாழ்க்கைக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இதைப் போல இன்னொரு அபூர்வமாக கீர்த்தனையையும் பார்க்கலாம்.

நானு நீனு என்னதிரு ஹீனமானவ ||ப
ஞானதிந்த நின்ன நீனே தினிது நோடெலோ ||அப

ஹெண்ணு ஹொன்னு மண்ணு மூரு நின்னதேனெலோ
அன்னதிந்த பந்த காய நின்னெதேனெலோ
கர்ணதிந்த பருவ கோஷ நின்னதேனெலோ
நின்ன பிட்டு போப தேஹ நின்னதேனெலோ ||1

ஹலவு ஜன்மதிந்த பந்திருவெ நீனெலோ
மலத கர்ப்பதலி நிந்திருவெ நீனெலோ

ஜலத தாரியலி பந்திருவெ நீனெலோ
குலவு ஜாதிகோத்ரவுள்ளவனு நீனெலோ ||2

கால கர்ம ஷீல நேம நின்னதேனெலோ
ஜாலவித்யெ பயலமாயெ நின்னதேனெலோ
கீலு ஜடித தோகல கொம்பெ நின்னதெனெலோ
லோல ஆதிகேஶவன்ன பக்தனாகெலோ ||3

இதில் இருக்கும் கருத்துகளின்படி, பக்தன் என்பவனுக்கு ஜாதி, மதங்கள் இல்லை. அவன் பக்தி மார்க்கத்தில் நடந்தால் போதும், அது அவனை பூர்ணத்வத்தின் பால் இழுத்துச் செல்லும்.

இத்தகைய கீர்த்தனைகளை படித்தால், பாடினால், இந்த பக்தி மார்க்கத்தில் இருக்கும் சிறப்புகள் தெரிந்தாலும், பச்சாதாபத்தின் பிடியில் நொந்து கஷ்டப்படாதவரை அது தெளிவாகாது. ஆகையால், வெறும் படிப்பின் முதல் பகுதியில் அது உள்ளிருக்கும் அறிவினை எழுப்புகிறது. அடுத்து, மேலும் படிப்பு என்னும் தீ எரிகையில் வெளிச்சம் வந்து நம்பிக்கை வருகிறது. இத்தைய க்ரியாசக்திகளை ஸாதகனில் கொண்டு வருவதற்கு, கனகர் சொல்லும் சமாதானம், கோடி ஸூர்யப்ரபையின் இந்த கீழ்க்கண்ட கீர்த்தனையில் இருக்கிறது.

தல்லணிஸதிரு கண்ட்யா தாளு மனவே-ஸ்வாமி
நில்லதலெ ரக்ஷிஸுவ ஸந்தேஹபேட ||ப

பெட்டதா துதியல்லி பெளெத வ்ருக்ஷங்களிகெ
கட்டெகட்டுத நீர ஹொய்தவராரு?
ஹுட்டிஸித ஸ்வாமி தா ஹொடெகாரனாத மேலே
கொட்டு ரக்ஸ்ஹிஸுவனு இதகெ ஸந்தேஹபேட ||1

அடவியொளகாடுவ ம்ருகஜாதி பக்ஷிகளிகெ
அடிகடிகெ ஆஹாரவித்தவரதாரு?
படெத ஜனனியந்தெ ஸாரதியாகி தா
பிடதெ ரக்ஷிஸுவனு இதகெ ஸந்தேஹபேட ||2

கல்லொளகெ புட்டிகூகுவ மண்டுகங்களிகெ
அல்லி ஹோகி ஆஹாரவித்தவரதாரு?
பல்லிதனு காகிநெலெயாதி கேஶவராய
நில்லதெ ரக்ஷிபனு இதகெ ஸந்தேஹபேட ||3

இதில் ஸ்ருஷ்டியின் சக்தியின் விமர்சனம் அற்புதமாக இருக்கிறது. ஸாதகனுக்கு தக்க வழியை இது காண்பிக்கிறது. மிகப் பெரிய விஷயத்தை பல அழகான உதாரணங்களால் தெரிவிக்கும் கலை கனகருக்கு அந்த பகவந்தனே அருளிய வரம் ஆகும். அனுமானங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அன்னம் எப்படி பாலிலிருந்து தண்ணீரை பிரித்துவிட்டு குடிக்கிறதோ அதைப் போல, ப்ரமாணபூர்ணமான வார்த்தைகளை / வாக்கியங்களை பயன்படுத்துவது கனகருக்கே உரித்தான சக்தி. அப்படியே பக்தி மார்க்கத்தில் நடக்க வேண்டியவனின் வழியின் ஸ்வரூபத்தை வாழ்க்கையில் ஸாக்ஷாத்காரம் செய்வித்து, பரமயோகி யார் என்பதை க்ரஹித்து சொல்லப்பட்டிருப்பதைப் போல இருக்கிறது. இந்த கீர்த்தனை அப்படிப்பட்ட ஒன்று.

தானாரு தேஹவாரு - திவ்ய
ஞானதலி திளிதாத பரமயோகி ||ப

அஸ்திபஞ்ஜரத நரகள தொகல ஹோதிகெய
விஸ்தரிஸி பிகித மாம்ஸத பொம்பெயு
மூத்ர மல ரக்தகீவத ப்ரளயதொடலெந்து
விஸ்தரிஸி திளிதாத பரமயோகி ||1

ஸூதகாப்தியலி நவமாஸ தும்பிரெ தன்ன
மாதெயுதரதி பந்து பெரஸி பெளெது
பாதகவதொந்து மூருதியாத தனுவெந்து
நீதியலி திளிதாத பரமயோகி ||2

கோர ஸம்ஸார தனுவெந்து தன்னலி திளிது
கேரு ஹண்ணின பீஜதந்தெ ஹொரடு
மாரபித காகிநெலெயாதிகேஶவ பாத

வாரிஜவ நம்பிதவ பரமயோகி ||3

இவ்வாறு பரமாத்மனில் நம்பிக்கை கொண்டு பரமயோகி ஆவதற்கு செல்லும்போது, அடுத்த நடவடிக்கை என்பது மிகவும் சுலபம். ஏனெனில், அவருக்கு அனைத்து இடங்களிலும் பரமாத்மனின் ஸ்ருஷ்டி சைதன்யம் தென்படுகிறது. சுக துக்கங்களை மீறியதான அவனது அழகு அகத்திலும், புறத்திலும் தெரிகிறது. ஸ்ருஷ்டியின் அந்தரங்கம் தெரிகிறது. அந்த சூழ்நிலையில் தான் தன் முயற்சியில், வாழ்க்கையை சுகமயம் ஆக்கிக் கொள்ள தேவையானவற்றை தெரிந்து கொண்டபிறகு, பின் வேறென்ன வேண்டும்?. தூரத்தில் இருக்கும் வைகுண்டம், தான் இருக்கும் இடத்திற்கே வந்துவிடுகிறது. அது அத்துடன் இருக்காமல், தேகத்திலேயே வைகுண்டம் தென்படுகிறது. இத்தகைய திவ்யஞானம் கிட்டியபோது, பரமாத்மனின் வெளிச்சம் மனதின் இருட்டினை அழிக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில், கனகர் இவ்வாறு பாடுகிறார்.

பதுகிதெனு பதுகிதெனு பவ எனகெ ஹிங்கிது ||ப
பதுமனாபன பாததொலுமெ எனகாயிது ||அப

ஹரிதீர்த்த ப்ரஸாத என்ன ஜிஹ்வெகொதகிது
ஹரிய நாமாம்ருத கிவிகொதகிது
ஹரியதாஸரு என்ன பந்து பளகாதரு
ஹரிய ஸ்ரீமுத்ரெ ஆபரணவாயிது ||1

முகுதராதரு என்ன நூரொந்து குலதவரு
முகுதிமார்க்ககெ யோக்ய நானாதெனோ
அகளங்க ஸ்ரீஹரி பகுதிகெ மன பெளெது
ருகுமிணியரஸ கைவஷனாதனெனகெ ||2

இந்தென்ன ஜீவக்கு ஸகல ஸம்பதவாய்து
முந்தென்ன ஜன்ம ஸபலவாயிது
தந்தெ ஸ்ரீகாகிநெலெயாதிகேஶவ ராய
பந்தென்ன ஹ்ருதயதலி நெலெயாகி நிந்த ||3

இவ்வாறாக பத்திரமாக, ஸ்வாமி இதயத்தில் நிலைத்து நின்றபின், எங்கு பார்த்தாலும் ராம ராம என்றே தெரிகிறது.

கண்ணெ காமன பீஜ ஈ
கண்ணிந்தலெ நோடு மோக்ஷ ஸாம்ராஜ்ய
கண்ணின மூருதி பிகிது ஒள
கண்ணிந்தலெ தேவர நோடண்ண ||1

மூகே ஶ்வாஸ நிஶ்வாஸ ஈ
மூகிந்தலெ காணோ யோக ஸன்யாஸ
மூகனாதரெ விஸேஷ ஒள
மூகிலி நோடண்ண லீலாவிலாஸ ||2

கிவியே கர்மகெ த்வார ஈ
கிவியிந்தலெ கேளோ மோக்ஷத ஸார
கிவியே கர்மகுடாட ஒள
கிவியல்லி காணோ நாதத பேர ||3

பொம்ம மாடித தனு பிட்டு விஶ்வ
கர்மனு மாடித பொம்பெயன்னிட்டு
ஸும்மனெ கூகுகளிட்டு அத
நம்புவனெம்போனெ ஹோகெ கங்கெட்டு ||4

ரூடியொளகெ ஷுத்த மூட ஈ
காடுகல்லுகளன்னு நம்பலு பேட
நாடாடிதைவகளெல்ல நம்ம
பாடதாதி கேஶவனொப்பனெ பல்ல ||5

‘நம்பலுபேட நாடாடி தெய்வகளனெல்ல நம்பபேட’ என்றதில் எச்சரிக்கை இருக்கிறது. அந்த எச்சரிக்கையில் அன்பு இருக்கிறது. அன்பே விஸ்வாசத்திற்கு மூலம். விஸ்வாசமே பக்தி. அந்த கண்ணிற்கு ஒன்றே தெய்வம். அவர் கண்ட ராமமயத்தில் ஹரி ஹர எல்லாம் ராமராம. ஸ்வாமியின் பெயர் பல உண்டு. ஆனால், அந்த ஸ்வாமியின் இருப்பு ஒன்றே ஒன்று. இவ்வாறு

பார்க்கையில், புறக் கண்களுக்கு தெரியும் குலங்கள் அனைத்தும் ஒன்றே ராம என்றே தெரிகிறது. இதனை அனுபவித்ததும், கனகர், சாமான்யரின் கேள்விகளுக்கு புரட்சிகரமான ஒரு பதிலை அளித்து, ஸத்யத்தின் இருப்பினை காட்டி சமாதானம் அளிக்கிறார். அவருடைய இந்த கீர்த்தனை, ஸத்யத்தின் இருப்பினை காட்டுகிறது.

குலகுல குலவென்னுதிஹரோ
குலவாவுது ஸத்ய ஸுஜனரிகெ ||ப

கெஸரொளு தாவரெ புட்டலு அத தந்து
குஸுமனாபனிகெ அர்ப்பிஸரேனய்ய ?
பஶுவின மாம்ஸதொளுத்பத்தி க்ஷீரவ
வஸுதெயொளகெ பூஸுரருண்ணரேனய்ய ||1

ஆ ஷெளண்டல்ய பராஷர எனிபனு
வேஷ்யய புத்ர வஸிஷ்ட முனி
தாஸிய நந்தன நாரத எனிபனு
காஷ்யப பௌத்ரன குல ஹேளிரய்ய ||2

ஆத்மனாவகுல ஜீவனாவ குல
தத்வேந்த்ரியகள குலபேளிரய்ய
ஆத்மனு காகிநெலெயாதிகேஶவனொலித
பக்தரிகெ குலவாவுது ஹேளிரய்ய ||3

இந்த கீர்த்தனை, உலகின் மூலதத்வத்தை விளக்கும் காயத்ரி. இந்த நிகண்டுவின் பரிச்சயம் ஆகிவிட்டால் போதும், பக்தி மார்க்கத்தின் குலம் தெரிகிறது. இந்த குலத்தவருக்கு பிறப்பின் குலம் இல்லை. இந்த குலத்தவருக்கு எங்கெங்கு காணினும் பரமாத்மனே. அந்த வெளிச்சமானது, அந்தரங்கத்தையே ஒளிர்விக்கிறது. அதனை கனகரின் வாக்கிலேயே பார்க்கலாம்.

பயலு ஆலயதொளகோ ஆலயதொளகெ பயலோ
பயலு ஆலயவெரடு நயதொளகோ

நயன புத்திய ஒளகோ புத்தி நயனத ஒளகோ
நயன புத்திகளெரடு நின்னொளகோ ஹரியே ||1

ஸவியு ஸக்கரெயொளகோ ஸக்கரெயு ஸவியொளகோ
ஸவியு ஸக்கரெயெரடு ஜிஹ்வெயொளகோ
ஜிஹ்வெ புத்திய ஒளகோ புத்தி ஜிஹ்வெய ஒளகோ
ஜிஹ்வெபுத்திகளெரடு நின்னொளகோ ஹரியே ||2

குஸுமதொளு கந்தவோ கந்ததொளு குஸுமவோ
குஸுமகந்தகளெரடு க்ராணதொளகோ
அஸமபவ காகிநெலெயாதிகேஶவராய
உஸுரலென்னளவல்ல எல்ல நின்னொளகோ ||3

இந்த ஞானத்தில் பூர்ணத்வத்தின் காலஅளவு இருக்கிறது. இங்கு பக்த அர்ஜுனனின் சந்தேகங்கள் அனைத்தும் பரிகாரம் ஆகின்றன. இதற்கு காரணமான ஸ்ரீகிருஷ்ணனின் பகவத்கீதையின் கருத்துகள், கனகரின் பக்திகீதைகளில் அடங்கி, பூர்ண சக்தியாக ஆகியிருக்கிறது. இந்த சக்தி, கனகரின் அனுபாவத்தின் சக்தியே ஆகும். ஆகையால், பக்தியின் மார்க்கத்தில் தொடர்ச்சியாக சமர்ப்பணம் ஆகியிருந்தாலே போதும். முக்தி ஸாலோக்ய. இது கனகரின் பக்தி ஸாஹித்யத்தின் சிறப்பு.

ஹரிபக்திஸாரத்தில் முக்தி ஸாதனைக்கு பக்தியே காரணம் என்பது தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய பக்தி மார்க்கத்தில் செல்பவர்களுக்கு, சதுர்வித புருஷார்த்தங்களின் ஸாதனை சுலபம். அதனை ஹரிபக்திஸாரம் மேலும் சுலபமாக்குகிறது. பக்தி மார்க்கத்தின் ஸாரம் அங்கு நிரம்பி வழிகிறது. இதனை உள் ஆராய்ந்து பார்க்கையில், பக்தியே உண்மையான யோகம் என்பது தெளிவாகிறது. இந்த பக்தி யோகத்தின் ஸாதனையானது, புண்யகார்யம் செய்யும் விவேகிக்கு மட்டுமே சாத்தியம், அதற்காக மனதினை திடப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு தேவையான பொருட்கள் ஹரிபக்திஸாரத்தில் இருக்கின்றன. அந்த

ஸாமக்ரிகளின் பலத்தினால், மனம் வலிமையடைந்தபோது துக்கம் மறைகிறது. அப்போது மகிழ்ச்சி பொங்குகிறது.

ஹஸிவரிது தாய்தன்ன ಮಿಶ್ರವிகெ
ஒஸெது பால்கொடுவந்தெ நீ போ
ஷிஸதெ பேரின்னாரு போஸகராகி ஸலஹுவரு
பஸுரொளகெ ப்ரஹ்மாண்ட கோடிய
பஸரிஸித பரமாத்ம நீனெ
ந்துஸுருதிவெ வேதகளு ரக்ஷிஸு நம்மனனவரத ||
...

ஏனு மாடிதரேனு கர்மவ
நீனொலியதின்னில்லவிதகனு
மானவுண்டே ப்ரமர கீடன்யாயதந்ததலி
நீனொலியெ த்ருணபர்வதவு புஸி
யேனு நீ பதிகரிஸெ பளிகி
ந்னேனு சிந்திஸலேகெ ரக்ஷிஸு நம்மனனவரத ||

லேஸகாணெனு ஜனன மரணதி
காஸியாதெனு நொந்தெனகடா
லேஸனிசி நோடலு பராத்பர வஸ்து நீனாகி
நீ ஸலஹுவவனல்லவே கரு
ணாஸமுத்ரனு நீனிரலு கம
லாஸனன ஹங்கேகெ ரக்ஷிஸு நம்மனனவரத ||

இவ்வாறு கனகரின் அனுபவங்கள் அனைத்தும் அவருடைய ஸாஹித்யத்தில், மனிதனின் நன்மைக்காக கீர்த்தனையாக பாய்ந்து, அனைவருக்கும் நம்பிக்கையையே அளிக்கின்றன. அவருடைய ஸாஹித்யத்தினை மொத்தமாக ஆராய்ந்தால், பரமாத்மனின் மேல் முழுமையான பாரத்தை வைத்து, 'எல்லரனு ஸலஹுவனு' , 'நீலல்லதெ நரரு ஸ்வதந்த்ரரே' என்பது போன்றதான சிறந்த வாக்கியங்கள் தெரிய வந்து, ஆரேனு மாடுவரு, ஆரிந்தலேனஹுது என்று சொல்கிறார்.

பக்தி மார்க்கம் சுலபமே என்றாலும்கூட, அதில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது கஷ்டம். ஆகையால், கீதையில் சொல்லியபடி நிஷ்காம கர்மத்தில் ஈடுபட்டு, ஸர்வஸமர்ப்பணா பாவத்தினால் கடமைகளை தொடர்ந்து செய்து கொண்டு வருபவர்களை மட்டுமே பரமாத்மன் காக்கிறான். சோம்பேறிகளுக்கு இங்கு வாழ்வதற்கு அவகாசம் இருப்பதில்லை. ஆனால், இத்தகைய சோம்பேறிகளுக்கும் ஞானம் வருவதற்கான சரியான சூழ்நிலையை, பக்தி ஸாஹித்யம் கொண்டு வருகிறது. எந்த பயனும் இல்லாத புல் கூட, ஸாதனா பலத்தில் சக்தியாக மாறுகிறது. இந்த பின்னணியில் கனக ஸாஹித்யத்தில் பக்தி ஸ்வரூபமானது, ஆத்ம பலத்தினை அதிகப்படுத்தி, ஸ்வாபிமானத்தை பெருக்கி, வாழ்க்கையை பார்க்கும் பார்வையில் ஒரு நெருக்கத்தை கொடுக்கிறது. 'நான்' என்பது போய், வாஸுதேவனை நம் உள்ளங்கையில் (நெருக்கத்தில) இருப்பவனாக ஆக்கி, பூமியை வைகுண்டம் ஆக்குகிறது. இவ்வாறாக கனகரின் ஸாஹித்யத்தின் பக்தி ஸ்வரூபம், ஜீவ வாஹினியாக இருந்து, கனக-சிறப்பினைப் பெற்று, கன்னட ஸாஹித்யத்தின் செல்வத்தினை மேலும் வளர்க்கிறது. நம் அறிவுக் கண்களை திறக்கிறது.

***

19. ஶ்ரீகனகதாஸரின் இரு முண்டிகெ பதங்கள் – By Dr.கப்பினாலெ வஸந்த பாரத்வாஜ

ஈதனீக வாஸுதேவனு

ஈதனீக வாஸுதேவனு லோகதொடெய
ஈதனீக வாஸுதேவனு || ப

ஈதனீக வாஸுதேவ நீ ஸமஸ்த லோகதொடெய
தாஸகொலிது தேரனேரி தேஜிபிடிது நடெஸிதாத || அப

தனுஜெயாள்தனண்ணனய்யன | பிதன முந்தெ கௌரவேந்த்ரன
அனுஜெயாளிதவன ஷிரவ கத்தரிஸுத |
அனுஜெயாளிதவன பெங்கி | முட்டதந்தெ காய்த ருக்ம
னனுஜெயாளிதவன மூர்த்தியன்னெ நோடிரோ ||1

தனுஜெயாள்த = ஹிடிம்பியின் கணவரான பீமஸேனதேவரின்; அண்ணன = தர்மராஜரின்; அய்யன = தந்தையான எமதர்மனின்; பிதன = அவரின் தந்தையான ஸூர்யனின் முன்; கௌரவேந்த்ரன அனுஜெ = கௌரவர்களில் மூத்தவனான துரியோதனனின் சகோதரியான துஷ்ஷலையின்; ஆளிதவன = கணவனான ஜயத்ரதனின்; ஷிரவ கத்தரிஸுத = தலையை கத்தரித்து; அனுஜெ = சகோதரியான ஸுபத்ரியின்; ஆளிதவன = கணவனான அர்ஜுனனை; பெங்கு முட்டதந்தெ காய்த = நெருப்பு சுடாதவாறு காத்த / காப்பாற்றிய; ருக்மனனுஜெ = ருக்மிணியின் கணவனான ஶ்ரீகிருஷ்ண மூர்த்தியை பாருங்கள்.

நரன ஸுதனரண்யதல்லி | கிரியொள்னிந்து தன்ன ரோஷதி
ஶரகளன்னு தேடுதிப்பன தானு யோஜிஸி ||
பரதலவன கரெது கேளெ | குருஹு தோரி பத்ரவன்னு
ஹரிஸிதவன ஶிரவ தரித தேவ காணிரோ ||2

அர்ஜுனனின் மகனான பப்ருபாஹு என்பவன், காட்டில் தன் வாளினை கூர்மையாக்கிக் கொண்டிருந்தபோது, ஶ்ரீகிருஷ்ணன்,

அதற்கான காரணத்தை அவனிடம் கேட்கிறான். அப்போது அவன், அடுத்து வருவதான மஹாபாரத யுத்தத்தில் தான் அனைவரையும் கொல்வேன் என்று சொல்லி, அஶ்வத்த மரத்தில் ஐந்தரை இலைகளை மட்டும் விட்டு, மற்ற அனைத்தையும் கத்தரித்து, தன் வீர சாமர்த்தியத்தை காட்டுகிறான். அத்தகைய பப்ருபாஹுவின் தேகத்தை மிகவும் உபாயமாக பீமனால் கத்தரித்து, முண்டத்தை போர்க்கள கம்பத்தின் மேல் நிறுத்திய ஸ்ரீகிருஷ்ணனை பாருங்கள்.

ஸ்ருஷ்டிகர்தகெ மகனாதவனி | கிஷ்டபூஷண அஶனவாதவ
நிஷ்டபுத்ரகெ வைரி தொடெய சேதிஸென்னுத |
கஷ்டவன்னு களெது பக்த | ரிஷ்டவன்னு காதந்த உ
த்க்ருஷ்ட மஹிமனாத தேவனீத காணிரோ ||3

ஸ்ருஷ்டி கர்தாவான ப்ரஹ்மதேவரின் மகனான ருத்ரதேவருக்கு, இஷ்டபூஷணமான பாம்பின், ஆகாரமாக இருக்கும் வாயுவின், புத்திரனான பீமனுக்கு, எதிரியான துரியோதனனின் துடையை முறிக்குமாறு ஸூசனை செய்து, அனைவரின் கஷ்டங்களையும் போக்கி, பக்தர்களின் இஷ்டங்களை நிறைவேற்றியவனான மிகச்சிறந்த மஹாமஹிமனான ஸ்ரீகிருஷ்ணனை பாருங்கள்.

க்ரூரனாத பணிபபாண | தரணிஜாதனெச்சுவாக
வீர் நரன கடெகெ பப்புதன்னு ஈக்ஷிஸி
தாரிணிய பததொளெகி | சரணபஜக நரன காய்த
பாரகர்தனாத தேவனீத காணிரோ ||4

கர்ணன் ப்ரயோகம் செய்த ஸர்ப்ப அஸ்திரம், வீரனான அர்ஜுனனிடம் வரும்போது, பூமியை கால் விரல்களால் மிதித்து, தன் சரணங்களை விடாமல் வணங்கும் பக்தனான அர்ஜுனனை காப்பாற்றிய ஸ்ரீகிருஷ்ணனை பாருங்கள்.

வ்யோமகேஶனிப்ப தெஸெய | ஸர்வஜகக்கெ தோரிஸுத்த
ஸாமஜவனேரி பஹன ஶக்தியீக்ஷிஸி ||
ப்ரேமதிந்த உரவனொட்டி | டிங்கரிகன காய்த ஸார்வ
பௌம பாடதாதிகேஶவன்ன நோடிரோ ||5

ஈஸான மூலையில் யானையில் ஏறி யுத்தத்திற்கு வந்த பகதத்தன், நாராயண அஸ்த்ரத்தை ப்ரயோகம் செய்தபோது, அதனை நேருக்கு நேராக எதிர்த்து, அர்ஜுனனை காத்த, ஸார்வபௌமனான, பாடதாதி கேஶவனான ஸ்ரீகிருஷ்ணனை பாருங்கள்.

***

ஏரடு ஸாவிரத ஜிஹ்வெயுரக

ஏரடு ஸாவிரத ஜிஹ்வெயுரக பொகளித ஹரியெ ||ப
பரஞ்யோதி பரப்ரஹ்ம பரமபுருஷ ஓம் எந்து ||அப

இரண்டாயிரம் நாக்குகளைக் கொண்ட ஆதிஸேஷனே புகழ்வதைப் போல, ஸ்ரீஹரி, ஓம்கார ஸ்வரூபியாகியிருக்கும், பரஞ்ஜோதியும், பரப்ரஹ்மனும், பரமபுருஷனும் ஆகியிருக்கிறான்.

ஹுட்டுபண்ண ஒந்தரொளகெ | கட்டுபண்ண ஒந்துமாடி
கட்டி குட்டி காஸி கரகி மூரு பண்ணவ |
முட்டிமாடி நால்குபண்ண | ஒப்பவிக்கி அதர மேலெ
கட்டியாகி நெலெகெ நிந்தயெய்து பண்ணவு |
ஸ்ருஷ்டியாரேளு பண்ண | எண்டு ஒம்பத்தரொளகெ
நெட்டனெ ஹத்து ஹன்னொந்து ஹன்னெரடு தோர்ப்ப |
கட்டி ஹதிமூரு ஹதி நால்கு ஹதினைதரிந்த
கட்டகடெகெ நிந்த ஹதினாரு பண்ண ஓம் எந்து || 1

ஸ்ருஷ்டி காலத்தில் ஒன்றாக இருந்த ப்ராணவாயு, ஜீவியின் தேகத்தில் நுழைந்து உஶ்வாஸ - நி:ஶ்வாஸ என்று இரண்டு ஆயிற்று. பிறகு, அது, பூரக, கும்பக, ரேசக என்று மூன்று ரூபங்களில் ஆகி குண்டலினி சக்தியை ஜாக்ருதமாக்கியது. மூலாதார சக்கரத்தின் நான்கு தளத்தின் தாமரையில் அது நிலைத்து பஞ்சேந்த்ரியங்களை நியந்த்ரணம் செய்தது. ஆறு தள கமலத்தின் ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் ஏறி, ஸுகேச்செ, ஆத்மவிசார, நிஸ்ஸங்க, வாஸனாக்ஷய, ஆனந்தினி, துர்ய,

துர்யாதீத என்னும் ஸப்தபூமிகைகளில் இருந்தது. ப்ருத்வி, அப், தேஜஸ், வாயு, ஆகாஷ, மனஸ், அவ்யக்த, அஹங்கார என்னும் அஷ்ட ப்ரக்ருதிகளை மீறி நின்று நவத்வாரங்களையும் கட்டுப்படுத்தியது. பிறகு, நாபியில் இருக்கும் பத்து தள கமலத்தின் மணிபூரக சக்ரத்தில் நிலைத்தது. ஹ்ருதயத்தில் இருக்கும் ஏகாதஷ ருத்ர ஸ்தானத்தின், 12 தளத்தின் அனாஹத சக்ரத்தில் திகழ்ந்தது. அதன் பிறகு, ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்னும் அவஸ்தான த்ரயங்களுடன் இருக்கும் இடா, பிங்களா, ஸுஷும்னா, காந்தார, ஹஸ்தி, பூஷா, யஷஸ்வினி, குஹூ, அலம்புஷா, ஷங்கினி என்னும் 10 தச வித நாடிகளை ஸ-சேதனம் ஆக்குகிறது. கர்மேந்த்ரிய, ஞானேந்த்ரியங்களுடன், மனோ, புத்தி, சித்த, அஹங்காரங்கள் சேர்ந்து கொண்டு த்ரிபஞ்சாங்க யோகத்தை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

எம, நியம, த்யாக, மௌன, தேஷ, கால, ஆஸன, மூலபந்த, தேஹஸாம்ய, த்ருக்ஸ்திதி, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரண, ஆத்மத்யான, ஸமாதிகள் என்னும் இந்த 15 அங்கங்களின் யோக ஸ்திதியின் உச்ச நிலையில், ஓம்காரம் வெளிப்பட்டது. அது பாரதிஸ்தானம் என்று அழைக்கப்படும் 16 தளத்தின் கமலம் இருக்கும் கண்ட (கழுத்து) ப்ரதேசத்தில் இருக்கும் விஷுத்த சக்கரத்தில் இருக்கிறது.

அ, உ, ம, பிந்து, நாத, கோஷ, ஷாந்த, அதிஷாந்த என்னும் எட்டு எழுத்துக்கள் மற்றும் அவற்றில் இருக்கும் விஸ்வ, தைஜஸ, ப்ராஜ்ஞ, துரிய, ஆத்ம, அந்தராத்ம, பரமாத்ம, ஞானாத்ம என்னும் எட்டு பகவத் ரூபங்கள் - இவ்வாறு மொத்தம் 16 வண்ணங்களால் அந்த ஓம்காரம் ஒளிர்கிறது.

பத்ரகம்பவொந்தரொளகெ | உத்தவாத கொனெய மேலெ
ஸித்தியாத சிகுரு ஹுவி காயி ஹண்ணனு
மெத்துஹோத பக்ஷி பந்து | ஹத்துஹிடிது உத்தக்கெத்தி
புத்திஹீனனாகி பெளெது தரெகெ பித்துத |
கத்துகொண்டு மத்தொப்ப தரு | தித்த தாரியன்னு கட்டி
ஒத்து ஹிடிது நுக்கினுகி ஸெளெதுகொண்டத |

ஸாத்யவாயிதெந்து தந்தெ | முத்து ஸதிகெ அதனு கொடலு
ஷுத்தவாகி ஸுட்டு மடகலெத்து ஹாரிஹோயிதோம் எந்து || 2

தேகம் என்னும் கம்பத்தின் துதி (சிகரம்) போல இருக்கும் நெற்றியில், ஸஹஸ்ரார கமலத்தின் பூ மலர்ந்திருக்கிறது. அதனை அனுபவிக்க வேண்டிய ஹம்ஸ பக்ஷியை அவித்யை என்னும் பருந்து பிடித்திருக்கிறது. இதனால், அவிவேகம் சூழ்ந்து, ஸம்ஸாரத்தில் மனம் லயிக்கிறது. இதன் பரிணாமமாக அது லௌகிக விஷய சுகங்களில் விழுந்து அல்லாடுகிறது. கடைசியில் அதனை புத்தியானது சுட்டு, திவ்ய அனுபூதியை கொடுக்கிறது. இதுவே ஓம்காரமாக இருக்கிறது.

திளியுதிஹுது திளியதிஹுது | பெளெயுதிஹுது பெளெயதிஹுது
ஹொளெயுதிஹுது ஹொளெயதிஹுது ஸுளியதிஹுது |
திளிது நால்கு திக்கினல்லி | ஹொளெது எண்டு திக்க தோரி
பளஸி ஸுத்த திருகுதிஹுது பளலி பளலதெ |
ஒளகெ ஹொரகெ தோருதிஹுது | அளித வஸ்து முட்டதிஹுது
களவளங்கெ எரடு குணவ தோரி மெரெவுது |
திளிது நோடெ கைகெ ஸிக்கி | ஒளகெ பயல தோருதிஹுது
ப்ரணவ ஒந்து கோடி நுங்கி உகுளுதிப்புதோம் எந்து ||3

ஒரு முறை தெரிவதைப் போல இருந்தாலும், இன்னொரு முறை அஞ்ஞானம் சூழ்ந்து விடுகிறது. ஸுஜ்ஞானம் வளர்ந்தாலும் வளராததைப் போல, ஒளிர்ந்தாலும் ஒளிராததைப் போல, அருகில் வந்தாலும், மாயமாகிவிடுகிறது. அக்கம்பக்கத்தில் அவ்வப்போது ஸத்யத்தின் மின்னல் மின்னி, உள்ளும் புறமும், தெரிவதைப் போல இருக்கிறது. இவ்வாறு தெரிந்த தரிசனத்தை மறுபடி மறந்து த்வந்த்வத்தில் (சுக துக்கங்கள்) மூழ்குகிறது. நன்றாக முயற்சி செய்து இந்த ஸத்யத்தை ஸாதித்தபோது, ப்ரபஞ்சம் அனைத்தும் ஷூன்ய என்னும் ஸித்தி ஸ்திதி வருகிறது. அப்போது ப்ரணவ மந்த்ரம் ஒன்றே உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கிறது என்பது அறிவுக்கு வருகிறது. இதுவே ஓம்காரமாக இருக்கிறது.

தத்தியாத ப்ரஹ்மனிகெ | திக்கு அகிலாண்டவெல்ல
ஹெத்த தந்தெகாதவனெ நித்யவுள்ளவ |
ஸுத்து ஹுட்டலில்லவெந்து | அத்த நோடி இத்த திருகி
தத்தியொளகெ பெளெதவெல்ல ஸத்தவென்னுத ||
ஸத்துஹோத தீபதந்தெ | உத்பத்ஹுடியாதவகெ மத்தெ
ஸத்து ஸத்து ஹுட்டுவுது தப்பதென்னுத ||
எத்தி ஜகவ நுங்கி தன்ன | ஹொட்டெயொளிம்பிட்டுகொண்டு
கத்தலெகெ கர்த்ருவெம்ப ஜகவ ஸத்ய கேளிரோம் எந்து ||4

ப்ரஹ்மாண்டத்திற்கு அகிலாண்டமே திக்குகள். ஸ்ருஷ்டி கர்தனுக்கு ஜன்மத்தை அருளிய அச்யுதானந்தன் ஒருவனே நித்யஸத்யன். சதுர்முகன், அங்கும் இங்கும் பார்ப்பதற்குள்ளாகவே, அவன் ஸ்ருஷ்டித்த லோகங்கள் அனைத்தும் ப்ரளயமாகிறது. இவ்வாறு ஸ்ருஷ்டி- ஸ்திதி-ப்ரளயங்கள் நிரந்தரமாக நடக்கின்றன. லோகங்கள் அனைத்தையும் தன் உதரத்தில் தரித்துக் கொண்டு ப்ரளய ஜலத்தில், ஆல இலையின் மேல் படுத்திருக்கும் இந்த ஜகன் நியாமக சக்தியே ஸாஸ்வத-ஸத்ய. இதுவே ஓம்காரம் ஆகியிருக்கிறது.

பங்கஜாக்ஷி தாயி ஸுதன | அங்கதல்லி ஹுட்டி ஜகவ
மங்குமாடுதிப்ப மாயெ ஹத்து ஷங்கெய |
ஷங்கெகார ஷத்ரு மித்ர | ரிப்பரிகாதாரவெந்து
குங்கரதொளிப்பத்தொந்து கோடி பாஷவு ||
(அங்கெமீரி அஉமகார | பிந்து நாத கோஷ ஷாந்த
அங்குரிஸலு பூர்புவஸ்வ மூலமாத்ரெயு) |
ஓம்காரதொளகெ புட்டி | ஓம்காரதொளகெ பெளெது
ஓம்காரதீ ஜகவ எத்திமெரெவுதோம் எந்து ||5

மஹாலக்ஷ்மியின் மகனான சதுர்முக ப்ரஹ்மனின் துடையில் மாயாதேவி பிறக்கிறாள். அவளிடமிருந்தே மனிதனுக்கு பல்வேறு விதமான சந்தேகங்கள் வருகின்றன. ராக, த்வேஷ, மோஹ ஆகியவற்றால் ஜீவி, தன் விவேகத்தை இழந்து ஸ்வஸ்வரூப ஞானத்தை அடைவதற்கு அஸமர்த்தன் ஆவது, இந்த மாயையின்

சக்தியினாலேயே. அத்தகைய மாயை, எதிரி / நண்பன் என்னும் பேதம் இன்றி, அனைவரையும் பாசக்கயிற்றினால் கட்டியிருக்கிறாள். அந்த மாயா பந்தனத்தை மீற வேண்டுமெனில், அ-உ-ம' காரங்களின் பிந்து- நாத- கோஷ- ஷாந்த- அதிஷாந்த என்னும் அக்ஷர ரூபத்தின் வ்யாஹ்ருதி 'பூர்புவஸ்வ:' மூலமாக இருக்கும் ஓம்காரம் பிறக்க வேண்டியதாகிறது. உலகில் பிறந்து, வளர்ந்து, திகழும் ஓம்காரமே இது.

ப்ரணவ ஒந்தரொளகெ ஒந்து | கோடியன்னு தோரி கடெய
குணிகெயொளகெ எண்டுகோடியனு தோருத |
த்ருணவ ஹிடிது பரெயுதிப்ப | ஒந்து ரோமகூபதல்லி
குணிகெயொளகெ ஜகத ஜீவராஷியெல்லவ |
ஸுளித விஷ்ணு ப்ரஹ்மனெம்ப | ஹணெய கண்ண ருத்ரனெம்ப
மணெயகாரரெப்பத்தேளு கோடிஸங்க்யெய |
ஹணெய காணதவர கீலி | நெணெகெயல்லி ஹுலபுதப்பி
ப்ரணவதொந்து கேளுதிப்ப பரப்ரஹ்ம ஓம் எந்து || 6

இந்த ப்ரணவ மந்த்ரத்தில் எட்டு அக்ஷரங்கள் இருந்து அவற்றில் எட்டு பகவத் ரூபங்கள் இருக்கின்றன. இதிலிருந்தே 'ஓம் நமோ நாராயணாய' என்னும் அஷ்டாக்ஷர மந்த்ரம் வெளி வந்திருக்கிறது. இது ரோமத்தின் ஒரு அணுவிலிருந்து துவங்கி, அனைத்து ஜீவராசிகளின் உலகின் அந்தப்புறம் (வெளியே) இருக்கும் மஹத் வரைக்கும் வ்யாபித்திருக்கிறது. ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதிகளில் தொடங்கி, 77 கோடி ஜீவிகள் வரை யாருடைய அறிவிக்கும் எட்டாத திவ்யஞானம் எனப்படும் ஓம்காரமே இது.

நளினஜாண்டவொந்தரொளகெ | புவன பதினால்கு பஸுரி
நொளகெ இந்து தம்ம நாபிகமலமத்யதி |
திளிது நோடு இத்த கௌகெ | பாத மேலெ மஸ்தகவு
தொளலி வேத காணெவெந்து பளலி பளலதெ |
ப்ரளயகோடி ப்ராணிகளிகெ | ஹொளவுகாணலீஸதந்தெ
பெளெது ஹோகுவ கதியெம்புதித்தலரஸுத |
களவினவர கொந்து பந்து | இளெய மேலெ நிரத நிந்து

பிளிகிரிவாஸ திருமலேஷ ஆதிகேஶவ தானெ ஓம் எந்து || 7

அந்த சதுர்முக ப்ரஹ்மனை விஷ்ணு தன் நாபி கமலத்தில் தரித்திருப்பதுடன், 14 உலகங்களையும் அடக்கிய ப்ரஹ்மாண்டத்தை வயிற்றில் தரித்திருக்கிறான். நிகமங்கள் அனைத்தும் மேலே கீழே ஏறி இறங்கி, இந்த பராத்பர புருஷனை காணாமல் சோர்வடைந்திருக்கின்றன. ஸ்ருஷ்டி ப்ரளய சக்கரத்தில் அனந்தகோடி ஜீவிகளுக்கு, இந்த ரகசியம் புரியாது. இவ்வாறு பிறந்து இறக்கும் ஜனன மரண சக்கரத்தின் ஞானமூலம் எனப்படும் வேதங்களையே அபகரிக்க வந்த அசுரனைக் கொன்று, லோக கல்யாணத்திற்காக நின்றவனான பிளிகிரி ரங்கனும், திருப்பதியின் ஸ்ரீனிவாஸனும், ஆதிகேஶவ ரூபனான ஓம்காரனே ஆகியிருக்கிறான்.

***

20. ஶ்ரீகனகதாஸர் பற்றிய தகவல்கள்
ஶ்ரீஹரிப்ரிய தீர்த்தரு, பெங்களூரு

1. ஶ்ரீகனகதாஸரின் சரம ஸ்லோகங்கள் என்ன?

கனககாந்தி நிபாகாரம் காகிநெலெ ஆதிகேஶவ க்ருபாலயம்
க்ருதாபரோக்ஷ உடுப்பி கிருஷ்ணம் கனகதாஸ குரும்பஜே ||

யமாம்ஷஸ்ய பராபக்த்யா ஸுப்ரஸன்ன ஹரிம் ஸ்வயம் |
யஸ்யாசார்யோ வ்யாஸராய: தம் வந்தே கனகாபிதம் ||

கனகதாஸர கதெய கேளலு ஸுகப்ரத
கனககிரி திம்மப்ப தானெ பந்தொலித
கனகஸிரி ஸம்பத்து காளகதி களெயலு
கனஸினலி கரெதவ கரபிடிது பொரெத
கனக்ருதி முண்டிகெ விபுதர தலெ தூகிஸலு
அனக மங்களாங்க ஹரிவிட்டல லீலெகள தோரித

2. ஶ்ரீகனகதாஸரின் காலம் எது?
ஆண்டு 1503 - 1606 வரை

3. ஶ்ரீகனகதாஸரின் பெற்றோர் யார்?
பீரப்பா, பச்சம்மா

4. இவரின் வேலை (உத்யோகம்) என்னவாக இருந்தது?
விவசாயம். படைத் தளபதியாக இருந்தார். அரசு வேலை.

5. இவரின் குரு யார்?
முதலில் ஶ்ரீராமானுஜர். பிறகு ஶ்ரீவ்யாஸராஜர்.

6. இவரின் அங்கிதம் என்ன?
கேஶவ, படதாதி கேஶவ, சன்னகேஶவ, காகிநெலெ ஆதிகேஶவ ஆகியவை.

7. பகவந்தனே ஏன் வந்து அவரை தாஸர் ஆவதற்கு கூறினான்?

பகவந்தன் கனகரில் அனேக கேள்விகளை வைத்து, அவரிடமிருந்து பதில்களைப் பெற்றான். ஹரிதாஸரானால் என்ன பலன் என்று கேட்டு, அதற்கு அவருக்கு போர்க்களத்தில் அடிபட்டு விழுந்தபோது, அந்த மயக்கத்தை போக்கி, நீ ஹரிதாஸன் ஆகிறாயா என்று கேட்க, அதற்கு அவர், இந்த நோய்களை போக்கு என்று கூறினார். அப்படியே ஆகி, அவரை தன்னிடம் இழுத்துக் கொண்டார் பகவந்தன். இவருக்கு தாஸன் ஆவதற்கு யோக்யதை இருக்கிறது என்பதை அனைவருக்கும் தெரிவிப்பதற்காக தானே வந்து அருளினான்.

8. இவருடைய ஸமகாலீனர்கள் யார்?

குருகளான ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர் மற்றும் ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீவைகுண்டதாஸர்.

9. ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு இவருடைய பங்கு என்ன?

ஸ்ரீகனகதாஸர், ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு அளித்த பங்கு அபாரமானது. தேவரநாமங்கள் அல்லாமல், ஹரிபக்திஸார, ராமதான்ய சரிதெ, மோஹன தரங்கிணி, ந்ருஸிம்ஹ தண்டக, கேஶவ நாமா ஆகிய கிருதிகளை அளித்திருக்கிறார்.

10. திம்மப்ப எப்படி கனக ஆனார்?

அவருக்கு ஒரு முறை செல்வம் (கனக) கிடைத்தது. ஆகையால், அவருக்கு கனக என்று நிரந்தரமாக நின்றுவிட்டது.

ஜாதியினால் கீழாக இருந்தாலும், ஸ்ரீகனகதாஸர், ஞானத்தினால் மிகவும் உச்ச ஸ்தானத்தில் உள்ள உண்மையான ப்ராஹ்மணரே ஆனவராக, முமுக்ஷுகளே ஆகிறார் என்பதில் சந்தேகமில்லை.

***

21. ஈஶ நின்ன சரண பஜனெ
திருமதி. ஜெயம்மா, பெங்களூரு

ஈஶ நின்ன சரண பஜனெ ஆஶெயிந்த[3] மாடுவெனு
தோஷராஸி நாஶ மாடு ஸ்ரீஶ கேஶவ ||1

ஈஶனான நீயே அனைத்தும் செய்பவன். நான் உன் தாஸன். மனப்பூர்வமாக நான் உன்னை ஸ்மரணை செய்வேன். உன் இரு பாதங்களில், ஒரு பாதமானது முக்தியையும், இன்னொரு பாதம் ஞானத்தையும் கொடுப்பதால், அவற்றை அடைவதற்கு ஆசையினால் ஸ்மரணை செய்வேன். கேஶி என்னும் அசுரனைக் கொன்று, கேஶவ என்னும் பெயரைப் பெற்றிருக்கிறாய். என் தோஷங்களின் பலன்களை போக்குவாயாக, ஸ்ரீஶ கேஶவனே.

ஶரணு ஹொக்கெ[1]னய்ய என்ன மரண சமயத[3]ல்லி நின்ன
சரண ஸ்மரணெ கருணிஸய்யா நாராயண ||2

' ஸந்ததம் சிந்தயேனந்தம் அந்த்ய காலே விஶோஷித:' என்பது போல, என்னுடைய இறுதிக்காலத்தில் உன்னுடைய நினைப்பைக் கொடு. இறுதிக்காலத்தில் வரும் நினைப்பின் பலனே அடுத்த பிறவி என்பதால், உன் சரண கமலங்களில் நான் அடிபணிவேன். எப்போதும் உன் நினைப்பைக் கொடுத்து எனக்கு அருள்வாயாக, நாராயணா.

ஶோதி[4]ஸென்ன ப[4]வத கலுஷ போதி[4]ஸய்ய ஞானவெனகெ
பா[3]தி[4]ஸுவ எமன பா[3]தெ[4] பி[3]டி[3]ஸு மாத[4]வ ||3

மா என்றால் பிரம்மவித்யை. அதற்கு தவ என்றால் ஸ்வாமியாகிய நீ. ஆகையால், ஞானத்தை எனக்கு கொடுப்பாயாக. மனனம் மற்றும் தியானத்திற்கு தரிசனம் கொடுப்பதாலேயே நீ மாதவன். சிற்றின்பங்கள் என்னும் தோஷங்களிலிருந்து என்னை விடுவி. உன் தியானத்தை செய்வதற்கு எனக்கு ஞானத்தைக் கொடு. யமனை நிர்வகிப்பவன் நீயே ஆகையால் மரண தோஷத்தை (பிறப்பு இறப்பு சுழற்சியை) விடுவி, மாதவனே.

ஹிந்த[3]னேக யோனிக[3]ளலி ப[3]ந்து[3] ப[3]ந்து[3] நொந்தெ[3] நானு
இந்து[3] ப[4]வத ப[3]ந்த[4] பி[3]டிஸு தந்தெ[3] கோவிந்த ||4

84 லட்ச யோனிகளில் திரும்பத் திரும்ப பிறந்து நான் நொந்து போயிருக்கிறேன். இப்போதாவது சாதனை செய்வித்து, வினைப்பயனை அகற்றுவாய், வேதவேத்யனான, பசுக்களைக் காப்பாற்றுபவனே, கோவிந்தனே.

பிரஷ்டனெனிஸபே[3]ட[3] கிருஷ்ண இஷ்டு மாத்ர பே[3]டி[3]கொம்பெ[3]
ஸிஷ்டரொட[3]னெ இஷ்டு கஷ்ட பிடிஸு விஷ்ணுவே ||5

ஹே விஷ்ணுவே! என்னை கயவன் என்று ஒதுக்கிவிடாதே. நல்லவர்களுடனேயே என்னை இருக்க வை. உன் நினைவைக் கொடுத்து, என் கஷ்டங்களை நீக்குவாயாக.

மொதலு நின்ன பாத[3]பூஜெ முததி[3] மாடு[3]வேனு நானு
ஹ்ருதயதொளகெ[3] ஹுது[3]கி[3]ஸய்ய மது[4]ஸூதன ||6

போன பிறவியில் செய்த கர்மங்களின் பலனே, இப்போது உன் பாதபூஜை செய்யும் புத்தி எனக்கு வந்திருக்கிறது. ஆகையால், முதலில் உன் பாதபூஜையை நான் எப்போதும் விரும்பிச் செய்வேன். என் இதயத்தில் அந்தர்யாமியாக இருக்கும் நீ, அங்கு எனக்கு தரிசனம் தா, மதுஸூதனா!

கவிது[3]கொண்டு இருவ பாப ஸவெது[3] ஹோகு[3]வந்தெ மாடு
ஜவன பா[3]தெ[4]யன்னு பி[3]டி[3]ஸோ த்ரிவிக்ரம ||7

ஸத்வாதி மூன்று குணங்களையும் மீறி நிற்பவனே. அனைத்து தேவதைகளையும் விட சிறந்தவனே. பூ: புவ: ஸ்வ: உலகங்களுக்கு அப்பாற்பட்ட த்ரிவிக்ரமனே. என்னை சூழ்ந்திருக்கும் பாவங்களை பரிகரிப்பாயாக. பாவங்களே நிறைந்திருக்கும் இந்த பூலோகத்தில், நீயே என்னை யம பயத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். வைகுண்ட, அனந்தாஸன, ஸ்வேதத்வீப உலகங்களில் நிலைத்திருக்கும் த்ரிவிக்ரமனே, எனக்கு என்றைக்கும் பாவங்களே வராமல் காப்பாற்றுவாயாக.

காமஜனக நின்ன நாம ப்ரேமதிந்த பாடு[3]வந்த[2]
நேம எனகெ பாலிஸய்ய ஸ்வாமி வாமன ||8

மன்மதனின் தாக்கத்தால் நான் உன் பெயரை சொல்லாமல், வேறு யார்யார் பெயரையோ சொல்லிக் கொண்டிருக்கிறேன். அத்தகைய ஆசைகளைக் கொடுப்பவன் நீயே. ஆகையால், வாமனரூபியே, உன் பெயரை நான் பக்தி, அன்பு, காதலுடன் சொல்வதற்கு எனக்கு ஆசையைக் கொடுப்பாயாக.

மத[3]னனய்யா நின்ன மஹிமெ வத[3]னத[3]ல்லி நுடி[3]யுவந்தெ
ஹ்ருத[3]யதல்லி ஸத[3]ன மாடு[3] முத[3]தி[3] ஸ்ரீத[4]ர ||9

லட்சுமிதேவியை இதயத்தில் தரித்திருக்கும் ஸ்ரீதரனே, என் வதனத்திலிருந்து உன் மகிமைகளை புகழும்படிச் செய்து, நாக்கிற்கு அபிமானி தேவதைகள் எனக்கு அருளுமாறு தயை புரிவாயாக. ஸ்ரீதேவியுடன் நீ என் இதயத்தில் வசித்து, என் நாக்கிற்கு (உன்னையே நினைக்குமாறு) ஆணையிடு.

ஹுஸியனாடி[3] ஹொட்டெ ஹொரெவ
விஷயத[3]ல்லி ரஸிகனெந்து
ஹுஸிகெ ஹாகதி[3]ரு ஹ்ருஷிகேஶனெ ||10

ஹ்ருஷிக என்றால் இந்திரியங்கள். அவர்களுக்கு நீயே ஈசன் மற்றும் அவர்களை நிர்வகிப்பவனும் நீயே - ஹ்ருஷிகேஶன். வயிற்றுப் பிழைப்பிற்காக பல்வேறு வேடங்களை தரித்து, என் வாழ்க்கையை நடத்துகிறேன். அதற்காக, என்னை நரகத்தில் தள்ளாமல், அனைத்து இந்திரியங்களையும் உன்னிடத்தில், உன் சேவையைச் செய்தே நடக்குமாறு கருணை செய்வாயாக, ஹ்ருஷிகேஶனே.

பி[3]த்து[3] ப[4]வத[3]னேக ஜனும ப[3]த்த[3]னாகி கலுஷதிந்த
கெ[3]த்து போப பு[3]த்தி[4] தோரோ பத்மனாபனே ||11

பாற்கடலில் படுத்திருக்கும் பத்பனாபன் நீ. சம்சாரக் கடலில் மூழ்கியிருப்பவன் நான். என் இதயத்திலும் அவதரித்து, எல்லா

பாவங்களிலிருந்தும் நான் வெளியே வருமாறு எனக்கு புத்தியைக் கொடு.

காமக்ரோத பி[3]டி[3]ஸி நின்ன நாம ஜிஹ்வெயொளகெ நுடி[3]ஸு
ஸ்ரீமஹானுபா[4]வனாத தாமோதர ||12

இந்திரியங்களை கட்டுப்படுத்தும் ஜீவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவன் தாமோதரன். காம, க்ரோதம் முதலான அரிஷட் வர்கங்களைப் போக்கி, உன் பெயர் என் நாக்கில் எப்போதும் இருக்குமாறு அருளி, இந்திரியங்களை கட்டுப்படுத்தும் வலிமையை எனக்குக் கொடுத்து, என் பக்தியினால் உன்னை நீ கட்டிக்கொள். அதனால் நான் ஸத்கதி அடையுமாறு செய்வாயாக.

பங்கஜாக்ஷ நீனு என்ன மங்குபுத்தி[3]யன்னு பி[3]டி[3]ஸி நின்ன
கிங்கரன்னு மாடிகொள்ளொ ஸங்கருஷண ||13

நான், எனது என்னும் ஆசைகள் நிரம்பி, நான் உன்னிடமிருந்து தூர விலகியிருக்கிறேன். அனைவரையும் உன்னிடம் ஆகர்ஷணம் செய்து (ஈர்த்து), ஸங்கர்ஷண என்னும் பெயர் பெற்ற நீ, என்னை உன்னிடம் ஈர்த்துக் கொள். என் மந்தபுத்தியை விலக்கு. உன் தாஸனாக என்னை ஏற்றுக்கொள்.

ஏஸு ஜென்ம பந்த[3]ரேனு தா[3]ஸனல்லவேனோ நானு
கா[4]ஸி மாட[3]தி[3]ரு இன்ன வாஸுதேவனெ ||14

ஹே வாஸுதேவனே! எவ்வளவு பிறவி வந்தாலும் நான் உன் தாஸனாக இருப்பேன். மேலும் காயப்படுத்தாமல், என்னைக் காப்பாற்று. (இறந்த, நிகழ், வருங்காலங்களிலும் நீ ஈஶன், நான் தாஸன் என்னும் அறிவைக் கொடுப்பாயாக).

பு[3]த்தி[3]ஶூன்யனாகி என்ன பத்த[3]காய குஹக மனவ
தித்தி[3] ஹ்ருதய ஶுத்த[3] மாடோ[3] ப்ரத்யும்னனே ||15

துர்புத்தியினால் கெட்ட செயல்களை செய்து, அனைவரிடமும் கெட்ட பெயரைப் பெற்றிருக்கிறேன். என் இதயத்தை சுத்தமாக்கி,

உன் பக்தர்களின் நட்பை எனக்குக் கொடுத்து, பிரத்யும்னனான ஸ்ரீஹரியே, அறிவு கெட்டவனான எனக்கு ஞானத்தைக் கொடு.

ஜனனி ஜனக நீனெ எந்து நெனெவெனய்ய தீனப[3]ந்து[4]
எனகெ முக்தி பாலிஸிந்து அனிருத்தனே ||16

அனைத்து பிராணிகளும் தத்தம் ஸ்தூல சரீரங்களில் இருப்பது போல் செய்தவனாகையால் நீ அனிருத்த (ஸ்தூல, அனிருத்த, லிங்க, ஸ்வரூப). என் அனைத்து பிறவிகளிலும் பற்பல தாய் தந்தைகள் வந்தனர். ஆனால், என் நிஜமான தாய் தந்தை நீயே. தீனபந்து, பக்தவத்ஸலனே, என் இந்த ஸாதனை சரீரத்தில் என்னை வைத்திருக்கும் காரணத்தால், நீயே ஜனனி- ஜனகன். அனிருத்தரூபி பரமாத்மனே எனக்கு முக்தியைக் கொடு.

ஹருஷதிந்த நின்ன நாம ஸ்மரிஸுவந்தெ மாடு ப்ரேம
இரிஸு சரணதல்லி க்ஷேம புருஷோத்தம ||17

ஜீவர்களின் தேகங்களில் இருப்பதால் உனக்கு புருஷ என்று பெயர். மூன்று குணங்களும் இல்லாதவனாகையால் உனக்கு உத்தம என்று பெயர். ஹே புருஷோத்தமனே, உன் பெயரை நான் பெருமையுடன் சொல்வதற்கு எனக்கு அருள் புரிவாயாக. உன் சரணங்களில் எனக்கு அன்பு வருமாறு செய். இதுவே என் ப்ரார்த்தனை.

ஸாது[3] ஸங்க[3] கொட்டு நின்ன பாத[3] ப[4]ஜனெ இத்து என்ன
பே[4]த மாடி நோட[3]தி[3]ரு ஸ்ரீஅதோக்ஷஜ ||18

ஜீவோத்தமரான வாயுதேவரின் அருளுக்கு பாத்திரர்களான ஸாதுக்களின் நட்பைக் கொடு. துர்ஜனர்களின் வட்டத்தில் விழுந்திருக்கும் என்னை நீ உன் கருணைப் பார்வையால் மேம்படுத்து. உன் பாத பஜனை செய்யும் பாக்கியத்தைக் கொடு. என்னை ஒதுக்கி வைக்காதே, ஹே அதோக்ஷஜனே.

சாரு சரண தோரி எனகெ பாருகா[3]ணிஸய்யா கொனெகெ
பா[4]ர ஹாகிருவி நினகெ நாரஸிம்ஹனே ||19

பக்த பிரகலாதனுக்காகவே ஜடத்திலிருந்து வந்து, நரசிம்மனாக அவதரித்தாய். உன் அழகான பாதங்களைக் காட்டு, என் வினைப்பயன்களிலிருந்து எனக்கு விமோசனம் பெற, உன் சரணங்களே எனக்கு கதி, என்னை கரையேற்று.

ஸஞ்சிதார்த்த[2] பாபக[3]ளு கிஞ்சிதாத[3] பீடெ[3]க[3]ளு
முன்சிதவாகி களெது பொரெயொ ஸ்வாமி அச்யுத ||20

அனைத்து பிறவிகளிலிருந்து என்னை பாவங்கள் தொடர்கின்றன. அதன் காரணமாகவே பல துன்பங்களை அனுபவித்து வருகிறேன். அவற்றை களைந்து என்னை காப்பாற்று அச்யுதனே. உன் நினைவினால், எனக்கும் அழிவில்லாத ஞானானந்தாதிகள் கிடைக்கட்டும், பாவங்கள் போகட்டும்.

ஞானபக்தி கொட்டு நின்ன த்[4]யானதல்லி இட்டு ஸதா
ஹீன புத்தி[3] பி[3]டி[3]ஸு முன்ன ஸ்ரீஜனார்த்தன ||21

ஜீவாத்மருக்கு தகுந்த கதியினைக் கொடுப்பதாலேயே ஜனார்த்தன என்று பெயர் பெற்றாய். உன்னை அனைவரும் பித்ரு கார்யங்களில் சிறப்பாக நினைக்கின்றனர். பாவ கர்மங்களைச் செய்யும் துஷ்டர்களை தண்டித்து, பிறரைக் காப்பாற்று. உன்னிடத்தில் ஞான பக்திகளைக் கொடுத்து, உன்னைப் பற்றியே சிந்தித்திருக்குமாறு செய். என் துர்புத்திகளை அழித்துவிடு என்று பிரார்த்திக்கிறேன்.

ஜபதபானுஷ்டானவில்லதெ குபத[2]கா[3]மியாத என்ன
க்ருபெய மாடி க்ஷமிஸபேகு ஹே உபேந்த்ரனே ||22

தற்காலிக சுகங்களில் மூழ்கியிருக்கும் நான், ஜப தப அனுஷ்டானங்கள் எதுவும் செய்யாமல் வாழ்க்கையை வீணடித்திருக்கிறேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடு. தக்ஷபிரஜாபதியில், ஆவேசம் கொண்டிருப்பதால் நீ உபேந்திர எனப்படுகிறாய்.

மொரெய இடு[3]வெனய்ய நினகெ[3] ஶரதி[4]ஶயன ஶுபமதி1ய
இரிஸொ பக்தரொளகெ[3] பரம புருஷ ஸ்ரீஹரே ||23

பரமாத்மனின் ஸ்ரவண, ஸ்மரணைகள், பாவங்களைப் போக்குகின்றன. ஸ்ரீஹரியே, சம்சார சாகரத்திலிருந்து என்னை விடுவித்து, உன் பக்தர்களின் வட்டத்தில் என்னை நிறுத்து.

புட்டிஸலேபே[3]ட[3] என்ன புட்டிஸித[3]கெ பாலிஸின்னு
இஷ்டு மாத்ர பேடி[3]கொம்பெ ஸ்ரீகிருஷ்ணனே ||24

அனைத்தையும் செய்பவன், செய்விப்பவனான ஸ்ரீகிருஷ்ணனே, என்னை மறுபடி பிறக்காதிருக்கச் செய். தற்போது பிறந்திருப்பதால் ஞான, பக்திகளைக் கொடுத்து மறுபடி இங்கேயே வராமலிக்க அருள்புரி என்று வேண்டிக் கொள்கிறேன்.

ஸத்யவாத[3] நாமக[3]ளனு நித்யத[3]ல்லி படிஸுவரிகெ[3]
அர்த்தியிந்த[3] ஸலஹுதிருவ கர்த்ரு கேஶவ ||25

உன் மகிமைகளைச் சொல்லும் கேஶவாதி 24 நாமங்கள் உண்மையானவை (ஸ்வரம், எழுத்து, சொல், வாக்கியம் என அனைத்துமே பகவந்தனையே சொல்கின்றன). இதனை யார் மிகுந்த பக்தியுடன் சொல்கின்றனரோ, அவரை ஸ்ரீஶ கேஶவன் காப்பாற்றுகிறான் என்று பல-ஸ்துதியைச் சொல்லி ஸ்ரீகனகதாஸர் இந்த கிருதியை முடிக்கிறார்.

மரெயத[3]லெ ஹரிய நாம ப[3]ரெது[3] ஓதி[3] கேளுவர்கெ[3]
கரெது[3] முக்தி கொடுவ நெலெ ஆதிகேஶவ ||26

ஸ்ரீஹரியின் நாமமான இந்த கேஶவ நாமத்தை தினந்தோறும் எழுதவேண்டும், படிக்க வேண்டும், கேட்க வேண்டும். இதனால் பகவந்தன் நம் பாவங்களை விலக்குகிறான். இது சத்தியம் என்று சொல்லி ஸ்ரீகனகதாஸர் இதனை ஆதிகேஶவனுக்கு சமர்ப்பணம் செய்கிறார்.

***

22. ஸ்ரீகனகதாஸரின் இரு கீர்த்தனைகளின் தமிழ் அர்த்தங்கள் – சத்ய நாராயணன்

ஏனெந்து கொண்டாடி ஸ்துதிஸலோ தேவா
நானேனு பல்லே நிம்ம மகிமே மாதவா (ஏனெந்து)

என்னவென்று சொல்லி உன்னைப் பாடுவேன் தேவா
எனக்கென்ன தெரியும் உன் மகிமையைப் பற்றி மாதவா (ஏனெந்து)

ஹரி முகுந்தனு நீனு நரஜன்ம ஹுளு நானு
பரமாத்மா நீனு பாமரனு நானு
கருடகமனனு நீனு மருளு பாபியு நானு
பரஞ்சோதி நீனு திருகனு நானு (ஏனெந்து)

ஹரி & முகுந்தன் நீ; மனித ஜென்மம் எடுத்து (ஸம்சாரத்தில் மூழ்கி) புழுவாய் இருப்பவன் நான்
அனைவருக்கும் கடவுள் நீ; எதுவுமே தெரியாதவன் நான்
கருட வாகனத்தில் பறப்பவன் நீ; பாவம் மட்டுமே செய்பவன் நான்
ஒளி ரூபமாய் இருப்பவன் நீ; சும்மா சுற்றித் திரிபவன் நான் (ஏனெந்து)

வாரிதிஶயனனாத காருண்யபதி நீனு
கோரதிந்திஹ காமி க்ரோதியு நானு
ஈரேளு புவனதொளு இருவ மூர்த்தி நீனு
தூரி நின்னனு பய்யுவ துஷ்டனு நானு (ஏனெந்து)

பாற்கடலில் படுத்திருக்கும், மிக்க கருணை மிக்கவன் நீ
காமம், குரோதம் இவற்றில் மூழ்கியிருப்பவன் நான்
ஈரேழு உலகத்திலும் இருப்பவன் நீ
எப்பொழுதும் உன்னைத் திட்டிக் கொண்டே இருப்பவன் நான் (ஏனெந்து)

அணுரேணு த்ருணகளல்லி பரிபூர்ண நீனு
க்ஷண க்ஷணக்கே அணுகுணத கர்மி நீனு
வாணியரஸன பெத்த வைகுண்டபதி நீனு

தனு நித்யவல்லத பொம்பேயு நானு (ஏனெந்து)

ஒவ்வொரு அணு, துகள்களிலும் பரிபூர்ணனாக இருப்பவன் நீ
ஒவ்வொரு நொடியிலும் குணங்களை மாற்றுபவன் நான்
சரஸ்வதியின் கணவரான பிரம்மனின் தந்தை, வைகுண்டத்தில் வசிப்பவன் நீ
நிலையில்லாத (அழிந்து போகக்கூடிய) இந்த சரீரத்தைக் கொண்டவன் நான், நீ ஆட்டுவிப்பவன், நான் பொம்மையைப் போன்றவன் (ஏனெந்து)

கம்பதலி பந்த ஆனந்தமூர்த்தி நீனு
நம்பிகேயில்லத ப்ரபஞ்சகனு நானு
அம்பரீசனிகே ஒலித அக்ரூரஸக நீனு
டம்பகர்மியு நானு நிர்ஜிதனு நீனு (ஏனெந்து)

தூணிலிருந்து வந்த ஆனந்தமே உருவானவன் நீ
எதன்/யார் மீதும் நம்பிக்கையில்லாமல் இருக்கும் மனிதன் நான்
அம்பரீசனை காப்பாற்றிய - அக்ரூரரின் நண்பன் நீ
தற்பெருமை கொண்டவன் நான் - உலகத்தை வென்றவன் நீ (ஏனெந்து)

திருப்பதிய வாசா வெங்கடேச நீனு
ஸ்மரிஸி நின்னய நாம பதுகுவவ நானு
பிரிதுள்ளவ நீனு மொரெஹொக்கவ நானு
ஸிரிகாகிநெலெ ஆதிகேஶவனு நீனு (ஏனெந்து)

திருப்பதியில் இருக்கும் வெங்கடேசன் நீ
உன்னையே எப்போதும் நினைத்து வணங்குபவன் நான்
பல பெருமைகளைக் கொண்டவன் நீ; உன் கருணையை வேண்டுபவன் நான்
ஸ்ரீ காகிநெலெ ஆதிகேஶவன் நீ (ஏனெந்து)

***

அந்த நிலவு வேண்டும்

பகவந்தனான ஸ்ரீராமன், அயோத்தியில் குழந்தையாக இருந்தபோது நடந்ததான ஒரு நிகழ்ச்சி. தான் விளையாடுவதற்கு பொம்மையாக, வானில் இருக்கும் அந்த நிலவு வேண்டுமென்று குழந்தை ஸ்ரீராமன் அழுததாகவும், அப்போது தந்தையான தசரத மஹாராஜா, தாயான கௌசல்யாதேவி மற்றும் அயோத்தியின் மந்திரிகள் என அனைவரும் சேர்ந்து, குழந்தைக்கு எப்படி ஆறுதல் கூறினார்கள், என்ன சொல்லி சமாதானம் செய்தார்கள் என்று விவரிக்கும் சம்பவத்தை, அப்படியே ஒரு அழகான பாடலில் பாடியிருக்கிறார் ஸ்ரீகனகதாஸர்.

அங்கனதொளு ராமனாடித சந்திர பேகெந்து தான் ஹடமாடிதா

தன் வீட்டு முற்றத்தில் ராமன் ஆடினான்
அந்த நிலவு வேண்டும் என்று அடம் பிடித்தான் (அங்கனதொளு)

தாயிய கரெது கை மாடி தோரிதா
முகில கடெகொம்மெ திட்டிஸி நோடிதா
சின்னி கோலு சண்டு புகுரி எல்லவ
பேடா பேடா எந்து தான் பிஸாடிதா (அங்கனதொளு)

தன் தாயைக் கூப்பிட்டு (நிலவைக்) காட்டினான்
மேகங்களின் நடுவில் இருக்கும் நிலவைப் பார்த்தான்
தன்னுடன் இருக்கும் விளையாட்டுப் பொருட்கள் (கில்லி, பந்து போன்றவை) எதையும் வேண்டாம் என்றான்
அவற்றைத் தூக்கிப் போட்டான் (அங்கனதொளு)

கந்தா பா எந்து தாயி கரெதளு
மம்மு உண்ணு எந்து பன்னிஸுத்தித்தளு
தாயி கௌஸல்யா களவள கொண்டளு
கந்தா அஞ்சிதனு என்னுத்தித்தளு (அங்கனதொளு)

மகனே, வருவாய் என்று தாய் கூப்பிட்டாள்
சாப்பாடு சாப்பிடு என்று வேண்டிக் கொண்டாள்

தாய் கௌசல்யா கவலைப் பட்டாள்
குழந்தை (எதையோ பார்த்து) பயந்திருக்கிறது என்று கூறினாள் (அங்கனதொளு)

அளுவ த்வனி கேளி ராஜனு
மந்திரி ஸஹிதாகி தாவிஸி பந்தனு
நிலுவ கண்ணாடி தந்திரிஸித
ஸ்ரீ ராமன எத்தி முத்தாடித (அங்கனதொளு)

குழந்தை அழும் சத்தம் கேட்டு தசரத மஹாராஜன்
தன் மந்திரி சகிதமாக ஓடி வந்தான்
ஒரு நிலைக் கண்ணாடி கொண்டு வந்து குழந்தைக்கு காட்டினான்
ஸ்ரீ ராமனை தூக்கிக் கொஞ்சினான் (அங்கனதொளு)

கண்ணாடியொளு பிம்ப நோடித
சந்திர ஸிக்கிதானெந்து குணிதாடிதா
ஸம்ப்ரம நோடி ஆதி கேஶவ
ரகு வம்ஶவன்னே கொண்டாடிதா (அங்கனதொளு)

அந்த கண்ணாடியில் நிலவைப் பார்த்து
நிலவே பக்கத்தில் வந்ததென்று ஆனந்தப்பட்டான் ஸ்ரீராமன்
இந்த நிகழ்ச்சியைப் பார்த்த காகிநெலெ ஆதிகேஶவன்
ரகு வம்சம் மொத்தத்தையுமே ஆசிர்வதித்தான் (அங்கனதொளு)

***